

# இலங்கையின் சமகால பொருளாதார நெருக்கடி

# CONTEMPORARY ECONOMIC CRISIS IN SRI LANKA


வெளியீடு

பொருளியல் துறை,

வர்த்தக முகாமைத்துவ பீடம்,

கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

# இலங்கையின் சமகால பொருளாதார நெருக்கடி

# CONTEMPORARY ECONOMIC CRISIS IN SRI LANKA


**வெளியீடு:**

**பொருளியல் துறை,**

வர்த்தக முகாமைத்துவ பீடம்,

கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

2023

**தலைப்பு** : இலங்கையின் சமகால பொருளாதார நெருக்கடி

**பதிப்புரிமை** : © 2023,
பொருளியல் துறை,
வர்த்தக முகாமைத்துவ பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

**வெளியீடு** : பொருளியல் துறை,
வர்த்தக முகாமைத்துவ பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

**பக்கங்கள்** : x + 201

**ISBN** : 978-624-94600-2-7 (E-Copy)

**Title** : Contemporary Economic Crisis in Sri Lanka

**Copyright** : © 2023,
Department of Economics,
Faculty of Commerce and Management,
Eastern University, Sri Lanka.

**Published by** : Department of Economics,
Faculty of Commerce and Management,
Eastern University, Sri Lanka.

**Pages** : x + 201

**ISBN** : 978-624-94600-2-7 (E-Copy)

*இந்நூலில் உள்ளடக்கப்பட்டுள்ள கட்டுரைகள் அனைத்தும் பொருளியல் துறையினால் நடாத்தப்பட்ட "இலங்கையின் சமகால பொருளாதார நெருக்கடி" என்னும் தொனிப் பொருளிலமைந்த நிகழ்நிலைக் கருத்தரங்கில் சமகால பொருளாதார நெருக்கடி பல்வேறு துறைகள் மீது ஏற்படுத்திய தாக்கங்கள் தொடர்பாக வளவாளர்களினால் கருத்தளிக்கப்பட்ட விடயங்கள் அவர்களது பூரண சம்மதத்துடன் நூல் வடிவாக பிரசுரிக்கப்படுகின்றது. இந்நூலில் இடம்பெற்றுள்ள கட்டுரைகளின் உள்ளடக்கம் மற்றும் கருத்துக்களுக்கு கட்டுரையாசிரியர்களும் அக்கட்டுரைகளை தொகுத்தவர்களுமே பொறுப்புடையவர்களாவர்.

# பதிப்பாசிரியர் குழு

## பதிப்பாசிரியர்கள்

**கலாநிதி. சரவணமுத்து ஜெயராஜா**
சிரேஷ்ட விரிவுரையாளர்

**கலாநிதி. (திருமதி). ஜெயப்பிரபா சுரேஸ்**
சிரேஷ்ட விரிவுரையாளர்

## ஆலோசனைக் குழு அங்கத்தவர்கள்

**பேராசிரியர். தங்கமணி பவன்**
பொருளியல் துறை பேராசிரியர்

**திருமதி. சறோஜினி மகேஸ்வரநாதன்**
சிரேஷ்ட விரிவுரையாளர்

**திரு. குகதாசன் புஸ்பாகரன்**
சிரேஷ்ட விரிவுரையாளர்

**கலாநிதி. எதிரிசிங்ஹ ஆரச்சிகே சமித் பிரியங்கர**
சிரேஷ்ட விரிவுரையாளர்

## கட்டுரைத் தொகுப்பாக்கம்

**திருமதி. யேசாந்தினி யூலியஸ் நிதர்சன்**
விரிவுரையாளர் (தகுதிகாண்)

**திருமதி. ஸியாளினி ஹேமப்பிரகாஷ்**
விரிவுரையாளர் (தகுதிகாண்)

**செல்வி. வசந்தா வினாயகமூர்த்தி**
விரிவுரையாளர் (தகுதிகாண்)

## பதிப்பாக்க உதவியாளர்கள்

**செல்வி. நேஷானி யேசுராசன்**
தற்காலிக உதவி விரிவுரையாளர்

**திருமதி. கிறிஷிகா ஹரிதரன்**
தற்காலிக உதவி விரிவுரையாளர்

## முன்னுரை

2022ஆம் ஆண்டு நடுப்பகுதியில் உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் "இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடி" என்கின்ற பேசு பொருளானது அதிக முக்கியத்துவத்தினை பெற்றிருந்தது. பொருளாதார நெருக்கடிக்கான காரணங்கள் சில மிகவும் நன்கு அறியப்பட்டவையாக இருந்தது. கொவிட் - 19 தொற்றுநோயால் சுற்றுலாப் பயணிகளின் வருகைக்கு ஏற்பட்ட எதிர்மறையான அதிர்ச்சிகள் காரணமாக அந்நிய செலாவணி வருவாய் வீழ்ச்சியடைந்ததால் அந்நிய செலாவணிக் கையிருப்பு பற்றாக்குறை ஏற்பட்டது. வெளிநாடுகளில் உள்ள இலங்கை தொழிலாளர்கள் தமது வீட்டிற்கு பணம் அனுப்புவதற்கு வங்கி முறை மூலம் அல்லாத அதிகாரப்பூர்வமற்ற பரிமாற்ற முறைகளை தேர்வு செய்கின்றவர்களாகக் காணப்பட்டனர். எனவே வங்கி அமைப்பில் வெளிநாட்டு நாணய பணப்புழக்கத்தை குறைக்க இது வழிவகுத்தது. மேலும், இலங்கை அரசாங்கம் விவசாய உற்பத்தியை பாதிக்கும் இரசாயண உரங்களை பயன்படுத்துவதை தடை செய்தமை, அரசு விதித்த பெரும் வரிச் சலுகைகள் காரணமாக ஏற்பட்ட நிதிப் பற்றாக்குறை, இலங்கை அரசாங்கம் பணத்தை அச்சிடுவதற்கும், உள்நாட்டுச் செலவீனங்களுக்குக்கூட வெளிநாட்டுக் கடன் பெறுவதற்கும் காரணமாக அமைந்திருந்தன.

இலங்கையின் பொருளாதார நெருக்கடியின் காரணமாக, உணவு, எரிபொருள், எரிவாயு, பொதுமக்களுக்கான மின்சாரம் மற்றும் தொழிற்சாலைகளுக்கான உள்ளீடுகள் போன்ற அத்தியாவசியப் பொருட்களின் பற்றாக்குறையுடன் நாட்டு மக்கள் இப்போது வரை மிகவும் கடினமான சூழ்நிலையை எதிர்கொண்டுள்ளனர். இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடி தொடர்பில் கல்விமான்கள் மற்றும் கொள்கை வகுப்பாளர்களின் நோக்கத்துடன் இதுவரையில் கணிசமான எண்ணிக்கையிலான நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டுள்ளன. எவ்வாறாயினும், தற்போதைய பொருளாதார நெருக்கடி சமூக அமைதியின்மை மற்றும் உறுதியற்ற தன்மையை உருவாக்கினாலும், தற்போதைய பொருளாதார நெருக்கடி குறித்து பொது மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் திட்டங்கள் குறைவாகவே காணப்படுகின்றன. இந்தவகையில், இலங்கை, கிழக்குப் பல்கலைக்கழகத்தின் வர்த்தக முகாமைத்துவ பீடத்தின் பொருளியல் துறை, குறிப்பாக தமிழ் பேசும் சமூகத்திற்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கத்துடன் இணையவழி மூலமான கருத்தரங்கை "**இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடி**" என்கின்ற பிரதான தொனிப்பொருளின் வேறுபட்ட தலைப்புக்களில் 2022 மே மாதம் 11ஆம் திகதி முதல் ஒக்டோபர் மாதம் 05 திகதிவரை வாரந்தோறும் ஏற்பாடு செய்து நடாத்தியிருந்தது.

இலங்கை தற்போது அனுபவித்து வரும் பொருளாதார நெருக்கடி குறித்து முழுமையான விழிப்புணர்வை வழங்குவதும் நெருக்கடியின் முக்கிய

கூறுகளை பிரதிபலிப்பதும் இந்த நிகழ்நிலைக் கருத்தரங்குத் தொடரின் முக்கிய நோக்கங்களாக இருந்தன. இது சமூகத்தில் தற்போதைய பொருளாதார நெருக்கடி குறித்த விழிப்புணர்வை உருவாக்குவதில் கவனம் செலுத்தியது. தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கான பாதை, தற்போதைய பொருளாதார நெருக்கடியின் பல்வேறு அம்சங்கள், பிற நாடுகளின் அனுபவம், நெருக்கடியின் தீவிரம், நெருக்கடியை எவ்வாறு சமாளிப்பது மற்றும் சிவில் சமூகத்தின் பொறுப்பு, இவற்றிலிருந்து விடுபடுவதற்கான வழிகளை உள்ளடக்கியதாக நிகழ்நிலைக் கருத்தரங்கு அமைந்திருந்தது.

இத்தகைய விழிப்புணர்வு சிவில் சமூகத்தில் அமைதியின்மை மற்றும் உறுதியற்ற தன்மையைக் குறைக்கவும், நெருக்கடியை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான ஆதரவைப் பெறவும் உதவும் எனவும் எதிர்பார்க்கப்பட்டது. பங்கேற்பாளர்களுக்கு பயனுள்ள விழிப்புணர்வை வழங்குவதற்காக அனைத்து கருப்பொருள் அமர்வுகளும் எளிய தமிழ் மொழியில் நடாத்தப்பட்டது. எதிர்பார்ப்புக்கு ஏற்றவாறு சமூகத்திற்கு எம்மால் முடிந்த விழிப்புணர்வினை வழங்கியிருக்கின்றோம் என பூரணமாக நம்புகின்றோம். ஏனெனில் பல தடைகளுக்கு மத்தியிலும் வேறுபட்ட நிலைகளில் உள்ள பல ஆர்வலர்கள் எமது நிகழ்நிலைக் கருத்தரங்கில் தொடர்ச்சியான கலந்துகொண்டிருந்தனர்.

ஒவ்வொரு துறையிலும் நிபுணத்துவம் கொண்ட வளவாளர்களின் துணையுடன் இருபது வெற்றிகரமான அமர்வுகளை நிறைவு செய்துள்ளோம். நிறைவடைந்த நிகழ்நிலைக் கருத்தரங்கின் காணொளி வடிவங்கள் அனைத்தையும் எமது பொருளியல் துறை உத்தியோகபூர்வ வலைத்தளத்தில் பதிவேற்றியுள்ளோம். அவற்றை எழுத்துரு வடிவமாக மாற்றியமைக்க எடுத்த முயற்சியின் பலனாகவே இந்நூலினை படைத்துள்ளோம். நிகழ்நிலைக் கருத்தரங்குத் தொடரில் பங்குபற்றியவர்கள் மட்டுமன்றி ஏனையோரும் இதன் மூலம் பயனடைய வேண்டும் என்ற அவாவின் ஒரு பிரதிபலிப்பாக இதனை எமது பொருளியல் துறை சார்பாக நூல் வடிவில் வெளியீடு செய்வதில் பெருமிதமும் அடைகின்றோம்.

***தலைமைப் பதிப்பாசிரியர்கள்***

## நன்றியுரை

பொருளாதார நெருக்கடி காலத்தில், மக்களுக்கான உடனடி விழிப்புணர்வினை வழங்க நாம் எடுத்த முயற்சிக்கு முதலில் உத்தியோகபூர்வ அனுமதியினை வழங்கிய எமது கிழக்குப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் அவர்களுக்கு எமது முதற்கண் நன்றியினை பொருளியல் துறை சார்பாக தெரிவித்துக்கொள்கின்றோம். மேலும் இதற்கான அனுமதியை வழங்கிய வர்த்தக முகாமைத்துவ பீடாதிபதிக்கும் எமது மனமார்ந்த நன்றிகள். நிகழ்நிலைக் கருத்தரங்கினை வெற்றிகரமாக நடாத்திச் செல்ல பல வழிகளிலும் ஒத்துழைப்பையும் அறிவுரைகளையும் வழங்கிய எமது பொருளியல் துறை பேராசிரியர், சிரேஸ்ட விரிவுரையாளர்கள் என அனைவருக்கும் எமது அகமகிழ்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றோம். மிக முக்கியமாக வாரந்தோறும் புதிய புதிய தலைப்புக்களில் விழிப்புணர்வினை வழங்க எமக்கு உதவிய அனைத்து வளவாளர்களுக்கும் பொருளியல் துறை சார்பாக இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். நிகழ்நிலைக் கருத்திரங்கில் நெறியாளர்களாக செயற்பட்ட எமது துறைசார் தகுதிகாண் விரிவுரையாளர்களுக்கும் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

எமது நிகழ்நிலைக் கருத்தரங்குத் தொடரில் மிகவும் ஆர்வத்தோடு பங்கு பற்றிய அனைத்து பங்குபற்றுனர்களுக்கும் எமது நன்றிகள். இவர்களின் பங்குபற்றுதலின் தூண்டுதலே இருபது நிகழ்நிலைக் கருத்தரங்கை வெற்றிகரமாக நாம் நிறைவு செய்ய வழிவகுத்தது என்பதே நிதர்சனமான உண்மையாகும். அதுமட்டுமல்லாது எமது இந்த முயற்சிக்கு ஆதரவு வழங்கிய எமது பீடத்தின் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் என அனைவருக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம். அதுமட்டுமல்லாது எமது நிகழ்நிலைக் கருத்தரங்குத் தொடரின் காணொளிகளை எமது வலைத்தளத்தில் பதிவேற்றம் செய்ய உதவிய எமது பல்கலைக்கழகத்தின் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப நிலையத்திற்கும் எமது துறைசார்பாக நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றோம். தற்போது நூலுரு பெற்றுள்ள இந்தப் படைப்பினை ஆக்கிட முன்னின்று உழைத்த எமது பொருளியல் துறை சார்ந்த அனைத்து விரிவுரையாளர்களும் மீண்டும் மீண்டும் இதயபூர்வமான நன்றியினைத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

***தலைமைப் பதிப்பாசிரியர்கள்***

## உபவேந்தர் வாழ்த்துரை



பல்கலைக்கழகமென்பது ஒரு சமூக நிறுவனம். அது எப்பொழுதும் தமது சமூகம் சார்ந்த விடயங்களில் ஈடுபாடு காட்டுவதனூடாக அச்சமூகத்தின் சமகால விடயங்களில் பங்குபற்றுவதனை பிரதான பணியாக கொண்டிருக்க வேண்டும்.

அந்தவகையில் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் வர்த்தக முகாமைத்துவ பீட பொருளியல் துறையானது **"இலங்கையின் சமகால பொருளாதார நெருக்கடி"** என்கின்ற தொனிப்பொருளில் வாரந்தோறும் கடந்த 18.03.2022 - 05.10.2022 வரை 20 கருத்தரங்குகளைப் பல திறன்மிக்க வளவாளர்களையும், புலமையாளர்களையும் ஒருங்கிணைத்து நடாத்தியது. இந்நிகழ்வுகளில் பல தடவைகள் நானும் ஒரு பங்குபற்றுனராக ஆர்வத்தோடு கலந்து கொண்டிருந்தேன். பல தடைகளுக்கு மத்தியிலும் இதனை வெற்றிகரமாக கொண்டு நடாத்தி இன்று நூலுருவில் வடிவம் பெறும் படைப்புக்கு வாழ்த்துரை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைவதுடன், இச்செயற்பாடுகளுக்காக எனது மனமார்ந்த வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பொருளியல் துறையின் அனைத்து விரிவுரையாளர்களுக்கும் பாராட்டுக்களை தெரிவிப்பதோடு குறிப்பாக வர்த்தக முகாமைத்துவ பீடாதிபதிக்கும், பொருளியல் துறைத்தலைவருக்கும் எனது பாராட்டுக்களைத் தெரிவிப்பதுடன், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன். சிறந்த தலைமைத்துவத்தின் வெளிப்பாடாக இந்தப் படைப்பு எமது பல்கலைக்கழகத்திற்கு பெருமை சேர்க்கும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. பல்கலைக்கழகத்தின் சமூக ஒன்றிணைவுடன்கூடிய தொடர்ச்சியான இது போன்ற படைப்புக்களும், பயணங்களும் தொடரவேண்டும் எனக்கேட்டுக்கொள்வதுடன் உங்கள் முயற்சிக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**பேராசிரியர். வ. கனகசிங்கம்**
*உபவேந்தர்,*
*கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை*

## பீடாதிபதி வாழ்த்துரை



பீடத்தின் தலைவர் என்ற வகையிலும், பொருளியல் துறையின் ஒரு விரிவுரையாளர் என்கின்ற வகையிலும் இவ் ஆக்கபூர்வமான நூல் படைப்புக்கு வாழ்த்துரை வழங்குவதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன். இலங்கை பற்றி அனைவரது கவனத்தையும் ஈர்த்த "இலங்கையின் பொருளாதார நெருக்கடி" குறித்து மக்களுக்கான தெளிவூட்டலினை வழங்கும் முகமாக பொருளியல் துறையினால் ஆரம்பிக்கப்பட்ட நிகழ்நிலைக் கருத்தரங்கின் முன்னெடுப்பிற்கு அத்திவாரம் இட்டவர் என்கின்ற வகையில் பொருளியல் துறையின் துறைத் தலைவர் கலாநிதி. (திருமதி). ஜெயப்பிரபா சுரேஸ் அவர்களுக்கு எனது ஆக்கபூர்வமான உளம்கனிந்த பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நிகழ்நிலைக் கருத்தரங்கோடு நின்றுவிடாமல், அதனை நூலுருவாக்கம் செய்வதில் பொருளியல் துறை சார்ந்த அனைவரும் காட்டிய பங்களிப்புக்கும் ஆதரவிற்கும் அனைத்து பொருளியல் துறை சார்ந்த விரிவுரையாளர்களுக்கும் வாழ்த்துக்கள். கல்வி சார்ந்த சமூகம் என்ற வகையில் பொருளாதார நெருக்கடிக்கான தீர்வை நோக்கிய பயணத்தின் ஒரு சிறந்த அங்கமாக வெளிவருகின்ற இந்த நூல் அனைவராலும் வரவேற்கப்படும் என்கின்ற அசைக்க முடியாத நம்பிக்கை எனக்குண்டு. எமது பீடத்தின் வளர்ச்சிக்கு இந்நூல் ஒரு வரலாற்றுச் சான்றாக அமையும் என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை.

பல தலைப்புக்களின் கீழ் விவாதிக்கப்பட்ட நிகழ்நிலைக் கருத்தரங்கின் தொகுப்பாக அமையும் இந்நூல் பல புலமைவாய்ந்த கல்வியாளர்களின் கருத்துக்களை தன்னகத்தே உள்ளடக்கியிருப்பது வரவேற்கத்தக்கதாகும். எனவே இதனை உருவாக்க தனது பங்களிப்பை நல்கிய பொருளியல் துறைக்கு எனது இதயபூர்வமான பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**கலாநிதி. ச. ஜெயராஜா**
*பீடாதிபதி,*
*வர்த்தக முகாமைத்துவ பீடம்,*
*கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை*

# துறைத் தலைவர் வாழ்த்துரை



பல்கலைக்கழகத்தின் கற்றல் சார்ந்த சேவைக்கும் செயற்பாட்டுக்கும் அப்பால் சமூகத்தின் தேவை குறித்தும், பொருளாதாரத்தின் நிலை குறித்தும் நாம் கவனம் செலுத்த வேண்டும் என்பதில் எமது பல்கலைக்கழகம் தொடர்ந்து செயற்பட்டு வருகின்றமை யாவரும் அறிந்த விடயமாகும். தேவைப்பாடுடைய காலப்பகுதியில் தேவையுணர்ந்து நிகழ்த்திய ஒரு விடயமாகவே பொருளியல் துறையின் நிகழ்நிலைக் கருத்தரங்கு தொடர் அமைந்திருந்தது.

இதனை ஆரம்பிக்க வேண்டும் என்கின்ற எனது அவா பலரின் ஆதரவுக்கு மத்தியில் நிறைவடைந்திருப்பது மட்டுமல்லாமல் இதுபோன்ற சேவைக்கான அடித்தளமாகவும் இது அமையும் என்ற நம்பிக்கை எனக்கு வலுவாக இருக்கின்றது. ''இலங்கையின் சமகால பொருளாதார நெருக்கடி'' என்கின்ற தொனிப்பொருளில் இன்று நூல் வடிவம் பெறுகின்ற எமது துறையின் படைப்புக்கு வாழ்த்துரை வழங்குவதில் பெருமிதம் கொள்கின்றேன்.

நிகழ்நிலைக் கருத்தரங்கின் தொகுப்புக்கள் அத்தியாயங்களாக வெளிவந்திருப்பது எமது பல்கலைக்கழகத்தினை பொறுத்தவரையில் இதுவே முதற் தடவையாகும். இது போன்ற ஆக்கபூர்வமான விடயங்களை சமூகத்திற்கு கொண்டு சேர்க்க வேண்டும் என்ற இலட்சியத்தினை இந்நூல் தொகுப்பு வழங்கும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. எனவே இந்த சிறந்த தொகுப்பின் படைப்பாளி என்ற வகையில் பெரும் மகிழ்ச்சியடைவதோடு, இத்தொகுப்பினை வெளியிடுவதற்கு அனுமதி வழங்கிய மதிப்பிற்குரிய உபவேந்தர் அவர்களுக்கும் பொருளியல் துறை சார்ந்த அனைத்து விரிவுரையாளர்களுக்கும் ஆதரவு நல்கிய பீடத்தின் சக விரிவுரையாளர்களும் நன்றியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**கலாநிதி. (திருமதி). ஜெயப்பிரபா சுரேஸ்**
*துறைத் தலைவர்,*
*பொருளியல் துறை,*
*வர்த்தக முகாமைத்துவ பீடம்,*
*கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை*

## பொருளடக்கம்

**பதிப்பாசிரியர் குழு** ........................................................................................i

**முன்னுரை** ........................................................................................ ii

**நன்றியுரை** ........................................................................................ iv

**உபவேந்தர் வாழ்த்துரை** ........................................................................................v

**பீடாதிபதி வாழ்த்துரை** ........................................................................................ vi

**துறைத் தலைவர் வாழ்த்துரை** ........................................................................................vii

**அத்தியாயம் - 01**
இலங்கையின் வர்த்தக செயற்றிறன், வெளிநாட்டு இருப்பு மற்றும் பொருளாதார நெருக்கடி ஆகியவற்றுக்கு இடையேயான தொடர்பு .......... 1
*T.Bhavan*

**அத்தியாயம் - 02**
இலங்கையின் வரி முறைமையும் தற்கால பொருளாதார நெருக்கடியும் ........................................................................................12
*K.Amirthalingam*

**அத்தியாயம் - 03**
பண அச்சிடலின் அரசியல் பொருளாதாரம் ..............................................23
*M.Ganeshamoorthy*

**அத்தியாயம் - 04**
தோல்வியடைந்த நாடுகளின் பட்டியலில் இலங்கை இணைந்து கொள்ளப்போகின்றதா? அதை தடுக்க ஏதாவது வழியுண்டா?................31
*N.Ravinthirakumaran*

**அத்தியாயம் - 05**
பொருளாதார நெருக்கடி, தவறான முகாமைத்துவம் மற்றும் தன்னிறைவுப் பொருளாதாரம்........................................................................................45
*S.Vijayakumar*

**அத்தியாயம் - 06**
பொருளாதார நெருக்கடியும் பிராந்திய வாய்ப்புக்களின் பேண்தகுநிலையும் ........................................................................................53
*V.P.Sivanathan*

**அத்தியாயம் - 07**
தற்போதைய பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள இலங்கைக்கு சர்வதேச நாணய நிதியம் உதவுமா?........................................................64
*S. Jeyarajah*

**அத்தியாயம் - 08**
தற்போதைய பொருளாதார நெருக்கடியினால் இலங்கையின் சுகாதாரத்துறை பாதிக்கப்படுகின்றதா?........................................................71
*K. Arulanandem*

**அத்தியாயம் - 09**
இலங்கையில் உணவுப்பாதுகாப்பின் புத்துயிர்ப்பாக்கம்............................79
*K. Premakumar*

**அத்தியாயம் - 10**
தற்போதைய பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வாக ஒருங்கிணைந்த கைத்தொழில் அபிவிருத்தி...................................................................88
*S.Sivesan*

**அத்தியாயம் - 11**
இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடியும் பேண்தகு பொருளாதார அபிவிருத்தியும்.......................................................................101
*S.Vijesandiran*

**அத்தியாயம் - 12**
சமகால பொருளாதார நெருக்கடியும் பணவீக்கமும்................................116
*S. Maheswaranathan*

**அத்தியாயம் - 13**
உலகப் பொருளாதார நெருக்கடிகள்: ஒரு மீள்பார்வை..........................126
*K. Karunaanithy*

**அத்தியாயம் - 14**
இலங்கையின் தற்போதைய உணவு நெருக்கடியும் நிவர்த்திக்கான வழிகளும்........................................................................................146
*T. Geretharan*

**அத்தியாயம் - 15**
இலங்கையின் பொருளாதார நெருக்கடி: பின்னணி, அண்மைக்கால அபிவிருத்திகள் மற்றும் மீட்சிக்கான பாதை..............................................151
*S. Jegajeevan*

**அத்தியாயம் - 16**
இலங்கைப் பொருளாதார நெருக்கடியின் அரசியல் பரிமாணம்.............172
*S. I. Keethaponcalan*

**அத்தியாயம் - 17**
இலங்கையின் தற்போதைய நெருக்கடியினை சமாளிக்க வெளிநாட்டு நேரடி முதலீட்டின் வகிபங்கு.............................................................................180
*K. Ravinthirakumaran*

**அத்தியாயம் - 18**
இலங்கையின் பொருளாதார நெருக்கடியினால் ஏற்பட்டுள்ள வறுமை மற்றும் ஊட்டச்சத்துக் குறைபாடு..................................................................191
*J. Suresh & V. Rajeevan Francis*

**பின்னிணைப்பு**.............................................................................................200

## அத்தியாயம் 01

# இலங்கையின் வர்த்தக செயற்றிறன், வெளிநாட்டு இருப்பு மற்றும் பொருளாதார நெருக்கடி ஆகியவற்றுக்கு இடையேயான தொடர்பு

# Nexus Between Trade Performance, Foreign Reserve and Economic Crisis in Sri Lanka

**Prof. T. Bhavan,**
Professor in Economics,
Department of Economics,
Faculty of Commerce and Management,
Eastern University, Sri Lanka.

(11.05.2022 அன்று நடைபெற்ற நிகழ்நிலைக் கருத்தரங்கின் தொகுப்பு)

## அறிமுகம்

இலங்கையானது தனது வரலாற்றில் என்றுமில்லாத அளவிற்கு பாரிய பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்துள்ளது. அரசியல் மற்றும் பொருளாதார ரீதியான ஸ்திரமற்ற தன்மையிலிருந்து நாட்டை எவ்வாறு மீட்டெடுப்பது என்பது எம்மவர் மத்தியிலுள்ள மிகப் பெரிய கேள்வியாகும். இலங்கையினது பொருளாதார நெருக்கடிக்குரிய காரணிகளை பல்வேறுபட்ட கோணங்களில் இருந்து ஆய்வு செய்யும்போதுதான் எதிர்காலத்தில் இதற்கான தீர்வினை பிரேரிக்க முடியும். அரசாங்கம் அதனுடன் தொடர்புபட்ட அலகுகளின் உதவியுடன் பொருளாதாரத்தில் உள்ள தவறுகள் மற்றும் கவனிப்பாரற்ற விடயங்களை இனங்கண்டு அதற்குத் தீர்வினைக் காணவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. அந்தவகையிலே இக்கட்டுரையானது இலங்கையினுடைய சர்வதேச வர்த்தக செயற்றிறன் மற்றும் வெளிநாட்டு ஒதுக்கு ஆகியவற்றிற்கிடையேயான தொடர்பு மற்றும் இவையிரண்டும் தற்போதைய பொருளாதார நெருக்கடியுடன் தொடர்புபடும் விதம் பற்றிச் சுருக்கமாக ஆராய்கிறது.

உலகளாவிய கொரோனா தொற்றுப் பரவலால் பெரும்பாலான உலக நாடுகளின் பொருளாதாரங்கள் பாதிக்கப்பட்டதைப் போன்று இலங்கையின் பொருளாதாரமும் பாரிய சவால்களுக்கு முகங்கொடுத்தது. குறிப்பாக நாட்டின் ஏற்றுமதி, இறக்குமதி, பண உட்பாய்ச்சல் வெளிப்பாய்ச்சல்கள், உள்நாட்டு உற்பத்தி மற்றும் வேலைவாய்ப்பு என்பன பாதிப்பிற்குள்ளாயின. அத்துடன் அளவுகடந்த பொதுப்படுகடன் சுமையினாலும் பாரிய டொலர் கையிருப்பு வீழ்ச்சியினாலும் அப்பிரச்சினையிலிருந்து மீண்டெழ முடியாதளவிற்கு பாரிய நிதி நெருக்கடி நிலைமையை இலங்கை முகங்கொடுத்துள்ளது.

தற்போது இலங்கை எதிர்கொண்டிருக்கின்ற பொருளாதார நெருக்கடிக்கு உலகளாவிய கொரோனாத் தொற்றுப் பரவலினை பலர்

காரணங்காட்டினாலும் இத்தொற்றுப் பரவல் நிலைமையானது ஒரு பொருளாதார அதிர்ச்சி (Economic Shock) மட்டுமே ஆகும். இப்பொருளாதார அதிர்ச்சியானது எல்லா நாடுகளையும் தாக்கியிருந்தாலும் இலங்கையால் இவ்வதிர்ச்சியில் இருந்து ஏன் மீண்டெழ முடியாமலுள்ளது என்ற காரணத்தை ஆராய வேண்டியது அவசியமாகும். இங்குதான் ஒரு நாட்டின் வெளிநாட்டு ஒதுக்கினுடைய பங்களிப்பினை நாம் நோக்க வேண்டும். ஏனைய நாடுகள் தங்களிடமிருந்த வெளிநாட்டு ஒதுக்குகளின் கையிருப்பினைக் கொண்டு அந்நோய் தாக்கத்தாலேற்பட்ட பொருளாதாரப் பாதிப்பிலிருந்து தங்கள் நாடுகளின் பொருளாதாரத்தை மீட்டெடுக்கக்கூடிய நிலை காணப்பட்டது. ஆனால் இலங்கையானது அப்பிரச்சினையிலிருந்து மீண்டெழ முடியாமலிருப்பதற்கு பலவீனமான வெளிநாட்டு ஒதுக்கு ஒரு முக்கிய காரணமாகக் கருதப்படுகின்றது.

உண்மையில் வெளிநாட்டு ஒதுக்குகள், ஒரு நாடானது நெருக்கடி நிலையில் இருக்கும் போது அந்நாட்டை மீட்டுக்கொண்டுவருவதற்கான ஒரு காப்பு நிதிமூலமாகவும் (Back-up Funds), பொருளாதார அதிர்ச்சியை தாங்கிக்கொள்ளும் சக்தியாகவும் (Shock Absorber) செயற்படுகின்றது. ஒரு நாடு வெளிநாட்டு ஒதுக்குகளை போதியளவு கொண்டிருக்கும் பட்சத்தில் அந்நாடானது கொரோனாத் தொற்றுப் பரவல் போன்ற பொருளாதார அதிர்ச்சிகளை எதிர்கொண்டாலும் பொருளாதார நெருக்கடி நிலைமைக்குள் தள்ளப்படாமல் அந்நிலைமையிலிருந்து மீண்டெழும் உத்வேகத்தைக் கொண்டிருக்கும். அவ்வாறான நாடுகளுக்கு உதாரணமாக சீனா, சிங்கப்பூர், ஜப்பான் போன்ற பல நாடுகளின் பொருளாதாரங்களைக் குறிப்பிடலாம்.

## சர்வதேச வர்த்தகத்திற்கும் வெளிநாட்டு ஒதுக்குகளுக்கும் இடையே உள்ள தொடர்பு என்ன?

ஒரு நாட்டினுடைய பொருளதாரத்தின் தவிர்க்கமுடியாத அலகு சர்வதேச வர்த்தகமாகும். இன்று காணப்படுகின்ற உலகப் பொருளாதார ஒழுங்கு, உலகமயமாக்கம், சந்தைப்பொருளாதாரம் மற்றும் அதன் போக்குகளால் எந்தவொருநாடும் தனித்து இயங்கமுடியாத அளவிற்கு ஒன்றிலொன்று தங்கியிருக்க வேண்டிய சூழல் நிலவுகின்றது. அதிலும் ஏற்றுமதி, இறக்குமதி என்பன ஒரு நாட்டிற்கு தவிர்க்க முடியாத அம்சங்களாகும்.

உலகமயமாதல் சூழலில் உலக நாடுகளின் பொருளாதாரங்கள் எழுச்சியடைவதற்கு சர்வதேச வர்த்தகம் உதவுகின்றது. இச் சர்வதேச வர்த்தகத்திற்கும் வெளிநாட்டு ஒதுக்குகளுக்கும் இடையே தொடர்பு உண்டா என நோக்குவோமாயின் அவை இரண்டிற்குமிடையே நெருங்கிய தொடர்பு இருப்பதனை அவதானிக்கலாம். சுருங்கக்கூறின் அவை இரண்டும் ஒன்றிலொன்று பரஸ்பரமாகத் தங்கியிருக்கும் பொருளாதாரக் காரணிகளாகும்.

ஒரு நாட்டின் வர்த்தக செயலாக்கமானது, அந்நாடு சர்வதேச வர்த்தகத்தில் தன்னை எந்தளவுக்கு ஈடுபடுத்திக்கொள்கிறது என்பதிலேயே தங்கியுள்ளது. மாறாக ஒரு நாட்டின் பரப்பளவிலோ சனத்தொகையிலோ அது தங்கியிருப்பதில்லை. உதாரணமாக ஆசியாவில் உள்ள சீனா மற்றும் சிங்கபூர் ஆகிய இரு நாடுகளை இங்கு எடுத்துக்கொள்வோமாக இருந்தால் சீனா மிகப்பெரிய நாடு. இது சர்வதேச வர்த்தகத்தின் அசுரன் (Trade Titan) என குறிப்பிட்டுக் காட்டப்படுகின்றது.

சிங்கபூர் மிகச்சிறிய நாடு. பெரும்பாலும் இயற்கை வளங்களை தன்னகத்தே கொண்டிராத ஒரு நாடு. ஆனால் இவை இரண்டினதும் வர்த்தகச் செழிப்பினைக் கவனித்தால் சீனாவானது உலக மொத்த ஏற்றுமதியில் 14.7% பங்கினைக் கொண்டிருக்கின்றது. நாடுகளின் வர்த்தக செயலாற்ற வரிசைப்படுத்தலின்படி 2020ஆம் ஆண்டில் 369.67 பில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர் (ஐ.அ.டொலர்) வர்த்தக மிகையுடன் சீனா முன்னணியிலும் 108.52 பில்லியன் ஐ.அ.டொலர் வர்த்தக மிகை நிலுவையுடன் சிங்கப்பூர் மூன்றாம் இடத்திலும் உள்ளது.

மேலும் சர்வதேச வர்த்தகத்தில் முன்னணியிலுள்ள இந்நாடுகளே தொடர்ந்தும் வெளிநாட்டு ஒதுக்குகளின் கையிருப்பிலும் முன்னணியிலுள்ளன. 2020 தரவுகளினடிப்படையில் சீனாவானது 3,373,159 மில்லியன் ஐ.அ.டொலருடனும் சிங்கப்பூர் 426,633 மில்லியன் ஐ.அ.டொலருடனும் தொடர்ந்து வெளிநாட்டு ஒதுக்குகளின் கையிருப்புப் பட்டியலில் முன்னணியிலுள்ளன. இதன் மூலம் வர்த்தக செயலாற்றமானது வெளிநாட்டு ஒதுக்குகளை தீர்மானிக்கின்ற முக்கிய காரணியாக விளங்குவது தெளிவாகின்றது. எனவே எந்த நாடு வர்த்தகமீதியில் மிகையினை அதிகளவில் அனுபவிக்கின்றதோ அந்நாடே வெளிநாட்டு ஒதுக்கிலும் பலம்வாய்ந்த நிலையில் இருப்பது புலனாகின்றது. அதாவது அதிகளவில் ஏற்றுமதி செய்வதனூடாக ஒரு நாடு அதிகளவு வெளிநாட்டு ஒதுக்குகளை தன்னகத்தே கொண்டிருப்பதற்கான தகுதியினைப் பெறுகின்றது.

### வெளிநாட்டு ஒதுக்குகள் எவ்வாறு சர்வதேச வர்த்தகப் போட்டித் தன்மைக்கு பலம் சேர்க்கின்றது?

ஒரு நாட்டின் நாணயமாற்றுவீதத்தில் ஏற்படும் தளம்பல் நிலையானது அந்நாட்டின் சர்வதேச வர்த்தகத்திற்கு தடையாக அமையுமென்றால் அதனைத் தாங்கிக் கொள்வதற்கான சக்தியாக விளங்குவது அந்நாட்டின் வெளிநாட்டு ஒதுக்குக் கையிருப்பாகும். வெளிநாட்டு ஒதுக்குகளை அதிகமாக கொண்டிருக்கும் ஒரு நாடு தன்னுடைய சர்வதேச வர்த்தகம் தளம்பலடையாமல் உலக சந்தையில் உறுதியாக காலூன்ற முடியும். இதற்கு சர்வதேச வர்த்தகத்தில் ஒரு அசுரனாக அண்மைக்காலத்தில் வலம்வந்துகொண்டிருக்கும் சீனா ஒரு மிகச்சிறந்த உதாரணமாகும். இது அதிக வெளிநாட்டு ஒதுக்குகளைக் கையிருப்பில் வைத்திருப்பதோடு தன்னுடைய நாணயத்தை வெளிநாட்டு வர்த்தகத்திற்குச் சாதகமாக

ஏற்றவிறக்கங்களைச் செய்வதற்கு பயன்படுத்துகின்றது. எனவே அந்நியச்செலவாணிச் சந்தையில் நாணயத்தின் பெறுமதியை அமெரிக்க டொலருக்கெதிராக தளம்பலுறாமல் உறுதியாக பேணுவதற்கும் அதனூடாக நாட்டின் சர்வதேச வர்த்தகத்தை பாதுகாப்பதற்கும் வெளிநாட்டு ஒதுக்குகள் உறுதுணையாக விளங்குகின்றன.

## இலங்கையின் வெளிநாட்டு ஒதுக்குரீதியிலான பலம் என்ன?

இலங்கையானது 2018ஆம் ஆண்டுத் தரவுகளின்படி 195 உலக நாடுகளில் 123வது இடத்தில் பலவீனமான வெளிநாட்டு ஒதுக்குகளைக் கொண்ட நாடாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. மேலும், இலங்கையானது ஏனைய ஆசிய நாடுகளிலும் பார்க்க பலவீனமான வெளிநாட்டு ஒதுக்குகளின் கையிருப்பினைக் கொண்டுள்ளது. 2018இல் 9.9 பில்லியன் ஐ.அ.டொலராகக் காணப்பட்ட இலங்கையின் வெளிநாட்டு ஒதுக்குகள் 2022 மார்ச் மாத அறிக்கையின் படி 2 பில்லியன் ஐ.அ.டொலராக மாத்திரமே காணப்பட்டது. தற்போது அது பூச்சிய நிலையை அடைவது மிகவும் பாரதூரமான விடயமாகப் பார்க்கப்படுகின்றது. 2022இல் வெளிநாட்டு ஒதுக்குக் கையிருப்பில் நாடுகளின் நிலையினை பின்வருமாறு ஒப்பிட்டுப்பார்க்க முடியும்.

**அட்டவணை 01: நாடுகளும் அதன் வெளிநாட்டு ஒதுக்கு கையிருப்பும் (2022)**

| நாடு | வெளிநாட்டு ஒதுக்கு |
|---|---|
| ஜப்பான் | $ 384.5 பில்லியன் |
| சிங்கப்பூர் | $ 426 பில்லியன் |
| இந்தியா | $ 606.5 பில்லியன் |
| இந்தோனேஷியா | $ 141.5 பில்லியன் |
| வியட்னாம் | $ 107 பில்லியன் |
| பங்களாதேஷ் | $ 46 பில்லியன் |
| பாக்கிஸ்தான் | $ 22.8 பில்லியன் |
| இலங்கை | $ 9.9 பில்லியன் (2018)<br>$ 2 பில்லியன் (மார்ச், 2020) |

**மூலம்: உலக வங்கி**

இதில் அவதானிக்கத்தக்க முக்கிய விடயம் என்னவெனில் 2019 டிசம்பர் மாதம் கொரோனாத் தொற்று பரவுவதற்கு முன்னமே இலங்கையானது ஏனைய நாடுகளைவிட பலவீனமான வெளிநாட்டு ஒதுக்கினைக் கொண்டிருப்பது புலனாகின்றது. இதற்கு இலங்கையானது எதிர்பார்த்த அளவிற்கு சர்வதேச வர்த்தகத்தில் பிரகாசிக்காமையே முக்கிய காரணமாகும். எனவே சர்வதேச வர்த்தகத்தில் இலங்கையினுடைய நிலையினைச் சுருக்கமாக ஆராய வேண்டியது அவசியமாகும்.


## சர்வதேச வர்த்தகத்தில் இலங்கையின் நிலை

சர்வதேச வர்த்தகத்தில் இலங்கையின் நிலையினைப் பார்க்கின்றபோது 2020ஆம் ஆண்டில் இலங்கையின் மொத்த ஏற்றுமதி 11,741 மில்லியன் ஐ.அ.டொலராகவும் மொத்த இறக்குமதி 21,316 மில்லியன் ஐ.அ.டொலராகவும் காணப்பட்டது. ஆகவே, இலங்கையானது மொத்த இறக்குமதியோடு ஒப்பிடும் போது ஏறத்தாழ 50 சதவீதத்தினையே ஏற்றுமதி செய்வது புலனாகின்றது. இலங்கையானது அண்ணளவாக 3,121 பொருட்களை 198 நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதோடு 4,246 பொருட்களை 195 நாடுகளிலிருந்து இறக்குமதி செய்கின்றது.

மேலும் 2020ஆம் ஆண்டு மத்தியவங்கி ஆண்டறிக்கையின்படி, மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வீதமாக பொருட்கள் மற்றும் சேவைகளின் ஏற்றுமதி 16.58 வீதமாகவும் மொத்த இறக்குமதி 22.94 வீதமாகவும் காணப்படுகின்றன. இங்கு குறிப்பிடத்தக்க முக்கிய விடயம் என்னவெனில் ஏற்றுமதி பொருட்களிலும் பார்க்க இறக்குமதி செய்யும் பொருட்களின் அளவு அதிகமாக காணப்படுகின்றது. இதனால் ஏற்றுமதி வருமானத்தைக் காட்டிலும் இறக்குமதிச் செலவு அதிகரித்து வர்த்தக மீதி பற்றாக்குறையாகவுள்ளது. இவ்வர்த்தகப் பற்றாக்குறையானது 2022ஆம் ஆண்டின் ஆரம்பப் பகுதியில் -762 மில்லியன் ஐ.அ.டொலராக எதிர்க்கணியத்தில் காணப்படுகின்றது. இது பெரும்பாலான ஆசியநாடுகளை விடவும் இலங்கை மிகவும் பின் தங்கிய நிலையில் காணப்படுவதனைக் காட்டுகிறது.


மேலும் மொத்த ஏற்றுமதிகளில் உலக நாடுகளின் சராசரி ஏற்றுமதிப் பங்களிப்பான 0.58 சதவீதத்தினை விட மிகக்குறைந்த பங்களிப்பினையே (0.08 சதவீதம்) இலங்கையானது கொண்டிருக்கின்றது. மேலும் உலக ஏற்றுமதிகளில் நாடுகளின் ஏற்றுமதிப் பங்களிப்புத் தரப்படுத்தலில் இலங்கை 175 நாடுகளில் 85வது இடத்தில் பின்தங்கி உள்ளது. 1960 - 2020 வரை இலங்கையின் மொத்த ஏற்றுமதியை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வீதமாகப் பார்க்கும் போது பாரிய ஒரு தளம்பல் நிலையை காணமுடிகின்றது.

**வரைபடம் 1: 1960 - 2020 வரை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வீதமாக இலங்கையின் ஏற்றுமதி**



குறிப்பாக 2000ஆம் ஆண்டின் பின்னர் தொடர்ச்சியான ஒரு வீழ்ச்சிப் போக்கினை இலங்கையில் யுத்தம் முடியும் வரை அவதானிக்க கூடியதாக உள்ளது. யுத்தம் 2009ஆம் ஆண்டு முடிவுக்குக்கொண்டுவரப்பட்டதைத் தொடர்ந்து படிப்படியாக மீட்சி ஏற்பட்டாலும் 2019ஆம் ஆண்டு கொரோனாத் தொற்றுப் பரவலால் சடுதியான ஒரு வீழ்ச்சியை அவதானிக்கமுடிகின்றது. ஆகவே, கொரோனாத் தொற்றுப் பரவலுக்கு முன்னரே இலங்கையானது உலக மொத்த உற்பத்தியில் பின்னடைவான போக்கினை முகங்கொடுத்துள்ளமை தெளிவாகிறது. மேலும் இலங்கையின் ஏற்றுமதி வளர்ச்சி வீதப்போக்கினை அவதானிக்கும் போது ஏற்ற இறக்கங்களுடன் ஒரு நிலையற்ற தன்மையினை அவதானிக்க முடிகின்றது.

**வரைபடம் 2: 1960 – 2020 வரை இலங்கையின் ஏற்றுமதி வளர்ச்சி வீதப் போக்கு**




மேலும் இலங்கையின் வர்த்தக மீதியானது (Trade Balance) நாட்டின் பொருளாதாரம் திறந்த சந்தைப் பொருளாதாரமாக்கப்பட்டதன் பின்னர் தொடர்ந்து வர்த்தகப் பற்றாக்குறையினையே முகங்கொடுத்துவருகின்றது. பொதுவாக ஒரு நாட்டிற்கு வர்த்தகப் பற்றாக்குறையானது எப்போதும் பாதகமான விளைவினைத் தோற்றுவிக்குமா? என்று வினவினால் அது அந்நாட்டின் வர்த்தகப் பற்றாக்குறையின் போக்கிலே தங்கியுள்ளது எனலாம். இறக்குமதி அதிகரிக்கும் அதேநேரத்தில் ஏற்றுமதியும் சேர்ந்து அதிகரிக்குமாக இருந்தால் அது வர்த்தகப் பற்றாக்குறையில் பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தாது. அதாவது ஏற்றுமதி வளையியும் இறக்குமதி வளையியும் மேல்நோக்கி சமாந்தரமாக நகருமானால் அது தாக்கத்தை ஏற்படுத்தாது. ஏனெனில் பெரும்பாலான நாடுகளின் ஏற்றுமதியானது இறக்குமதியில் தங்கியிருப்பதனால் இரண்டும் சேர்ந்து அதிகரிக்கின்றது. இது நாட்டினுடைய வர்த்தகத்தைப் பாதிப்பதாகக் கொள்ளமுடியாது. ஆனால் இலங்கையினுடைய நிலையை அவதானிக்கின்றபோது குறிப்பாக 2000ஆம் ஆண்டிற்குப் பின்னர் இறக்குமதி அதிகரிக்கின்ற அதேநேரம் ஏற்றுமதி குறைகின்றது. இதனால் வர்த்தக மீதியில் பற்றாக்குறையின் போக்கு ‘V’ வடிவில் விரிவடைகின்ற நிலையை

அவதானிக்க முடிகின்றது. இது இலங்கையின் வர்த்தக செயலாக்கத்தையும் பொருளாதாரத்தினையும் பாதிக்கின்ற விடயமாகப் பார்க்கப்படுகின்றது. இதே நிலையை இலங்கையானது ஏனைய நாடுகளுடன் செய்து கொள்ளும் ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகத்திலும் அவதானிக்க முடியும். இலங்கையானது தனது வர்த்தகப் பங்காளரான இந்தியா மற்றும் சீனாவிடமிருந்து அதிகளவு பொருட்களை இறக்குமதி செய்தாலும் குறைந்தளவு பொருட்களையே ஏற்றுமதி செய்கின்றது. இதனால் ஏற்றுமதி மற்றும் இறக்குமதிக்கிடையில் வர்த்தக இடைவெளியானது விரிவடைந்து செல்லுகின்றது.

அத்தோடு இலங்கையானது அண்மைக்காலமாக இரட்டைப் பற்றாக்குறை (Twin Deficit) நிலையை முகங்கொடுக்கின்றது. இது நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை மற்றும் வரவுசெலவுத்திட்டப் பற்றாக்குறை என்பனவற்றினை ஒரு பொருளாதாரமானது ஒரே நேரத்தில் எதிர்கொள்கின்ற தன்மையினைக் குறிக்கின்றது. இலங்கை அனுபவிக்கின்ற இந்த இரட்டைப் பற்றாக்குறை நிலைமைக்கு அதிகரித்த அரச செலவீனத்தையும் அதன் மூலமாக அதிகரித்த இறக்குமதியினையும் இங்கு காரணமாகக் குறிப்பிட முடியும். இங்கு அதிகரித்த செலவு, இறக்குமதியை தூண்டுவதனூடாக நடைமுறைக்கணக்குப் பற்றாக்குறையை விரிவடையச் செய்யும்.

எனவே, இலங்கையின் பொருளாதாரமானது இறக்குமதியில் தங்கியிருக்கும் பொருளாதாரமாக (Import Driven Economy) காணப்படுகின்ற அதேநேரம், அளவுகடந்த வர்த்தகப்பற்றாக்குறையுடன் பலவீனமான வெளிநாட்டு ஒதுக்குகளையும் கொண்டு காணப்பட்டமையானது பொருளாதார அதிர்ச்சிகள் ஏற்படுகின்றபோது அது அத்தியாவசிய இறக்குமதிகளைக்கூட மேற்கொள்ள முடியாதளவிற்கு நாட்டினைத் தத்தளிக்க வைத்துள்ளதென்பது யாரும் மறுக்கமுடியாத உண்மையாகும்.

## இலங்கையின் ஏற்றுமதி வர்த்தக செயலாற்றத்தைப் பாதிக்கும் காரணிகள்

இலங்கையானது ஆரம்பகாலம் தொட்டு சில குறிப்பிட்ட ஏற்றுமதியினையே பாரம்பரியமாகத் தொடர்ந்து ஏற்றுமதி செய்து வருகின்றது. உலகசந்தையின் போக்கிற்கு ஏற்றவாறு புதிய உற்பத்திகளிலும் புதிய பொருட்களின் ஏற்றுமதியிலும் இலங்கையானது கவனம் செலுத்தவில்லை என்பது ஒரு முக்கிய குறைபாடாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது. இலங்கையின் பிரதானமான முதல் பத்துப் பொருட்களின் ஏற்றுமதியானது மொத்த ஏற்றுமதியில் 90 சதவீதத்திற்கு மேலாகக் காணப்பட ஏனைய துணைத்துறைகள் 10 சதவீதமாக மட்டுமே காணப்படுகின்றது. இந்நாடானது காலாகாலமாக தைக்கப்பட்ட ஆடைகள், தேயிலை மற்றும் இறப்பர் ஏற்றுமதிகளிலேயே அதிகமாக தங்கியிருக்கின்றது. மொத்த ஏற்றுமதியில் தைக்கப்பட்ட ஆடைக் கைத்தொழில் ஏற்றுமதிகள் 33 சதவீதமாகவும் தேயிலை ஏற்றுமதிகள் 9

சதவீதமாகவும் மற்றும் இறப்பர் பொருட்களின் ஏற்றுமதி 6 சதவீதமாகவும் உள்ளது. இவ் உற்பத்திகள் உலக சந்தையில் தமது வர்த்தக வாய்ப்பை இழக்கும் போது இவை நமது நாட்டின் ஏற்றுமதி வருவாயை வெகுவாகப் பாதிக்கும்.

மேலும் இலங்கையின் ஏற்றுமதிச் சந்தையானது போதியளவிற்கு விரிவாக்கம் செய்யப்படவில்லை. ஏற்றுமதிப் பொருட்கள் பெருமளவிற்கு அமெரிக்கா மற்றும் ஐக்கிய இராச்சியம் ஆகிய இரு சந்தைகளில் வர்த்தக வாய்ப்பிற்காக அதிகம் தங்கியிருக்கின்ற நிலையை அவதானிக்க முடிகின்றது. இலங்கையானது ஏற்றுமதி செய்யும் பொருட்களில் 36 சதவீதமானவை ஐரோப்பிய சந்தைக்கும் 31 சதவீதமானவை அமெரிக்க சந்தைக்கும் ஏனைய 29 சதவீதமானவை ஆசிய மற்றும் ஆபிரிக்க சந்தைகளுக்கும் செல்கின்றன. இலங்கையில் குறிப்பாக தைக்கப்பட்ட ஆடைக் கைத்தொழிலானது சந்தை வாய்ப்பிற்க்காக 64 சதவீதம் அமெரிக்காவின் சந்தையை மையப்படுத்தியும் 30 சதவீதம் ஐரோப்பிய சந்தையினை மையப்படுத்தியும் காணப்படுகின்றது. ஏனைய 4 சதவீதமான சந்தை வாய்ப்பே கனடா, அவுஸ்ரேலியா, சீனா, ஜப்பான், சுவிட்சலாந்து மற்றும் ஈரான் போன்றவற்றை மையப்படுத்திக் காணப்படுகின்றது. இதன்படி இலங்கையானது மேலைத்தேய சந்தையை கைப்பற்றுவதில் அதிக முனைப்புடன் செயற்பட்டாலும் இந்தியா, சீனாவைத் தவிர ஏனைய ஆசிய நாடுகளின் சந்தை வாய்ப்பைக் கைப்பற்றுவதில் தோல்வியடைந்து விட்டதென்பது கவலைக்குரிய விடயமாகும். அதேநேரம் ஏனைய ஆசிய நாடுகளான தென் கொரியா, ஜப்பான், வியட்னாம், தாய்லாந்து போன்றவை ஆசிய நாடுகளின் ஏற்றுமதிச் சந்தையைக் கைப்பற்றுவதில் வெற்றிகண்டுள்ளன. இவ்வாறு இலங்கையானது குறிப்பிட்ட சில நாடுகளின் சந்தையில் அதிகளவு தங்கியிருக்கும் போது அந்நாடுகளில் ஏற்படும் பொருளாதாரப் பாதிப்புக்கள் இலங்கையின் ஏற்றுமதி வர்த்தகத்தையும் பாதிப்படையச் செய்வதோடு பொருளாதாரத்தில் மோசமான நிலையை தோற்றுவித்துவிடும்.

மேலும் இலங்கையானது 77 சதவீதம், சிறிய மற்றும் நடுத்தரக் கைத்தொழில்களை மையப்படுத்தியே அதிகளவில் காணப்படுகின்றது. ஆனால் இவை வேலைவாய்ப்பு உருவாக்கத்தில் குறைந்தளவிலேயே செல்வாக்குச் செலுத்தகின்றது. மாறாக 23 சதவீதமாகவுள்ள பாரிய அளவிலான கைத்தொழில்கள் 62 சதவீதமான தொழில் வாய்ப்புகளை உருவாக்குவதில் முக்கிய பங்குகொண்டு செயற்படுகின்றன. எனவே இலங்கையானது சிறிய மற்றும் நடுத்தரக் கைத்தொழில்களில் அதிகமாகத் தங்கியிருக்காமல் தொழில்வாய்ப்பு உருவாக்கத்தில் முக்கிய பங்குகொண்டு செயற்படுகின்ற பாரியளவிலான கைத்தொழில்களில் அதிக கவனமெடுத்துச் செயற்பட வேண்டும். அதுமட்டுமன்றி இலங்கையின் பிரதான ஏற்றுமதியான தைக்கப்பட்ட ஆடைக் கைத்தொழில் எதிர்நோக்கும் அடுத்த முக்கிய பிரச்சினை என்னவெனில் கூலி வேறுபாடுகளால் ஏனைய போட்டி நாடுகளோடு

போட்டி போட முடியாமல் வர்த்தக வாய்ப்பை இழக்கும் நிலைக்கு உள்ளாகியுள்ளது. இலங்கையை விட பங்களாதேஷில் குறைந்த செலவில் மலிவான ஊழியத்தைப் பெறக்கூடிய வாய்ப்பு இருப்பதனால் இலங்கையைக் காட்டிலும் பங்களாதேஷிற்கு அதிக வர்த்தக வாய்ப்பு காணப்படுகின்றது. இதனால் இலங்கையின் ஆடைக் கைத்தொழில் கடுமையான வர்த்தகப் போட்டியினையும் பாதிப்பினையும் எதிர்நோக்குகின்றது.

மேலும் ஏற்றுமதித் துறையில் நவீன தொழில்நுட்பங்களின் பயன்பாடும் மற்றும் முதலீடுகள் போதியளவில் இடம்பெறாமையும் முக்கிய குறைபாடாகப் பார்க்கப்படுகின்றன. குறிப்பாக இலங்கையின் பிரதான ஏற்றுமதியான ஆடைக் கைத்தொழிலில் புதிய தொழில்நுட்பங்கள், புத்தாக்கங்கள், புதிய கண்டுபிடிப்புக்கள் ஆகியவை உள்வாங்கப்படுகின்ற தன்மை குறைவாகவே காணப்படுகின்றது. மற்றைய போட்டி நாடுகளால் இலகுவாக உற்பத்தி செய்து சந்தைக்கு வரக் கூடிய பொருளாக ஆடை கைத்தொழில் உற்பத்திகள் விளங்குகின்றன. இருப்பினும் பங்களாதேஷ், இந்தியா, தாய்வான் போன்ற நாடுகள் இலங்கையை விட குறைந்த உற்பத்திச் செலவில் நவீன தொழில்நுட்பங்கள் மற்றும் புத்தாக்கங்களைக் கையாண்டு பொருட்களை உற்பத்தி செய்வதனால் இலங்கையானது அந்நாடுகளோடு போட்டி போடமுடியாமல் வர்த்தகவாய்ப்பை இழக்கின்றது.

இலங்கையின் ஏற்றுமதி வர்த்தகமானது எதிர்கொள்ளும் மற்றுமொரு முக்கியமான சவால் ஏனைய போட்டி நாடுகளின் ஆதிக்கமாகும். பெரும்பாலான அபிவிருத்தி அடைந்த நாடுகள் இலங்கையைக் காட்டிலும் குறைந்த உற்பத்திச் செலவில் பொருள் ஏற்றுமதியை மேற்கொள்ளுகின்ற சீனா, இந்தோனேஷியா, பங்களாதேஷ் போன்ற நாடுகளை நோக்கி தமது சந்தையினைத் திருப்பியுள்ளன. மேலும் மத்திய மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளான செக்குடியரசு, ஹங்கேரி, பல்கேரியா போன்ற பல நாடுகள் எதிர்காலத்தில் இலங்கையைப் பின்தள்ளிவிட்டு ஐரோப்பிய சந்தையைக் கைப்பற்றலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதனால் இலங்கை அண்மைக்காலமாக தனது சந்தை வாய்ப்பை இழந்துகொண்டு வருகின்றது.

இலங்கையின் ஆடைக் கைத்தொழில் ஏற்றுமதி மட்டுமல்லாமல் தேயிலை ஏற்றுமதியும் அண்மைக்காலமாக பாரிய சவால்களை முகங்கொடுக்கின்றது. உலக தேயிலை ஏற்றுமதியில் சீனா, இந்தியா, கென்யாவிற்கு அடுத்ததாக நான்காவது இடத்தில் இலங்கை விளங்குகின்றது. எனினும் இலங்கையானது தேயிலை உற்பத்தியிலும் சர்வதேச ரீதியான சந்தைவாய்ப்பையும், போட்டித் தன்மையையும் இழந்து கொண்டு வருகின்றது என்பதுதான் திண்மமான உண்மை. ஆய்வாளர் பலர் இலங்கையானது தொடர்ந்தும் எதிர்காலத்தில் தேயிலை உற்பத்தியில் தங்கியிருக்கக்கூடாது என அறிவுறுத்துகின்றனர். எனவே, இலங்கையின் ஏற்றுமதி செயலாற்றத்தைக் கூட்டுவதற்கும் சர்வதேச

வர்த்தகத்தில் முன்னேற்றகரமான நிலைக்கு நாட்டைக் கொண்டுவரவும் அரசாங்கமட்டத்தில் முக்கியமான சில கொள்கைச் சீர்திருத்தங்களை ஏற்படுத்த வேண்டியது அவசியமாகும். இதில் முக்கியமாக சேவைத்துறை வர்த்தகம் (Trade in Service) மற்றும் உலகளாவிய உற்பத்திப் பகிர்வு (Global Production Sharing) என்பன தொடர்பில் இலங்கை கூடுதல் கவனம் செலுத்தவேண்டியது அவசியமாகக் காணப்படுகின்றது.

## சேவைத்துறை வர்த்தகம் (Trade in Service)

இலங்கையின் பொருளாதாரத்தில் சேவைத் துறையானது முன்னணியில் இருந்தாலும் சேவைத்துறையை வர்த்தகம் செய்தல் என்பதில் இலங்கை அதிகளவு கவனம் செலுத்தாமலுள்ளது. பொருட்களை உற்பத்தி செய்து அதனை வர்த்தகம் செய்வதில் கவனம் செலுத்துவது போன்று சேவைத்துறையை வர்த்தகம் செய்வதிலும் இலங்கை கவனம் செலுத்த வேண்டும். உலக வர்த்தக ஸ்தாபனத்தின் (WTO) கருத்துப்படி கடந்த 25 வருடங்களாக வளர்ச்சியடைந்த மற்றும் நிலைமாறும் பொருளாதாரங்கள், பண்டங்களை வர்த்தகம் செய்வதைக்காட்டிலும் சேவைத்துறை வர்த்தகத்தினூடாக மிக வேகமாக வளர்ச்சியடைந்துள்ளன. வங்கி வர்த்தகம், சுற்றுலா வர்த்தகம், வாடிக்கையாளர் முகவர் சேவைகள், வெளிநாட்டுப் பயண ஆலோசனைச் சேவை, தகவல் தொழிநுட்ப சேவை போன்ற துறைகளில் சேவை வர்த்தகமானது கூடுதலாக கவனம் செலுத்துகின்றது. குறிப்பாக சிங்கப்பூர் நாடானது சேவைத்துறையை வர்த்தகம் செய்து ஏற்றுமதி செய்வதனூடாக தமது நாட்டின் வர்த்தகத்தை முன்னிலைக்கு கொண்டுவந்துள்ளது. ஆனால் இலங்கையானது சேவைகளை வர்த்தகம் செய்வதில் மிகவும் ஆரம்ப நிலையிலேயே இருக்கின்றது. எனவே இலங்கை இது தொடர்பில் கவனம் செலுத்தி நாட்டின் ஏற்றுமதி வர்த்தகத்தை முன்னிலைக்கு கொண்டுவரவேண்டும் என ஆய்வாளர்களால் அறிவுறுத்தப்படுகின்றது.

## உலகளாவிய உற்பத்திப் பகிர்வு (Global Production Sharing)

எந்தவொரு நாடும் தனித்துப் பொருட்களை உற்பத்தி செய்யாமல் எல்லா நாடுகளின் பங்களிப்புடனும் பொருட்களை உற்பத்தி செய்ய வேண்டும். ஒரு பொருளின் எப்பகுதி உருவாக்கத்தில் எந்த நாடு ஒப்பீட்டுரீதியாக நன்மையினை கொண்டுள்ளதோ அந்நாடே அப்பொருளுற்பத்தியில் ஈடுபடுவதனூடாக குறைந்தசெலவில் பாரியளவில் உற்பத்தியை மேற்கொள்ளலாம். இதனால் அந்நாடுகளில் வேலைவாய்ப்பு, முதலீடுகள், உற்பத்தி, ஏற்றுமதி வருவாய் அதிகரிக்கும். இவ்வாறு ஒப்பீட்டு நன்மை அடிப்படையில் எல்லா நாடுகளும் ஒரு பொருளின் உற்பத்திக்கு பங்களிக்கும் போது அப் பொருள் உலாகளாவிய பொருளாக மாறும் (Global Product). அவ்வாறே இலங்கையால் தனியொரு பொருளை உற்பத்தி செய்ய முடியாமல் விட்டாலும் ஒரு பொருளின் குறிப்பிட்ட ஒரு பகுதியினை உற்பத்தி செய்வதற்க்கான வாய்ப்பை பெறும் பட்சத்தில்

நாட்டில் உற்பத்தி, வேலைவாய்ப்பு, முதலீடுகள் மற்றும் ஏற்றுமதி வருமானம் அதிகரிக்கும். உதாரணமாக Toyota நிறுவனத்தின் Air Bag Sensor உற்பத்தியில் இலங்கையின் Lanka Harness நிறுவனம் பங்களிப்புச் செய்துவருகின்றமை இங்கே குறிப்பிடத்தக்கதாகும்.

இவை தவிர சந்தையில் ஊடுருவுவதற்க்கான தந்திரோபாயங்களைக் கையாளல், ஏற்றுமதிக்கான சந்தையை விரிவாக்கம் செய்தல், ஏற்றுமதிப் பொருட்களை பன்முகப்படுத்துதல், ஏற்றுமதியை நோக்காகக் கொண்ட இறக்குமதிகள் மற்றும் முதலீடுகளை ஊக்குவித்தல் போன்றவற்றினூடாகவும் நாட்டின் ஏற்றுமதித் துறையின் செயலாற்றத்தை முன்னேற்றும் செயற்பாடுகளில் இலங்கை, கொள்கை வகுப்புக்களை மேற்கொண்டு அவை தொடர்பில் கவனம்செலுத்துதல் வேண்டும்.

ஆகவே ஒரு நாட்டின் பொருளாதார அதிர்ச்சியைத் தாங்கிகொள்வதற்கான ஒரு சக்தியாகவும் காப்பு நிதி மூலமாகவும் விளங்குகின்ற இவ் வெளிநாட்டு ஒதுக்குகளைத் தீர்மானிக்கும் முக்கிய காரணியாக அந் நாட்டின் வர்த்தக செயலாற்றம் விளங்குவது தெளிவாகின்றது. மேலும் சிறந்த வர்த்தகச் செயலாற்றத்தைக் கொண்டுள்ள நாடுகள் வெளிநாட்டு ஒதுக்குகளின் கையிருப்பிலும் முன்னிலையில் உள்ளன. உலகளாவிய கொரோனாத் தொற்றுப்பரவல் போன்ற அசாதாரண சூழ்நிலையால் நாடுகள், பொருளாதார அதிர்ச்சிக்கு முகங்கொடுத்தாலும் இலங்கையைப் போன்று பாரிய பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளப்படவில்லை. இலங்கையானது வெளிநாட்டு ஒதுக்குகளை போதியளவு கொண்டிருந்தால் பொருளாதார நெருக்கடி நிலையை ஓரளவு பிற்போட்டிருக்கலாம் என்பது திடமான உண்மையாகும். இலங்கையில் இப் பிரச்சினைக்கு குறுகிய காலத்தில் தீர்வுகாணமுடியாது. ஏனெனில் பலவீனமான வெளிநாட்டு ஒதுக்குகளின் கையிருப்பே இந்நாடு தற்போது பாரிய பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ளக் காரணமாகும். இலங்கையானது பொருத்தமான கொள்கைச் சீர்திருத்தங்களின் மூலமாக சர்வதேச வர்த்தகத்தை முன்னிலைக்கு கொண்டுவருவதனூடாக வெளிநாட்டு ஒதுக்கினை அதிகரித்து நாட்டை நெருக்கடி நிலையிலிருந்து மீட்டெடுக்கமுடியும் என்பது பொருளியல் ஆர்வலர்களின் எதிர்பார்ப்பாகவுள்ளது.

## அத்தியாயம் 02

# இலங்கையின் வரி முறைமையும் தற்கால பொருளாதார நெருக்கடியும்

# Sri Lanka’s Tax System and Current Economic Crisis

**Prof. K. Amirthalingam**
Senior Professor in Economics,
Department of Economics,
Faculty of Arts,
University of Colombo.

(18.05.2022 அன்று நடைபெற்ற நிகழ்நிலைக் கருத்தரங்கின் தொகுப்பு)

## அறிமுகம்

தற்காலத்தின் பேசுபொருளாக இருக்கும் விடயங்களுள் இலங்கையின் பொருளாதார நெருக்கடியும் ஒன்றாகும். அந்தவகையில் இன்றைய பொருளாதார நெருக்கடிக்கு இலங்கையின் வரிமுறைமை எவ்வாறு வழிவகுத்து செல்கின்றது என்பது தொடர்பாக நாம் ஆராய்வோமாக இருந்தால், முதலில் வரி என்றால் என்ன என்பதன் விளக்கத்திலிருந்தே இதனை முன்னெடுத்துச் செல்ல வேண்டும். வரி என்பதனை நாட்டின் ஒவ்வொரு பிரஜையும் தான் நுகரும் அரச சேவைகளுக்கான செலவில் தனது பங்கினை ஏற்பதற்காக அரசாங்கத்திற்கு செலுத்தும் ஒரு விலையாகும் என Kaldor (1963) வரையறை செய்துள்ளார். வரி என்பது சட்ட அங்கீகாரத்துடன் பொதுநோக்கங்களுக்காக அரச அதிகாரிகளால் கட்டாயமாக பொதுமக்களிடமிருந்து வசூலிக்கப்படும் தொகையாகும்.

பொதுவாக வரிமுறைமை தொடர்பாக பார்க்கும் போது ஒரு சிறந்த வரிமுறைமை எவ்வாறு இருக்க வேண்டும் என்பது தொடர்பாக இரண்டு விதமான தத்துவங்கள் உள்ளன. அதில் ஒன்று வரிமுறைமையானது வினைத்திறனாக இருக்க வேண்டும், மற்றையது வரிமுறைமையானது நியாயத்தன்மை கொண்டதாக இருக்க வேண்டும். இதில் வரிமுறைமையின் வினைத்திறன் என்பது ஒரு நாட்டின் வரிமுறைமையானது அந்நாட்டின் வரவுசெலவுத்திட்ட குறிக்கோளை அடைவதற்கு தேவையான வருமானத்தினை திரட்டக்கூடியதாக இருத்தல் வேண்டும். அதேபோல் வரிமுறைமையின் நியாயத்தன்மை என்பது ஒரு நாட்டின் வரிமுறைமையானது வருமானம் குறைந்த மக்களை அதிகம் பாதிக்கக்கூடாது என்பதனைக் குறித்து நிற்கின்றது.

அந்தவகையில் இலங்கையின் வரிமுறைமை வினைத்திறனாக இருக்கின்றதா? அதேபோல் நியாயத்தன்மை கொண்டதாக இருக்கின்றதா? என்பதில் கவனம் செலுத்துதல் அவசியமாகும். முதலாவதாக இலங்கையின் வரிமுறைமை இலங்கைக்குத் தேவையான அரசிறையினை அல்லது வருமானத்தினை தருகின்றதா? என பார்த்தல்

வேண்டும். வரிமுறைமை தொடர்பாக ஆராயும் போது வரிவீதம் (Tax Ratio) மிக முக்கியமான ஒன்றாக காணப்படுகின்றது.

பொது நிதி தொடர்பான பல விளக்கங்களைக் கொடுத்துள்ள Kaldor எனும் பொருளியலாளரின் கருத்தின்படி அரசிறை வீதம் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வீதமாக அதிகரித்துச் செல்லுதல் வேண்டும் எனக் குறிப்பிடுகின்றார். ஒரு நாடு அபிவிருத்தி அடைவதாக இருந்தால் அது 25 - 30% ஆக தனது வரிவருமானத்தினைப் பேண வேண்டும் என்பது Kaldor இன் கருத்தாகும். அந்தவகையில் இலங்கையின் வரிவருமானத்தினை எடுத்துக் கொண்டால் அது ஆரம்பத்தில் 19%ஆக இருந்து படிப்படியாக வீழ்ச்சி கண்டு இன்றைய நிலையில் இலங்கையின் வரிவீதம் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வீதமாக படுமோசமாக வீழ்ச்சியடைந்து 2021இல் 7.7% எனும் நிலையினை அடைந்துள்ளது. இதன் கருத்து என்னவெனில் Kaldorஇல் இருந்து நாம் முற்றுமுழுதாக விலகி நிற்கின்றோம். இலங்கையின் வரி வருமானம் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வீதமாக மிக மோசமாக வீழ்ச்சியடைந்து செல்கின்றது. இது ஏனைய உலக நாடுகளுடன் ஒப்பிடும் போது மிகவும் பின்தங்கிய நிலையாகும். மேலும் குறிப்பிடுவதாக இருந்தால் எத்தியோப்பியாவுடன் ஒப்பிடும் அளவிற்கு இலங்கையின் வரிவீதம் படுமோசமாக வீழ்ச்சியடைந்துள்ளது எனலாம்.

இலங்கையின் அரசிறை வீதம் குறைவாக உள்ளமைக்கு பின்வருவன ஏதுவாக அமைகின்றன. அந்தவகையில் இலங்கையில் வரிஅறவீடு செய்யும் முகவர்களான உள்நாட்டு இறைவரித் திணைக்களம் (Department of Inland Revenue), கலால் திணைக்களம் (Excise Department of Sri Lanka), சுங்கத் திணைக்களம் (Sri Lanka Customs) ஆகிய 03 திணைக்களங்களும் வரியை அளவிடுவதில் பல சவால்களை எதிர்கொள்கின்றன. உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு நாட்டு மக்களின் வருமானத்தினை மிகச்சரியாக கணிப்பிடுவதில் சவால்கள் காணப்படுகின்றன. அதன் காரணமாக அவர்களால் மக்களின் வருமானத்தினை மிகச்சரியாக கணிப்பிட முடியவில்லை. ஒருவரின் சரியான வருமானம் தொடர்பான தரவு இல்லாத பட்சத்தில் வரியினை அறவிடுதல் சிரமமானதாகும்.

அடுத்து, முறைசாரா பொருளாதார நடவடிக்கைகளை முறைசார்ந்த முறைமைக்குள் கொண்டுவருவதில் உள்ள முன்னேற்றம் மெதுவாக இடம்பெறுகின்றமை, நவீன தொழில்நுட்ப பயன்பாடு மிகவும் குறைந்த நிலையில் உள்ளமை மற்றும் வரி செலுத்தக் கூடியவர்களை வங்கிகளுடன் இணைக்க முடியாமை, அதேபோல் வருமானத்தை உழைக்கும் திணைக்களங்களான உள்நாட்டு இறைவரித் திணைக்களம், கலால் வரித் திணைக்களம், சுங்கத் திணைக்களம் என்பவற்றுடன் இலங்கையின் வங்கிமுறைமை சரியாக இணைக்கப்படவில்லை. இத்திணைக்களங்களை இணைக்க வேண்டுமாயின் அதன் நடைமுறை

தொடர்பான சட்ட ஏற்பாடுகள் சரியான முறையில் காணப்படுதல் வேண்டும். ஏனைய உலக நாடுகளில் இந்நடைமுறையினை பின்பற்றுவதில் மிகச்சிறந்த முன்னேற்றம் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

அடுத்து இலங்கையின் சிறு சிறு வர்த்தகங்கள் வரி அறவிடும் திணைக்களங்களுடன் இணைக்கப்படவில்லை அல்லது அவர்கள் குறைவாக வரி செலுத்துகின்றனர். அதேபோல் அடிப்படையான கணக்கு பேணப்படாமை அதாவது பொருட்கள் சேவைகள் கொள்வனவு மற்றும் நுகர்வின் போது வரி செலுத்தும் இலக்கமிடப்பட்ட பற்றுச்சீட்டு நுகர்வோரான எமக்கு வர்த்தகர்களினால் வழங்கப்படுவதில்லை. இதன் அர்த்தம் பலர் வரி செலுத்தாமல் தமது வர்த்தகத்தை மேற்கொள்கின்றனர். இதனாலும் வரி வருமானத்தை அதிகரிக்க முடியாத நிலை காணப்படுகின்றது.

பொதுவாக வரி செலுத்துவோர் எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்தல் வேண்டும் ஆனால் இலங்கையைப் பொறுத்தமட்டில் வரி செலுத்துவோர் எண்ணிக்கையில் பெருமளவு அதிகரிப்பு காணப்படவில்லை. அடுத்து வரி ஏய்ப்பு அல்லது வரி தவிர்ப்பு இலங்கையில் அதிகளவில் காணப்படுகின்றது. இலங்கை சட்டமா அதிபர் திணைக்களத்தின் கருத்துப்படி 2019ஆம் ஆண்டு வரி செலுத்த வேண்டியவர்களில் 290 பில்லியன் மக்கள் வரி செலுத்தவில்லை. வரி அறவிடும் முகவர்களுக்கிடையேயான நிருவாகம் ஒரு குடையின் கீழ் இடம்பெறவில்லை. இதனால் நாட்டின் வரிவருமானத்தினை வினைத்திறனாக அறவிடுவதில் சவால்கள் காணப்படுகின்றன. அடுத்து நாட்டு மக்களின் மனநிலை பெரும்பாலும் அரசின் சேவை வழங்களில் திருப்தியற்றதாக உள்ளமை. அதாவது, அரசு தமது தேவைகளை சரியாக பூர்த்தி செய்யவில்லை இதனால் நாம் வரி செலுத்த வேண்டியதில்லை என மக்கள் உணர்கின்றனர். இதன் காரணத்தினாலும் வரிவருமானம் பெருமளவில் வீழ்ச்சி கண்டுள்ளது.

இலங்கை நடுத்தர வருமான நாடாக பயணிக்கும் தருணத்தில் இடம்பெற்ற ஈஸ்டர் தாக்குதலினால் நாட்டின் பொருளாதாரம் வெகுவாக பாதிக்கப்பட்டு அது மீண்டும் குறைந்த நடுத்தர வருமானம் கொண்ட நாடாக மாற்றமடைந்தது. நாட்டில் அடிக்கடி அரசாங்கத்தினால் வழங்கப்படும் வரிவிலக்கு, வரி மன்னிப்பு மற்றும் வரிச்சலுகை என்பனவும் வரிவருமான வீழ்ச்சிக்கு காரணமாக அமைந்தது. அடுத்து நாட்டில் வரி அறவிடுவது தொடர்பிலான சட்டங்கள் தெளிவாக வரையறுக்கப்படாமை அதாவது மிகவும் பழமையான சட்டங்களே இப்பொழுதும் நடைமுறையில் உள்ளன. அவை மாற்றப்படுதல் அவசியமாகும். அதேநேரம் சட்டங்கள் நவீன மயப்படுத்தப்பட வேண்டும்.

அடுத்தது சம்பளம் மீதான வரி அறவிடுதலிலும் குறைபாடுகள் காணப்படுகின்றது. இலங்கையில் 1.5 மில்லியன் பேர் அரச ஊழியர்களாகவும் 1.6 மில்லியன் பேர் தனியார்துறை ஊழியர்களாகவும்

காணப்படுகின்றனர். உழைக்கும் போதே வரி செலுத்துங்கள் 'Pay as you earn' என்ற திட்டத்தின் கீழ் இலங்கையில் வரி செலுத்துபவர்கள் 2019இல் 35448 பேரும் 2020இல் 34991 பேரும் ஆகும். இலங்கையில் ரூபா. 250,000 மேல் சம்பளம் பெறுபவர்கள் வரி செலுத்துதல் வேண்டும். ஆனால் இலங்கையில் 34991 பேர் மாத்திரமே ரூபா. 250,000இற்கு அதிகமான வருமானம் பெறுகின்றனர். இவர்களே வரி செலுத்துகின்றனர். இதன் கருத்து என்னவெனில், நாட்டில் ஊழியர்களுக்கான சம்பளம் குறைவாகவே உள்ளது. இதனால் சம்பளத்தின் மூலம் கிடைக்கும் வரிவருமானம் குறைவாக உள்ளது. அத்துடன் இலங்கையின் அரசாங்கம் தற்பொழுது வருமான வரியினை 24%இலிருந்து 18% வீதமாக குறைத்தமையும் இலங்கையின் வரிவருமானம் வினைத்திறனற்றுக் காணப்படுவதற்கு காரணமாக அமைந்துள்ளது.

அடுத்து இலங்கையில் வரிமுறைமை நியாயத்தன்மை உடையதாக காணப்படுகின்றதா எனப் பார்த்தால், அதாவது வருமானம் கூடியவர்கள் கூடுதலாகவும் வருமானம் குறைந்தவர்கள் குறைவாகவும் வரிசெலுத்துகின்றனரா எனப் பார்த்தால் அதிலும் சவால்கள் காணப்படுகின்றது. இலங்கையின் வரிவருமானத்தில் நேர்வரியிலும் பார்க்க நேரில் வரியின் பங்கு மிகவும் அதிகமாகக் காணப்படுகின்றது. அதாவது நேர்வரி வருமானம் கூடிய மக்களிடமிருந்து அறவிடப்படுவதோடு, இவ்வரியானது இலங்கையில் மிகக்குறைவாக உள்ளது. நேரில்வரி, அதாவது வருமானம் கூடியவர் குறைந்தவர் என அனைவரிடத்திலும் அவர்களின் பொருட்கள் சேவைகள் கொள்வனவு மற்றும் நுகர்வின் போது அறவிடப்படும் வரியாகும். இதன் பங்கே இலங்கையின் வரிவருமானத்தில் அதிகமாகக் காணப்படுகின்றது.

Musgrave எனும் பொருளியலாளர் பொருளாதார அபிவிருத்தியை இரண்டு காலகட்டங்களாக பிரிக்கின்றார். அதில் ஒன்று மக்கள் ஆரம்பத்தில் கிராமத்தில் வாழ்வார்கள். பொருளாதாரம் வளர்ச்சியடையாது காணப்படும். நாடு அபிவிருத்தி அடையாத நாடாக காணப்படும். இந்த இடத்தில் பொருளாதார நடவடிக்கைகள் முறைசாராதவையாகக் காணப்படுவதனால் மக்களிடமிருந்து அரசாங்கத்தினால் நேர் வரி அறவிட முடியாது. Musgraveஇன் இரண்டாவது கட்டத்தில் நாடு அபிவிருத்தியை நோக்கி நகரும் பண்புகளை அதிகம் கொண்டிருக்கும். பொருளாதாரம் முறைசார்ந்ததாக காணப்படும். மக்களின் வருமானம் அதிகரித்துக் காணப்படும். பொருளாதாரத்தில் கைத்தொழில் துறையும் சேவைகள் துறையும் ஆதிக்கம் செலுத்தும். இந்நிலையில் நேர்வரிகளை அரசாங்கம் அறவிடலாம் என அவர் கருதுகின்றார்.

இந்த நிலையில் இலங்கையின் 1980 - 2021 வரையான தரவுகளைப் பார்த்தால் மொத்த வரிவருமானத்தில் நேரில் வரிகளின் பங்கே மிகவும் அதிகமாகக் காணப்படுகின்றது. வருமானம் குறைந்தவர்களும் வருமானம் கூடியவர்களும் பொதுவாக செலுத்தும் இந்த நேரில் வரியினை நாம்

தேய்வு நிலை வரி எனக் குறிப்பிடுகின்றோம். இது வருமானம் குறைந்த மக்களை வெகுவாகப் பாதிக்கின்றது. நேர்வரிகளை நாம் விருத்திமுறை வரி எனலாம். இது வருமானம் கூடியவர்களிடம் அதிகமாகவும் வருமானம் குறைந்தவர்களிடம் குறைவாகவும் அறவிடப்படுகின்றது. ஆனால் இலங்கையில் நேர்வரியின் பங்கு மிகக் குறைவாகும்.

உண்மையில் பல நாடுகளின் வரிவருமானத்தில் நேர்வரிகளின் பங்கு அதிகரித்துச் செல்வதையும் நேரில்வரிகளின் பங்கு குறைந்து செல்வதையும் காண முடிகின்றது. ஆனால் இலங்கையில் நேரில்வரி 80%ஆகவும் நேர்வரி 20%ஆகவும் காணப்படுகின்றது. இலங்கையில் வரிமுறைமை வருமானம் குறைந்த மக்களுக்கு வரிச்சுமையினை ஏற்படுத்துகின்றமையினால் அது நியாயத்தன்மை உடையது அல்ல எனலாம்.

அபிவிருத்தி அடைந்த மற்றும் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் அனுபவங்களுடன் நாம் இலங்கையினை ஒப்பிட்டு பார்த்தால் Musgrave (1969) ஒரு நாடு அபிவிருத்தியை நோக்கிச் செல்லும் போது மொத்த வரிவருமானத்தில் நேர்வரிகளின் பங்கு அதிகரித்துச் செல்வதோடு நேரில் வரியின் பங்கு குறைதல் வேண்டும். இவ்வாறான நிலையை இலங்கையின் அனுபவத்துடன் ஒப்பிட்டுப் பார்த்தால், Musgraveவின் கருத்துப்படி 1960களில் இலங்கையின் பொருளாதாரத்தில் விவசாயத்துறை 38%ஆகவும், கைத்தொழில்துறை 17%ஆகவும், சேவைகள் துறை 45%ஆகவும் இருந்து, 2021இல் விவசாயம் 6.9%ஆகவும், கைத்தொழில் 25.9%ஆகவும், சேவைகள் 58.3%ஆகவும் மாற்றமடைந்துள்ளது. இது Musgrave வினுடைய கட்டமைப்பு மாற்றத்தை இலங்கைப் பொருளாதாரம் அடைந்துள்ளது என்பதனைக் காட்டுகின்றது. ஆனால் வரிமுறைமை இதற்கேற்றால் போல் மாற்றமடையவில்லை. இலங்கையின் தலாவருமானமும் ஏனைய தெற்காசிய நாடுகளுடன் ஒப்பிடுகையில் அதிகமாகவே உள்ளது. ஆனால் நேர்வரியின் பங்கு அதிகரிக்கவில்லை.

அதேநேரம் நாம் அபிவிருத்தி அடைந்த உலக நாடுகளில் நேர்வரியின் பங்களிப்பினைப் பார்த்தால் உதாரணமாக, அமெரிக்காவிற்கு 92% வரிவருமானம் நேர்வரியில் இருந்து கிடைக்கிறது. கனடா 79%, மலேசியா 68%, இந்தியா 50%, கென்யா 44%, தாய்லாந்து 42%, கொரியா 55% மற்றும் உகண்டா 34% வரி வருமானத்தை நேர்வரிகளில் இருந்து பெறுகின்றன. இலங்கை 25% பெறுகிறது. இங்கு இலங்கை மாத்திரமே இந்த கோட்பாட்டிற்கு வெளியில் நிற்பதை காணமுடிகின்றது.

இந்தநிலையில் நாம் எவ்வாறு இலங்கையின் வரிமுறைமையில் வினைத்திறனை கூட்டலாம் எனப் பார்த்தால் பின்வரும் விடயங்களில் கவனம் செலுத்த வேண்டும்.

- ஊழலினை குறைத்தல் வேண்டும்.
- அரசாங்கத்தின் உறுதித்தன்மை பேணப்படுதல் வேண்டும்.
- அரசாங்கத்தின் வெளிப்படுதன்மை பேணப்படுதல் வேண்டும்.

ஒரு சாத்தியமான வரிசெலுத்த வேண்டிய வருமானம் கொண்டவர்களை அடையாளம் கண்டு வரி செலுத்தச் செய்வதற்கான நவீன தொழில்நுட்பத்தினை உருவாக்குதல் வேண்டும். அத்துடன் முறைசாரா துறைகளை முறைசார்ந்த துறையாக மாற்றுவது எவ்வாறு என்பது தொடர்பாக கவனம் செலுத்த வேண்டும். உதாரணமாக நாம் சில பொருட்கள் சேவைகளுக்கான கொடுப்பனவினை மேற்கொள்ளும் போது எமது வருமான அட்டை மற்றும் கடன் அட்டை மூலம் கொடுப்பனவினை செலுத்துவதை சில வியாபாரிகள் அல்லது வர்த்தகர்கள் விரும்புவதில்லை. ஏனெனில் அவ்வாறு செலுத்தும் போது அவர்களின் வருமானம் தொடர்பான விடயம் வங்கிகள் மூலம் கணிப்பிடப்படலாம் என அவர்கள் நினைக்கின்றனர். இதனை வரிவிதிப்பிலிருந்து தப்பிக்கும் ஒரு நுட்பமாக அவர்கள் பயன்படுத்துகின்றனர். வரிசெலுத்துபவர்களை அரசாங்கம் வங்கிகளுடன் இணைக்கத் தவறிவிட்டது. இதனை அரசு சீர்செய்தல் வேண்டும். அட்டை பாவனையினை அதிகரிக்க வேண்டும். வரி செலுத்துபவர்களையும் வரி முகவர்களையும் வங்கிகளுடன் இணைத்தல் வேண்டும். உதாரணமாக உள்நாட்டு இறைவரித் திணைக்களம், கலால் திணைக்களம் மற்றும் சுங்கத் திணைக்களம் என்பவற்றை வங்கிகளுடன் இணைத்தல் வேண்டும்.

இலங்கையில் வரி வருமானத்தினை அதிகரிக்க வேண்டுமானால் வரிவீதத்தினை அதிகரிப்பதனை விட வரித்தளத்தினை விரிவுபடுத்த வேண்டும். அதாவது வரி செலுத்துபவர்களை அடையாளம் கண்டு அவர்களை வரிமுறைமைக்குள் கொண்டுவருதல் வேண்டும். அத்துடன் பழமைவாய்ந்த வரிச் சட்டங்கள் நவீனமயப்படுத்தப்பட்டு இற்றைப்படுத்தப்பட வேண்டும். அதேபோல் வரி அறவீட்டு முறைமையும் நவீனமயப்படுத்தப்படுதல் வேண்டும்.

அதேநேரம் இலங்கையில் 30இற்கும் மேற்பட்ட வரிகள் நடைமுறையில் உள்ளன. இதன் எண்ணிக்கையினைக் குறைக்க வேண்டும். சில வளர்ச்சியடைந்த நாடுகளில் (சிங்கப்பூர்) 05 வரிகள் மாத்திரம் உள்ளன. வரி நிருவாகம் தொடர்பான விடயத்திலும் கணக்காய்விலும் கவனம் செலுத்த வேண்டும். அரசியல் இலாபத்திற்காக வரிச்சலுகைகளை வழங்காமல் பொருளாதார அபிவிருத்திற்கு தேவையான சலுகைகளை மாத்திரம் வழங்குதல் வேண்டும். அதேபோல் வெளிப்படுத்தாத வருமானத்தின் மீது வரியினை அறவிடுதல் வேண்டும். அதாவது வரி செலுத்தாது தமது வருமானத்தை மறைப்பவர்கள் ஆடம்பரப் பொருட்களைக் கொள்வனவு செய்யும் போது அதன் மீது செலவின வரி விதித்தல் வேண்டும். மேலும் வரி ஏய்ப்பு செய்பவர்களையும் ஊழல் செய்பவர்களையும் தண்டிப்பதுடன் சிறந்த வரி செலுத்துபவர்கள், சிறந்த வரி நிருவாகிகள் ஆகியோர் ஊக்கப்படுத்தப்படல் வேண்டும்.

வரிமுறைமையில் அரசியல் தலையீடு இருக்ககூடாது. சுதந்திர வரி ஆணையாளர் இலங்கைக்குத் தேவையாகும். அவ்வாறு இருக்கும் போது ஒரு சீரான வரிமுறைமை இலங்கையில் ஏற்படுத்த முடியும். அந்தவகையில் நியாயத் தன்மையைப் பேணுவதில் உள்ள தடைகளை நீக்க வேண்டுமாயின் நேர்வரிகளை அதிகரிப்பதிலும் நேரில் வரிகளை குறைப்பதிலும் செல்வாக்குச் செலுத்த வேண்டும். இலங்கையைப் பொறுத்தமட்டில் வரலாற்று ரீதியாக இலங்கை அரசாங்கம் இதில் வெற்றி பெறவில்லை. இலங்கையின் வரிமுறைமையை நாம் பார்த்தால் அது கோட்பாடு மற்றும் ஏனைய நாடுகளின் அனுபவத்திலிருந்து விலகிச் செல்வதனை தெளிவாக அவதானிக்க முடிகிறது.

மேலும் நேர்வரி செலுத்துவது அனைவருக்கும் வரி செலுத்துகின்றோம் என்ற உணர்வை தருகிறது. இது சற்று கசப்பான உணர்வைத் தரலாம். ஆனால் நேரில் வரி செலுத்துவது பொருட்கள் சேவைகள் ஊடாக வரி செலுத்துகின்றோம் என்று அறியாமல் செலுத்துவது ஆகும். இது அரசாங்கத்திற்கு இலகுவானதாக உள்ளதுடன் மக்களும் தங்களை அறியாமலே இவ்வரியினை செலுத்துகின்றனர். எனவே இது இலகுவாக உள்ளமையினால் அரசாங்கம் இதில் அதிக கவனம் செலுத்துகின்றது. இந்த நிலை மாற வேண்டும். நேர் வரியினை அதிகம் அறவிட வேண்டும். இதற்காக பொருத்தமான வியூகத்தை அரசாங்கம் கையாள வேண்டும். இலங்கையில் காலத்திற்கு காலம் புதிய வரிகளை அறிமுகப்படுத்துவதனை தவிர்த்து வரிமுறைமையினை சீர்செய்ய வேண்டும்.

இலங்கையானது ஏனைய நாடுகளின் அனுபவத்தினை உள்வாங்கி யதார்த்தத்திற்கேற்ப கொள்கைகள், திட்டங்கள் என்பவற்றை வகுத்து செயற்பட வேண்டும். அதை விடுத்து தமது விருப்பத்திற்கேற்ப தனிப்பட்ட சிந்தனைப் பாங்கில் கொள்கைகளை வகுத்து செயற்பட முனைவதை தவிர்க்க வேண்டும். தங்களுக்கேற்றால் போல் வரிமுறைமையினைப் பேணுவதற்காக அரசில் செல்வாக்குச் செலுத்தும் Lobby முறைமை இல்லாது செய்யப்பட வேண்டும்.

இலங்கையின் வரிவருமானம் குறைந்துள்ளமையினால் அதிகளவில் கடன்படவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. இந்நிலைமை ஏழை மக்களை அதிகம் பாதித்துள்ளது. இலங்கையில் மொத்த கடன் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வீதமாக அதிகரித்துள்ளது. இது தற்பொழுது 105 வீதமாகக் காணப்படுகின்றது. ஏற்றுமதிகளின் வீதமாக மொத்த வெளிநாட்டுக்கடன் 218%ஆக காணப்படுகின்றது. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வீதமாக மொத்த வரி வருமானம் 7 வீதமாகவும் மொத்த படுகடன் 14 வீதமாகவும் உள்ளன. இலங்கையின் மொத்தப் படுகடன் மொத்த செலவில் 49%ஆக காணப்படுகின்றது. அரசாங்கத்தின் வருமான வீதமாக படுகடன் வீதம் 163%ஆக காணப்படுகின்றது. ஆகவே வரி

வருமானத்தை குறைவாகத் திரட்டுவதால் இவ்வாறான பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

தற்கால பொருளாதார நெருக்கடிக்கான காரணம் என்னவென ஆராயும் போது வரிக் குறைப்பு அதில் முக்கிய இடம்வகிக்கின்றது. கடந்த ஜனாதிபதி தேர்தலுக்கு பின்னர் குறைக்கப்பட்ட வரி, உதாரணமாக பெறுமதிசேர் வரி (VAT) 15%இலிருந்து 8%ஆக குறைப்பு செய்யப்பட்டது. இதனால் அரசாங்கத்திற்கு 215 பில்லியன் ரூபாய் இழப்பு ஏற்பட்டது. அடுத்து தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி (NBT) இல்லாமல் செய்யப்பட்டது. இதனால் அரசாங்கத்திற்கு ஏற்பட்ட இழப்பு 71 பில்லியன் ரூபாய் ஆகும். உழைக்கும் போதே வரி செலுத்துதல் (Pay as you earn) நீக்கப்பட்டு மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்டது. இதனால் அரசாங்கத்திற்கு ஏற்பட்ட இழப்பு 41 பில்லியன் ரூபாவாகும். பொருளாதார சேவை வரி இல்லாமல் செய்யப்பட்டது. இதனால் 53 பில்லியன் வரிவருமானம் இழக்கப்பட்டது. நிறுத்தி வைத்தல் வரி (WHT) இல்லாமல் செய்யப்பட்டது. இதனால் இழக்கப்பட்ட வருமான இழப்பு 46 பில்லியன் ஆகும். கூட்டுறவு வருமான வரி (Cooperative Income Tax) 24%இலிருந்து 18%ஆக குறைக்கப்பட்டது. இதனால் ஏற்பட்ட இழப்பு 60 பில்லியன் ரூபாய் ஆகும். தொலைத் தொடர்பாடல் விதிப்பனவுகள் (Telecommunication Levy) இல்லாமல் செய்யப்பட்டன. இதனால் 14 பில்லியன் இழப்பு ஏற்பட்டது. இவ்வாறாக 500 - 700 பில்லியன் ரூபாய் இழப்பு ஏற்பட்டது. இது மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வீதமாக 3 - 4 வீதமாக இருக்கக்கூடும்.

இதற்கு மேலாக 2020 ஆம் ஆண்டு சீனி மீது இருந்த இறக்குமதி வரி கிலோவிற்கு 50 ரூபாவிலிருந்து 25 சதமாக குறைக்கப்பட்டது. ஆனால் இந்த விலை குறைப்பின் நன்மைகள் மக்களை சென்றடையவில்லை. அவ்வாறெனின் இந்த நன்மைகளை பெற்றவர்கள் யாரெனின் இது பொரும்பாலும் அரசாங்கத்தின் ஆதரவாளர்களுக்கே சென்றடைந்ததாக பரவலான ஒரு குற்றச்சாட்டு பொதுமக்கள் மத்தியில் உள்ளது.

இவ்வாறான அரசாங்கத்தின் செயற்பாட்டிற்கு பல கோணங்களில் இருந்து எதிர்ப்பு வந்தது. இதில் Moody’s Rating Services முக்கியமானது. அதாவது அரசாங்கத்தின் இவ்வாறான வரிக்குறைப்பு செயற்பாடுகளால் கடன்களை திருப்பிச் செலுத்துவதில் சிக்கல்கள் எழக்கூடும் என Moody எச்சரித்திருந்தது. Fitch Ratingஇனது கருத்தும் வரிக்குறைப்பு நடவடிக்கைகள் அரசாங்கத்தின் வரவு செலவுத்திட்டத்தில் தாக்கத்தினை ஏற்படுத்தக் கூடும் என்பதாக அமைந்திருந்தது. அதேபோல் முன்னாள் மத்திய வங்கி ஆளுநரும் தற்போதைய அரசாங்கத்தின் ஆலோசகருமான Dr.இந்திரஜித்குமாரசுவாமியின் கருத்தும் அரசாங்கத்தின் இவ்வாறான வரிகுறைப்புச் செயற்பாடானது படுகடன் நிலைபேறு தன்மையில்

பங்கத்தினை ஏற்படுத்தலாம் என அமைந்திருந்தது. ஆனால் அரசாங்கம் இதற்கு பெரிதாக எதிர்வினையாற்றவில்லை.

தற்போது பொருளாதாரம் மிகைப்படுநிலை (Overheating) எனப்படுகின்ற நிலையை அடைந்துள்ளது. அதாவது கேள்வி அதிகரித்துக் கொண்டு செல்லும் அதே நேரத்தில் அதற்கேற்றால் போல் நிரம்பல் காணப்படவில்லை. தற்போது உலகிலே சிம்பாபேயிற்கு அடுத்ததாக இரண்டாவது அதி உயர் பணவீக்கம் கொண்ட நாடாக இலங்கை காணப்படுகின்றது என அமெரிக்காவின் ஜோன் கோப்கின் பல்கலைக்கழகம் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

பொருளாதார நெருக்கடிக்கான மற்றுமொரு காரணமாக வர்த்தக மூலங்களிலிருந்தான அரசாங்கத்தின் பெருமளவான உள்நாட்டு, வெளிநாட்டு கடன்களைக் குறிப்பிட முடியும். அதேபோல் Covid-19 காரணமாக இலங்கையின் சுற்றுலாத்துறை மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டமையினையும் குறிப்பிட முடியும். சுற்றுலாத்துறையில் பாதிப்பு காரணமாக 5 - 6 பில்லியன் டொலர் இழக்கப்பட்டது. அத்துடன் வெளிநாட்டு பண அனுப்புதல்களும் குறைக்கப்பட்டன. இதன் மூலம் 5 - 7 பில்லியன் டொலரினை அரசாங்கம் இழந்தது. அத்துடன் நாணய மாற்று வீதத்தினை அரசாங்கம் பிழையாக முகாமை செய்திருந்தமை அதாவது நாணயத்தின் பெறுமதியினை வீழ்ச்சியடையச் செய்யாமல் தன்னிடமிருந்த ஒதுக்குகளைப் பயன்படுத்தி இலங்கை நாணயத்தின் பெறுமதியினை பாதுகாத்திருந்தமை மிக மோசமான விளைவுகளை பொருளாதாரத்தில் ஏற்படுத்தியிருந்தது.

அத்துடன் பெருந்தொற்றுக் காரணமாக உற்பத்தியாளர்கள் பாதிக்கப்பட்டிருந்த காலத்தில் இரசாயண உரப்பாவனையினை இரத்து செய்து சேதன உரப்பாவனையினை ஊக்கப்படுத்த நடவடிக்கை மேற்கொண்டிருந்தமையானது நாட்டின் விவசாயிகள் மத்தியிலும் விவசாய உற்பத்தித் துறையிலும் பாரிய எதிர்மறைத் தாக்கத்தினை ஏற்படுத்தியிருந்தது.

பொருளாதாரத்தின் தற்போதைய நிலை எதிர்காலத்தில் எவ்வாறு மாற்றமடையும் எனப் பார்த்தால் முன்னர் பொருளாதாரத்தில் அரசாங்கத்தின் மாதாந்த வருமானத்திற்கும் செலவுக்கும் இடையிலான இடைவெளி 50 பில்லியன் ரூபாயாக இருந்தது. தற்பொழுது அது 700 பில்லியன் ரூபாயாக மாற்றமடைந்துள்ளது. இந்நிலையில் உள்நாட்டில் கடன் பெறுவதற்கான எல்லையினை 3.3 ரில்லியன் ரூபாயிலிருந்து 4 ரில்லியன் ரூபாயாக (Trillion) மாற்றுவதற்கு அரசாங்கம் முயற்சிக்கின்றது. இதற்கு பாராளுமன்றத்தின் அனுமதியினை பெற வேண்டியுள்ளது. அதேபோல் இன்று நாட்டில் உள்ள அரச உத்தியோகத்தர்களுக்கான சம்பளம் வழங்குவதற்கு மாதாந்தம் 83 பில்லியன் ரூபாய் தேவைப்படுகின்றது. இதற்காக அரசாங்கம்

பணத்தினை அச்சிட்டு வழங்கும் தீர்மானத்தினையே எடுத்துள்ளது. இலங்கையின் வெளிநாட்டு செலாவணி கிட்டத்தட்ட பூச்சியத்தினை அடைந்துள்ளது. வெளிநாட்டுத்துறை முற்றுமுழுதாக செயலிழந்து விட்டதாகவே கருதுகின்றனர். உள்நாட்டு வங்கித்துறையும் பாரிய சவாலை எதிர்கொள்கின்றது. வங்கிகள் அரசிற்கு கடன் வழங்கியதுடன் நட்டத்தில் இயங்கிய அரச நிறுவனங்களையும் தன்னகத்தே வைத்திருந்தன. இதனால் வங்கித்துறையும் பாரிய சவாலை எதிர்நோக்குகின்றது.

அதேபோல் மக்களுக்கான அத்தியாவசிய பொருட்கள் சேவைகளை, (மண்ணெண்ணெய், பெற்றோல், டீசல், சமையல் எரிவாயு, அரிசி) இறக்குமதி செய்வதற்கு அரசாங்கத்திற்கு 1.2 பில்லியன் டொலர் மாதாந்தம் தேவைடுகின்றது. தற்போது இலங்கை இருக்கும் நிலையில் இது மிகவும் கடினமான ஒன்றாக காணப்படுகின்றது. உலக வங்கி மாதாந்தம் 600 மில்லியன் டொலரினை ஆறு மாத காலத்திற்கு வழங்க முன்வந்துள்ளது. இருந்த போதிலும் இலங்கையின் தேவையினை இந்நிதியினைக் கொண்டு பூர்த்தி செய்வது கடினமாகும்.

அண்மைக்காலமாக சர்வதேச நாணய நிதியம் (IMF) தொடர்பில் அனைவரும் பேசுகின்றனர். சர்வதேச நாணய நிதியத்துடனான கலந்துரையாடல் தற்பொழுது இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றது. குறிப்பாக சா்வதேச இறையாண்மை பிணை முறிகள் (International Sovereign Bond) என்ற விடயத்தினை இலங்கை தீர்க்கும் வரையில் சர்வதேச நாணய நிதியத்தினுடைய நகர்வு, காலம் தாழ்த்தியதாக இருக்க வாய்ப்புள்ளது.

அடுத்து உலக நாடுகளின் ஒத்துழைப்புத் தொடர்பில் ஆராய்வதாக இருந்தால் சீனா, ஜப்பான் போன்ற நாடுகள் இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கு பின்னிற்கின்றன. இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்கினால் இதேபோல் பொருளாதார நெருக்கடியினை எதிர்கொள்ளும் ஏனைய உலக நாடுகளுக்கும் தாம் உதவியளிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படலாம் என்பதே இந்நாடுகள் தயக்கம் காட்டுவதற்கான பிரதான காரணமாகும்.

தற்பொழுது இலங்கையில் வரலாற்றில் முதன்முறையாக தேக்க வீக்கம் (Stagflation) எனும் நிலையை நோக்கி பொருளாதாரம் நகர்ந்து கொண்டிருக்கின்றது. தேக்க வீக்கம் என்பது பொருளாதார வளர்ச்சி வீழ்ச்சியடைதல், வேலையின்மை அதிகரித்தல் மற்றும் பணவீக்கம் அதிகரித்தல் இவை மூன்றும் ஏககாலத்தில் அதிகரிப்பதனைக் குறிக்கும். ஸ்ரீமாவோ அம்மையார் ஆட்சிக் காலத்தில் வேலையின்மை அதிகரித்து பொருளாதார வளர்ச்சி வீழ்ச்சியடைந்தது. ஆனால் பணவீக்கம் அதிகரிக்கவில்லை. ஏனெனில் அரசாங்கத்தின் தலையீடு உற்பத்தி

விநியோகத்திலிருந்ததுடன் அனுமதிப்பங்கு முறைமையும் அமுலில் இருந்தது. தற்பொழுது இந்த நிலைமை காணப்படவில்லை.

இலங்கையினைப் பொறுத்தவரையில் அதன் பொருளாதாரத்தின் தற்காலப் போக்கினை அவதானிப்பின் மீளெழுச்சி என்பது காலம் தாழ்த்தியதாகவே இருக்கப் போகின்றது. ஏனெனில் தற்பொழுது இலங்கையின் பொருளாதார நெருக்கடி, அரசியல் நெருக்கடியாக மாறி பின்னர் சமூக நெருக்கடியாக உருவெடுத்து தற்பொழுது நிர்வாக நெருக்கடிக்குத் தள்ளியுள்ளது. எனவே மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டிருக்கும் இலங்கைப் பொருளாதாரத்தின் மீட்சி என்பது நீண்ட காலத்திலேயே சாத்தியமாகலாம்.

## அத்தியாயம் 03

# பண அச்சிடலின் அரசியல் பொருளாதாரம்

# The Political Economy of Money Printing

**Dr. M. Ganeshamoorthy**
Senior Lecturer,
Department of Economics,
Faculty of Arts,
University of Colombo.

(25.05.2022 அன்று நடைபெற்ற நிகழ்நிலைக் கருத்தரங்கின் தொகுப்பு)

## அறிமுகம்

பணமென்பது பொருளாதாரமொன்றில் அனைத்துவிதமான கொடுக்கல்வாங்கல்களுக்கும் எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு பொதுவான பரிமாற்று ஊடகமாகக் கருதப்படுகின்றது. இப்பணமானது பலநெடுங்காலமாக பரிணாம வளர்ச்சியைக் கண்டுவந்ததொன்று. தற்போது இருக்கின்ற அதன் வடிவங்கள் பலவாகும். அதில் காகிதப் பணமென்பது ஒரு முக்கியமான வடிவமாகும். தாள் நாணயங்களோடு குற்றி நாணயங்களும் புழக்கத்திலிருந்தாலும் தற்போதய நவீன காலத்தில் பயன்பாட்டிலுள்ள குற்றி நாணயங்களின் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்திருக்கின்றது. புதிதாக நாணயத்தை அச்சிட்டு வெளியிட்டு அதனைக் கையில் பெறும்போது மகிழ்ச்சி தோன்றுகின்றது. ஆனால் இப்பணத்தை அச்சிடுகின்ற செயன்முறை மூலமாக ஒரு பொருளாதாரம் மகிழ்ச்சியாய் இருக்க முடியமா? என்பது கேள்விக்குறியே.

மக்களைப் பொறுத்தவரையில் பணத்தை அச்சிட்டு வெளியிடும்போது அவர்களிடத்திலே அதிகளவு பணம் வந்துசேருகின்றது. அவர்கள் அதனைக் கொண்டு அதிகமாகப் பொருட்கள் சேவைகளை நுகருகின்றனர். அவ்வாறானால் ஏன் பணத்தை அச்சிடுவது பற்றி பெரிதாக நாம் கவனம் செலுத்தவேண்டும்? இந்தக்கேள்வியானது சாதாரண பொதுமக்கள் மத்தியிலே தொக்கிநிற்பதைக் காண்கின்றோம். உண்மையில் இதன் மீது பல்வேறு பொருளியல் காரணிகள் தாக்கம் செலுத்துகின்றன. பணத்தை அதிகளவு அச்சிடும்போது பொருட்கள் சேவைகளுக்கான மொத்தக் கேள்வி அதிகரித்து அதனூடாக பொருட்களின் விலை அதிகரிக்கப்பட்டு நாடு பணவீக்கம் என்ற தேவையற்ற விளைவினை முகங்கொடுக்க நேரிடுகிறது.

பணத்தின் வரலாற்றினை நோக்கும்போது, பணத்தாள்கள் புழக்கத்திற்கு வருவதற்கு முன்னர் நாம் உலோக நாணயங்களினைப் பயன்படுத்தினோம். இருப்பினும் பொருளாதாரம் விரிவடைகின்ற போது

அதற்கேற்ப உலோக நாணயங்களை போதியளவில் உருவாக்கி சந்தையில் விடமுடியாத சூழலேற்பட்டது. ஏனெனில் அவ் உலோகத்தின் நிறைக்குச் சமமான பெறுமதி அந்நாணயத்தின் முகப்பிலே முகப்பெறுமதியாகக் குறிப்பிடப்பட்டிருக்கும் (முழுப்பெறுமதி நாணயம்). எனவே பொருளாதாரம் விரிவடைகின்றபோது அந்நாடு குற்றி நாணயத்தை தொடர்ச்சியாக அச்சிட்டு வெளியிடுவதென்றால் அந்த நாட்டில் தங்கம், வெள்ளி போன்ற உலோகங்களின் நிரம்பல் அதிகளவில் காணப்பட வேண்டும். இப் பிரச்சினையிலிருந்து மீள்வதற்காகவே தாள் நாணயங்கள் வெளியிடப்பட்டு புழக்கத்திற்கு வந்தன. தாள் நாணயங்களுக்குரிய பெறுமதி, அதனை வெளியிடுகின்ற அதிகாரியினால் குறித்துரைக்கப்பட்டு வெளியிடப்படுதல் வேண்டும். அவ்வாறு பெறுமதி குறிப்பிடப்படாவிடின் அது வெறும் காகிதம் மாத்திரமேயாகும். இலங்கை ரூபாவை எடுத்துக்கொண்டோமேயானால் அது இலங்கைக்குள் எந்தப்பாகத்திலும் பரிமாறுவதற்கு சட்டரீதியான அனுமதியுண்டு என்று குறித்துரைக்கப்பட்டு மத்திய வங்கியால் வெளியிடப்படுவதால் அந்நாணயமானது சட்ட அந்தஸ்தைப் பெறுகின்றது.

ஆரம்பகாலங்களில் ஒரு நாட்டிலேயிருக்கின்ற தங்கம் போன்ற பெறுமதியான உலோகங்களின் இருப்பிற்கு ஏற்றவாறே நாணயங்கள் அச்சிட்டு வெளியிடப்பட்டன (தங்க இருப்பினை அடிப்படையாகக் கொண்ட நாணய வெளியீடு). பின்னர் அந்த நாட்டினுடைய வர்த்தக நிலுவை மிகை நிலை அடைகின்ற போது வெளிநாட்டு நாணய ஒதுக்குகளை அடிப்படையாகக் கொண்டு உள்நாட்டு நாணயங்கள் அச்சிடப்பட்டன. இல்லாவிடின் வெளிநாட்டு முதலீட்டாளர்களுடைய கடன் பத்திரங்கள் உள்நாட்டில் இருக்கின்ற போது அப்பத்திரங்களை அடிப்படையாகக் கொண்டு நாணயத்தை அச்சிட்டு வெளியிடுகின்ற போக்கு காணப்பட்டது. இலங்கையிலும் கூட இந்த நடைமுறைதான் 1884ஆம் ஆண்டிலிருந்து 1950ஆம் ஆண்டு தற்போதைய இலங்கை மத்திய வங்கி ஸ்தாபிக்கப்படும் வரை இலங்கையில் அமுலில் இருந்தது. வேறுவகையில் கூறின் அக்காலப்பகுதியில் இலங்கை ரூபாவை வெளியிடுவதாக இருந்தால் அதற்குச் சமமான வெளிநாட்டு நாணயங்களின் தொகை அல்லது பெறுமதி நாட்டிலே இருக்க வேண்டும். இதனை நாணய சபை முறைமை என்போம். இம்முறை நாட்டில் இருக்கும்போது ஒரு அரசாங்கமானது தனக்கு வேண்டியபோது பணத்தை அச்சிட்டு வெளியிடுமாறு மத்திய வங்கியைக் கோரமுடியாது.

இவ்வாறு வெளிநாட்டு ஒதுக்குகளையோ தங்க இருப்பையோ வெளிநாட்டு முதலீட்டாளர்களின் பிணையங்களையோ அடிப்படையாகக்கொண்டு நாணயத்தை வெளியிடுகின்ற முறையானது அபிவிருத்தியடைந்த நாடுகளுக்கு பொருந்துமே தவிர இலங்கை போன்ற அபிவிருத்தியடைந்துவருகின்ற நாடுகளுக்கு சாதகமாக அமையாது. இதனாலேயே இலங்கையில் நாணயசபை முறையினை இல்லாதொழித்து மத்தியவங்கி முறையானது நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது.

இதற்கிணங்க அரசாங்கத்தினுடைய தேவைக்கேற்ப நாணயமானது மத்திய வங்கியால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகின்ற நாணய அச்சிடல் முறையே இலங்கையில் தற்போது காணப்படுகின்றது.

தற்போது இலங்கையானது பாரிய நிதி நெருக்கடியான சூழ்நிலையில் அதிகளவிலான நாணயத்தை அச்சிட்டு சந்தைக்கு விட்டிருக்கின்றது. அரசாங்கத்தினுடைய வரவுசெலவுத்திட்ட குறைநிலையினையும் பாரியளவிலான அரசசெலவுகளையும் ஈடுசெய்வதற்காக அச்சிடப்பட்ட நாணயத்தைப் பயன்படுத்துகின்றது. இவ்வாறு பாரியளவில் பணத்தை அச்சிட்டு பாதீட்டுப் பற்றாக்குறையினை நிதியீட்டம் செய்கின்றபோது அது எவ்வாறான விளைவினை நாட்டின் பொருளாதாரத்தில் ஏற்படுத்தும் என்பது பற்றிக் கட்டாயம் சிந்திக்க வேண்டும். நவீன பணப்பொருளியலாளர் கெயின்சினுடைய கோட்பாட்டின்படி, வளர்ச்சியடைந்துவருகின்ற பொருளாதாரங்களில் அரச செலவீனங்கள் அதிகரிக்கின்ற போது அச்செலவு அதிகரிக்கும் அளவின் பலமடங்கினால் பொருளாதாரத்தில் வளர்ச்சி ஏற்படும்.

வேறு வகையில்கூறின் பின்தங்கிய நிலையிலிருந்து மீட்சியடைய எத்தனிக்கின்ற பொருளாதாரங்கள் குறைநிலை வரவுசெலவுத் திட்டத்திற்கு நிதியீட்டம் செய்வதனூடாக பொருளாதார வளர்ச்சியும் வேலைவாய்ப்பும் அதிகரிக்கும் என்பது கெயின்சினுடைய விதந்துரைப்புக்களாக இருக்கின்றன. இதனை அடிப்படையாகக் கொண்டே இலங்கையில் சுதந்திரத்திற்குப் பின்னர் ஆட்சிக்கு வந்த பல அரசாங்கங்கள் தொடர்ச்சியாகக் குறைநிலை வரவுசெலவுத்திட்டக் கொள்கையினையே அமுல்படுத்திவருகின்றனர். அதாவது அரச வருமானத்தை விடச் செலவு அதிகமாகக் காணப்படுகின்ற போது துண்டுவிழும் தொகை ஏற்படுகின்றது. அத்துண்டு விழும் தொகையை நிதியீட்டம் செய்வதற்கான ஒரு வழிவகைதான் பணத்தை அச்சிடுவதன் மூலமாக மத்திய வங்கி அரசாங்கத்திற்கு கடன் வழங்குகின்ற நடைமுறையாகும்.

ஆகவே பற்றாக்குறை வரவுசெலவுத்திட்டங்களைப் பேணுகின்ற நாடுகளிலே நாணயசபை முறை (Currency Board System) போன்றல்லாது மத்தியவங்கியால் தாம் விரும்புகின்ற அளவினை அச்சிட்டு வெளியிடுகின்ற போக்கு இருந்தாலும் கூட மத்திய வங்கி சுதந்திரமாகவும் சுயமாகவும் செயற்பட முடியாத நிலையும் காணப்படுகின்றது. மத்திய வங்கி அரசாங்கத்தின் மதியுரைவழங்குனராகத் (அரசின் பொருளாதார ஆலோசகராக) தொழிற்படுகின்றபோது அரசாங்கம் மேற்கொள்கின்ற ஜனரஞ்சகமான செலவுகளை ஈடுசெய்வதற்கு பணத்தை வேண்டியளவு அச்சிட்டு வழங்கக் கூடாது என்பது ஒரு ஒழுக்கவியல் சார்ந்த நடைமுறையாகும். மத்திய வங்கி சுதந்திரமாக இயங்குவதற்கு அனுமதியளிக்கப்பட்ட நாடுகளிலே அரசாங்கத்தினுடைய ஜனரஞ்சக செலவுகளை நிதியீட்டம் செய்வதற்கு மத்திய வங்கி இணங்குவது கிடையாது.

ஆனால் ஜனரஞ்சக அரசியலைச் செய்கின்ற இலங்கை போன்ற நாடுகளிலே அரசாங்கங்கள் பொதுமக்களைக் கவர்வதற்காக பல திட்டங்களுக்காக அதிகரித்த அரச செலவீடுகளையும் வீண்விரயங்களையும் மேற்கொள்கின்றன. இவ்வாறு அதிகரித்த அரச செலவீடுகளால் ஏற்படுகின்ற வரவுசெலவுத்திட்டப் பற்றாக்குறையை நிதியீட்டம் செய்வதற்குப் பணத்தை அச்சிட்டு வழங்குமாறு மத்திய வங்கியை நிர்ப்பந்திக்க முடியும். இதனை அரசியல் சார்ந்த ஒரு நடைமுறையாகவும் பார்க்க முடியும். எனவே அரசியல்ரீதியான அழுத்தங்கள் காரணமாக மத்திய வங்கி பணத்தை அச்சிட்டு வெளியிட வேண்டிய ஒரு கட்டாய நிலைக்குத் தள்ளப்படலாம்.

இலங்கையில் கடந்த காலங்களில் அச்சிட்டு வெளியிடப்பட்ட பணத்தை 2019ஆம் ஆண்டிலிருந்து பார்த்தோமேயானால் 2019ஆம் ஆண்டில் மட்டும் 505 பில்லியன் இலங்கை ரூபாய் அச்சிட்டு வெளியிடப்பட்டன. இது தொடர்ந்து 2020ஆம் ஆண்டில் 650 பில்லியன்களாகக் காணப்பட்டு 2021ஆம் ஆண்டிலே 1.2 ரில்லியன் ரூபாய்களாக பாரியளவில் அதிகரித்திருக்கின்றது. இங்கு அவதானிக்கத்தக்க முக்கிய விடயம் என்னவெனில் கடந்த மூன்று வருடங்களில் இலங்கை ரூபா மில்லியன் கணக்கில் அச்சிடப்படுகின்ற நிலைமை மாறி ரில்லியன் கணக்கிலே பணமானது அதிகளவில் அச்சிடப்படுகின்ற ஒரு போக்கு காணப்படுகின்றது. இது நாட்டிற்கு காத்திரமான ஒரு நிலைமையா? என்ற ஒரு பாரிய கேள்வி எம்மத்தியில் எழுகின்றது. இவ்வாறு பணம் அதிகளவில் அச்சிடப்படுகின்றபோது அது விலை மட்டங்களை அதிகரிக்கச்செய்வதனூடாக பணவீக்கம் என்ற நிலைமைக்கு இட்டுச்செல்லும். இது நாட்டிற்கு உகந்ததல்ல.

நாட்டில் பணநிரம்பல் அதிகரிக்கின்ற போது அதே சதவீதத்தால் பொதுவிலை மட்டமும் அதிகரிக்குமென்பது நாணயக்கணியக் கோட்பாட்டினடிப்படையில் Irving Fisher என்ற பொருளியலாளரால் முன்வைக்கப்பட்ட கருத்தாகும். ஆயினும் அமெரிக்கா மற்றும் அவுஸ்திரேலிய பல்கலைக்கழகத்தினுடைய ஒரு சில பொருளியலாளர்கள் புதிய வகை நாணயக்கணியக் கோட்பாட்டினை முன்வைக்கின்றனர். அமெரிக்காவைச் சேர்ந்த நவீன நாணயக்கணியக் கோட்பாட்டாளரான Warren Mosler என்பவர் Stephanie Kelton என்ற அமெரிக்கப் பொருளியலாளருடன் இணைந்து நவீன பணக்கணியக் கோட்பாட்டினை முன்வைத்தார். இவர்கள் வரவுசெலவுத்திட்டப் பற்றாக்குறை தொடர்ச்சியாக அதிகரிக்க நாட்டில் பிரச்சினை தோன்றும் என்பது மாயாஜாலமான ஒரு கருத்து என்றும் அதிலே எந்தவிதமான உண்மையும் கிடையாது என்றும் குறிப்பிடுகின்றார்கள்.

வரவுசெலவுத் திட்டம் பற்றாக்குறையாக இருக்கின்ற போது அரசாங்கம் அதற்கு பணத்தை அச்சிட்டு நிதியீட்டம் செய்யலாம். அவ்வாறு நிதியீட்டம் செய்வதனூடாக நாட்டினுடைய பொருளாதார வளர்ச்சி, வேலைவாய்ப்புக்கள் மற்றும் வறுமைத் தணிப்பு போன்ற ஏனைய

பிரச்சினைகளுக்குத் தீர்வு காணலாம் என்ற கருத்தை முன்வைத்திருந்தனர். எனவே நவீன பணக்கோட்பாட்டாளர்கள் எனப்படுவோர் பணத்தை அச்சிட்டு வெளியிடுவதன் மூலம் பணவீக்கம் போன்ற எதிர்மறையான விளைவுகள் நாட்டில் ஏற்படாது என்கின்றனர். இக்கருத்து ஓரளவிற்குச் சரியானதும்தான். எவ்வாறென்றால் ஒரு நாட்டினுடைய பணம் சர்வதேசரீதியான கொடுக்கல் வாங்கல்களுக்கு ஏற்றுக்கொள்ளக் கூடிய சர்வதேச ஒதுக்குப் பணமாக (Global Reserve Currency) இருக்கின்ற போது இது சாத்தியமானதாகும். இதற்கு ஐக்கிய அமெரிக்க டொலரை சரியான எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம்.

உதாராணமாக ஐக்கிய அமெரிக்கா வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையை நிதியீட்டம் செய்வதற்காக அச்சிட்டு வெளியிடுகின்ற டொலர் இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்படுகின்ற ஒரு பொருளுக்காக பரிமாறப்படுவதாக எடுத்துக் கொள்வோம். இலங்கை அவ்வாறு பெறுகின்ற டொலரை, தான் இறக்குமதிசெய்த ஏதாவது ஒரு நாட்டிற்கு அனுப்பும். அந்த நாடு இன்னுமொரு நாட்டிலிருந்து இறக்குமதிசெய்த பொருளுக்குப் பதிலாக அந்த டொலரைக் கொடுக்கும். இந்த நடைமுறை தொடர்ந்து நிலவுகின்ற போது அமெரிக்கா வெளியிட்ட அந்த ஒரு டொலர் மீண்டும் அமெரிக்காவிற்குள்ளே உள்வராது. ஆகவே அமெரிக்கா வேண்டியளவு டொலர்களை அச்சிட்டு வெளியிடலாம். ஏனெனில் அவ்டொலர் அமெரிக்காவிற்குள்ளே தங்கப்போவதில்லை. அமெரிக்காவிற்கு வெளியிலே அவ்டொலர் கொடுக்கல்வாங்கலுக்குப் பயன்படுத்தப்படுகின்ற போது டொலரினுடைய நிரம்பலானது அமெரிக்காவிற்குள்ளே பணவீக்க அழுத்தங்களை ஏற்படுத்தமாட்டாது. ஆனால் இலங்கை போன்ற ஒரு நாட்டிலே இலங்கை ரூபாவை இலங்கைக்குள் மாத்திரமே பயன்படுத்த முடியும்.

ஆகவே இவ்வாறான ஒரு சூழ்நிலையில் இலங்கை ரூபாவை அச்சிட்டு வெளியிட்டு இலங்கை அரசாங்கத்தினுடைய கடனை தீர்க்க முற்படும்போது உள்நாட்டுக் கடனை வேண்டுமானால் இலங்கை ரூபாவைக் கொண்டு தீர்த்தாலும் வெளிநாட்டுக் கடனை இவ் உள்நாட்டு பண அலகைக் கொண்டு தீர்க்க முடியாது. ஏனெனில் இலங்கை ரூபாவானது சர்வதேசரீதியான கொடுக்கல்வாங்கல்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட வன்நாணயமன்று. இவ்வாறு வெளிநாட்டுக் கடனை மீளச் செலுத்துவதற்காக ரூபாவினை அதிகளவு அச்சிட்டு சந்தைக்கு வழங்குகின்ற பட்சத்திலே அந்த ரூபாவினுடைய அளவு அதிகரிக்கின்ற சமமான அளவினால் அல்லது அதனைவிடக் குறைந்த அளவினால் டொலருடைய பெறுமதி அல்லது வெளிநாட்டு நாணயத்தினுடைய பெறுமதி அதிகரிக்கத் தொடங்கும். எனவே வெளிநாட்டுக் கடன்களைச் செலுத்துவதற்காக உள்நாட்டு நாணயத்தைக் கொடுக்கும் போது அதிகளவிலே உள்நாட்டு நாணயத்தினுடைய பெறுமதி டொலருக்கு எதிராக வீழ்ச்சியடையும். வெளிநாட்டு நாணயத்தினுடைய பெறுமதி

அதிகரிக்கும். இதனால் நாணயத்தின் பெறுமதியில் தேய்வு (Currency Depreciation) ஏற்படும்.

எனவே ஜனரஞ்சக அரசியலுக்காகவும் நாட்டினுடைய அரசாங்கத்தின் செலவுகளை ஈடுசெய்வதற்காகவும் அதிகளவிலே பணத்தை அச்சிட்டு சந்தைக்கு விடுகின்றபோது அது பணவீக்கத்தை ஏற்படுத்தாது என்ற ஒரு மாயையினை இலங்கை போன்ற நாடுகளிலே அரசியல்வாதிகளும் கொள்கை வகுப்பாளர்களும் பிரச்சாரம் செய்துகொண்டு வருகின்றார்கள். ஆனால் இந்த ஜனரஞ்சக அரசியல் வெகுகாலத்திற்கு நிலைக்காது. பணத்தை அதிகளவில் அச்சிட்டு சந்தைக்கு விடுவதனூடாக உடனடியாக விலைகள் அதிகரித்துப் பணவீக்கம் ஏற்படாவிட்டாலும் கூட நீண்டகாலத்தில் பாரதூரமான பணவீக்க நிலைமையை நாட்டில் தோற்றுவிக்கும். சுருக்கமாகக் கூறுவதாகவிருந்தால் பணத்தை பாரியளவில் அச்சிட்டு ஒரு நாட்டினுடைய பொருளாதாரத்தை வளர்க்கமுற்படுவதானது முன்யோசனையல்லாத முட்டாள்தனமான செயலாகும்.

இது பிரச்சினையிலிருந்து மீளெழ முடியாதளவிற்கு மேலும் நாட்டினை மோசமான நிலைக்குக் கொண்டு சேர்க்கும். இலங்கை தற்போது இருக்கின்ற நிலையிலே இதுதான் நடந்திருக்கின்றது. இலங்கையில் ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் கடந்த காலங்களில் பெற்றுக்கொண்ட கடனையும் அதற்கான வட்டிக்கொடுப்பனவையும் மீளச் செலுத்துவதற்காகவும் அதிகரித்த அரசசெலவினங்களை ஈடுசெய்வதற்காகவும் தொடந்து பாரியளவில் பணத்தை அச்சிடுகின்றபோது அது பணவீக்கம் என்ற பூதாகரமான விளைவை நாட்டில் தோற்றுவிக்கும்.

தற்போதைய நிதிநெருக்கடியான சூழ்நிலையில் இலங்கை மேலும் ஒரு ரில்லியன் இலங்கை ரூபாவை அச்சிட்டு வெளியிடாவிட்டால் அரச ஊழியர்களின் சம்பளங்களைக்கூட செலுத்தமுடியாத சூழல் வருமென்று இப்போது பிரதமரே ஒப்புக்கொண்டிருக்கின்றார். எனவே இந்த வருடமும் பெருந்தொகைப் பணம் அச்சிடப்படப்போகின்றது. அவ்வாறு அச்சிடப்படுகின்ற பணத்தைக்கொண்டுதான் அரசசெலவீனங்கள் குறிப்பாக அரசதுறை ஊழியர்களின் சம்பளங்கள் வழங்கப்படப்போகின்றன. எனவே அச்சம்பளங்கள் சந்தைக்கு அவர்களுடைய கொள்வனவுசக்தியாக வருகின்றபோது நிச்சயமாக பொருளாதாரத்திலே மீட்சி ஏற்படுவதற்கு வாய்ப்புக் கிடையாது.

இதனால் பொருட்களின் விலை அதிகளவில் உயர்ந்து பணவீக்கம் ஏற்படுவது தவிர்க்க முடியாததாய் மாறிவிடும். கடந்த மே மாதம் இலங்கையின் பணவீக்க வீதம் 40% என உத்தியோகபூர்வமாகக் கூறப்பட்டாலும் சர்வதேச கணிப்பீடுகளின்படி பார்க்கின்ற போது உண்மையில் இலங்கையின் பணவீக்கம் 100 வீதத்தை கடந்துவிட்டதென உலகளாவியரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட

அறிஞர்கள் இது தொடர்பில் கருத்துரைத்துள்ளார்கள். மேலும், பணவீக்கமானது 40%இற்கு மேல் இனிவரும் மாதங்களில் உயரலாம் என மத்தியவங்கி கூறினாலுங்கூட சந்தையில் இருக்கின்ற ஏனைய பணவீக்க மாற்று வகைகளை நாம் எடுத்துப்பார்க்கின்ற போது இது பலமடங்கு கூடுதலான ஒரு வீதமாகக் காணப்படுகின்றது.

இலங்கையிலே தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையில், பணத்தை அச்சிட்டு வெளியிடுவதன் மூலமாக நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முடியும் அல்லது ஒரு பொருளாதாரத்தை மீட்சியடையச்செய்ய முடியும் என்ற ஒரு கருத்து அரசியல்வாதிகள் மத்தியிலும் சிலகொள்கை வகுப்பாளர் மத்தியிலும் இருந்துவருகின்றது. ஆனால் இந்தக் கொள்கை ஒரு பிழையான கொள்கையாக பொருளியல் ஆர்வலர்களால் பார்க்கப்படுகின்றது. மத்திய வங்கியானது அதிகளவிலே பணத்தை அச்சிட்டு வெளியிட்டு தற்போதைய இப் பொருளாதாரப் பிரச்சினைகளுக்குத் தற்காலிகமாகத் தீர்வைத் தேட முற்பட்டாலும் கூட பொருட்களின் விலை அதிகரித்துப் பணவீக்கம் ஏற்படுகின்ற போது பொதுமக்கள் நிச்சயமாகப் பாதிக்கப்படுவார்கள்.

எனவே சர்வதேசரீதியிலே அதிகளவில் ஒதுக்குப் பணத்தை வைத்திருக்கக் கூடிய அமெரிக்கா, ஜப்பான் போன்ற வளர்ச்சியடைந்த நாடுகளுக்குப் பாதீட்டுப் பற்றாக்குறையை நிதியீட்டம் செய்வதற்காக நவீன பணக்கோட்பாட்டின்படி (Modern Monitory Theory) பணத்தை அச்சிட்டு வெளியிடுவதென்பது ஒரு வாய்ப்பானதாகக் காணப்பட்டாலும் கூட இலங்கை போன்ற பலவீனமான பொருளாதாரங்களைக் கொண்ட நாடுகளுக்கு இது எந்தவிதத்திலும் துணைசெய்யக்கூடியதல்ல. எனவே பணத்தை பாரியளவிலே அச்சிட்டு வெளியிடுவது நாட்டின் பொருளாதாரத்திற்கு உகந்ததல்ல எனத் தெரிந்தும் இலங்கையானது அரச ஊழியர்களின் சம்பளத்தை கொடுப்பதற்காகக் கட்டாயம் பணத்தை அச்சிட்டு வெளியிடவேண்டிய இக்கட்டான சூழ்நிலையிலிருக்கின்றது என்ற கருத்தை தற்போதைய மத்திய வங்கி ஆளுனர் நந்தலால் வீரசிங்க முன்வைத்திருக்கின்றார். இவ்வாறு பணத்தை ரில்லியன் கணக்கில் அச்சிட்டு வெளியிடுவதனூடாக நாட்டின் பொருளாதாரம் எந்த மட்டத்தை அடையும் என்பதை இனிப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

பொருளாதார நெருக்கடி நிலைமையிலிருந்து நாட்டை மீட்டுக் கொண்டு வருவதற்காக தற்போது இலங்கை மத்தியவங்கியால் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்ற பணக்கொள்கை நடவடிக்கைகளாக வட்டி வீதங்கள் அதிகரிக்கப்பட்டிருக்கின்றன. அதேபோல மேலும் பல கட்டுப்பாடுகளும் விதிக்கப்பட்டிருக்கின்றன. எனினும் நாணயக்கொள்கை மற்றும் இறைக்கொள்கை கட்டுப்பாடுகளினூடாக தற்போதைய நிதிநெருக்கடி நிலைமையிலிருந்து நாட்டை மீட்டுக் கொணர்வதென்பது உண்மையில் பணத்தை அச்சிடும் நடைமுறையில்தான் தங்கியிருக்கின்றது. எனினும் நாணயக்கொள்கை மற்றும்

இறைக்கொள்கையூடான சமப்படுத்தல் விளைவுகள் (Balancing Mechanism) இலங்கையின் பொருளாதாரத்திலே பணவீக்கத்தைக் குறைக்குமா? அல்லது மேலும் அதிகரிக்கச் செய்யுமா? அல்லது வெளிநாட்டுக் காரணிகளின் தாக்கத்தினால் பணவீக்கம் பாரியளவிலே அதிகரித்து சிம்பாவே போன்று ஏனைய பல நாடுகளில் ஏற்பட்டது போன்று பாரதூரமான ஒரு நிலைக்கு இலங்கை தள்ளப்படுமா? என்பதை நாம் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

## அத்தியாயம் 04

# தோல்வியடைந்த நாடுகளின் பட்டியலில் இலங்கை இணைந்து கொள்ளப்போகின்றதா? அதை தடுக்க ஏதாவது வழியுண்டா?

# Will Sri Lanka be Joining the List of Failed Countries? Is there Any Way to Prevent It?

**Dr. N. Ravinthirakumaran**
Senior Lecturer,
Department of Business Economics,
Faculty of Business Studies,
University of Vavuniya.

(01.06.2022 அன்று நடைபெற்ற நிகழ்நிலைக் கருத்தரங்கின் தொகுப்பு)

## அறிமுகம்

நமக்காக அடுத்து கிடைக்கவிருப்பது யாது? இலங்கை இன்று அனைத்து தவறான காரணங்களுக்காகவும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு செய்தித்தாள்களில் இடம் பிடித்துள்ளது. கடுமையான சென்மதிநிலுவை பிரச்சினையால் இலங்கையின் பொருளாதாரம் நெருக்கடியில் உள்ளது. இலங்கையின் அந்நியச் செலாவணி கையிருப்பு பூச்சிய நிலையை அடைந்துள்ளது, இலங்கை வெளிநாட்டு கடனை அடைக்க முடியாது வங்குரோத்து நிலையை அடைந்துள்ளது, உணவு, எரிபொருள், மற்றும் உரங்கள் போன்ற பல அத்தியவசிய நுகர்வுப் பொருள்களை இறக்குமதி செய்வது கடினமாகி வருகிறது, உள்நாட்டு விவசாய உற்பத்தி குறைந்துள்ளது, பசி மற்றும் ஊட்டச்சத்து குறைபாடு அதிகரித்து வருகின்றது, பணவீக்கம் 60 சதவீதத்தை எட்டியுள்ளது. மேலே குறிப்பிட்ட பல காரணங்களினால் இலங்கையின் அரசியல், மற்றும் பொருளாதார நடவடிக்கைகள் மாத்திரமன்றி மக்களின் வாழ்க்கைத்தரம் மற்றும் அவர்களது வாழ்க்கை முறைமைகள் அனைத்துமே ஒரு மோசமான நிலைக்கு தள்ளப்பட்டு செல்வது அவதானிக்கத்தக்கது. ஆகவே, தற்போது இலங்கையில் நிலவிவரும் பொருளாதார நெருக்கடியினை ஆழமான விவாதத்திற்கு உட்படுத்த வேண்டியது காலத்தின் தேவையாகின்றது.

இலங்கையில் ஏற்பட்டிருக்கின்ற பொருளாதார பின்னடைவான நிலைக்கு காரணங்கள் என்ன என்பதனை பல்வேறுபட்ட கோணங்களில் ஆராய்வதன் மூலமே தற்போதைய நெருக்கடிக்கான தீர்வினை இனங்கண்டுகொள்ள முடியும். இலங்கை தோல்வியடைந்த நாடுகளின் பட்டியலில் இணைந்துவிட்டதென பலரும் வாதிடுகின்றனர். தோல்வியடைந்த நாடு என்பது உண்மையில் பொருளாதார ஸ்திரமற்ற தன்மையின் வெளிப்பாட்டினை பிரதிபலிக்கின்றதா? அவ்வாறான ஒரு நிலைமை ஏற்பட்டிருந்தால், அடுத்த கட்ட விளைவுகளின் தாக்கம்

எவ்வாறாக இருக்கும் என்பது பற்றியும் இந்த நிலையிலிருந்து இலங்கைத் தீவு தன்னை எப்படி தற்காத்துக் கொள்ளப்போகின்றது என்பது பற்றியும் ஆய்வு செய்வதே இந்த கட்டுரையின் பிரதான நோக்கமாகும்.

## நெருக்கடி நிலை: பொருளாதார மற்றும் அரசியல் காரணிகள்

நெருக்கடி நிலை என்பது எல்லா நாடுகளுக்கும் பொதுவானது. எனினும் பல்லின மற்றும் பல மதங்களை பின்பற்றும் மக்கள் வாழும் குறைவிருத்தி நாடுகளில் பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிகள் அடிக்கடி இடம்பெறுவது தவிர்க்க முடியாததொன்றே. நெருக்கடி நிலைமை மற்றும் நாடுகளின் தோல்வி என்பவை தற்செயலான நிகழ்வுகள் அல்ல, அவை மனிதர்களாலேயே உருவாக்கப்படுகின்றன. அரசாங்கத்தின் பலவீனங்கள் மற்றும் அரசியல் பொருளாதார கட்டமைப்பு குறைபாடுகள் தோல்விக்கு பங்களிக்கின்றன. வரலாற்று சான்றுகள் புலப்படுத்தி நிற்கும் ஒரு உண்மை பல நாடுகளின் அரச தலைவர்கள் தனிப்பட்ட இலாபத்திற்காக நாடுகளை அழிவுப்பாதைக்கு இட்டுச் சென்றுள்ளமையாகும். இன்றைய தசாப்தத்தில் தலைமைத்துவ தவறுகளின் விளைவாக ஏற்கனவே தோல்வியின் விழிம்பில் இருந்த பலவீனமான பல ஆபிரிக்கா, ஆசியா நாடுகள் தோல்வியடைந்த நாடுகள் பட்டியலுக்குள் சென்றுவிட்டன. இந்த தசாப்தத்தின் தோல்வியடைந்த நாடுகளாக, அங்கோலா, ஆப்கானிஸ்தான், புருண்டி, கொங்கோ, லைபீரியா, சியரா லியோன் மற்றும் சூடான் போன்ற நாடுகளை குறிப்பிட முடியும். இந்தோனேசியா, இலங்கை, கொலம்பியா மற்றும் சிம்பாபே போன்ற நாடுகள் இருபத்தியோராம் நூற்றாண்டில் தோல்வியடையும் நாடுகள் பட்டியலில் இணைந்துவிட்டன என ஒரு சாராரும் இணையவுள்ளதாக மற்றுமொரு சாராரும் குறிப்பிடுகின்றனர்.

உலகளாவிய ரீதியில் நாடுகள் தோல்வியடைந்தமைக்கான காரணங்களாக பொருளாதார மற்றும் அரசியல் காரணங்கள் குறிப்பிடப்படுகின்றன. வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு முதலீடுகள் குறைவடைந்து செல்லுதல், வேலைவாய்ப்புகள் குறைவடைதல், தனிநபர் வருமானம் குறைவடைதல், பொருளாதார சரிவு, சீரற்ற பொருளாதார வளர்ச்சி, உணவு மற்றும் எரிபொருள் தட்டுப்பாடு, மனித மூலதன வெளிப்பாச்சல்களும் மூளைசாலிகள் வெளியேற்றமும் போன்ற பல்வேறுபட்ட காரணிகள் தோல்வியின் பொருளாதார விளைவுகளாக சுட்டிக்காட்டப்படுகின்றன. மறுபுறம், தோல்வியின் அரசியல் விளைவுகளாக, அரச தலைவரும் அவரை சார்ந்தவர்களும் ஜனநாயக நெறிமுறைகளை தகர்க்கின்ற நிலைமை, மக்களின் பங்குபற்றல் செயற்பாடுகளை கட்டுப்படுத்தும் நிலைமை, பாராளுமன்றத்தையும் சட்டமன்றத்தையும் அடிபணிய வைத்து அதிகாரத்தை ஓரிடத்தில் குவித்து வைத்தல், நீதித்துறை சுதந்திரத்தில் தலையிடல், சிவில் சமூகத்தை சுதந்திரமாக இயங்க விடாது தடுக்கும் நடவடிக்கைகள், அரசியல் கட்சி சார்ந்த வகுப்பினர்க்கு மாத்திரம் வழங்கும்

நடவடிக்கைகள், ஒரு தலைவர் அல்லது ஒரு சிறு குழு தாங்கள் சுயமாக எடுக்கும் தீர்மானங்கள் நாட்டின் பெரும்பாலான மக்களின் தெரிவுகளாக அல்லது பெரும்பாலான மக்களின் விருப்பங்களாக இருப்பதாக குறிப்பிடப்படுகின்றன.

## இலங்கையின் இன்றைய நெருக்கடிக்கான காரணங்கள்

இன்று இலங்கையில் தோன்றியுள்ள நெருக்கடிக்கு காரணங்களாக இரு விடயங்களை நியாயப்படுத்த முடியும். ஒன்று பேரினப் பொருளாதார கொள்கைகளை வகுத்து அவற்றினை அமுல்படுத்துவது தொடர்பாக சிறந்த முகாமைத்துவத்தினை கடைப்பிடிக்க தவறியமை. இரண்டாவதாக, சிறுபான்மை இன மக்களினுடைய பொருளாதார நலன்களை குறைக்கும் வகையிலான சில இனவாத அல்லது இனத்துவ விருப்பத் தெரிவுக் கொள்கைகளை (Ethnic Preference Policy) அரசாங்கம் அமுல்படுத்துவதில் சிறந்த முகாமைத்துவத்தை கடைப்பிடித்து வந்தமையாகும். பல்லின மற்றும் பல மதங்கள் வாழும் குறைவிருத்தி நாடுகளில் பொருளாதார மற்றும் அரசியல் ஸ்திரத்தன்மையை பேணுவதற்கு சிறந்த பொருளாதார கொள்கைகளை வகுத்து அமுல்படுத்துவது மாத்திரமன்றி அரசியல் ரீதியாகவும் சிறந்த கொள்கைகளை வகுத்து அமுல்படுத்துவது தவிர்க்க முடியாத ஒரு நிபந்தனையாகும். இலங்கையில் இன்று ஏற்பட்டுள்ள நெருக்கடிக்கு தனியே பொருளாதார காரணிகளை மாத்திரம் பலரும் சுட்டிக் காட்டுவது தொடர்ந்தும் இலங்கைத் தீவினை நெருக்கடிக்கு உள்ளாக்குமே தவிர நிரந்தரமான ஒரு தீர்வினை எட்டுவதற்கு வழிசமைக்கப் போவதில்லை.

ஊழல் நடைமுறைகள் மற்றும் மோசமான பொருளாதார ஆலோசனைகள் காரணமாக இறக்குமதி மீதான வரி, மற்றும் வரிகளை உயர்த்தும் அரசாங்கத்தின் திறன் பலவீனமடைந்துள்ளது. நாட்டில் அத்தியாவசிய உணவு மற்றும் அத்தியாவசிய மருந்துகளின் விலைகளை கட்டுப்படுத்த அரசாங்கம் முற்றிலும் தவறிவிட்டது. மேலும் பொதுச் சேவைகள் வழங்கப்படாமை, கடுமையான பொருளாதாரச் சரிவு, பணவீக்கம், தாங்க முடியாத வாழ்க்கைச் செலவு மற்றும் அரசாங்கத் துறைகளில் இராணுவத்தலையீடு ஆகியவற்றின் ஒன்றிணைந்த விளைவு நெருக்கடியை தோற்றுவித்து, தோல்வியடைந்த நிலைக்கு நாட்டினை இழுத்துச் செல்லும் அறிகுறிகளை உறுதிப்படுத்தியுள்ளது.

தொழிலாளர் வர்க்கத்தின் மீது அதிகரித்து வரும் சமூகத் தாக்குதலானது ஒரு தோல்வியுற்ற அரசு சர்வாதிகாரத்துக்கு திரும்பும் நடவடிக்கைகளுடன் ஒத்துப் போகின்றது. ஒரு தோல்வியுற்ற நாடு மட்டுமே அவசரகால நிலையை பிரகடனப்படுத்தும், அத்தியவசிய சேவைகளை பிரகடனப்படுத்தும் மற்றும் தற்காலிக வர்த்தமானி அறிவிப்புகளை வெளியிடும். மேலும் இராணுவ விதிகளின் அடிப்படையிலான ஜனாதிபதியின் உத்தரவுகள் மற்றும் சர்வாதிகார சக்திகளை மேம்படுத்துதல் ஆகியவை நாடு தோல்வியடைந்த பொருளாதார வீழ்ச்சிக்கான முன்னறிவிப்பாகும். மேற்குறிப்பிட்ட

அனைத்து நடவடிக்கைகளும் மக்களின் அன்றாட வாழ்வில் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கின்றன. இலங்கை பேரழிவுகள் மற்றும் பொருளாதார இக்கட்டான சூழ்நிலைகளை எதிர்கொண்டபோது பல சர்வதேச நாடுகள் இலங்கைக்கு உதவ முன்வந்திருந்தன. அத்துடன் பல மேற்கத்தய ஜனநாயக நாடுகளின் நண்பர்களாகவும் இலங்கை இருந்துள்ளது. ஆனால் இன்று, பல சர்வதேச நாடுகள் இலங்கைக்கு உதவி செய்ய தயக்கம் காட்டுவதுடன் கடந்த காலங்களில் இடம்பெற்ற பல்வேறு சர்வதேச விவாதங்களில் பல ஜனநாயக நாடுகள் ஆர்வம் காட்டாது விலகி செல்வதும் வழமையாகிவிட்டது.

## பொருளாதாரக் காரணிகள்

இலங்கை சுதந்திரமடைந்த காலத்தில் இருந்து இன்றுவரை வரலாற்று அனுபவங்கள் குறிப்பிடுகின்ற மிக முக்கியமான விடயம் அரச பதவியை அலங்கரித்த பெரும்பாலான அரசாங்கங்களினால் முன்வைக்கப்பட்ட பொருளாதாரக் கொள்கைகளில் எந்தவித தொடர் தன்மையும் இல்லாமல் அரசாங்கங்கள் மாறுகின்ற போது பொருளாதார கொள்கைகளும் மாற்றமடைந்து வந்தமையாகும். சுதந்திரமடைந்த காலப்பகுதியிலிருந்து 1977ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிகளில் அரச பதவியை அலங்கரித்த ஐக்கிய தேசிய கட்சி (1952 - 1956 மற்றும் 1965 - 1970) திறந்த பொருளாதாரம் சாந்த கொள்கைகளை அமுல்படுத்திய அதேவேளை ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி பதவிக்கு வந்த இரு காலப்பகுதிகளில் (1956 - 1965 மற்றும் 1970 - 1977) மூடப்பட்ட பொருளாதாரம் சார்ந்த கொள்கைகளிலேயே அதிகம் கவனம் செலுத்தியிருந்தது. இதன் விளைவாக பொருளாதார அபிவிருத்தி அணுகுமுறையில் தொடர்புத் தன்மைகள் பேணப்படாமையால் பொருளாதார வளர்ச்சியில் தளம்பல்கள் ஏற்படுவது தவிர்க்க முடியாததாயிற்று.

இலங்கை சுதந்திரமடைந்த காலப்பகுதியிலே நாட்டின் பொருளாதார சுபீட்சத்தை வெளிப்படுத்தும் பெரும்பாலான பொருளாதார மற்றும் சமூக குறிகாட்டிகள் பல ஆசிய மற்றும் கிழக்காசிய நாடுகளின் குறிகாட்டிகளை விட உயர்ந்த நிலையில் இருந்தமை பலராலும் வரவேற்கப்பட்டிருந்தன. இதற்கு துணைபுரிந்த பிரதான காரணிகளாக இலவசக்கல்வி மற்றும் இலவச மருத்துவம் போன்ற நலன்புரி சேவைகளை குறிப்பிடலாம். இருந்தபோதும் இந்த நலன்புரி சேவைகளை தங்களின் அரசியல் பிரசார உத்திகளாக பயன்படுத்தி அரச பதவிகளை அடைந்துகொள்ள முயற்சித்தமை மற்றுமொரு தவறான பொருளாதார கொள்கையாகக் குறிப்பிடலாம். தேர்தல் பிரசாரங்களிலே ‘‘இலவசங்களை வழங்குதல்’’ என்பதே பிரதான கருப்பொருளாக பெரும்பாலான அரசியல்வாதிகளால் முன்வைக்கப்பட்டிருந்தன. இலவசக்கல்வி என்பது பல வறிய குடும்பங்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த துணைபுரிந்தது என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை. எனினும் இலவசக்கல்வியினால் பயன்பெற்ற பல மாணவர்களுக்கான

வேலைவாய்ப்புகளை உருவாக்கும் வகையிலான பொருளாதார அபிவிருத்தி திட்டங்களை பதவிக்கு வந்த அரசாங்கங்கள் முன்வைக்கத் தவறியமையை மற்றுமொரு குறைபாடாக குறிப்பிட முடியும். அதிகளவான இளைஞர் யுவதிகளுக்கு பொருத்தமான வேலைவாய்ப்புக்களை வழங்க அரசாங்கங்கள் தவறியிருக்கின்றன தற்பொழுதும் தவறிழைக்கின்றன.

பொருளாதார ரீதியாக தவறான முகாமைத்துவங்கள் இடம்பெற்ற மேலும் பல சந்தர்ப்பங்களை பட்டியலிட வேண்டியது அவசியமாகும். உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்ததன் பின்பு அதிகளவான வெளிநாட்டுப் பெறுகைகள் கிடைக்கப்பெற்றிருந்தன. அவற்றில் பெரும்பாலான பெறுகைகள் ஏற்றுமதி சாரா உற்பத்தி நடவடிக்கைகளிலேயே பயன்படுத்த ஊக்குவிக்கப்பட்டன. இது ஒரு தவறான பொருளாதார கொள்கையாகவே குறிப்பிட முடியும். நாட்டின் பொருளாதார வளர்ச்சியை துரிதப்படுத்துவதில் ஏற்றுமதி வருமானத்தினுடைய பங்களிப்பு தவிர்க்க முடியாததாகும்.

வெளிநாடுகளில் இருந்து கிடைக்கப்பபெற்ற பெறுகைகள் ஏற்றுமதி வருமானத்தினை அதிகரிக்கக்கூடிய வகையிலான உற்பத்திகளில் பயன்படுத்தியிருக்க வேண்டும். மாறாக ஏற்றுமதி சாராத உள்நாட்டு உற்பத்திகளை பெருக்குவதற்காக அதிகளவான வெளிநாட்டு பெறுகைகளை பயன்படுத்தியதன் விளைவாக இலங்கை எதிர்பார்த்த அளவிற்கு ஏற்றுமதி வருமானத்தினை ஈட்ட முடியாமல் போனதுடன் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்ள முன்வருவதையும் ஊக்குவிக்கவில்லை எனலாம். உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்ததன் பின்பு வெளிநாட்டு நேரடி முதலீடுகள் ஊடாக இலங்கையின் பொருளாதாரத்தை விரிவுபடுத்த முடியும் என பலரும் எதிர்பார்த்தார்கள். மாறாக, அரசாங்கங்களின் தவறான கொள்கைகள் மற்றும் அரச நிறுவனங்களில் மலிந்திருந்த ஊழல் செயற்பாடுகள் எதிர்பார்த்த அளவிற்கு வெளிநாட்டு முதலீடுகளை கவர தவறிவிட்டன.

நாட்டின் பொருளாதார வளர்ச்சி நோக்கிய கொள்கைகளை முன்வைக்க பல்வேறு தரப்பினரிடையேயான கூட்டு முயற்சி என்பது பிரதான நிபந்தனையாகும். இலங்கை வரலாற்றில் பொருளாதார கொள்கை வகுப்பதிலும் அவற்றினை அமுல்படுத்துவதிலும் கூட்டாக இணைந்து முடிவு எடுப்பதில் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் தோல்விகளே சான்றாகின்றன. மக்களின் வாழ்க்கையைப் பாதிக்கும் முக்கியமான முடிவுகளை எடுப்பதில் கூட்டு முயற்சிகளை அரசு இழந்து விட்டதாகவே தெரிகின்றது. அரசியலமைப்பின் 20வது திருத்தம் கொண்டு வரப்பட்டதன் மூலம் மக்கள் கூட்டாக முடிவெடுக்கும் உரிமையை இழந்துவிட்டனர். இதன் விளைவாக ஜனநாயக உரிமைகள் பறிக்கப்பட்டு பல அரசசார்பான குழுக்கள் மற்றும் அரசியல் கையாட்களை உள்ளடக்கிய தற்காலிக குழுக்கள் மற்றும் போதியளவு பொருளாதார அறிவற்ற

அதிகாரிகள் போன்றவர்களால் தீர்மானங்கள் நிறைவேற்றப்படுதல் தவிர்க்க முடியாததாகிவிட்டது.

பொருளாதார குழப்பங்கள் மற்றும் தங்களது முட்டாள்தனங்களை நிவர்த்தி செய்ய ஒரே இரவில் வர்த்தமானிகளை வெளியிடுதல் இன்று வாடிக்கையாகிவிட்டது. சில அரசியல்வாதிகள் நாட்டின் திறைசேரியை கொள்ளையடிப்பதிலும் தேசியச்சொத்துக்களை விற்பதிலுமே அதிகம் ஈடுபட்டுள்ளனர். குறிப்பாக, அண்மைக் காலங்களில் தனிப்பட்ட பல நாடுகளின் உதவிகளை அடிப்படையாகக் கொண்டு பல அபிவிருத்தி திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. ‘மத்தள சர்வதேச விமான நிலையம்’, ‘இரசாயண உரங்கள், பூச்சிக்கொல்லிகள் மற்றும் களைக்கொல்லிகள் பயன்பாடு மற்றும் இறக்குமதிக்கான தடை’, ‘ஹம்பாந்தோட்டை துறைமுகம்’, ‘திருகோணமலையில் ஆரம்பிக்கப்பட்ட எண்ணெய் கிணறுப்பண்ணை’, ‘கொழும்பு நகரை கையகப்படுத்துகின்ற நடவடிக்கைகள்’ ஆகியவை தோல்வியை தழுவிய சில அபிவிருத்தித் திட்டங்களாகும். இவை யாவும் கொள்கை வகுப்பதிலும் அவற்றினை அமுல்படுத்துவதிலும் கூட்டாக இணைந்து முடிவு எடுக்காமையினால் தோல்வியுற்ற சில திட்டங்களே. எல்லாவற்றுக்கும் மேலாக, நாடு அதன் மதிப்புமிக்க சொத்துக்களை இழந்து வருகின்றது. குறிப்பாக துறைமுகங்கள், விமான நிலையங்கள், மிகவும் மதிப்புடைய வர்த்தக நிலங்கள், விவசாய நிலங்கள் போன்ற சொத்துக்களை விற்பனை செய்வதில் அதிக கவனம் செலுத்தி வருகின்றது. அரசின் துரித வளர்ச்சித் திட்டங்கள் இலங்கை நாட்டை திவாலாக்கி அதன் மதிப்பை சர்வதேச ரீதியாக இழந்து விட்டது என்பதே உண்மையாகும்.

இலங்கையின் பொருளாதார அபிருத்திக்கு பங்களிப்பு செய்வதில் ஒவ்வொரு பிரதேசத்தினதும் பொருளாதார செயற்பாடுகள் பிரதானமானவை. குறிப்பாக, 1980களுக்கு முன்பு இலங்கையின் பொருளாதார வளர்ச்சி மற்றும் அபிவிருத்திக்கு வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உருவாக்கப்பட்ட கைத்தொழிற்சாலைகள் குறிப்பிட்டளவு பங்களிப்பினை வழங்கியிருந்தமை யாவரும் அறிந்த உண்மை. அந்த வகையிலே, காங்கேசன்துறை சீமேந்து ஆலை, பரந்தன் இரசாயண தொழிற்சாலை, ஓட்டுசுட்டான் ஓட்டு தொழிற்சாலை, மட்டக்களப்பு காகித தொழிற்சாலை மற்றும் புல்மோட்டை இல்மனைற் தொழிற்சாலை போன்ற பல தொழிற்சாலைகள் வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்களுக்கு வருமானத்தை பெற்றுக் கொடுத்ததுடன் பல இளைஞர் யுவதிகளுக்கு வேலை வாய்ப்பையும் வழங்கியிருந்தமை நாம் அனைவரும் அறிந்ததே.

இது மாத்திரமல்லாமல் வடக்கு மற்றும் கிழக்கு மாகாண விவசாயத்துறை விருத்தி என்பது இலங்கையின் பொருளாதாரத்திற்கு கணிசமானளவு பங்களிப்பை வழங்கக்கூடிய ஒரு துறையாக இருந்த வந்துள்ளது. முப்பது வருட உள்நாட்டுப் போர், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பொருளாதார கட்டமைப்பை முற்றாக சீரழித்து மக்களின் வாழ்க்கைத்

தரத்தை பின்நோக்கி நகர்த்தியிருப்பதோடு நாட்டின் பொருளாதார பங்களிப்பிலும் பாரிய தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது. போரினால் அழிக்கப்பட்ட தொழிற்சாலைகள் மற்றும் விவசாய நீர்த்தேக்கங்கள் எதுவுமே சீர்செய்யப்படாமல் கைவிடப்பட்டமையினால் பொருளாதார பங்களிப்பு என்பதும் வீழ்ச்சி கண்டது. ஆகவே, யுத்தத்திற்கு முன்னர் பொருளாதாரத்தில் மிகவும் முக்கிய பங்களிப்புச் செய்திருந்த துறைகளை புனரமைப்பு செய்து வடகிழக்கு மாகாணங்களின் நாட்டிற்கான பொருளாதார வளர்ச்சிப் பங்களிப்பை அதிகரிக்க இதுவரை பதவிக்கு வந்த எந்த ஒரு அரசாங்கமும் பாரிய அபிவிருத்தி திட்டங்களை முன்வைக்கத் தவறிவிட்டன என்றே குறிப்பிடலாம்.

யுத்த காலத்தில் முற்றாக அழிக்கப்பட்ட அனைத்து தொழிற்சாலைகளையும் திரும்பவும் இயங்க வைத்திருந்தால் எத்தனையோ இளைஞர் யுவதிகளுக்கு வேலைவாய்ப்பை வழங்கி அவர்களது குடும்ப வருமானத்தை அதிகரித்து வடகிழக்கு மாகாணங்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தியிருக்க முடியும். மேலும், இரணைமடுக்குளம் மற்றும் முத்தையன்கட்டு குளம் போன்ற பல நீர்தேக்கங்களும் வற்றாத நதிகளையும் கொண்ட பிரதேசங்களாக வடகிழக்கு மாகாணங்கள் இருந்தபோதும் விவசாயத்துறை சார்ந்த அரசாங்கத்தின் அபிவிருத்தித் திட்டங்கள் வடகிழக்கு மாகாணங்களில் மந்தமாகவே இருந்து வந்துள்ளன. இந்த நீர்தேக்கங்களும் நதிகளும் சிறப்பாக அபிவிருத்தி செய்யப்பட்டிருக்குமாயின் இலங்கை மக்கள் அனைவருக்கும் தேவையான உணவுத் தேவையினை இலகுவாக அடைந்திருக்க முடியும்.

மேலும், வடக்கு கிழக்கு மாகாணங்கள் மூன்றில் ஒரு பங்கு நெல் தேவையினை உற்பத்தி செய்திருந்தன. 60 வீதமான வெங்காய உற்பத்தியினை வழங்கியிருந்தது. 43 வீதமான மிளகாய் பங்களிப்பு காணப்பட்டது. மீன்பிடித்துறையிலும் 53 வீதமான பங்களிப்பினை வழங்கிய மாகாணங்களாகும். ஆடு வளர்ப்பு, கோழி வளர்ப்பு என்பனவும் இடம்பெற்றிருந்தது. ஆனால் யுத்தத்தின் பின்னர் இதனை முன்னேற்றுவதற்கு அரசாங்கம் எத்தகைய பொருளாதாரக் கொள்கையினை முன்வைத்திருந்தது என்பதுதான் கேள்விக்குறியான விடயமாக உள்ளது. உள்நாட்டு யுத்தம் நிறைவடைந்ததன் பின் வெளிநாடுகளிலிருந்து பாரியளவு நிதி உதவிகள் வடகிழக்கு மாகாணங்களை கட்டியெழுப்ப வழங்கப்பட்டிருந்த போதும் பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களை நோக்கி உட்பாய்ச்சப்பட்ட நிதிகளின் அளவு வடகிழக்கு மாகாணங்களின் பொருளாதார வளர்ச்சியை துரிதப்படுத்த துணைபுரியவில்லை என்பதே உண்மையாகும்.

## அரசியல் காரணங்கள்

பொருளாதாரத்தினுடைய நெருக்கடிகள் ஒவ்வொரு வீட்டினுடைய கதவினையும் தட்டிக்கொண்டிருக்கின்றன. இந்த நெருக்கடியின் மத்தியிலும் பெரும்பாலான நாளிதழ்கள், செய்தித்தாள்கள் மற்றும் சமூக

ஊடகங்கள் தங்கள் ஊடகங்களில் பெரிதும் பகிராத விடயம் இலங்கையில் வாழும் சிறுபான்மை இனங்களின் உரிமைகள் மற்றும் நியாயமான கோரிக்கைகள் எந்த அளவிற்கு புறக்கணிக்கப்பட்டன என்பதுவும் அவ்வாறான புறக்கணிப்புக்களால் நாடு எதிர்நோக்கிய பின்னடைவுகளும் அந்தப் பின்னடைவுகளின் காரணமாக இன்று நாடு தோல்வி நிலைக்கு சென்று கொண்டிருப்பதுமேயாகும். இன்றுவரை இலங்கையினுடைய தோல்வி நிலைக்கு மிகப் பிரதான காரணமாக சுட்டிக்காட்டப்படுவது பேரினப் பொருளாதாரக் கொள்கைகளின் முகாமைத்துவம் இன்மையேயாகும்.

அந்த வகையிலே, சிறுபான்மை இன மக்களினுடைய பொருளாதார நலன்களை குறைக்கும் வகையிலான சில இனவாத அல்லது இனத்துவ விருப்பத் தெரிவுக் கொள்கைகளை (Ethnic Preference Policy) அரசாங்கம் அமுல்படுத்துவதில் சிறந்த முகாமைத்துவத்தை பயன்படுத்தியிருக்கின்றார்கள். இனத்துவம் சார்ந்த கொள்கைகளில் சிறந்த முகாமைத்துவத்தை பயன்படுத்தியதன் விளைவாக சிறுபான்மை இனங்கள் பொருளாதார மற்றும் அரசியல் சார்ந்த நன்மைகளை அடைந்து கொள்வதில் பின்தள்ளப்பட்டமை வரலாற்று உண்மையாகும். அதன் விளைவாக இனங்களுக்கிடையே நெருக்கடிகள் ஏற்பட்டு சமூக முரண்பாடு, இனங்களுக்கிடையிலான முரண்பாடு என்பன நாட்டில் பொருத்தமான பொருளாதாரக் கொள்கைகளை சிறப்பாக நடைமுறைப்படுத்தாமல் தடுத்த காரணிகளாகவே நோக்கப்பட வேண்டும். ஆகவே ஒருபுறம் சிறந்த முகாமைத்துவம் கொண்ட இனம் சார்ந்த விருப்பத்தெரிவுக் கொள்கைகளை அரசாங்கம் காலத்துக்கு காலம் அமுல்படுத்திய போது அவர்கள் எதனை அடைந்து கொள்ள விரும்பினார்களோ அதனை சிறப்பாகவே அடைந்து கொண்டார்கள்.

## இனம் சார்ந்த விருப்பத்தெரிவுக் கொள்கைகள்

இனம் சார்ந்த விருப்பத்தெரிவுக் கொள்கைகள் ஒடுக்கப்பட்ட மக்களின் குறைகளை நிவர்த்தி செய்து தேசத்தைக் கட்டியெழுப்பும் செயல்முறையின் ஒரு பகுதியாக குறிப்பிடுகின்றனர். 1960களில் அமெரிக்காவில் அமுல்படுத்திய விருப்பத்தெரிவுக் கொள்கைகள் அடிமைத்தனத்தால் பின்தங்கியிருந்த கறுப்பின மக்களுக்கு அதிகாரமளிக்கும் ஒரு செயல்முறையாக தொடங்கப்பட்டது. இந்தியாவில் அமுல்படுத்திய விருப்பத்தெரிவுக் கொள்கை, கீழ் சாதியினரை குறிப்பாக தீண்டத்தகாதவர்கள் என ஒதுக்கப்பட்டிருந்த மக்களை பொருளாதார மற்றும் அரசியல் வாழ்வில் இணைத்துக் கொள்வதற்காக தொடங்கப்பட்டது. மலேசியாவில் அமுல்படுத்தப்பட்ட விருப்பத்தெரிவுக் கொள்கைகள் பூர்வீக மலாய் சமூகத்தவர்களுக்கு அதிக பொருளாதார சக்தியை வழங்கி பொருளாதாரத்தை மறுசீரமைப்பதற்காக தொடங்கப்பட்டது. 1994ஆம் ஆண்டு முதல் தென்னாபிரிக்காவில் அமுல்படுத்தப்பட்ட விருப்பத்தெரிவுக் கொள்கைகள் கறுப்பின மக்களின் முன்னேற்றத்தை மேம்படுத்தும் நோக்கில் முன்வைக்கப்பட்டிருந்தன.

பிஜியில் அமுல்படுத்திய விருப்பத்தெரிவுக் கொள்கைகள் பழங்குடி மக்களின் மேம்பாட்டை முக்கியப்படுத்தியிருந்தது. ஆகவே பல நாடுகளில் அமுல்படுத்தப்பட்ட விருப்பத்தெரிவுக் கொள்கைகள் பாகுபாட்டை குறைப்பதற்கும் பின்தங்கிய இனக்குழுக்களின் விகிதாசார பிரதிநித்துவத்தை உறுதி செய்வதற்குமாக அமுல்படுத்தப்பட்டிருந்தன.

## இலங்கை: இனம் சார்ந்த விருப்பத்தெரிவுக் கொள்கைகள்

ஆரம்பகால இலங்கை அரசியலில் முக்கியமான இனக்கொள்கைப் பிரச்சினைகளில் ஒன்றாக மொழி காணப்பட்டது. இது சமூகத்தில் ஒற்றுமையை உருவாக்குவதற்கப் பதிலாக இலங்கை மக்களை பிளவுபடுத்தவே முற்பட்டது. சுதந்திரத்திற்குப் பின் பதவியேற்ற அரசாங்கம் ஆங்கில மொழி தேசிய மொழி என்ற அந்தஸ்திலிருந்து நீக்கப்பட்ட பின்னர் சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய இரு மொழிகளும் தேசிய மொழிகளாக சமத்துவம் வழங்கப்படும் என்ற நிலைப்பாட்டை எடுத்திருந்தது. 1956ஆம் ஆண்டு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அரசாங்கம் ஆங்கிலத்துக்கு பதிலாக சிங்களத்தை மாத்திரம் நாட்டின் உத்தியோக பூர்வ மொழியாக மாற்றுவோம் என்ற பிரசாரத்தை முன்வைத்து தேர்தலை சந்தித்து தேர்தலில் வெற்றி பெற்றவுடன் S.W.R.D. பண்டாரநாயக்கா அவர்கள் சிங்களம் மட்டும் என்ற கொள்கையை பிரகடனப்படுத்தினார். இந்த கொள்கையானது அரச துறை வேலைவாய்ப்பு மற்றும் பல்கலைக்கழக கல்வி என்பன சிங்கள மொழியின் அறிவால் தீர்மானிக்கப்பட்டது. இக்கொள்கையானது அரச சேவையில் அதிக எண்ணிக்கையான ஆங்கிலம் பேசும் ஊழியர்களை குறைத்து கிராமப்புற சிங்கள மொழி பேசுபவர்களை பல்கலைக்கழகங்களில் சேர்த்துக் கொள்வதை நோக்கமாகக் கொண்டிருந்தது. சிங்கள மாற்றல் கொள்கையின் விளைவால் கல்வி மற்றும் வேலைவாய்ப்புக்களில் சிறுபான்மை இனங்களுக்கான வாய்ப்புகள் கடுமையாக குறைக்கப்பட்டன. மிகவும் சுவாரஸ்யமான ஒரு விடயம் 1950களின் பிற்பகுதியிலும் 1960களின் முற்பகுதியிலும் சிங்களம் உத்தியோக பூர்வ மொழியாக அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர், சிங்கள மொழி படித்த சிங்களவர்கள் அரச பணிகளை நிரப்பத் தொடங்கியபோது பெருமளவிலான ஆங்கிலம் படித்த தமிழர்கள் மற்றும் சிங்கள தொழில் வல்லுனர்கள் நாட்டை விட்டு வெளியேறினர்.

சுதந்திரத்திற்கு முன்பு, S.W.R.D பண்டாரநாயக்கா அவர்களின் ஆட்சிக் காலத்தில் சிங்கள மொழியினை தேசிய மொழியாகப் பிரகடணப்படுத்தியமையே முதன் முதலில் இனங்களுக்கிடையிலான கசப்புணர்வினை ஏற்படுத்திய ஒரு நிகழ்வாகும். இந்த கசப்பான நிகழ்வே பெரும்பான்மை இனத்தினை திருப்திப்படுத்தும் வகையிலான அரசியல் கொள்கைகள் மற்றும் வாக்குறுதிகளை தேர்தல் பிரசாரங்களில் முன்னெடுத்தால் இலகுவில் வெற்றியடையலாம் என்ற ஒரு சமிக்ஞையை அரசியல்வாதிகளுக்கு வழங்கியிருந்தது எனலாம். தொடர்ச்சியாக இடம்பெற்று வந்த பெரும்பாலான தேர்தல்களிலே பல அரசியல்வாதிகள்

தாம் தேர்தலில் வெற்றிபெறுவதற்கான ஒரு உத்தியோக பொருளாதாரக் கொள்கைகளினை முன்வைக்காது தமது இனத்தினை திருப்திப்படுத்தும் வகையிலான அரசியல் கொள்கைகள் மற்றும் வாக்குறுதிகளையே நம்பியிருந்தனர். அண்மைக்காலமாக, இலங்கையில் நடைபெற்ற தேர்தல் பிரசாரங்களிலே இலவசங்களை வழங்குதல், அரசாங்கத் துறையிலே பதவிகளை வழங்குதல் மற்றும் மதரீதியாகவோ, இனரீதியாகவோ குறிப்பிட்ட இன மக்களை திருப்திப்படுத்தும் வகையிலான தேர்தல் பிரசாரங்களை முன்னெடுத்தல் ஆகியவற்றின் ஊடாகவே பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அரசாங்கங்கள் வெற்றியை பெற்றிருக்கின்றன.

ஆகவே, வரலாறு கற்றுத்தந்த ஒரு விடயம் இதுவரை பதவிக்கு வந்த பெரும்பாலான அரசாங்கங்கள் நாட்டின் பொரளாதாரத்தை கட்டியெழுப்பும் வகையிலான சிறந்த பொருளாதார மற்றும் அரசியல் கொள்கைகளை முன்வைக்காமையின் விளைவே இன்றைய நெருக்கடிக்கான பிரதான காரணமெனலாம்.

### நெருக்கடியிலிருந்து மீள்வதற்கான சந்தர்ப்பங்கள் - பொருளாதாரக் கொள்கைகள்

திறமையான மற்றும் நியாயமானதொரு வரிவிதிப்பு முறைமையை அமுல்படுத்தல். அரச வரி வருமானம் பொது சேவைகள் மற்றும் வறியவர்களுக்கான வருமான மாற்றல்களுக்கு உதவும் அதே வேளை வரி விதிப்பு முறைமை தனியார் துறை வளர்ச்சிக்கு தடையாக செயற்படக்கூடாது. நிதி அமைச்சு, திறைசேரி மற்றும் மத்திய வங்கி உட்பட பொருளாதார கொள்கை வகுப்பு, திட்டமிடல் மற்றும் பொதுத்துறை நிதி மேலாண்மை ஆகியவற்றிற்கு பொறுப்பான முக்கிய அரச நிறுவனங்களின் இறையாண்மையை உறுதி செய்து அந்த நிறுவனங்களை வலுப்படுத்தல். அத்துடன் வங்கித்துறை மற்றும் நிதிச்சந்தைகளை வலுப்படுத்தல். சட்டத்தின் ஆட்சியை வலுப்படுத்தல் மற்றும் சட்ட அமைப்புக்களை மேம்படுத்துதல். சட்ட மற்றும் நிர்வாக சீர்திருத்தங்கள் மூலம் தெளிவாக வரையறுக்கப்பட்ட சொத்து உரிமைகளை மேம்படுத்துதல். பொருத்தமான சட்ட, நிறுவன மற்றும் ஒழுங்குமுறைக்கட்டமைப்பை நிறுவி நிறுவனங்களின் நிர்வாகத்தை மேம்படுத்ததல். பொருத்தமான ஒழுங்கு முறைச் சூழலை உருவாக்க அரசாங்கத்துக்கு உதவுவதன் மூலமும் வர்த்தக திறன்கள் மற்றும் அறிவை வளர்ப்பதன் மூலமும் நிதிச் சேவைகள் மற்றும் ஏனைய வர்த்தக சேவைகளுக்கான பொருத்தமான ஊக்குவிப்புக்களை வழங்குவதன் மூலமும் நுண் தொழில்கள் மற்றும் சிறிய நடுத்தர வர்த்தக முயற்சிகளின் வளர்ச்சிக்கு ஆதரவு வழங்குதல் அவசியமானதாகும்.

பொது மற்றும் தனியார் துறைகள் மூலம் சுகாதாரம், கல்வி, குடிநீர் மற்றுத் தூய்மையாக்கல் போன்ற அடிப்படைச் சேவைகளை வழங்குவதை மேம்படுத்தல், மனித உரிமைகளுக்கான மரியாதையை ஊக்குவித்தல், ஜனநாயக செயன்முறைகள், சிவில் பிரதிநித்துவம் மற்றும் பங்கேற்பு என்பவற்றை வலுப்படுத்தல். பொருளாதார மற்றும்

அரசியல் சீர்திருத்தங்களை திறம்பட செயல்படுத்த மற்றும் பொதுசேவைகள் திறம்பட வழங்குவதை உறுதி செய்ய திறமையான மற்றும் பயனுள்ள பொதுத்துறையினை வலுப்படுத்தல். வர்த்தக கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை வலுப்படுத்தல், பிராந்திய மற்றும் உலகளாவிய வர்த்தக ஒப்பந்தங்களில் பங்கேற்றல், வர்த்தகம் மற்றும் முதலீட்டு வாய்ப்புக்களை மேம்படுத்தல். ஒப்புக்கொள்ளப்பட்ட இலக்குகளை அடைந்து கொள்ள அனைத்து அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்படுதல் அவசியமானதாகும்.

இலங்கையின் பொருளாதார வளர்ச்சி மற்றும் அபிவிருத்தியில் ஒவ்வொரு குடிமகனதும் பங்கு உறுதிப்படுத்தப்படுவது பிரதானமாகும். நியாயமற்ற அல்லது பாரபட்சமான பொருளாதார மற்றும் அரசியல் நடவடிக்கைகள் மக்களிடையே மனக்கசப்பு மற்றும் ஒற்றுமையின்மைக்கு வழிவகுத்து பொருளாதார வளர்ச்சி மற்றும் அபிவிருத்திக்குத் தடையாக அமைந்துவிடும் என்பதால் அனைத்து இனங்களுக்கும் இடையே நம்பிக்கைகளை உருவாக்கி அனைவரையும் நியாயமாக நடாத்துவதற்கும் சிறுபான்மையினரின் உரிமைகள் மற்றும் சலுகைகளை பாதுகாக்கவும் சட்டங்கள் இயற்றப்படுவது அவசியமானதாகும். எந்த ஒரு இனத்தையோ, மதத்தையோ அல்லது சமூகத்தையோ சிறுமைப்படுத்தும் எந்தவொரு சட்டத்தையும் அரசாங்கம் நடைமுறைப்படுத்தாது என்பதை உறுதிப்படுத்த சிறுபான்மை மக்களின் உரிமைகளுக்கான அமைப்பொன்று உருவாக்கப்படுதல் அவசியமாகும். தொடர்ந்து வரும் காலங்களில் பொருளாதார வளர்ச்சி நோக்கிய பாதையிலே இனமத நல்லிணக்கத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து மக்களை நல்லிணக்கத்திற்கான பாதையில் வழி நடத்த சிறந்த கொள்கைகள் அமுல்படுத்தப்பட வேண்டும். மேலும், இலங்கை மக்கள் அனைவருக்கும் சம வாய்ப்புகள் வழங்கப்படுவதையும் சட்டம் அனைவருக்கும் சமமானதென்பதையும் உறுதிப்படுத்துதல் நெருக்கடிகளை குறைப்பதற்கான வழிமுறைகளாகும்.

இன்று இலங்கை எதிர்கொண்டிருக்கும் நெருக்கடியை கட்டுப்படுத்துவதற்கும் அதைச் சமாளிப்பதற்கும் கடைப்பிடிக்க வேண்டிய மூலோபாய அணுகுமுறை குறித்து அரசாங்கம் இன்னும் உறுதியான முடிவை எட்டியதாகத் தெரியவில்லை. அரசாங்கம் சர்வதேச நாணய நிதியம் மற்றும் சர்வதேச நாடுகளை திருப்பதிப்படுத்தும் வகையிலான பொருளாதார மற்றும் அரசியல் கொள்ளைகளை வகுப்பதில் கவனம் செலுத்துவது குறுங்கால பிரச்சினைகளுக்கு ஓரளவு தீர்வாக அமையுமே தவிர நாட்டில் புரையோடியிருக்கும் பிரதான நீண்டகால பிரச்சினைகளுக்கு தீர்வு கண்டு பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டெடுப்பதென்பது மிகவும் சவாலான ஒரு விடயமாகவே காணப்படுகின்றது. தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடிக்கு பொருளாதார மற்றும் அரசியல் கட்டமைப்பில் சீர்திருத்தத்தை மேற்கொள்வது அவசியமானதாகும். இதற்காக அரசாங்கமும் அனைத்து அரசியல் கட்சிகளும் ஒருமித்த கருத்தை எட்டுவது

இன்றியமையாததாகும். இது சென்மதி நிலுவை, வெளிநாட்டு படுகடன், நாணயமாற்று வீதம் மற்றும் வெளிநாட்டு இருப்பு போன்ற நெருக்கடிகளுக்குத் தீர்வினை எட்டுவதுடன் மட்டுப்படுத்தப்படாமல் இலங்கையின் பொருளாதாரம், அரசியல் அமைப்பு, சமூக அமைப்பு மற்றும் அரசாங்கம் என்பவற்றில் மாற்றத்தை ஏற்படுத்த துணை புரிவதாக இருத்தல் அவசியமாகும்.

## உசாத்துணை


Abdullah, Firdaus H. (1997), “Affirmative action policy in Malaysia: To restructure society, to eradicate poverty”, Ethnic Studies Report, Vol. XV, No. 2: pp. 189 -221.

Abeyratne, Sirimal (2004), “Economic Roots of Political Conflict: The Case of Sri Lanka”. The World Economy, Vol. 27, No. 8: pp. 1295-1314.

Abeyratne, Srimal and Rodrigo, Chandra (2002), “Explaining growth performance in Sri Lanka fifty years in retrospect 1950-2000”, Global Research Project South Asian Network of Economic Research Institutes (SANEI), New Delhi: India.

Amnesty international (1983), “Report of an Amnesty International Mission to Sri Lanka”, London: Amnesty International Publication.

Balasuriya, Tissa (1978), “Minority problems: A socio-economic perspective” in Race relations in Sri Lanka, Center for society and religion (eds.), Logus, Vol.16 Nos. 2,3, and 4, Colombo.

Bastiampillai, Betram (1995), “Survey of conflict among communities in Sri Lanka in modern times”, India: University of Madras.

Colombage, S. (1996), “The economy of Sri Lanka in the liberalized phase”, Colombo, Sri Lanka: Friedrich Ebert Stiftung.

De Silva, C. R. (1984), “Sinhala Tamil relations and education in Sri Lanka: The university admissions issue the first phase, 1971-1977”, in Independence to Statehood, Goldmann B. Robert and A.J. Wilson (eds.), London: Frances Pinter Publishers.

Gunasekara, V. (2021), Crises in the Sri Lankan Economy: Need for National Planning and Political Stability, ISAS Working Papers, NUS: https://www.isas.nus.edu.sg/papers/crises-in-the-sri-

lankan-economy-need-for-national-planning-and-political-stability/

Gunasinghe, Newton (1984), "Open economy and its impact on ethnic relations in Sri Lanka", in Sri Lanka, the Ethnic Conflict: Myths, Realities and Perspectives, Committee for Rational Development (eds.), New Delhi: Navrang.

Gunatillake, Godfrey (2000), "Development policy regimes" in Sri Lanka's Development since Independence: Socio-Economic Perspectives and Analyses, W.D. Lakshman and C.A. Tisdell (eds.), New York: Nova Science Publishers Inc.

Gunatilleke, Godfrey (2001), "The cost of the war: Economic, social and human cost of the war in Sri Lanka", Colombo: National Peace Council.

Ivan, V (2022), More about the solution for Sri Lanka's current crisis: DailyFT, https://www.ft.lk/columns/More-about-the-solution-for-Sri-Lanka-s-current-crisis/4-732851

Manogaran, Chelvadurai (1987), "Ethnic conflict and reconciliation in Sri Lanka", Honolulu: University of Hawaii Press.

Marga Institute (1995), "Inter racial equity and national unity in Sri Lanka" Marga Institute, Colombo, Sri Lanka.

Rafi,T and Abeyratnealal, S. (2022), How Sri Lanka Can Overcome Its Economic Crisis? The Diplomat: https://thediplomat.com/2022/08/how-sri-lanka-can-overcome-its-economic-crisis/

Rafi, T and Wong, B. (2022), The Deep Roots of Sri Lanka's Economic Crisis, The Diplomat: https://thediplomat.com/2022/07/the-deep-roots-of-sri-lankas-economic-crisis/

Samarasinghe, S.W.R.D. (1984), "Ethnic representation in central government employment and Sinhala-Tamil relations in Sri Lanka 1948-1981", in Independence to Statehood, Goldmann B. Robert, and A.J. Wilson (eds.), London: Frances Pinter.

Silva, Kingsley De M. (1997), "Affirmative action policies: The Sri Lankan experience". Ethnic Studies Report, Vol. 15, No.2, pp. 245-286.

Sivarajah, Ambalavanar (1996), "Politics of Tamil nationalism in Sri Lanka", New Delhi: South Asian Publishers.

University Grants Commission (1981), "Ethnic distribution of university entrance in Sri Lanka", Colombo, Sri Lanka.

Wilson, Jeyaratnam A. (1988), "The Break-up of Sri Lanka: The Sinhalese-Tamil Conflict", Honolulu: University of Hawaii Press.

## அத்தியாயம் 05

# பொருளாதார நெருக்கடி, தவறான முகாமைத்துவம் மற்றும் தன்னிறைவுப் பொருளாதாரம்

# Economic Crisis, Mismanagement and Self-Sufficient Economy

**Prof. S. Vijayakumar**
Professor in Economics,
Department of Economics,
Faculty of Arts,
University of Jaffna.

(08.06.2022 அன்று நடைபெற்ற நிகழ்நிலைக் கருத்தரங்கின் தொகுப்பு)

## அறிமுகம்

வினைத்திறனற்ற பேரினப் பொருளாதார முகாமைத்துவமும் தவறான தீர்மானங்களுமே இன்றைய பொருளாதார நெருக்கடிக்கான பிரதான காரணமாகும். இலங்கை 1948ஆம் ஆண்டு சுதந்திரம் பெற்றதில் இருந்து தற்போது வரை பல்வேறு அரசியல் நெருக்கடிகள் தோன்றியிருக்கின்றன. ஆனால், 1956 மற்றும் 1970 - 1977ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடிகள் சில நடைபெற்றிருக்கின்றன. ஆனால் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் பொருளாதார நெருக்கடி போன்று முன்பு ஏற்பட்டதில்லை. இது ஒரு கடுமையான, ஆபத்தான சூழலாக காணப்படுகின்றது. ஆரம்பத்திலே பொருளாதார நெருக்கடி ஒன்று தோன்றியது. இதனைத் தொடர்ந்து ஏற்பட்ட அரசியல் நெருக்கடி பொருளாதார நெருக்கடியினை மேலும் துரிதப்படுத்தியிருக்கின்றது. கையறு நிலையில் இருக்கின்ற ஒரு ஜனாதிபதி, தனக்கென பாராளுமன்ற பலத்தினைக் கொண்டிராத பிரதமர் மற்றும் அதிக பாராளுமன்ற ஆசனங்களைக் கொண்டிருக்கின்ற கட்சி என்கின்ற அடிப்படையில் ஒரு முக்கோண திரிநிலையில் அரசாங்கம் உள்ளது. தற்போது உள்ள அரசாங்கம் கூட நிலையான அரசாங்கம் அல்ல. எனவேதான் அரசியல், பாராளுமன்ற உறுதிப்பாட்டை காணமுடியாமல் உள்ளது. இத்தகைய சூழல் பொருளாதார நெருக்கடியினை மேலும் வலுவூன்றச் செய்துள்ளது.

## உலகப் பொருளாதார நெருக்கடிகளின் ஒரு பார்வை

1929ஆம் ஆண்டு உலகப் பெருமந்தம் ஏற்பட்டது. இந்தக் காலகட்டத்தில் இருந்த பிரச்சினை வேலையின்மையாகும். பணவீக்கம் காணப்படவில்லை. விலைகள் எல்லாம் அதிதாழ்ந்த மட்டத்திற்கு சென்றன. விலைச்சுருக்க நிலையே காணப்பட்டது. இரண்டாம் உலகப் போர் நிறைவுற்றதும் பணவீக்கம் என்பது பிரச்சினையாக இருந்தது.

சுருக்கமாக கூறினால் பணவீக்கம் மற்றும் வேலையின்மை ஆகியவை மாறி மாறி ஏற்பட்டிருந்தது. 1971 – 1981 வரையான காலப்பகுதியில் உலக அளவில் அபிவிருத்தியடைந்த நாடுகளில் ஒரு தேக்கவீக்க நிலை (Stagflation) ஒன்று ஏற்பட்டது. முன்னைய காலத்தில் பயன்படுத்திய கேள்வி முகாமைத்துவக் கொள்கை நடவடிக்கைகள் தேக்க வீக்கம் என்கின்ற பிரச்சினைக்குத் தீர்வாக அமையவில்லை. உண்மையில் நிரம்பல்பக்க முகாமைத்துவத்தினுடாகவே இதற்கு தீர்வு காணப்பட்டது. இந்தியாவிலும் கூட 1991ஆம் ஆண்டு தேக்கவீக்க பிரச்சனை ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

## தேக்கவீக்க நிலை

இலங்கை தற்போது தேக்கவீக்க நிலையினுடைய ஆரம்பத்தில் இருக்கின்றது என்பதுதான் நிதர்சனமான உண்மையாகும். தற்போதைய நெருக்கடியான நிலையில் அரசாங்கத்தினுடைய கருத்து தெரிவுப்புகளில் அல்லது அரசின் உத்தியோகபூர்வமான அறிக்கைகளில் தேக்க வீக்கம் தொடர்பான கருத்துக்கள் இடம்பெறவில்லை. பணவீக்க நிலைமையாகவே அடையாளப்படுத்தப்படுகின்றது. உத்தியோகபூர்வ புள்ளிவிபரங்களின் படி மே மாதத்திற்கான உணவுப் பணவீக்கமானது 57.9 சதவீதமாக உள்ளது. வானைத்தொடும் அளவிற்கு பணவீக்கம் உயர்ந்துவிட்டது. விலைகள் (சந்தைப்பொறிமுறை) தங்களது கட்டுப்பாட்டினை இழந்துவிட்டன. அரசாங்கமும் விலைகள் மீதான தங்களது கட்டுப்பாட்டினை இழந்துவிட்டது. அமெரிக்க பொருளியலாளர் ஒருவர் இலங்கையினுடைய பணவீக்கம் 113 சதவீதமாக காணப்படுகின்றது என்கின்றார். எனவே பொருட்களின் விலையினை கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பது மிகக்கடினமானதாகும்.

இலங்கையினைப் பொறுத்தவரை 1.9 மில்லியன் தினசரி கூலி வேலைக்குச் செல்கின்றவர்கள் காணப்படுகின்றார்கள். இதில் பெரும்பாலானோர் முறைசாராப் பிரிவிற்குள் காணப்படுகின்றனர். கொவிட் தொற்று ஆரம்பித்த காலப்பகுதியில் இருந்து இவ்வாண்டு ஜூன் மாதம் வரையிலும் பெருமளவு வேலையிழப்புக் காணப்படுகின்றது. சிறிய மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களில் வேலை செய்யும் வாய்ப்புக்கள் பெருமளவு குறைந்திருக்கின்றது. சுற்றுலாத்துறையினைப் பொறுத்தவரையில் 2020ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் இருந்து டிசம்பர் மாதம் வரையிலும் அதனது உள்ளார்ந்த ஆற்றலலை 100 வீதம் இழந்திருந்தது. இருப்பினும் இவ்வாண்டின் ஆரம்பத்தில் இருந்து மெதுவான ஒரு வளர்ச்சிப் போக்கினைக் கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் தற்போது இந்நிலை மோசமாகியுள்ளது. எனவேதான் சுற்றுலாத்துறையில் நேரடியான மற்றும் மறைமுகமான வேலைவாய்ப்புக்களும் தற்போது இழக்கப்பட்டுள்ளன. இது தவிர கட்டுமானத்துறைகள், கைத்தொழில் துறைகள் மற்றும் விவசாயத்துறை ஆகியவற்றிலும் பெருமளவான வேலையின்மை ஏற்பட்டுள்ளது. அதிலும் குறிப்பாக உணவு சார்ந்த உற்பத்திகளில் ஈடுபடும் நிறுவனங்களில் அதிகளவான வேலைவாய்ப்பு

இழப்பு ஏற்பட்டுள்ளது. எனவே இலங்கையில் வேலைவாய்ப்பு இழப்பு காணப்படுகின்றது என்பது மறுக்கமுடியாத உண்மையாகும். உயர்ந்த பணவீக்கம் மற்றும் உயர்ந்த வேலை இழப்பு ஆகியவை ஒரேநேரத்தில் உயர்வாகக் காணப்படும் நிலையினை பொதுவாக தேக்கவீக்க நிலையாக அடையாளப்படுத்த முடியும். தேக்கவீக்க நிலையின் ஆரம்பக் கட்டத்தினையே இலங்கை தற்போது அனுபவித்துக் கொண்டிருக்கின்றது.

## தவறுகள்

உர இறக்குமதியினைத் தடுத்தமை, அரசாங்கத்துறையில் அதிகளவு வேலைவாய்ப்புக்களை வழங்கியமை, ரில்லியன் கணக்கிலான பண அச்சிடலை மேற்கொண்டமை, நாணயமாற்றுவீத பெறுமதி நிர்ணயத்தில் தலையீடுகளைச் செலுத்தியமை, வரியினை இல்லாமலாக்கியமை, வெளிநாட்டு ஒதுக்கங்களை சிறந்த முகாமைத்துவம் செய்யாமை மற்றும் தவறான கொள்கை நடவடிக்கைகளை செய்தமை ஆகியவையே இலங்கையின் நிலை மோசமடைவதற்குரிய காரணங்களாகும். சுருக்கமாகக் கூறின் தவறான மற்றும் வினைத்திறனற்ற பேரினப் பொருளாதார முகாமைத்துவம் மற்றும் தீர்மானங்கள்தான் இலங்கையின் இன்றைய நெருக்கடி நிலைக்கு காரணமாகும்.

இலங்கை தற்போது எதிர்நோக்கும் இந்த நெருக்கடியில் இருந்து மீளுமா? என்கின்ற வினாவுக்கான பதில் ஆம் என்பதேயாகும் (சில நிபந்தனைகளினடிப்படையில்). இதற்கு எமது நாட்டின் பாராளுமன்றம் மிகவும் உறுதிவாய்ந்ததாக மாற்றமடைய வேண்டும். இரண்டு அல்லது மூன்று வருடங்களை உள்ளடக்கியதான சிறந்த பொருளாதார செயற்றிட்டங்களை உருவாக்க வேண்டும். அதுமட்டுமல்லாது மக்கள் அனைவரும் சில தியாகங்களை செய்ய வேண்டியதும் அவசியமாகின்றது. மேற்கூறப்பட்ட மூன்று விடயங்களும் ஒன்றிணைவாக ஏற்படுகின்ற நிலையில் இலங்கையின் மீட்சி என்பது இரண்டு வருடங்களில் சாத்தியமானதாகும். இலங்கைப் பொருளாதாரத்தில் விவசாயத்துறையினை எடுத்துக்கொண்டால், பயிர்ச்செய்கை சார்ந்த விவசாயம், கால்நடை, கோழிவளர்ப்பு மற்றும் மீன்பிடி ஆகியவற்றினை மேற்கொள்வதற்கான பொருத்தமான சூழல் மற்றும் போதுமான வளங்களும் காணப்படுகின்றன. விவசாயத்துறை தொடர்பில் நாங்கள் அச்சப்படுகின்ற நிலையில் இல்லை. இவற்றை உற்பத்தி செய்து உள்நாட்டுத் தேவைகளை பூர்த்தி செய்யக்கூடிய உள்ளார்ந்த ஆற்றல் எமக்கு இருந்து வந்திருக்கின்றது. எனவே இந்த உள்ளார்ந்த ஆற்றலினை பயன்படுத்தக்கூடியவகையில் உடனடியாக அரசாங்கம் செயற்றிறனான கொள்கைத்திட்டங்களை உருவாக்கவேண்டும்.

இலங்கையினது வெளிநாட்டு வருமானங்களை (Foreign Income) அவதானிக்கும் போது, 2020ஆம் ஆண்டு தோட்டத்துறை (Plantation Sector) வருமானம் 4 பில்லியன் டொலராகக் காணப்படுகின்றது. ஆடைத்துறை வருமானம் 2019 ஆண்டில் 5.2 பில்லியன் டொலராக

காணப்படுகின்றது. மேலும், 2018 மற்றும் 2019 காலப்பகுதிகளில் சுற்றுலாத்துறையில் இருந்து 5.5 பில்லியன் டொலரும், வெளிநாட்டு பணவனுப்பல்களில் இருந்து 7 பில்லியன் டொலரும் கிடைத்துள்ளன. இவை தவிர வெளிநாட்டு முதலீடுகள், உதவிகள், வெளிநாட்டுக் கடன்கள் மற்றும் வேறு மூலங்களில் இருந்தும் இலங்கை அந்நியசெலாவணியினைப் பெற்றுக் கொள்கின்றது. சராசரியாக மேற்படி கூறப்பட்ட துறைகளில் இருந்து ஏறத்தாழ 19 அல்லது 20 பில்லியன் டொலர் வருமானத்தினை வருடாந்தம் உழைக்கக் கூடிய ஆற்றலை இலங்கை கொண்டிருக்கின்றது எனலாம்.

எமது நாட்டு வெளிநாட்டுக் கையிருப்பு நிலையினை அவதானிக்கும் போது, 2020ஆம் ஆண்டு மார்ச் மாதம் கொவிட் - 19 ஏற்பட்டிருந்த போது 7.5 பில்லியன் டொலராகக் காணப்பட்டது. அது படிப்படியாகக் குறைவடைந்து 2022ஆம் ஆண்டு மே மாதம் 0.05 பில்லியன் டொலராக காணப்பட்டிருந்தது. எனவே வெளிநாட்டு நாணய ஒதுக்கு என்பது குறுகிய காலத்தில் மிக வேகமான தேய்வு நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. 2019ஆம் ஆண்டு இறுதியில் ஜனாதிபதி பதவிக்கு வந்த காலப்பகுதியில் இருந்து 2022 மார்ச் மாதம் வரையிலும் பயன்படுத்திய கேள்வி முகாமைத்துவ கொள்கைகளை (இறை மற்றும் நாணயக் கொள்கை) அவதானிக்க வேண்டியது முக்கியமானதாகும். இலகு நாணயக் கொள்கையினை அறிமுகப்படுத்தியதன் விளைவாக வட்டி வீதங்கள் அதிதாழ்ந்த மட்டத்திற்கு அதாவது 5, 5.5 வீதத்திற்குக் கொண்டு செல்லப்பட்டன. இதன் நோக்கம் என்னவெனில் வட்டி வீதங்களை குறைப்பதன் ஊடாக முதலீடுகளை மேற்கொள்வதற்கான தூண்டுதலை ஏற்படுத்துவதற்காகும். ஆனால் இவ்வாறான அவர்களுடைய எதிர்பார்ப்பில் பொருளாதாரச் சூழலினை அவர்கள் கவனத்திற் கொள்ளவில்லை. அதாவது இலகு நாணயக் கொள்கையினை நடைமுறைப்படுத்தப்படுத்துவதற்கான உறுதியான பொருளாதாரச் சூழல் இருக்கின்றதா? என்பதை அரசாங்கம் கவனத்திற் கொள்ளவில்லை.

கொவிட் - 19 தாக்கத்தினைத் தொடர்ந்து இலங்கையில் 2020ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் விநியோக சங்கிலி (Supply chain) உள்நாட்டில் சீர்குலைந்திருந்தது. இந்நிலை வெளிநாடுகளிலும் காணப்பட்டது. உள்நாட்டுப் பொருட்களை ஏற்றுமதி செய்வதில் இடர்பாடுகள் காணப்பட்டன. அதேபோன்று வெளிநாடுகளில் இருந்து மூலப் பொருட்களை இறக்குமதி செய்வதில் சீர்குலைவுகள் காணப்பட்டன. உள்நாட்டில் ஊழியர்கள் கூட ஒரு இடத்தில் இருந்து இன்னுமொரு இடத்திற்கு அசைவுற முடியாத நிலை காணப்பட்டது. முதலீட்டாளர்கள் தங்கள் முதலீடுகளை சரியாக நடத்த முடியாத நிலை காணப்பட்டது. தொழிலாளர்கள் தொடர்ந்து ஒரு தொழில் துறையில் வேலை செய்ய முடியாத நிலை காணப்பட்டது. இந்நிலையில் வட்டி வீதங்களைக் குறைத்தது நாட்டின் பொருளாதாரத்திற்கு பொருத்தமற்ற முடிவாகும். வட்டி வீத குறைப்பின் ஊடாக முதலீட்டினைத் தூண்ட

மேற்கொள்ளபட்ட நடவடிக்கையின் காரணமாக மெய்யாதன முதலீடுகள் அதிகரித்தமையே தவிர பொருளாதாரதில் வேறு ஏதும் ஏற்படவில்லை. அதாவது உற்பத்தித் திறனற்ற கட்டிடங்கள், நிலங்கள் மீதுதான் அதிகளவு முதலீடு செய்யப்பட்டன. இதனால் மெய்யாதன முதலீடுகளின் விலைகளும் அதிகளவில் உயர்வடைந்திருந்தது. எனவேதான் பொருளாதாரத்தில் பெரியளவிலான பலாபலன்கள் ஏற்படவில்லை.

இறைக்கொள்கையில் விரிந்த இறைக்கொள்கையினை பேணியிருந்தார்கள். வற் (VAT) வரி மற்றும் வருமான வரிகளில் குறைப்புக்களினை மேற்கொண்டிருந்தார்கள். வரி குறைக்கப்பட்டாலும் உற்பத்தியினை மேற்கொள்ளக்கூடிய எந்தவொரு சூழலும் இல்லை. வரிக்குறைப்பின் மூலம் ஒரு சில குழுவினரே நன்மையினை அடைந்தார்கள் என்பதுதான் முக்கியமான விடயம். வருமான வரிக் குறைப்பினைப் பொறுத்தவரையில் வருமானம் அதிகளவில் பெற்ற குழுவினரே நன்மையடைந்தார்கள். எனவே 2019 – 2022 மார்ச் வரையிலும் முன்வைக்கப்பட்ட இறை நாணயக் கொள்கைகள் வினைத்திறனற்றவையாகக் காணப்பட்டன. பொருளாதாரத்தினை இவை மேலும் சீர்குலைவுக்கு கொண்டு சென்றிருக்கின்றது.

2022 ஏப்ரல் மாதத்திற்கு பின்னர் பொருளாதாரக் கொள்கைகளினை அவதானிக்கும் போது முன்னர் பயன்படுத்திய கொள்கைகளிற்கு முரணான கொள்கைகளினை நடைமுறைப்படுத்தினார்கள். அந்த வகையில் இறுக்கமான நாணயக் கொள்கையினைப் பயன்படுத்தினார்கள். வங்கிகளினைப் பொறுத்தவரை சில கடன்களை 5 வீதத்திற்கும் சில கடன்களை 10 வீதத்திற்கு குறையாமலும் வழங்கிவிட்டது. இவற்றில் மாற்றங்களை ஏற்படுத்தவியலாது. ஆனால் தற்போது வங்கிகள் வைப்புக்களுக்கு 13 வீதம் தொடக்கம் 21 வீதம் வரையிலும் வட்டி வீதங்களை அதிகரித்துள்ளன. இது வங்கிகளுக்கு சிக்கலான நிலையினை உருவாக்கியுள்ளது. பணவீக்கங்களின் இந்த அதிகரிப்பு வட்டி வீதங்களின் அதிகரிப்பு நிலையினால் ஏற்படும் நன்மைகளினை அனுபவிக்க இடமளிக்கவில்லை என்பதுதான் மிக முக்கியமான விடயமாகும். வைப்பாளர்களின் மெய்வருமானமும் தற்போது குறைவடைந்து கொண்டு செல்கின்றது.

2019ஆம் ஆண்டிற்கு முன்னர் காணப்பட்ட கொள்கைகளினை மீண்டும் கொண்டு வந்தனர். வற் (VAT) வரி, வருமான வரிகளை அதிகரித்து விட்டனர். தற்போது பொருளாதார சூழல் வேறுபட்டதாகக் காணப்படுகின்றது. கொள்வனவு ஆற்றல் குறைந்துவிட்டது. வேலைவாய்ப்புக்கள் குறைந்துவிட்டது. விமைட்டங்கள் அதியுயர் மட்டத்தில் உள்ளது. இப்படியான ஒரு சூழலில் வருமான வரி அதிகரிப்பு என்பது ஏற்புடையதாகக் காணப்படினும் வற் (VAT) மற்றும் எனைய சில வரிகளின் அதிகரிப்பு என்பது வாழ்க்கை சிதைவடைந்திருக்கின்ற குறைந்த மற்றும் நடுத்தர வருமான குடும்பங்களினை வெகுவாக

பாதிக்கின்றது. உண்மையில் தற்போது மறைமுக வரிகளை மக்கள் செலுத்தக் கூடிய ஆற்றல் அற்றவர்களாகக் காணப்படுகின்றார்கள்.

## தீர்வுகள்

எனவே தொடர்ந்து பொருளாதாரக் கொள்கை வகுப்புக்களிலும் அதனை நடைமுறைப்படுத்துவதிலும் தொடர்ந்து தவறுகளை அரசாங்கம் மேற்கொள்கின்றது. எனவே இனியாவது உண்மையாக பிரச்சினையின் வீரியத்தினை அடையாளம் காண வேண்டும். இலங்கை தேக்க வீக்க நிலையின் ஆரம்பத்தில் உள்ளது என்பதை புரிந்து கொள்ள வேண்டும். எனவே தேக்க வீக்க நிலைக்கு கேள்வி முகாமைத்துவக் கொள்கைகளினை மாத்திரம் கொண்டு தீர்வுகாண முடியாது. நிரம்பல் பக்க அணுகுமுறைகள் தொடர்பிலும் கவனம் செலுத்த வேண்டும். இதற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். நிரம்பல் பக்க அணுகுமுறையினது அடிப்படையே வேலை செய்யத் தூண்டுவது, சேமிக்கத் தூண்டுவது மற்றும் முதலிடத் தூண்டுவதாகும். ஊழியச் சந்தைகள் மற்றும் பிற சந்தைகளில் உள்ள கட்டுப்பாடுகளை குறைக்க வேண்டும். உற்பத்தியினை பெருக்குவதை நோக்கமாகக் கொண்டிருக்க வேண்டும்.

சுயசார்புப் பொருளாதாரத்தின் ஊடாக நாட்டை மீட்டெடுக்கலாம் என்ற கருத்து பொதுவாகக் காணப்படுகின்றது. இது விவாதத்திற்குரிய விடயமாகவும் காணப்படுகின்றது. சுயசார்புப் பொருளாதாரம் என்பது மூடப்பட்ட பொருளாதாரத்தில் இருந்து வேறுபட்டதாகும். மூடப்பட்ட பொருளாதாரம் என்பது உண்மையில் நடைமுறைக்கு சாத்தியமற்ற விடயமாகும். வர்த்தகம் என்பது 2500ஆம் ஆண்டுகளுக்கு முன்னரே ஆரம்பிக்கப்பட்ட விடயமாகும். எனவே மூடப்பட்ட பொருளாதாரம் என்பது ஒரு போதும் நிலவியதில்லை. சுயசார்புப் பொருளாதாரம் என்பது தன்னிடம் உள்ள இயற்கை வளங்களையும் ஊழிய வளங்களையும் பயன்படுத்தி மக்களினுடைய தேவைகளினை பூர்த்தி செய்து நிலையான, கௌரவமான வாழ்க்கைத் தரத்தினை பெற்றுக்கொடுப்பதாகும். சுயசார்புப் பொருளாதாரம் என்பது சிக்கனமாக இருப்பது, வசதிகள் அற்று இருப்பது என்கின்ற கருத்து தவறானதாகும்.

அமெரிக்கா ஒரு சுயசார்புப் பொருளாதாரமாகக் கருதப்படுகின்றது. அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் மற்றும் இலங்கையினுடைய காலநிலைகளை ஒப்பிட்டு நோக்கினால், இலங்கையில் 12 மாதங்கள் முழுவதும் விவசாய உற்பத்தியினை மேற்கொள்ள முடியும். ஆனால் அமெரிக்காவில் அவ்வாறல்ல. எவ்வாறிருப்பினும் உலகில் அதிகளவு விவசாய உற்பத்திகளை மேற்கொள்ளும் நாடாகவும், உலக நாடுகளிற்கு உணவுகளை வழங்கிக் கொண்டிருக்கின்ற நாடாகவும் அமெரிக்கா மிக முக்கியமான நிலையில் உள்ளது. சோயா அவரை, சோளம், தானியங்கள், பன்றி இறைச்சி, மாட்டிறைச்சி, தயாரிப்பு உணவுகள், பால் உற்பத்திகள், கோதுமை உற்பத்திகள் மற்றும் பருத்தி உற்பத்திகளை உலக நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து கொண்டிருக்கின்றது.

ஆகவேதான் சுயசார்புப் பொருளாதாரத்திற்காக தியாகங்களை செய்ய வேண்டியதில்லை. வசதிவாய்ப்புக்களுடன் எமது பொருளாதாரத்தை கட்டியெழுப்பலாம் என்பது தெளிவாகின்றது. ஒருவகை வழிமுறைக்கு உட்பட்டு நுகர்வினைச் செய்ய வேண்டும் என்பதுதான் இந்த சுயசார்புப் பொருளாதாரத்தினுடைய முக்கியமான அம்சமாக இருக்கின்றது. 1997ஆம் ஆண்டு தென்கிழக்காசிய நிதி நெருக்கடி ஏற்பட்டவேளை தாய்லாந்து நாடும் மிகவும் மோசமாக பாதிப்படைந்திருந்தது. அந்தத் தருணத்தில் அந்த நாடு தனது பொருளாதாரத்தை மீட்டெடுக்க கையாண்ட உத்தி சுயசார்புப் பொருளாதாரமாகும். அந்த நாட்டுத் தலைவர் 3000 திட்டங்களை அறிமுகம் செய்தார். அந்தத் திட்டங்கள் விவசாயம் சார்ந்ததாகவே காணப்பட்டது. 1997ஆம் ஆண்டு 30 பில்லியன் டொலர் காணப்பட்ட வெளிநாட்டு ஒதுக்கங்களின் அளவு 2021ஆம் ஆண்டு 234 பில்லியன் டொலர்களாகக் காணப்படுகின்றது.

இந்தியாவிலும் கூட சுயசார்புப் பொருளாதாரத்திற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. 2014ஆம் ஆண்டு இந்தியாவில் உள்நாட்டில் உற்பத்தி செய்தல், வெளிநாட்டில் விற்பனை செய்தல் எனும் திட்டமானது கொண்டுவரப்பட்டது. இந்த திட்டத்தினை அடிப்படையாகக் கொண்டுதான் கொவிட் - 19இல் இந்தியா பாதிக்கப்பட்டபோது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 10 வீதம் இந்த சுயசார்புப் பொருளாதாரத்தினை வளர்த்தெடுப்பதற்கான திட்டத்தினை முன்மொழிந்தார்கள். இதனடிப்படையில் நோக்கும் போது இந்தியாவும் சுயசார்புப் பொருளாதாரம் சார்ந்த எண்ணக்கருக்களில் முன்னேறி வருகின்றமையினை அவதானிக்க முடிகின்றது. எனவேதான் சுயசார்புப் பொருளாதாரம் என்பது எமது பொருளாதாரம் மூடப்பட்டிருப்பதும் அல்ல, வெளிநாடுகளோடு தொடர்பற்று இருப்பதும் அல்ல. எமது வளங்களைக் கொண்டு, எமது தேவையினைப் பூர்த்தி செய்த பின்னர், வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதன் மூலம் நன்மையினை அடைந்து கொள்வதாகும்.

இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி போன்று 1991ஆம் ஆண்டு இந்தியாவில் ஏற்பட்ட போது அவர்கள் பாரியளவான சீர்திருத்தங்களைச் செய்தார்கள். அந்தக் காலப்பகுதியில் அவர்களுடைய வெளிநாட்டு ஒதுக்கங்களினுடைய அளவு 5.8 பில்லியன் டொலர்களாகக் காணப்பட்டது. ஆனால், தற்போது 631 பில்லியன் டொலர்களினை ஒதுக்கங்களாகக் கொண்டு காணப்படுகின்றது. இலங்கை நாடு தற்போது இந்தியாவிடம் கடன் வாங்கும் நிலையில் இருப்பதும் அவதானிக்கதக்க விடயமாகும். எனவே இலங்கை தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடியில் இருந்து தீர்வு பெற வேண்டுமாயின் உடனடியான பாராளுமன்றம் ஒன்று தேவை. மேலும் நல்ல பொருளாதார திட்டமிடல் தேவை. அத்துடன் மக்கள் தியாகங்களைச் செய்ய வேண்டும். சர்வதேச நாணய நிதியம் தனது வலைப்பக்கத்தில் இலங்கைக்கு சார்பான கருத்துக்களினையே பதிவிடுகின்றது. தாங்கள் எப்போதும் ஒத்துழைப்பு வழங்குவோம் எனக் குறிப்பிட்டிருக்கின்றது. ஆனால் ஏற்கனவே

கடன்பட்டவர்களோடு பேச்சுவார்த்தைகளை நடத்தி சுமுகமான நிலையினை முதலில் ஏற்படுத்துமாறு அறிவுறுத்துகின்றார்கள். அதன் பிற்பாடு கடன் வழங்குவதற்கான திட்டங்களை தாங்கள் ஆலோசிப்பதாகவும் தெரிவித்துள்ளது.

இலங்கை சுயசார்புப் பொருளாதாரம் தொடர்பாகவும் கவனம் செலுத்த வேண்டும். இதற்கு அரசாங்கத்திற்கு உதவியும், கொள்கைத் திட்டங்களும் அவசியமாகும். அந்த வகையில், பயன்படுத்தாமல் இருக்கின்ற நிலத்தினை விவசாயத்திற்கு பயன்படுத்துதல் என்கின்ற விடயத்தினை ஏற்கனவே ஆரம்பித்துவிட்டார்கள். மேலும் விவசாயம் சார்ந்த கைத்தொழில்களை விருத்தி செய்ய வேண்டும். மீன்பிடித்துறையினை அபிவிருத்தி செய்ய வேண்டும். கால்நடை உற்பத்திகளை அதிகரிக்க வேண்டும். இவை தற்போதைய நிலையில் நிதி நெருக்கடியில் சாத்தியமற்றதாக உள்ளது. எனினும் அரசாங்கம் சலுகைத்திட்டங்களின் ஊடாக இவற்றை நடைமுறைப்படுத்த எத்தனிக்க வேண்டும். கையறு நிலையில் சுயசார்புப் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவது என்பது உண்மையில் மிகவும் கடினமான விடயம் என்றே குறிப்பிட வேண்டும்.

இலங்கை இலகுவாக தனது நெருக்கடியில் இருந்து மீண்டெழ உடனடியாகச் செய்ய வேண்டியது நட்டமடைந்த அரச நிறுவனங்களை தனியாருக்கோ அல்லது வெளிநாடுகளுக்கோ விற்பனை செய்வதாகும். நட்டங்களை ஏற்றுக்கொள்வதை விட அவற்றை விற்று வினைத்திறனாக இயங்கச் செய்வது சரியானதாகும். எதிர்காலங்களில் உணவு நெருக்கடி ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகமாக உள்ளது. இதனை அரசாங்கமே ஒத்துக்கொண்டிருக்கின்றது. பொதுமக்கள் தங்களை பாதுகாத்துக் கொள்வதற்காக தமது வீடுகளில் ஏதாவது பயிர்களை பயிரிட வேண்டும். தேவையற்ற செலவுகளை குறைக்க வேண்டும். குறிப்பாக ஆடம்பரப் பண்டங்களின் கொள்வனவை குறைத்துக் கொள்ள வேண்டும்.

மக்கள் தமது சேமிப்புப் பழங்கங்களை அதிகரிக்க முயல வேண்டும். போசாக்கு இன்மை என்பதும் தற்போது உருவாகிக் கொண்டிருக்கின்ற பாரிய பிரச்சினையாகும். மீன், முட்டை, இறைச்சி மற்றும் பழங்கள் என்பவற்றின் விலைகள் அதிகளவில் உயர்ந்துவிட்டது. எனவேதான் கர்ப்பிணிப் பெண்கள், குழந்தைகள், வயதுவந்தவர்கள் என்போர் இதனால் பெரிதும் பாதிப்படைய இருக்கின்றார்கள். இது தொடர்பாகவும் நாங்கள் கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகும். சமூகக் குழப்பங்களற்ற நிலையினை இல்லாதொழிப்பதற்கான நடவடிக்கைகளிலும் கவனம் செலுத்த வேண்டியது அவசியமான ஒன்றாகும். சுற்றுலாத் துறையினைப் பொறுத்தவரையில் செலவுகள் குறைவாகும். வருமானங்களே அதிகளவில் கிடைக்கின்றன. எனவே பொருளாதாரத்தை மீட்டெடுக்க சுற்றுலாத்துறை சார்ந்தும் துரித திட்டங்களை வகுப்பது பொருத்தமானதாகும்.

## அத்தியாயம் 06

# பொருளாதார நெருக்கடியும் பிராந்திய வாய்ப்புக்களின் பேண்தகுநிலையும்

# Economic Crisis and the Sustainability of Regional Prospects

**Retired Prof. V. P. Sivanathan**
Department of Economics,
Faculty of Arts,
University of Jaffna.

(22.06.2022 அன்று நடைபெற்ற நிகழ்நிலைக் கருத்தரங்கின் தொகுப்பு)

## அறிமுகம்

தேசிய பொருளாதாரம் நெருக்கடிக்கு உள்ளாகும்போது பிராந்திய பொருளாதாரமானது அதிலிருந்து தப்பமுடியாது. பிராந்திய பொருளாதார நடவடிக்கைகள் யாவும் தேசிய பொருளாதார நடவடிக்கைகளோடு ஒன்றிணைந்ததாக அமையும். இருப்பினும் பிராந்திய பொருளாதாரம் தனக்கேயுரிய சில இயல்புகளினூடாக தேசிய பொருளாதாரப் பிரச்சினையிலிருந்து விடுபடவும் முடியும், அதேவேளையில் பேண்தகு அபிவிருத்தி என்ற வகையில் தன்னை சுதாகரித்துக்கொள்ளவும் முடியும். அந்தவகையில் பேண்தகு அபிவிருத்தி மற்றும் பிராந்திய பொருளாதார வாய்ப்புகளினூடாக தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு எவ்வாறு தீர்வு காணலாம் என்பது தொடர்பாகவே ஆராய இருக்கின்றோம்.

தேசிய பொருளாதாரத்திற்குள் பிராந்திய பொருளாதாரம் உள்ளடங்கியிருப்பதால் தேசிய பொருளாதாரப் பிரச்சினையின் மத்தியில்தான் பிராந்திய பொருளாதாரம் தொடர்பாக நோக்கவேண்டியிருக்கிறது. அந்தவகையில் இலங்கையின் தேசிய பொருளாதாரப் பிரச்சினை தொடர்பாக நோக்குவோமேயானால் இலங்கையானது கடந்த காலங்களில் பெற்றுக்கொண்ட கடனை மீளச்செலுத்த முடியாத பாரிய இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. இதனால் இலங்கை முன்னொருபோதும் இல்லாத அளவிற்கு பாரிய பொதுப்படுகடன் பிரச்சினைக்கு உள்ளாகியிருக்கின்றது. தற்போது இலங்கையானது கிட்டத்தட்ட 51 பில்லியன் வெளிநாட்டுக் கடன்படுகையோடு பாரிய கடனாளியாகக் காணப்படுகிறது. மேலும் அந்த 51 பில்லியன் வெளிநாட்டுகடனுக்காகவும் இந்த வருடம் 7 பில்லியன் டொலரினை வட்டியாகச் செலுத்தவேண்டிய கடப்பாடோடும் நாடு இருக்கின்றது. 2019ஆம் ஆண்டு முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவிக்கு வரும்போது இலங்கையின்

வெளிநாட்டுக் கையிருப்பு 7.9 பில்லியனாகக் காணப்பட்டது. தற்போது அது 600 மில்லியனாக பாரியளவாகக் குறைவடைந்து காணப்படுகிறது.

அதுமட்டுமல்லாமல் இலங்கையானது கடனை மீளச்செலுத்த முடியாத பாரிய இக்கட்டான சூழ்நிலைக்கும் அண்மையில் உள்ளாகியிருக்கிறது. இலங்கையின் அரசியல் வரலாற்றில் 70 வருடங்களுக்குப் பின்னர் இலங்கை சந்தித்த பாரிய நிதி நெருக்கடியான நிலைமையாக இது பார்க்கப்படுகின்றது. இலங்கையானது கடந்த ஏப்ரல் மாதம் 12ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக்கொண்ட கடனுக்கான வட்டிக்கொடுப்பனவு $78 மில்லியனையும் மீளச்செலுத்துமாறு கோரியும் உரிய காலத்திற்குள் திரும்பச் செலுத்தாமல் தாமதித்ததால் மேலும் ஒருமாதகால அவகாசம் வழங்கப்பட்டது. உலகளாவிய நிதி நிறுவனங்களும் மற்றும் சர்வதேச நாணயநிதியமும் இணைந்து அவ்வாறான நிபந்தனையை விதித்த போதிலும் கடந்த மே மாதம் 30ஆம் திகதிக்குள் இலங்கையானது வட்டியை மீளச்செலுத்தாமல் விட்டதனால் சர்வதேச நிதிநிறுவனங்கள் இலங்கையை கடனை மீளச்செலுத்தாத ஒரு வங்குரோத்து நாடு எனப் பகிரங்கமாக அறிவித்தன. மேலும் உலகளாவிய கடன் தரப்படுத்தல் நிறுவனங்கள் கடன் தரப்படுத்தல் சுட்டியை AAA இலிருந்து AA ஆகக் குறைத்தன. இவை இலங்கையின் நன்மதிப்பை பாதித்ததோடு மட்டுமல்லாமல் சர்வதேச நிதி நிறுவனங்களும் ஏனைய உலக நாடுகளும் இலங்கைக்கு கடன்தருவதை சிக்கலுக்குள்ளாக்கியது.

இச்சந்தர்ப்பத்தில் சர்வதேச நாணயநிதியமானது, இலங்கை கடனை மீளச்செலுத்தாமல் விட்டாலும் கடன் மீள் செலுத்துகையில் ஒரு சீராக்கத்தைச்செய்ய வேண்டும் எனப்பணித்தது. அவ்வாறுசெய்தால் இலங்கை கோரிய 4 மில்லியன் அளவு கடனை வழங்க முடியுமெனத் தனது கருத்தை முன்வைத்தது. இருப்பினும் இலங்கை அதற்கு சம்மதிக்காமையினால் பாரிய பொதுப் படுகடன் பிரச்சினைக்குள்ளாகி வேறு எந்தவொரு நாடும் கடன்கொடுக்க முடியாத நாடாக இலங்கை மாற்றப்பட்டுவிட்டது. இதனால் இலங்கையானது அருகிலுள்ள நாடுகளான சீனாவிடமிருந்தும் இந்தியாவிடமிருந்தும் கடன்பெற முற்சித்துவருகின்றது. உலகவங்கியும் ஆசிய அபிவிருத்தி வங்கியும் இலங்கையின் தற்போதைய பிரச்சினைக்கு ஓரளவேனும் தீர்வுகாண 1.6 பில்லியன் ரூபாவைக் கடனாக வழங்க முயற்சித்த போது பிலிப்பைன்ஸ் நாட்டிலுள்ள கடன்தரப்படுத்தல் நிறுவனமொன்று இலங்கைக்கு கடனைமீளச் செலுத்தும் இயலுமையில்லையெனக் குறிப்பிட்டு அதற்கு எதிர்ப்புத்தெரிவித்தது. இதனால் எல்லா மட்டங்களாலும் கைவிடப்பட்ட நாடாக இலங்கையானது கடன் பிரச்சினையிலிருந்து மீளெழ முடியாமல் தத்தளித்துக் கொண்டிருக்கிறது.

எமது நாட்டுப் பிரச்சினையை நாம் உணராத காலம்போய் எமது வீட்டுப் பிரச்சினையாக அது மாறிய போதுதான் நாங்கள் இதுதொடர்பில் வலுகவனமும் அதிக அக்கறையும் செலுத்துகின்றோம். இலங்கை

கடனை மீளச்செலுத்த முடியாத வங்குரோத்து நாடாகச் சென்றமைக்கு யார் காரணம்? அதற்கு நாம் தகுதி இல்லாதவர்களா? எனக்கேட்டால் அதற்கு உடனடித் தீர்வு காண்பது கடினமானதாகும். ஏனெனில் இலங்கையின் கடந்தகால வெளிநாட்டு வர்த்தகத்தில் ஏற்பட்ட தோல்விகள், வெளிநாட்டு வர்த்தக இடைவெளிகள் அதிகரித்துச் செல்லுகின்ற நிலைகள், உள்நாட்டில் வரவுசெலவுத்திட்டப் பற்றாக்குறை நிதியீட்டம் செய்யப்படுகின்ற வழிமுறைகளிலுள்ள முறைகேடுகள் போன்றவை இவற்றுக்கெல்லாம் முக்கிய காரணமாக விளங்கின.

இலங்கை சுதந்திரமடைந்த காலத்தில் ஏற்றுமதி வருவாய் இறக்குமதிச் செலவை விஞ்சிய வகையில் காணப்பட்டது. இருப்பினும் 1954ஆம் ஆண்டு முதன்முதலாக 6 மில்லியன் வெளிநாட்டுக் கடனைப்பெற்ற நாடாக இந்நாடு வெளிநாட்டுக் கடன்பெறுவதற்கான ஆரம்பத்தைத் தொடங்கியது. நேர்க்கணிய வர்த்தக மீதி இருந்த செழிப்பான காலத்தில் இலங்கை உழைத்த வருமானத்தை சரியாக முதலிட்டு அதனை முகாமைத்துவம் செய்ய முடியாமல் போனதால்தான் இலங்கைக்கு இந்நிலை ஏற்பட்டிருக்கின்றது என்பது ஆய்வாளர்களின் முடிவாக உள்ளது. தற்போதும் இலங்கையில் தேறிய வர்த்தகப் பற்றாக்குறை 5 பில்லியன் அளவிற்கு இருக்கின்றது. இவ்வர்த்தகப் பற்றாக்குறை இருப்பதனால் கடனை மீளச்செலுத்துவதென்பது வர்த்தகத்தினூடாக நடைபெறக்கூடியதாக இல்லை. இதற்கு இலங்கையில் சரியான வினைத்திறனான நிதிமுகாமைத்துவமில்லாமையே பிரதான காரணமாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

செழிப்பான காலத்தில் இலங்கை உழைத்த வருமானத்தை அபிவிருத்திக்கான முதலீடாக மாற்றாமல் சமூகச்செலவுகளுக்காகவும் யுத்த காலத்தில் பாதுகாப்புச் செலவீனங்களுக்காகவும் செலவிட்டு முழுமையாகச் சீரழித்துவிட்டது என்ற கருத்தும் எம்மவர் மத்தியில் நிலவுகின்றது. குறிப்பாக 1958ஆம் ஆண்டின் பின்னர் ஏற்பட்ட இனப்பிரச்சினைக்கு பாதுகாப்புச் செலவீனத்தை அதிகரிக்கவேண்டிய கட்டாயத்திற்கு இலங்கை தள்ளப்பட்டது. ஆகவே அன்றிலிருந்து இன்று வரைக்கும் ஒவ்வொரு வரவுசெலவுத்திட்டத்திலும் ஏறக்குறைய 15 வீதமான பங்கு பாதுகாப்புச் செலவினங்களுக்காக ஒதுக்கப்படுகின்றது. இலங்கையில் வேறு முக்கியமான தேவைகளுக்காக நிதியை செலவிடவேண்டிய அவசியம் இருந்தும்கூட பாதுகாப்புச் செலவினங்களுக்காக தொடந்தும் பெருந்தொகைப் பணத்தைச் செலவிடவேண்டிய தேவையும் நெருக்கடியான நிலைமையும் இலங்கைக்கு இல்லை. அவ்வாறிருந்தும் அரசாங்கத்தினுடைய இனத்துவரீதியான அடக்குமுறைகள் மற்றும் ஒடுக்குமுறைகளுக்காகப் பெருந்தொகைப் பணம் செலவிடப்பட்டதாக மதிப்பீட்டாளர்கள் கூறுகின்றனர். மேலும் இலங்கையானது ஆகக்கூடியது 7 பில்லியன் டொலரினையே வெளிநாட்டு வேலைவாய்ப்பினூடாக உழைக்கக்கூடிய நிலையிருந்தது. இருப்பினும் தற்போது 2 பில்லியன் டொலரையே

வெளிநாட்டு வேலைவாய்ப்பினூடாகப் பெறக்கூடிய நிலையுள்ளது. எனவே தற்போதைய நிலையை மாற்றி இலங்கையின் வேலைவாய்ப்பு வருமானத்தை 7 பில்லியனாக அதிகரிக்கச்செய்வதனூடாக இலங்கையின் கடன் படுகையை ஓரளவுக்கு நிறுத்தலாம் என இலங்கை சிந்தித்தாலும் அதற்கான வாய்ப்பு இலங்கைக்கு தொடர்ந்தும் இல்லாமலிருக்கிறது.

மேலும் இலங்கையானது ஏற்கனவே பெற்றுக்கொண்ட கடனை மீளச்செலுத்துவதற்காக இன்னுமொரு நாட்டிடமிருந்து கடனைப்பெறவேண்டிய நிலையிலுள்ளது. கடந்த ஜூலை மாத இறுதிக்குள் இலங்கை 6 பில்லியன் கடன்தொகையைச் செலுத்தவேண்டிய கட்டாய நிலையிலிருந்தது. இக்கடன் மீள் சீராக்கம்செய்கின்ற வழிமுறையிலே இலங்கை சீனாவிடம் கடன்கோரிய போது 2.5 பில்லியன் கடன்தொகையினை சீனா இலங்கைக்குத் தர முன்வந்தாலும் அதில் 1.5 பில்லியனை ஏற்கனவே பெற்றுக்கொண்ட கடனுக்காகத் திரும்பித்தரவேண்டும் எனப் பணித்தது. எனவே இலங்கை கடனைப்பெறுவதோடு மட்டுமல்லாமல் ஏற்கனவே பெற்ற கடனைத் திரும்பிச்செலுத்தவேண்டிய கட்டாய நிலைக்கும் உள்ளானது.

இலங்கை சுதந்திரம் பெற்ற காலத்திலிருந்து இதுவரைக்கும் பெற்றுக்கொண்ட மொத்த வெளிநாட்டுக் கடனில் மூன்றில் ஒருபகுதிக் கடனானது முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சிக்காலத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட கடனாகும். எனவே, இலங்கை இதுவரைகாலமும் பெற்றுக்கொண்ட 7 பில்லியன் ரூபாவை எவ்வாறு செலுத்துவது?. அதற்காக இலங்கை இறக்குமதிச்செலவைக் குறைக்கமுடியுமா? என்று நோக்கினால் இலங்கை தொடர்ந்தும் நடைமுறைக்கணக்குப் பற்றாக்குறையையே எதிர்நோக்குகிறது. இலங்கை இறக்குமதிக்காக 22 பில்லியனையே செலவிடுகிறது. ஏற்றுமதிவருமானமாக 12 பில்லியன் கிடைக்கிறது. இதனால் 10 பில்லியன் பற்றாக்குறை ஏற்படுகின்றது. இதனால் உள்நாட்டிலே உள்நாட்டு நாணயநடைமுறைகளினூடாக உள்நாட்டு வங்கிகளிலிருந்து பெற்ற கடனையாவது சீர்படுத்துவதற்காக மத்திய வங்கி ரில்லியன் கணக்கில் பணத்தை அச்சிட்டு வெளியிட்டது.

அரசுக்கு நிதிநெருக்கடியேற்படும்போது பணத்தை அச்சிடுவதென்பது மத்தியவங்கியின் முக்கியமான தொழிற்பாடாகக் காணப்படுகின்றது. அரசாங்க ஊழியர்களுக்கு சம்பளத்தைக் கொடுப்பதற்காகவும் கடனுக்கான வட்டிக்கொடுப்பனவை மீளச்செலுத்துவதற்காகவும் பணத்தை மில்லியன் கணக்கில் அச்சிடுகின்ற நிலைபோய் ரில்லியன் கணக்கில் பணத்தை 2022இல் அச்சிடத்தொடங்கியது. அவ்வாறு பணத்தை பெருந்தொகைகளில் அச்சிட்டதன் பின்விளைவுகளில் ஒன்று பொருட்களின் விலை சடுதியாக அதிகரித்தமையாகும். பணவழியின் மூலமாக உள்ளூர் பொருட்களின் விலையுயர்வைக் கட்டுப்படுத்துவதற்கு

உள்ளூர் உற்பத்தியை அதிகரிக்கவேண்டும். விவசாய உற்பத்தியாக இருந்தாலும் சரி உள்ளீடுகளைப் பயன்படுத்திய கைத்தொழில் உற்பத்தியாக இருந்தாலும் சரி பணவீக்கத்தால் அவற்றின் விலைகள் உயர்ந்து செல்கின்றன. பணவீக்கத்தால் உள்ளீட்டுப் பொருட்களின் விலையுயர்ந்துசென்று உணவுப் பொருட்களுக்கு பாரிய தட்டுப்பாடு ஏற்படும்போது அவற்றை வெளிநாட்டிலிருந்து அதிக விலைக்கு இறக்குமதிசெய்து நுகரவேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகின்றோம். ஆனால் இலங்கையால் வெளிநாட்டிலிருந்து எரிபொருள் மற்றும் எரிவாயு போன்ற முக்கிய பொருளுற்பத்திகளை இறக்குமதிசெய்வதற்கு போதிய வெளிநாட்டு ஒதுக்குகள் (வெளிநாட்டு நாணயம்) காணப்படாமையினால் அவற்றுக்கு உள்நாட்டில் பாரிய தட்டுப்பாடு நிலவியது.

இலங்கையில் இறுதிக்கட்ட யுத்தம் இடம்பெற்ற காலத்தில் பாதுகாப்புக் காரணங்களுக்காக இலங்கை 200 பில்லியன் அமெரிக்க டொலரினை செலவிட்டுள்ளதாக இந்திய பாதுகாப்பு அதிகாரி சிவசங்கர் மேனன் ஒரு மதிப்பீட்டின்போது கூறியிருந்தார். இது இலங்கைக்குத் தேவையில்லாத கடன்சுமையை ஏற்படுத்தியதோடு அதிலிருந்து மீளுவதென்பது பாரதூரமான விடயமாகப் பார்க்கப்படுகின்றது. மேலும் இலங்கையில் யுத்தம் ஆரம்பித்த ஆரம்ப காலங்களில் 1983இல் பாதுகாப்புக் கடமைகளில் 21,600 பேர்தான் காணப்பட்டனர். ஆனால் 2018 ஆண்டு தரவுகளின்படி இராணுவ வீரர்களின் எண்ணிக்கை 317,000 ஆக மிகவும் உயர்வடைந்தது. இதனால் இவர்களுக்காக மேலதிகமாகச் பணத்தைச் செலவிடவேண்டியேற்பட்டது. இவையனைத்தும் நிதி முகாமைத்துவத்தில் முறைகேடான விடயமாகப் பார்கப்படுகின்றது. இது அரசாங்கத்தின் பொருளாதார தூரநோக்கற்ற செயற்பாட்டுக்கு சிறந்த உதாரணமாகும்.

மேலும் இலங்கைக்கு கூடுதல் வருவாய் ஈட்டித்தருகின்ற சுற்றுலாத் தொழிற்துறையும் ஈஸ்ரர் ஞாயிறு குண்டுத் தாக்குதல் மற்றும் கொரோனாவால் மோசமாகப் பாதிக்கப்பட்டது. குறிப்பாகக் கொரோனா காலத்தில் விவசாய உற்பத்திகள் மற்றும் பிரதேச முடக்கங்கள் மேற்கொள்ளப்பட்டதனால் சுற்றுலாத்துறைக்கான விநியோகச் சங்கிலி அறுந்துபோயிருந்தது. இதனால் கைத்தொழிலுற்பத்தியையோ விவசாய உற்பத்தியையோ அக்காலத்திலே சிறப்பாக மேற்கொள்ள முடியவில்லை. குறிப்பாக பொருளாதார நெருக்கடியேற்பட்ட காலத்தில் எரிபொருளுக்கு காணப்பட்ட தட்டுப்பாட்டால் உருவான பிரதேச முடக்கத்தால் ஓரிடத்திலிருந்து இன்னுமோரிடத்திற்கு உள்ளீடுகளை எடுத்துச் செல்ல முடியாமல் போனது. பொருட்களை வேறு இடங்களுக்குக் கொண்டுசென்று சந்தைப்படுத்த முடியாமல் போனது. இதனால் தேசிய பொருளாதார நெருக்கடியின் விளைவாகப் பிராந்தியப் பொருளாதார நடவடிக்கைகள் வெகுவாகப் பாதிக்கப்பட்டன.

மேலும் இலங்கையை 100 சதவீதம் செயற்கை உரப்பாவனையல்லாத நாடாக மாற்றும் நோக்குடன் இலங்கை அரசாங்கம் செயற்கை

உரங்களின் இறக்குமதிக்கு முற்றாகத் தடை விதித்தது. அமெரிக்கா, சீனா, அவுஸ்ரேலியா, கனடா போன்ற அபிவிருத்தியடைந்த நாடுகளில் கூட அரசாங்கங்கள் இயற்கை உரப்பாவனையை ஊக்குவித்தாலும் செயற்கை உரப்பாவனைக்கு முற்றாகத் தடைவிதிக்கவில்லை. குறிப்பிட்டளவு பங்கு செயற்கை உரப்பாவனையைத் தொடர்ந்தும் கைக்கொண்டன. இலங்கை அரசாங்கத்தின் தூரநோக்கற்ற இவ்வாறான சில பிழையான கொள்கைத் தீர்மானங்களால் நாட்டின் விவசாயத்துறை பாதிக்கப்பட்டதோடு பிராந்திய விவசாய நடவடிக்கைகளும் பாதிக்கப்பட்டன. இப்பிரச்சினையிலிருந்து விடுபடுவதற்காக இந்தியா இலங்கைக்கு உதவ முன்வந்தது. இந்தியா இலங்கையில் விவசாயப் பருவகாலமாக இருக்கின்ற படியினாலே 55 மில்லியன் டொலர் பெறுமதியான 65,000 மெற்றிக் தொன் யூரியாவை வழங்கமுடியும் எனக் கூறியது.

உண்மையில் இலங்கையின் உற்பத்தித்துறையின் செயலாற்றத்தை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வீதமாக எடுத்து நோக்கினால் விவசாயத்துறை 7.4 வீதமாகவும், கைத்தொழில்துறை 27.4 வீதமாகவும், சேவைத்துறை 54.8 வீதமாகவும் காணப்படுகின்றது. எனவே இலங்கை, முக்கிய உற்பத்தித்துறையான விவசாயத்துறையின் முன்னேற்றத்திற்காக வெளிநாட்டிலிருந்து யூரியா போன்ற சேதன வளமாக்கிகளை அதிகமாக இறக்குமதி செய்யவேண்டியேற்படுகிறது. இதற்காக ஏனைய உலகநாடுகளிடம் கடன்கோரும்போது அது நாட்டை மேலும் நெருக்கடிக்குள்ளாக்கும். அந்தவகையில் இலங்கை 2021இற்கு முன்னர் மொத்தக் கடனில் 2 வீதத்தை இந்தியாவிடமிருந்தும், உலகவங்கியிடமிருந்து 9 வீதமும், ஜப்பானிடம் 10 வீதமும், ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து 13 வீதமும், சீனாவிடமிருந்து 10 வீதமும் பெற்றுக்கொண்டது. இது தவிர உள்நாட்டு சந்தைகளிலே பெற்ற கடன் 47 சதவீதமாகவும் ஏனையவை 9 வீதமாகவும் காணப்படுகின்றது. இலங்கை கடன்பெறாத நாடுகளே கிடையாது என்று சொல்லுமளவிற்கு எல்லா நாடுகளிடமிருந்தும் இலங்கை கடன்பெற்று விட்டது. இது இலங்கையை பாரிய கடன் சுமைக்குள் தள்ளியுள்ளது.

மேலும், இலங்கை இறக்குமதிச் செலவீனத்தில் பெரும்பங்கினை (20 சதவீதம்) எரிபொருள் இறக்குமதிக்காக மாத்திரம் செலவிடுகின்றது. இலங்கை உள்ளூர் உற்பத்தியை அதிகரிக்கத் தேவையான உள்ளீடுகளுக்காக வெளிநாட்டு நாணயத்தினைச் செலவிடாமல் நுகர்வுப் பொருட்களுக்காகத் தொடர்ந்தும் பெருமளவான பணத்தினைச் செலவிட்டுவருகின்றது. இதிலிருந்து எவ்வாறு தப்பிவருவதென்பது இலங்கைக்கு இன்னும் பிரச்சினையாகவுள்ளது. இதற்கு மத்தியில் இலங்கையில் பணவீக்கம் 50 வீதத்தைக்கடந்து உயர்ந்துகொண்டு செல்லுவதால் மெய்வட்டிவீதம் (பணவட்டி வீதம் - பணவீக்க வீதம்) குறைவடைந்து கொண்டுசெல்கின்றது. அதாவது சாதாரண மக்கள் தங்கள் பணத்தை வங்கியிலிட்டு வட்டி வருமானத்தை உழைக்க

எண்ணினால் வட்டி வருமானத்தை விட வருமான இழப்பே அதிகமாகக் காணப்படும். இலங்கையில் உண்மையான பணவீக்கம் 132 வீதமாகக் காணப்படுகின்றது எனப் பேராசிரியர் ஸ்டீல் பான்கே தனது மதிப்பீட்டில் கூறியுள்ளார். இலங்கையில் மின்சாரத்தின் விலையானது 53.5 வீதத்தினாலும் எரிவாயுவின் விலை 95.5 சதவீதத்தினாலும் உயர்ந்திருக்கின்றது. இது இலங்கையில் பணவீக்கம் உயர்ந்த நிலையில் இருப்பதைக் காட்டுகின்றது. உலக வங்கி 160 மில்லியன் டொலரினைப் பெற்றோல் கொள்வனவிற்காகத் தரவேண்டுமென இலங்கையானது கடன் கேட்டுக்கொண்டிருக்கின்றது. இது எந்தளவிற்குச் சாத்தியமென்பது பாரிய கேள்விக்குறியாகவுள்ளது. மேலும் 1992களிலே 18.4 வீதமாகக் காணப்பட்ட இலங்கை அரசாங்கத்தின் வருவாயும் தற்போது 8.4 வீதமாகப் பாரிய அளவினால் குறைந்திருக்கின்றது. அரச வருமானத்தைக் காட்டிலும் அரசாங்கத்தின் செலவுகள் இரு மடங்காகக் காணப்படுகின்றது. இதனால் இலங்கையின் பாதீட்டுப் பற்றாக்குறையானது தொடர்ந்தும் விரிவடைந்துகொண்டு செல்லுகின்றது. எனவே இலங்கையானது எல்லாவகையிலும் பாரிய நெருக்கடிக்குள்ளேதான் காணப்படுகின்றது.

இவ்வாறான தேசிய பிரச்சினைகளின் மத்தியில் இலங்கையில் பிராந்திய அபிவிருத்தியை எவ்வாறு ஒரு பேண்தகு நிலைக்குக் கொண்டுசெல்லுவது என்பது சிக்கலான விடயமாகும். பிராந்தியம் என்பது உலகத்தின் ஒரு பகுதியையோ அல்லது நாட்டின் ஒரு பகுதியையோ குறித்து நிற்கின்றது. நாட்டின் ஒரு பகுதியென்றால் அது நாட்டின் ஒரு மாவட்டத்தையோ மாகாணத்தையோ அல்லது ஒரு பிரதேசத்தையோ குறித்துநிற்கலாம். இலங்கையில் பிராந்திய அபிவிருத்தி எனப் பார்க்கின்றபோது வட கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்திக்கு கூடுதல் முக்கியத்துவம் வழங்குவோம். இலங்கையின் மேல் மாகாணத்தை எடுத்துக்கொண்டால் தொழிற்துறை அதிகரித்த ஒரு பிரதேசமாக இருக்கின்றதாலே மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 45 சதவீதத்தைப் பங்களிப்புச்செய்கின்ற ஒரு பிரதேசமாகக் காணப்படுகின்றது. நாட்டில் நிலவுகின்ற எரிபொருள் பிரச்சினையால் அங்கும் உற்பத்திகள் குறைக்கப்பட்டோ நிரந்திரமாக அல்லது தற்காலிகமாக உற்பத்திகள் நிறுத்தப்பட்டோ தடைசெய்யப்பட்டோ இருக்கின்றது.

அதேபோல தமிழ் மக்கள் அதிகம் செறிந்து வாழுகின்ற வடக்கு மற்றும் கிழக்குப் பிரதேசங்களை எடுத்து நோக்கினால் அவை பிராந்திய அபிவிருத்தியிலும் தொழிற்துறைகளின் அபிவிருத்தியிலும் பின்னடைவான நிலையிலுள்ளன. இலங்கையில் உள்நாட்டு யுத்தத்தினால் அதிகம் பாதிக்கப்பட்ட வட கிழக்கு மாகாணங்களில் யுத்த காலத்தில் மூடப்பட்ட பெரும்பாலான தொழிற்சாலைகள் இன்னும் திறக்கப்படவில்லை. இதற்கு வாழைச்சேனை கடதாசித் தொழிற்சாலை, பரந்தன் இரசாயணத் தொழிற்சாலை, ஆனையிறவு உப்பளம் மற்றும் காங்கேசன்துறை சீமேந்துத் தொழிற்சாலை போன்றவற்றை

உதாரணமாகக் குறிப்பிடலாம். இவ்வாறு யுத்தகாலத்தில் மூடப்பட்ட இத்தொழிற்சாலைகள் பல தற்போதும் இராணுவ முகாங்களாகவே காணப்படுகின்றன. மேலும் கடற்றொழில் மற்றும் கடல்வலய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கடல் வளங்களைச் சரியாகப் பயன்படுத்தக்கூடிய வாய்ப்பு கிடைக்கவில்லை. கடலட்டைகளைப் பிடிப்பதாக இருந்தாலும்சரி கடல்வளத்தைப் பங்கிடுவதாக இருந்தாலும்சரி இலங்கையில் வட கிழக்குப் பகுதியிலுள்ள ஈழத் தமிழ் மக்கள் மிகப் பாதிப்பிற்குள்ளாகியுள்ளனர்.

வட கிழக்குப் பகுதிகளில் நிலம் தான் முக்கியமான உள்ளீடாகக் காணப்படுகின்றது. நிலத்தை முழுமையாகப் பயன்படுத்தி பேண்தகு அபிவிருத்தியை நிலைத்து வைத்திருக்க முடியுமா? என்று கேட்டால் அதுவும் இங்கு பிரச்சினைக்குரிய விடயமாகத்தான் பார்க்கப்படுகின்றது. 1938ஆம் ஆண்டு D.S.சேனாநாயக்க அவர்கள் இலங்கையின் பொருளாதார வாய்ப்புக்கள் எனும் தலைப்பில் எழுதிய புத்தகம் ஒன்றில் இலங்கையை ஆண்ட சிங்கள மன்னர்களினால் இலங்கையின் வடகிழக்குப் பகுதிகளிலுள்ள நிலமென்பது நீர்பாசன கலாச்சாரப் பூமியாகப் பார்க்கப்பட்டது. அக்காலத்தில் தென்னிந்திய அரசர்களின் படையெடுப்பினால் அது நிர்மூலமாக்கப்பட்டு பின்தள்ளப்பட்டிருந்தது. எனவே அவற்றை மீளக் கட்டியெழுப்பவேண்டும் என்ற போர்வையிலே D.S.சேனாநாயக்க அவர்களினால் குடியேற்றத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. அந்தவகையில் முதலிலே கல்லோயா நீர்பாசனத்திட்டம் இவரால் நிறுவப்பட்டது. அதனைத்தொடந்து திருகோணமலையில் கந்தளாய் நீர்ப்பாசனத்திட்டத்தையும் வடக்கில் இரணைமடு நீர்பாசனத்திட்டத்தையும் அறிமுகப்படுத்தினார்கள். இவ்வாறு நிலத்தை மையமாக வைத்து நீர்பாசனத் திட்டங்கள் உருவாக்கப்பட்டாலும் அவ் நிலத்தை வாழ்வாதாரமாகக்கொண்டு வாழ்ந்துவந்த மக்கள் அதனால் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். அந்தவகையில் குறிப்பாக கல்லோயாத் திட்டத்திற்காக அங்கு பாரம்பரியமாக வசித்துவந்த மக்கள் விரட்டியடிக்கப்பட்டார்கள்.

இது தவிர தற்போது தொல்பொருள் சான்றுக்காகவும் இராணுவ விஸ்தரிப்பிற்காகவும் மற்றும் காட்டுவாழ் விலங்குகளின் பாதுகாப்பு என்ற அடிப்படையிலும் நிலம் அதிகளவு பறிக்கப்பட்டிருக்கின்றது. இவ்வாறு அரசாங்கத்தால் பல்வேறு காரணங்களுக்காக நிலம் பறிக்கப்படும்போது அப்பிரதேசங்களில் வாழ்கின்ற மக்கள் தமது சொந்த நிலங்களில் விவசாயம் செய்யமுடியாத நிலை உருவாகியுள்ளது. மகாவலித்திட்டம் கூட உற்பத்தி சார்ந்த பாரிய நீர்ப்பாசனத் திட்டமாக அறிமுகப்படுத்தப்பட்டாலும் வடகிழக்கில் பெரும்பான்மையாக வசிக்கின்ற தமிழ் மக்களுக்கு நிலம் பங்கிடப்பட்டதா என்றால் இல்லையெனலாம். முல்லைத்தீவு நகரம் வரை மகாவலித்திட்டத்தினது எல்லை விஸ்தரித்துக்கொண்டு போனாலும் அங்கே விகிதாசார அடிப்படையில் தமிழ் மக்களுக்கு நிலமானது பங்கிடப்படவில்லை. அவ்வாறான

நிலையில் அப்பிரதேசங்களில் விவசாயத்தினூடாக எவ்வாறு பேண்தகு அபிவிருத்தியை ஏற்படுத்த முடியுமென்பது மிகப்பெரிய கேள்விக்குறியாகவுள்ளது.

நாம் எவ்வளவுதான் வினைத்திறனாகச் செயற்பட்டு நிலத்தைப் பயன்படுத்த முனைந்தாலும் அரசினது தவறான நிலப் பங்கீட்டு முறையும் தேவையற்ற அரசியல் தலையீடுகளும் இப்பேண்தகு அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்குத் தடையாகவுள்ளன. மறுபுறம் பொருளாதாரரீதியான பிரச்சினைகளும் பேண்தகு அபிவிருத்தியை ஏற்படுத்தத் தடையாகவுள்ளது. பொருளாதார நெருக்கடியான காலங்களில் எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் தொடர்ச்சியான மின்வெட்டுக்களால் பொருட்களின் உற்பத்தியை சரியானமுறையில் மேற்கொள்ளவும் அவற்றை வேறு இடங்களுக்குக் கொண்டுசென்று சந்தைப்படுத்தவும் முடியாமல் போனது. அதாவது உற்பத்தியை மேற்கொண்டு அவற்றைச் சந்தைப்படுத்துவதற்கு போக்குவரத்து வசதி அவசியம். இப்போக்குவரத்தினை மேற்கொள்வதற்கு அவசியமான எரிபொருள் தட்டுப்பாட்டால் உற்பத்திகள் முடங்கின. இவ்வாறான ஒரு சூழ்நிலையில் நாட்டில் பேண்தகு அபிவிருத்தியை ஏற்புடுத்துவதென்பது சவாலான ஒரு விடயமாகும். மேலும் நாட்டில் பொருளாதாரப் பிரச்சினைகளால் உள்ளீடுகள் மற்றும் பொருட்களுக்குக் காணப்படும் தட்டுப்பாட்டால் பொருட்களின் விலையும் அதிகரித்துக் கொண்டு சென்று பணவீக்கமானது ஏற்படுகின்றது. அவ்வாறு பணவீக்கம் அதிகரித்துக்கொண்டு செல்லும்போது பொருளாதாரத்தில் மக்களிடையே சேமிப்புக் குறைந்து அதனால் முதலீடுகள் குறைவடைந்து உற்பத்தியானது பாதிக்கப்படும். இது இறுதியில் பேண்தகு அபிவிருத்தியைப் பாதிக்கும்.

மேலும் பொருளாதாரப் பிரச்சினைகளில் வறுமையும் முக்கியமான ஒன்றாகும். இலங்கையில் வறுமை கூடிய மாவட்டங்களாக மட்டக்களப்பும் முல்லைத்தீவும் விளங்குகின்றன. உண்மையில் வறுமைக்கு என்ன காரணம், வறுமையிலிருந்து எவ்வாறு தப்புவது எனப் பார்த்தால் உண்மையில் வறுமை வீதமானது வடமாகாணத்தில் 10.9 வீதமாகவும் கிழக்கு மகாணத்தில் 11 வீதமாகவும் காணப்படுகின்றது. ஆனால் முழு இலங்கைக்குமான வறுமை வீதம் 6.7 வீதம் மாத்திரமேயாகும். மாவட்டரீதியாக வறுமையினை நோக்கும்போது யாழ்ப்பாணத்தில் 8.3 வீதமாகவும், மன்னாரில் 20.1 வீதமாகவும், வவுனியாவில் 20.4 வீதமாகவும், முல்லைத்தீவில் 28.8 வீதமாகவும் மற்றும் கிளிநொச்சியில் 12.7 வீதமாகவும் நிலவுகின்றது. மேலும் கிழக்கு மகாணத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் மாத்திரம் வறுமையானது 19.4 வீதமாகவும், திருகோணமலை மாட்டத்தில் 9 வீதமாகவும் மற்றும் அம்பாறையில் 5.4 வீதமாகவும் உள்ளன என்பதனைப் புள்ளிவிபரங்கள் காட்டுகின்றன. மேலும் வறிய வீட்டுத்துறையினர் என்ற அடிப்படையில் பார்த்தாலும்

வடமாகாணம் 8.8 வீதமாகவும், கிழக்கு மாகாணம் 8 வீதமாகவும் வறிய வீட்டுத்துறையினரைக் கொண்டுள்ளன எனக் கணிப்பிடப்பட்டுள்ளன.

மேலும் உற்பத்தித் தூண்டுதல் என்ற அடிப்படையில் பார்க்கும்போது வறிய மக்களின் வாழ்வாதாரத்திற்கான உந்துதலாக வழங்கப்பட்ட நுண்கடன்களால் வறிய மக்கள் பாதிக்கப்பட்டனர். அதிலும் குறிப்பாக வடகிழக்குப் பகுதியிலுள்ள மக்கள் நுண்கடனால் வெகுவாகப் பாதிக்கப்பட்டார்கள். மூன்று தசாப்தகால உள்நாட்டு யுத்தத்தினால் இவர்களினுடைய சேமிப்புக்கள் அனைத்தும் நுகர்வுக்காக கரைந்து போனதால் இவர்கள் அதிகம் நுண்கடன்களைப் பெற்றுக்கொண்டனர். நுண்கடன்களுக்கு அதிக வட்டியானது அறவிடப்படுகின்றபடியினால் அதிக வட்டியையும், கடன்தொகையையும் செலுத்தமுடியாமல் போனது. இதனால் வடகிழக்கு மக்கள் அதிகம் பாதிக்கப்பட்டனர். மேலும் அரசினுடைய நிலத்தைப் பகிரும் உரிமையும் மாகாணங்களுக்கு இன்றுவரை வழங்கப்படவில்லை. அதாவது 1987ஆம் ஆண்டு மாகாணசபை உருவாக்கப்பட்ட போது நிலப்பகிர்வு நிலப்பயன்பாடு மாகாணசபைகளுக்கு இருக்கும் எனச் சொல்லப்பட்டாலும் இன்னும் அதற்கு அரசு அனுமதியளிக்கவேயில்லை. ஆகவே விவசாயத்திலும் சரி கைத்தொழிலிலும் சரி எங்களால் மீண்டுவர முடியவில்லை. ஆதலால் உற்பத்தி, முதலீடுகள், வேலைவாய்ப்பு மற்றும் வருமானம் ஆகியன பறிபோயின. இதனால் வடகிழக்குப் பிரதேசங்கள் அபிவிருத்தியை நோக்கினாலும் கையறு நிலையில்தான் இருக்கின்றோம்.

ஆகவே வடகிழக்குப் பிரதேசங்கள் மேற்படிப் பிரச்சினையிலிருந்து மீளெழவேண்டுமானால் எமக்கு அதிகளவு மெய்வருமானத்தை ஈட்டித் தரக்கூடிய கிராமிய விவசாயத்திற்குச் செல்ல வேண்டும். இப்பகுதியிலுள்ள சிறு சிறு நிலங்களில் மரக்கறி உற்பத்திகள் மற்றும் உப உணவு உற்பத்திகளை ஊக்குவிக்க வேண்டும். மேலும் போசாக்கான சுகாதாரமான உணவுகளை ஊக்குவிப்பதனூடாக உணவுப்பாதுகாப்பினையும் இப்பிரதேசங்களில் உறுதிசெய்ய வேண்டும். அரசாங்கத்தால் தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையின் மத்தியில் உணவு விநியோகத்தை சரியான முறையில் மேற்கொள்ள முடியாததால் பட்டினிச் சாவினை எதிர்நோக்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு நாடு தள்ளப்பட்டுள்ளது. எனவே வீட்டுத்தோட்டங்கள், கால்நடை வளர்ப்பு போன்றவற்றிற்கு மக்கள் ஊக்குவிக்கப்பட வேண்டும். இலங்கையின் வடகிழக்குப் பகுதிகள் யுத்தகாலத்திலும் அதன் பின்னரும் அரசாங்கத்தினால் சூறையாடப்படாமல் இருந்திருந்தால் விவசாயத்தாலும் கடல் வளத்தாலும் இப்பகுதிகள் செல்வம் கொளிக்கும் பகுதிகளாக இருந்திருக்கும். வடகிழக்குப் பகுதியிலுள்ள மக்களுக்கு அவர்களுக்கான நிலவுரிமையை சரியான முறையில் வழங்கினால் அப்பகுதி மக்கள் சுதந்திரமாகவும் சுயாதீனமாகவும் நிலங்களை பயன்படுத்தி பொருளாதாரரீதியாக அதிக வருவாயை உழைத்திருக்க முடியும்.

எனவே பிரதேச அபிவிருத்தியை பேண்தகு அபிவிருத்திக்கு ஏற்றவாறு திட்டமிடவேண்டும். இதற்காக நிழல் பொருளாதாரத் திட்டமிடலொன்றை மேற்கொள்ள வேண்டும். இதற்காகவேண்டி இப்பகுதிகளிலிருந்து புலம்பெயர்ந்துசென்ற மக்களின் உதவியைப் பெற்று இப்பிரதேசங்களின் அபிவிருத்திக்காக முதலீடுகளை மேற்கொள்ளலாம். பெறுமதிசேர் உற்பத்திகள் மற்றும் தொழிற்துறை உருவாக்கத்திற்காகவும் விவசாய மற்றும் மீன்பிடித்துறையை நவீனப்படுத்துவதற்காகவும் இவர்களை முதலீடுசெய்யத் தூண்டவேண்டும். மேலும் தேசிய அரசின் பிராந்திய அபிவிருத்தியானது தேசிய அபிவிருத்தியாக மாறும் என்பதை உணர்ந்து பிராந்திய ரீதியான தொழிற்துறை அபிவிருத்திக்கு துணைநின்றால் நல்ல வருமானத்தையும் மற்றும் வேலைவாய்ப்பு உருவாக்கத்தையும் மக்கள் பெறமுடியும். அதனூடாக மக்களின் சேமிப்பை பெருக்கி முதலீட்டு வருமானங்களைப் பெருக்கி தொடர்ந்தும் அபிவிருத்தியை மேற்கொள்ள முடியுமெனலாம்.

அத்தியாயம் 07

## தற்போதைய பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள இலங்கைக்கு சர்வதேச நாணய நிதியம் உதவுமா?

## Will the IMF Help Sri Lanka Bailout from the Current Economic Crisis?

**Dr. S. Jeyarajah,**
Senior Lecturer,
Department of Economics,
Faculty of Commerce and Management,
Eastern University, Sri Lanka.

(29.06.2022 அன்று நடைபெற்ற நிகழ்நிலைக் கருத்தரங்கின் தொகுப்பு)

### அறிமுகம்

இலங்கைப் பொருளாதாரம் என்றுமில்லாதளவு பாரியதொரு பொருளாதார நெருக்கடி நிலையினை தற்பொழுது அனுபவித்து வருகிறது. சர்வதேச கடன்களை மீளச் செலுத்த முடியாதளவிற்கு அந்நியச் செலாவணி பற்றாக்குறையினை இலங்கை எதிர்கொண்டுள்ளது. இவ்வருடத்தில் மட்டும் இலங்கை திருப்பிச் செலுத்த வேண்டிய தொகை 4 பில்லியன் அமெரிக்க டொலர்களாகும். தற்போதைய கடன்களை திருப்பிச் செலுத்துவதை இலங்கை தற்காலிகமாக இடை நிறுத்தியுள்ளது. இலங்கையினைப் பொறுத்தமட்டில் கடந்த 2017 மற்றும் 2018ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் நாட்டின் வெளிநாட்டு நாணய இருப்பு உயர்ந்த நிலையில் காணப்பட்டது. எனினும் பிற்பட்ட காலத்தில் அதாவது 2019ஆம் ஆண்டின் பின்னர் மொத்த வெளிநாட்டு இருப்பில் பின்னடைவு நிலை ஏற்பட்டு 2022ஆம் ஆண்டில் மிகவும் பாரியதொரு பின்னடைவினை இலங்கைப் பொருளாதாரம் சந்தித்துள்ளது. இலங்கையின் நிதி மற்றும் கடன் நிலைத்தன்மையினை மீட்டெடுப்பதற்கு வருவாய் அடிப்படையிலான நிதி ஒருங்கிணைப்பு அவசியம் என்று சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் கிஸ்டலினா ஜோர்ஜீவா கருத்துக் கூறியிருந்தார். இந்நிலையில், இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள இலங்கைக்கு சர்வதேச நாணய நிதியம் உதவுமா? என்பது தொடர்பான கருத்துப்பரிமாறல்கள் முக்கியத்துவம் பெற்று வருகின்றன.

### இலங்கையின் பொருளாதாரப் பின்னடைவு

கொவிட்-19 வைரஸ் தொற்று நோய் உலகப் பொருளாதாரத்தில் அதிர்ச்சியலைகளை ஏற்படுதியது மட்டுமல்லாமல் உலகில் மிகப் பெரிய பொருளாதார நெருக்கடியினையும் ஏற்படுத்தியது. இந் நெருக்கடி நிலை காரணமாக உலகின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 3.4 சதவீதம்

வீழ்ச்சியடைந்துள்ளது. இலங்கை மக்களும் இப் பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளோம். பொதுவாக இவ்வாறானதொரு பின்னடைவிற்கு நாடு எதிர்நோக்கிய கொவிட்-19 வைரஸ் தாக்கத்தினை இலங்கை அரசு காரணங்காட்டியிருக்கின்றது. ஆனால் ஆசிய பிராந்தியத்தின் ஏனைய நாடுகளில் இந்நிலைமையினை ஒப்பிட்டுப் பார்க்கும் போது அந்நாடுகளின் பொருளாதாரத்தில் இவ்வாறானதொரு பாரிய பின்னடைவு காணப்படவில்லை. உதாரணமாக பங்காளதேஷ், பாகிஸ்தான், இந்தியா, பூட்டான், இந்தோனேசியா போன்ற நாடுகளின் வெளிநாட்டு இருப்பில் இலங்கை போன்றதொரு மோசமான தாக்கம் இடம்பெற்றிருக்கவில்லை. அந்நாடுகள் இப்பெருந்தொற்றினை சிறந்த முறையில் எதிர்கொண்டு மீட்சி பெற்றுவிட்டன. ஆனால் இலங்கையினைப் பொறுத்தமட்டில் வெளிநாட்டுச் சொத்துக்களில் மிக மோசமான குறைவு ஏற்பட்டதால் நாட்டிற்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களின் இறக்குமதிகளைக் கூட மேற்கொள்ள முடியாத அளவிற்கு பாரிய பொருளாதார நெருக்கடியினை இலங்கைப் பொருளாதாரம் சந்தித்துள்ளது.

இலங்கையினைப் பொறுத்தமட்டில் 2019ஆம் ஆண்டிற்கு முன்னரான தரவுகளை உற்று நோக்கினால் நாட்டின் ஏற்றுமதி இறக்குமதியில் ஒரு பாரிய இடைவெளி காணப்படுவது புலனாகின்றது. இலங்கை தனது பொருளாதாரத்தினை சரியானதொரு திட்டமிடலுடன் ஏற்றுமதிகளை முன்னகர்த்திச் செல்லவில்லை என்பதனையே இது காட்டுகின்றது. ஆசிய அபிவிருத்தி வங்கி இலங்கையினை இரட்டைப் பற்றாக்குறைப் பொருளாதாரம் (Twins deficit economy) எனக் குறிப்பிட்டிருந்தது. ஆனால் அந்தக் காலப்பகுததியில் இக்கருத்தினை நாட்டு அரசாங்கம் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. இலங்கை தனது ஏற்றுமதி, இறக்குமதி இடைவெளியினைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்கவில்லை. இலங்கை ஏற்றுமதி செய்யும் அளவினை விட சுமார் 03 பில்லியனுக்கு மேற்பட்ட தொகைக்கு இறக்குமதியினை மேற்கொண்டு வந்திருந்தது. இவ்வாறான பொருத்தமற்ற அல்லது வினைத்திறனற்ற பொருளாதார கொள்கைகளுடன் நாடு எதிர்கொண்ட கொவிட்-19 தாக்கமும் பொருளாதார பின்னடைவிற்கு அடித்தளமிட்டது என்பதனை நாம் மறுக்க முடியாது.

இன்றைய நிலையில் இலங்கையானது உலக நாடுகள் பலவற்றில் குறிப்பாக சீனா, இந்தியா, பங்காளதேஷ் போன்றவற்றில் கடன்படும் நிலையில் காணப்படுகின்றது. இதேபோல் தற்பொழுது அனைவரால் பேசப்படும் ஒரு விடயம், இலங்கையில் ஏற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடியினை எதிர்கொள்ள சர்வதேச நாணய நிதியத்தினை நாடி, அதன் உதவிகளைப் பெற்று உடனடியாக இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வினை எட்டிவிடலாம் எனும் கருத்தும் பரவலாக இருந்து வருகின்றது. ஆனால் சர்வதேச நாணய நிதியத்தின் உதவி அல்லது ஒத்துழைப்புகளை அவ்வளவு எளிதாக இலங்கையினால் பெற்றுவிட முடியாது என்பதே உண்மை நிலையாகும்.

## சர்வதேச நாணய நிதியமும் இலங்கையும்

இன்று இலங்கையின் மிக முக்கிய பேசுபொருளாக காணப்படும் விடயம் சர்வதேச நாணய நிதியத்திடம் நிதியுதவியினைப் பெறுதல் பற்றியதாகும். சர்வதேச நாணய நிதியம் பற்றி குறிப்பிடுவதானால், சர்வதேச நாணய நிதியம் (IMF) என்பது ஒரு பலதரப்பு நிதி நிறுவனமாகும். இது 1944ஆம் ஆண்டில் பிரிட்டன்வூட்ஸ் உடன்படிக்கையினூடாக 1945ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட நிறுவனமாகும். இது நாடுகளுக்கிடையில் பொருளாதார மற்றும் நிதி உறுதிப்பாட்டினைப் பேணல், சர்வதேச வர்த்தகத்தை ஊக்குவித்து வறுமை மற்றும் வேலையின்மையினை இல்லாதொழித்தல் போன்ற அடிப்படை நோக்கங்களுடன் தனது பணியினை மேற்கொண்டு வருகின்றது. சர்வதேச நாணய நிதியம் உலக வங்கியிலிருந்து வேறுபட்டதொரு நிறுவனமாகும். அபிவிருத்தி வங்கிகளைப் போலன்றி, IMF குறிப்பிட்ட திட்டங்களுக்கு கடன் வழங்குவதில்லை. மாறாக, பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் வளர்ச்சியை மீட்டெடுக்கும் கொள்கைகளை செயற்படுத்தும்போது, நெருக்கடிகளால் பாதிக்கப்பட்ட நாடுகளை மீட்டெடுக்க IMF நிதி உதவி வழங்குகிறது. இது நெருக்கடிகளைத் தடுக்க உதவும் முன்னெச்சரிக்கை நிதியுதவியையும் வழங்குகிறது. IMF தேசிய பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் சர்வதேச நாணய மற்றும் நிதி முறைமைகள் தொடர்பான ஒரு மன்றமாகவும் உள்ளது. அத்துடன் சர்வதேச ரீதியாக பொருளாதார நிலைமைகளை நிர்வகிக்கக் கூடிய ஒரு நிர்வாக அலகாகவும் தொழிற்படுகின்றது. அதாவது நாடுகளின் நிதி அமைப்பினை ஒழுங்குபடுத்தி நிர்வகிப்பது இதன் பிரதான நோக்கங்களில் ஒன்றாகும்.

சர்வதேச நாணய நிதியத்தின் தொழிற்பாடுகளை பொதுவாக மூன்று பிரிவுகளுக்குள் உள்ளடக்கலாம். முதலாவது விடயம் கண்காணிப்பு நடவடிக்கைகள் ஆகும். அதாவது ஒரு மருத்துவர் போல நாடுகள் தொடர்பான தரவுகளைச் சேகரித்தல், ஆய்வு செய்தல் மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் தொடர்பாக மதிப்பீடு செய்தல் ஆகியவற்றை மேற்கொள்கின்றது. இரண்டாாவதாக நாடுகளுக்கான தொழில்நுட்ப உதவிகளை வழங்குகின்றது. அதாவது ஒரு ஆசிரியர் போல மனித திறன்களை விருத்தி செய்வதற்கும் நிர்வாகத்திறனை மேம்படுத்துவதற்குமாக தொழில்நுட்ப உதவிகளை வழங்குகின்றது. உதாரணமாக பணவியல் மற்றும் மேலாண்மை புள்ளிவிபரங்கள் மற்றும் நிதிக் கொள்கைகள், நிதிச்சட்டம் போன்றன தொடர்பான பல ஒத்துழைப்புக்களை அங்கத்துவ நாடுகளுக்கு வழங்குகின்றது. மூன்றாவதாக நிதி உதவிகளை வழங்குகின்றது. அதாவது சர்வதேச நாணய நிதியம் குறிப்பிடுகின்ற அல்லது ஏற்றுக் கொள்கின்ற பொருளாதார சீர்திருத்தங்களை மேற்கொள்ள உடன்படுகின்ற உறுப்பு நாடுகளுக்கு நிதி உதவிகளை வழங்குகின்றது. சர்வதேச நாணய நிதியத்தின் நிதி உதவியினைப் பெறுவது தொடர்பாக ஒரு செயன்முறை

இருக்கின்றது. அதனை பூர்த்தி செய்யும் பட்சத்திலேதான் நிதி உதவியினைப் பெற்றுக் கொள்ள முடியும்.

அந்தவகையில் நிதி உதவி தேவைப்படும் நாடு முதலில் அதற்கான கோரிக்கையினை முன்வைக்க வேண்டும். பின்னர் சர்வதேச நாணய நிதியத்தின் குழு ஒன்று கோரிக்கையினை முன்வைத்த நாட்டுடன் ஒரு கலந்துரையாடலினை மேற்கொள்ளும். இதன் போது அந்நாட்டினுடைய பொருளாதார ஸ்திரத்தன்மை, கடனை மீளச் செலுத்துவதற்கான இயலுமை மற்றும் பொருளாதார சிக்கலினுடைய தீவிரநிலை போன்ற பல்வேறு விடயங்களை ஆய்வு செய்து பின்னர் கடனை மீளச் செலுத்தக் கூடிய இயலுமையினைக் கொண்ட பொருளாதாரக் கொள்ளைகள், திட்டங்கள் குறித்து உதவி பெறும் நாட்டுடன் கலந்துரையாடப்படும். சர்வதேச நாணய நிதியத்தினால் முன்மொழியப்படும் திட்டங்களை நடைமுறைப்படுத்த கடன் பெறும் நாடு உடன்படும் பட்சத்தில் அச்செயற்பாடு அடுத்த கட்டத்திற்கு நகர்தப்படும். அதாவது நிதிவழங்கும் நிர்வாக அமைப்பிற்கு பரிந்துரை செய்யப்படும். அதன் பின்னரே கடனைப் பெறுவதற்கான சாத்தியங்கள் காணப்படும். இலங்கையினைப் பொறுத்த மட்டில் தற்பொழுது முதலாவது கட்டித்தினை நிறைவு செய்திருக்கின்றது எனலாம்.

இலங்கை IMFஇல் 1950இல் அமைப்பின் 50வது உறுப்பினராக இணைந்தது. அன்றிலிருந்து இலங்கை 16 IMF கடன்களைப் பெற்றுள்ளது. 19 ஜுன் 2016இல் தொடங்கப்பட்ட மிகச் சமீபத்திய ஏற்பாடு உட்பட IMF 2009இல் தொடங்கப்பட்ட SBAதான் மிகப்பெரிய கடனாகும், இது USD 2.5 பில்லியனுக்கும் அதிகமாக இருந்தது. 2016ஆம் ஆண்டிற்கு முன்னர் பெறப்பட்ட 15 கடன் ஏற்பாடுகளில், கடன் நிபந்தனைகளுக்கு இலங்கை முழுமையாக இணங்காததால், ஆரம்பத்தில் ஒப்புக்கொள்ளப்பட்ட முழுத் தொகையும் ஆறு முறை வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். மத்திய வங்கி உட்பட இலங்கை அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து பல தொழில்நுட்ப உதவிப் பணிகளைப் பெற்றுள்ளது. இவை வரி நிர்வாகம், பேரினப் பொருளாதார முன்கணிப்பு, புதிய வருமான வரி சட்டத்தின் வரைவு, நிதித்துறை விதிமுறைகள் மற்றும் தேசிய புள்ளிவிவரங்களை மேம்படுத்துதல் போன்ற பகுதிகளை உள்ளடக்கியதாகும்.

இலங்கையில் கடந்த காலங்களில் ஏற்பட்ட பொருளாதார ஸ்திரமற்ற தன்மைகளைக் காரணங்காட்டி பொருளாதார வல்லுனர்கள் மற்றும் அரசியல் பிரமுகர்கள் என பலரும் அரசாங்கத்திற்கு சர்வதேச நாணய நிதியத்திடம் செல்லவேண்டியதன் அவசியம் குறித்து தமது நிலைப்பாடுகளை தெரிவித்த போதிலும் அரசாங்கம் அதில் சிரத்தை காட்டவில்லை. சர்வதேச நாணய நிதியத்தை நாடுவதை தவிர்த்து சர்வதேச கடன் வழங்குனர்களான பிற நாடுகளிடமிருந்து குறிப்பாக சீனா, இந்தியா போன்ற நாடுகளில் கடன்களைப் பெறுவதனை அரசாங்கம்

கைக்கொண்டிருந்தது. பொதுவாக சர்வதேச நாணய நிதியத்திடம் கடன் பெறுவது எதிர்பார்த்தளவு சாதகமான விளைவுகளை தராது என்பதும் பலராலும் முன்வைக்கப்படும் ஒரு கருத்தாக இருந்தது. ஏனெனில், கடந்த காலங்களில் IMFஇடமிருந்து உதவிபெற்ற சில நாடுகள் பொருளாதாரத்தில் எதிர்மறை விளைவுகளைச் சந்தித்திருக்கின்றன. உதாரணமாக 1997களில் ஏற்பட்ட ஆசிய நெருக்கடியின் போது சர்வதேச நாணய நிதியத்திடம் கடன் பெற்ற இந்தோனேசியா, தாய்லாந்து, மலேசியா போன்ற நாடுகளில் பொருளாதாரத்தில் ஒரு எதிர்மறைத் தாக்கம் ஏற்பட்டிருந்தது. அதாவது அந்நாடுகளில் உயர் பணவீக்கம் ஏற்பட்டு வேலையின்மை வீதம் அதிகரித்துக் காணப்பட்டது. இந்நாடுகளின் அனுபவத்தை பார்த்தால் இங்கு சர்வதேச நாணய நிதியத்தின் உதவி எவ்வித சாதகமான மாற்றத்தினையும் ஏற்படுத்தவில்லை எனலாம். குறிப்பாக 2001 காலப்பகுதியில் ஆர்ஜன்டீனாவிற்கு சர்வதேச நாணய நிதியத்தின் உதவி வழங்கப்பட்டிருந்தது அதன் பின்னர் அந்நாட்டின் முதலீட்டு மட்டத்தில் பாரிய வீழ்ச்சி பதிவு செய்யப்பட்டிருந்தது. இதேபோல் 1990 காலப்பகுதியில் கென்யாவில் சர்வதேச நாணய நிதியம் உதவி வழங்கும் போது முதலீட்டு வெளிப்பாய்ச்சலில் உள்ள கட்டுப்பாடுகளை நீக்குமாறு வலியுறுத்தியிருந்தது. இதன் காரணமாக கென்யாவிலிருந்து பல முதலீடுகள் வெளிநாட்டிற்குச் சென்றதால் உள்நாட்டு முதலீடுகள் பெருமளவு பாதிக்கப்பட்டது. அது பொருளாதாரத்தில் பாரிய எதிர்மறைத் தாக்கத்தினை ஏற்படுத்தியிருந்தது.

சர்வதேச நாணய நிதியத்தினுடைய நிதி உதவி வழங்கும் முறைமையினை நாம் பிரதானமாக இரண்டு வகையாக நோக்க முடியும். அதில் முதலாவதாக நிபந்தனைகளற்ற கடன் வழங்கல் ஏற்பாடுகள் (Non - Concessional Lending Arrangements) பற்றி நோக்குவோமாயின், இவற்றில் Stand- By Arrangement (SBA) இத்திட்டமானது ஒரு குறுங்கால திட்டமாகக் காணப்படுகின்றது. இவ் உதவியினைப் பெறும் நாடு ஒரு குறிப்பிட்ட கால இடைவெளிக்குள் அதாவது $3^{1/2}$ - 5 வருடங்களுக்குள் பெறப்பட்ட கடனை மீளச் செலுத்துதல் வேண்டும். External Fund Facility (EFF) இது நீண்ட கால அடிப்படையில் வழங்கப்படுகின்றது. அதாவது $4^{1/2}$ - 10 வருடங்கள் வரை வழங்கப்படுகின்றது. இது சென்மதி நிலுவைப் பிரச்சினை காணப்படும் போது அதனை ஈடு செய்ய வழங்கப்படுகின்றது. இதன் போது கட்டமைப்பு ரீதியான மாற்றங்களைக் கொண்டுவருவதற்கான திட்டங்களை சர்வதேச நாணய நிதியம் கடன் பெறும் நாட்டின் மேல் திணிக்கலாம். அடுத்ததாக Flexible Credit Line (FCL) காணப்படுகின்றது. இதனை வெளிநிலை ரீதியான நிதித் தாக்கங்கள் ஏற்படும் போது பெற்றுக்கொள்ள முடியும். இதுவும் குறுங்காலத்தில் செலுத்த வேண்டிய கடனாகக் காணப்படுகின்றது. Precautionary and Liquidity Line (PLL) வசதியினை சென்மதி நிலுவைப் பிரச்சினை

தீவிரமாக உள்ள போது பெற்றுக் கொள்ளலாம். இதுவும் குறுங்காலத்தில் மீளச் செலுத்த வேண்டிய நிதி உதவியாகக் காணப்படும். காலம் $3^{1/4}$ - 4 வருடங்களாகக் காணப்படும். அடுத்ததாக Rapid Financing Instrument (RFI) காணப்படுகின்றது. இதுவும் ஒரு குறுங்கால நிதி வழங்கலாக உள்ளது. ஒரு அவசரகால உதவியாக, சென்மதி நிலுவைப் பிரச்சினையினை நிவர்த்தி செய்யும் பொருட்டு இவ்வசதி வழங்கப்படும். இதற்கான கால அவகாசமும் $3^{1/4}$ - 4 வருடங்களாகும்.

இரண்டாவது வகை உதவி நிபந்தனைகளுடன் கூடிய நிதி உதவியாகும். இதில் மூன்று வகையான முறையின் கீழ் நிதி ஒத்துழைப்புக்கள் வழங்கப்படுகின்றன. முதலாவதாக Stand-by Credit Facilities (SCF) இது குறுங்கால நிதி உதவியாக வழங்கப்படுகின்றது. மீளச் செலுத்தும் காலம் 4 - 8 வருடங்களாகும். சென்மதி நிலுவைப் பிரச்சினையினை சீர் செய்யவே இவ் உதவி வழங்கப்படுகின்றது. அடுத்து Extended Credit Facility (ECF) காணப்படுகின்றது. இது இடைக்கால நிதி உதவியாக சென்மதி நிலுவைப் பற்றாக்குறையினை ஈடுசெய்ய வழங்கப்படுகின்றது. இதன் கால அளவானது $5^{1/2}$ - 10 வருடங்களாகும். அடுத்ததாக Rapid Credit Facility (RFC) காணப்படுகின்றது. இதன் கால அளவும் $5^{1/2}$ - 10 வருடங்களாகும். இது பெரும்பாலும் குறை வருமானம் கொண்ட நாடுகளின் அவசர சென்மதி நிலுவைப் பிரச்சினைகளை ஈடுசெய்ய வழங்கப்படுகின்றது. எனவே, பெரும்பாலும் சர்வதேச நாணய நிதியமானது உறுப்பு நாடுகளில் பொருளாதார உறுதிப்பாட்டினைப் பேணும் வகையில் ஒத்துழைப்புக்களை வழங்கி வருவதை அவதானிக்க முடியும். குறிப்பாக சென்மதி நிலுவைப் பிச்சினைக்கு மேலாக பொருளாதார அதிர்வுகளின் போதும் சர்வதேச நாணய நிதியம் உதவிகளை வழங்கிவருகின்றமை புலனாகின்றது.

அடுத்து சர்வதேச நாணய நிதியம் தொடர்பான விமர்சனங்களை குறிப்பிடுவதாயின். பெரும்பாலும் சர்வதேச நாணய நிதியத்தின் நிர்வாக ரீதியான அமைப்பு பெரும்பாலும் ஐரோப்பிய, அமெரிக்க பொருளாதாரங்கள் சார்ந்ததாகவும் அவற்றின் கொள்கைகளுக்கு ஆதரவளிக்கக் கூடியதாகவும் உள்ளது. குறிப்பாக ஐரோப்பிய நாடுகளின் கடன்களை சிக்கலின்றி மீளப் பெற்றுக் கொள்ள உதவும் அமைப்பாகவும் இதனை நோக்குகின்றனர். இரண்டாவதாக கடன்வழங்குவதற்கான நிபந்தனைகள் அதாவது சர்வதேச நாணய நிதியத்தினால் முன்வைக்கப்படுகின்ற நிபந்தனைகளை நாடுகள் பின்பற்ற வேண்டும் என்பது இங்கு முக்கிய விடயமாக குறிப்பிடப்படுகின்றது. அந்தவகையில் இலங்கை சர்வதேச நாணய நிதியத்திடம் உதவியினைப் பெற முனையுமானால் இவ்வாறான அழுத்தங்களை இலங்கையும் எதிர்கொள்ள நேரிடும். குறிப்பாக வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையினை மிகவும் இழிநிலையில் பேணுமாறு

அழுத்தம் கொடுக்கப்படலாம். நாணயக் கொள்கையினை மீளமைப்புச் செய்யுமாறு நிபந்தனை விதிக்கப்படலாம். அரசிறையினை அதிகரிக்க கூடிய திட்டங்களை முன்வைப்பதுடன் அரச செலவுகளை குறைப்பதற்கான திட்டங்களை முன்வைக்கலாம். இலங்கையினைப் பொறுத்தவகையில் பல அரச நிறுவனங்கள் நட்டத்தில் இயங்குவதனைக் காணலாம். அதனை தனியார் மயப்படுத்துமாறும் அழுத்தம் கொடுக்கப்படலாம். பொது நிதி முகாவைத்துத்தினை மிகவும் வினைத்திறனாகப் பேணுவதற்கான நிபந்தனைகளை முன்வைக்கலாம். இவற்றுக்கு மேலதிகமாக சர்வதேச வர்த்தகத்தை மேம்படுத்துவதற்கான நிபந்தனைகளை முன்வைக்கலாம். இவ்வாறான நிபந்தனைகள் ஏற்றுக் கொள்ளப்படும் பட்சத்திலேயே இலங்கை நிதி உதவிகளைப் பெறமுடியும். இலங்கையினைப் பொறுத்தவரை சர்வதேச நாணய நிதியத்தின் உதவிகளைப் பெறுவதற்கு மேலும் கால அவகாசம் தேவைப்படுகின்றது என்றே கூறமுடியும்.

இலங்கை தற்பொழுது கோரும் உதவி 17வது உதவியாகும். தற்போதைய இலங்கையின் பொருளாதார நெருக்கடியினை எதிர்கொள்ள சர்வதேச நாணய நிதியத்திடம் செல்ல வேண்டிய ஒரு அவசியம் ஏற்பட்டுள்ளது. குறிப்பாக Emergency Credit Line அவை பகுதியின் கீழ் நிதி உதவியினைப் பெறலாம் என்ற கருத்தினை சில பொருளியலாளர்கள் முன்வைக்கின்றனர். நிதி உதவி இலங்கைக்கு தற்பொழுது ஏன் அவசியம் எனப் பார்த்தால், இலங்கை வெளிநாடுகளில் பெற்ற கடன்களை திருப்பிச் செலுத்த வேண்டும். இலங்கையானது பெருமளவு இறக்குமதிகளில் தங்கியிக்கும் ஒரு நாடு என்றவகையில் இறக்குமதிகளைச் செய்வதற்கும் அந்நியச் செலாவணி தேவைப்படுகின்றது. எனவே இலங்கை சர்வதேச நாணய நிதியத்திடம் கடன்பெற வேண்டும் என்பது ஒரு தவிர்க்க முடியாத நிலையாகிவிட்டது. உண்மையில் மக்கள் இப்பொருளாதார நெருக்கடி தொடர்பாக சரியாக புரிந்து கொள்ள வேண்டும். குறிப்பாக அவசியமான பொருட்களை மாத்திரம் இறக்குமதி செய்தல், மின்சார பாவனையில் மிகவும் சிரத்தையுடன் செயற்படுதல், வெளிநாட்டுப் பண அனுப்புதல்களை ஊக்கிவித்தல் மற்றும் வரி ஏய்ப்பு செய்வதை தவிர்த்து முறையாக வரியினைச் செலுத்துதல் போன்ற விடயங்களில் அரசுக்கு ஆதரவு வழங்குதல் அவசியமானதாகும். அத்துடன் அரசாங்கம் மிகவும் பொருத்தமான தந்திரோபாயத்திட்டங்களை முன்வைக்க வேண்டும் அப்போது மாத்திரமே இலங்கை சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து நிதி உதவிகளைப் பெறக் கூடியதாக இருக்கும்.

## அத்தியாயம் 08

# தற்போதைய பொருளாதார நெருக்கடியினால் இலங்கையின் சுகாதாரத்துறை பாதிக்கப்படுகின்றதா?

# Does Sri Lanka's Health Sector Crumble Under the Current Economic Crisis?

**Dr. K. Arulanandem,**
Senior Lecturer,
Department of Primary Health Care,
Faculty of Health-Care Sciences,
Eastern University, Sri Lanka.

(13.07.2022 அன்று நடைபெற்ற நிகழ்நிலைக் கருத்தரங்கின் தொகுப்பு)

## அறிமுகம்

இலங்கையில் சுகாதாரத்துறை எவ்வாறு காணப்படுகின்றது?, பொருளாதார நெருக்கடியால் அது எவ்வாறு பாதிக்கப்படுகின்றது? இதனால் ஏற்படக்கூடிய பின் விளைவுகள் என்ன? இவற்றை நாங்கள் ஓரளவுக்கு தடுக்க முடியுமா? அல்லது ஒரு பல்கலைக்கழக விரிவுரையாளர்களாக, சமூகநல விரும்பியாக அல்லது ஒரு நிலையத்தின் நிர்வாகியாக இவற்றை எவ்வாறு தீர்க்கலாம்? என்பவை பற்றி இக்கட்டுரை விரிவாக ஆராய்கின்றது.

## சுகாதாரம்

முதலாவதாக சுகாதாரம் என்ற எண்ணக்கரு பற்றி ஆராய்வோமாக இருந்தால், சுகாதாரம் என்பது ஒரு இலகுவான பொருள் அல்ல. உலக சுகாதார ஸ்தாபனமானது, இரண்டாம் உலகமகா யுத்தத்திற்கு பிறகு சுகாதாரம் என்பது "ஒருவர் நோயின்றி இருப்பது மட்டுமல்ல. அவர் பரிபூரணமாக உடலாலும், மனதாலும் சமூக நல்வாழ்வில் நலமாக இருப்பதாகும். எனவே இந்த மூன்று விடயங்களும் ஒன்றுடன் ஒன்று விலகியே இருக்கப் போகின்றன." எனக் குறிப்பிடுகின்றது. இதனை அடைந்து கொள்வதற்காகவே சுகாதார ஸ்தாபனங்களும், அது சார்ந்த நிறுவனங்களும் இயங்கிக்கொண்டிருக்கின்றன. சுகாதாரம் என்கின்ற விடயத்தினை உடல், மனம், சமூகம் மற்றும் ஆன்மீகம் ஆகிய வடிவங்களுக்கு ஊடாக நாங்கள் நோக்க முடியும். சுகாதாரத்தைப் பாதுகாப்பதற்கு எல்லா நிறுவனங்களும் மக்களும் ஒத்துழைக்க வேண்டும்.

## இலங்கையில் சுகாதாரத்துறை

இலங்கையின் சுகாதாரத்துறையினை பொறுத்தவரையில் இரண்டு வகையான பாரிய பொறுப்புவாய்ந்தவர்கள் காணப்படுகின்றனர். ஒன்று

மத்திய சுகாதார அமைச்சு. மற்றையது மாகாண சுகாதார அமைச்சு. இவர்களின் ஊடாகவே சுகாதாரத்துறை நிர்வகிக்கப்படுகின்றது. சுகாதார முறைமையில் அரசதுறை, தனியார்துறை மற்றும் சித்த, ஆயுள்வேத வைத்தியம் போன்ற பாரம்பரியமான முறைகளும் உள்ளடக்கப்பட்டிருக்கின்றது. சுகாதாரத்துறையினை பொறுத்தவரையில் தடுக்கும் பராமரிப்பு, நோய்வந்த பின்பு குணமடைவதற்கான பராமரிப்பு மற்றும் நோய் வந்த பின்பு அல்லது பாதிக்கப்பட்ட பின்னரான மறுவாழ்வு பராமரிப்பு என மூன்று முக்கியமான பகுதிகள் அடையாளங் காணப்படுகின்றன. சுகாதார முறைமை என்கின்ற போது மேற்கூறப்பட்ட விடயங்கள் அனைத்தும் ஒன்றோடு ஒன்று பின்னிப்பிணைந்து காணப்படுகின்றன.

## சுகாதாரத்தினை நிர்ணயிக்கின்ற காரணிகள்

சுகாதாரத்தினை நிர்ணயிக்கின்ற காரணிகள் எவை என்பது பற்றி மிக ஆழமாக நோக்குவோம். இதில் ஒரு தனிநபருடைய அல்லது ஒரு சமூகத்தினுடைய சுகாதாரத்தினை நிர்ணயிக்கும் காரணிகளில் சமூக, பொருளாதார சுற்றாடல், உடல் சார்ந்த சுற்றாடல் மற்றும் தனிநபர்களின் தனிப்பட்ட குணவியல்புகள் மற்றும் நடத்தைகள் ஆகியவை முக்கியமான பங்கு வகிக்கின்றன. இதற்கு மேலதிகமாக வருமானம், சமூக அந்தஸ்து, கல்வித்தகைமை, சுத்தமான குடிநீர், தூய காற்று, ஆரோக்கியமான வேலைத்தளம், பாதுகாப்பான வீடு மற்றும் சீரான பாதைகள் ஆகியவை நல்ல சுகாதாரம் அமைவதற்கு வழிவகுக்கின்றன. அதுமட்டுமல்லாது வேலைவாய்ப்பு மற்றும் வேலையின் நிலை, சமூக அமைப்பின் ஊடான உதவிகள், கலாசாரம், பரம்பரை மற்றும் பாலமைப்பு, தனிப்பட்ட திறமைகள் மற்றும் திறன்கள் மற்றும் சுகாதார சேவைகள் ஆகியனவும் சுகாதாரத்தின் மீது தாக்கம் செலுத்தும் காரணிகளாகக் காணப்படுகின்றன.

சுகாதாரத்துறையினைப் பாதிக்கும் காரணிகளில் மிகவும் முக்கியமாக, ஆழமாக ஆராயப்படவேண்டியது சமூகக் காரணிகளாகும். எந்த மருத்துவமற்ற காரணிகளும் உடல் நலம், உடல் நலம் தொடர்பான அறிவு, மனப்பான்மை, நடத்தைகள் மற்றும் நம்பிக்கைகளை பாதிக்கும். வைத்தியர்கள் மட்டும்தான் சுகாதாரத்துறைக்குப் பொருத்தமானவர்கள் எனக் குறிப்பிட முடியாது. அனைவருமே இதற்குப் பொறுப்பானவர்கள்தான். ஆரோக்கியத்தின் சமூக நிர்ணயம் என்பது மக்கள் பிறக்கும், வாழும், கற்றுக்கொள்ளும், வேலை செய்யும், விளையாடும், வழிபடும் மற்றும் வயது ஆகிய சூழல்களில் உள்ள நிலைமைகள் ஆகும். இவை பலவிதமான உடல்நலம், செயற்பாடு மற்றும் வாழ்க்கைத்தரம் மற்றும் அபாயங்கள் ஆகியவற்றைப் பாதிக்கின்றன. சுகாதாரம் என்பது நாம் வாழ்கின்ற வீடு, வேலை செய்கின்ற இடம், அயலவர்கள் மற்றும் சமூகம் ஆகியவற்றில் இருந்து ஆம்பமாகின்றது. சுகாதாரத்தினைத் தீர்மானிக்கும் அடிப்படை சமூகக் காரணிகள் என்கின்ற போது, கல்வி, சுகாதாரப் பராமரிப்பு,

அயலவர்களும் அதுசார்ந்த சுற்றாடலும், சமூகக் குழுக்கட்டமைப்பு, பொருளாதார நிலைத்தன்மை ஆகியவையும் முக்கியமானவையாகக் காணப்படுகின்றன.

சுகாதாரத்தினை வர்த்தக ரீதியான காரணிகளும் தீர்மானிக்கின்றன. அதாவது வர்த்தக ரீதியாக மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கைகளின் ஊடாக சுகாதாரமானது பாதிக்கப்படும். உணவுப் பண்டங்கள், மதுசாரம் மற்றும் புகைத்தல் ஆகியவற்றை நாம் வர்த்தகப் பொருட்களாக நோக்கும் போதும் அவற்றை நாங்கள் நுகரும் போதும் அது எமது உடலின் செயன்முறையினைப் பாதிக்கின்றன. உடல் பருமன், நீரிழிவு, இருதய ஆரோக்கியமற்ற நிலை, புற்றுநோய், சாலைப் போக்குவரத்தினால் ஏற்படுகின்ற காயங்கள், மனநலம் மற்றும் மலேரியா உள்ளிட்ட பலதரப்பட்ட சுகாதார விளைவுகளை சுகாதாரத்தின் வர்த்தக ரீதியான காரணிகள் ஏற்படுத்துகின்றன. சுகாதாரத்தின் வர்த்தக ரீதியான காரணிகள் பொதுவாக அனைவரையும் பாதிக்கிறது. அதிலும் குறிப்பாக இளைஞர்கள் அதிகளவில் பாதிக்கப்படுகின்றனர். ஆரோக்கியமற்ற பொருட்கள் ஏற்கனவே இருக்கும் பொருளாதார, சமூக மற்றும் இன ஏற்றத்தாழ்வுகளை இன்னும் மோசமாக்கின்றன.

இதனைவிட உயரிய சவாலாக நாங்கள் கருதவேண்டிய முக்கிய விடயம் யாதெனில், தற்போது உலகில் நடைபெற்றுக் கொண்டிருக்கக்கூடிய விடயங்களாகும். அதில் முதலாவது, நோய்கள் தங்கள் நிலைகளை எவ்வாறு மாற்றிக் கொள்கின்றன என்பதாகும். 1910 - 1920ஆம் ஆண்டு காலப்பகுதியில் குறிப்பிட்ட தொற்றுநோய்கள் குறிப்பாக மலேரியா, காசநோய்கள், சின்ன அம்மை மற்றும் போலியோ போன்றன மோசமாக சமூகத்தினைத் தாக்கி அழித்தன. அதற்கான தடுப்பூசிகள் மற்றும் மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டு அதிலிருந்து விடுபடுவதென்பது மிகவும் சவாலாகக் காணபட்டது. 1940 – 1970ஆம் ஆண்டு காலப்பகுதியில் அதாவது நகரமயமாக்கல் தொடங்கிய காலப்பகுதியில் தொற்றா நோய்களான நீரிழிவு நோய் மற்றும் இரத்த அழுத்தம் போன்ற நோய்கள் அதிகளவில் செல்வாக்குச் செலுத்தின. தற்போது மீண்டும் மீண்டும் புதிய நோய்கள் வந்துகொண்டிருக்கின்றன. உதாரணமாக இரண்டு வருடங்களாக உலகை ஆட்கொண்ட கொவிட்-19 இனைக் குறிப்பிடலாம். உண்மையில் இந்த புதிய நோய் தற்போது பொருளாதாரத்தினை பாதிக்கும் அளவிற்கு அபார சக்தி கொண்டவையாகக் காணப்படுகின்றது.

இரண்டாவது விடயம், குடித்தொகையில் ஏற்படுகின்ற மாற்றங்களாகும். ஆரம்ப காலங்களில் ஒரு குடும்பத்தில் அதிகளவான பிள்ளைகள் காணப்பட்டார்கள். காலங்கள் கடந்து செல்ல மூன்று, இரண்டு எனக் குறைவடைந்து தற்போது ஒரு பிள்ளைகள் கூட இல்லை என்ற சூழலுக்குள் தள்ளப்பட்டுள்ளது. இந்த நிலை குடித்தொகையில் மாற்றத்தை ஏற்படுத்துகின்றது. இதனால் பிறப்பு வீதமும், இறப்பு வீதமும் குறைவடைகின்றன. உலக சுகாதார ஸ்தாபனம் சுகாதார சேவையினை அபிவிருத்தி செய்தமையினால், நோய்கிருமிகள்

கட்டுப்படுத்தப்படுகின்றன. புதிய தொழில்நுட்பம் மற்றும் புதிய மருந்து வகைகள் ஆகியவை அறிமுகப்படுத்தப்படுகின்றன. வாழ்க்கைக் காலம் அதிகரிப்பதாலும், குழந்தைகளின் பிறப்பு வீதம் குறைவதனாலும், வயதுவந்தவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படுகின்றது. இது உலக சவாலாகக் காணப்படுகின்றது. உலக சனத்தொகையில் வயதுவந்தவர்களின் எண்ணிக்கை தற்போது 10 சதவீதமாக இருக்கின்றது. இது 2025ஆம் ஆண்டளவில் 15 சதவீதமாகவும் மாற்றமடையும். அதிகமாக இப்பிரச்சினை குறைவிருத்தி நாடுகளில் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

மூன்றாவதாகக் காணப்படுகின்ற மாற்றம் தொழில்நுட்ப மாற்றமாகும். தற்போது மருத்துவச் சோதனைகள் அனைத்தும் தொழில்நுட்ப ரீதியான விடயங்களின் துணையுடனே மேற்கொள்ளப்படுகின்றது. வைத்தியருக்கு குறிப்பிட்ட மருத்துவ சோதனையின் முடிவுகள் உடனுக்குடன் வைத்தியரின் கைபேசிக்கு பரிமாறக்கூடிய அளவில் இன்றைய நிலை காணப்படுகின்றது. எனவேதான் சுகாதாரத்துறையில் தொழில்நுட்பத்தின் புரட்சி முக்கியமானதாக அவதானிக்கப்படுகின்றது. இதனைத்தொடர்ந்து நகரமயமாக்கல், உலகமயமாக்கல் ஆகியவற்றின் ஊடாக ஏற்படுகின்ற ஒரு சிக்கல் தன்மைதான் பல நோயுற்ற தன்மையினை உருவாக்குகின்றது. பல நோயுற்ற தன்மை (Multi Morbidity) பல நோய்கள் இணைந்து காணப்படுவதாகும். வயது 40இனைக் கடக்கின்ற போது நீரிழிவு, உயர்குருதி அழுத்தம் போன்ற நோய்கள் மனநோய் மற்றும் தொற்றுநோய்கள் ஆகியன வரலாம். எனவேதான் இன்றைய உலகத்தில் பல நோயுற்ற தன்மை ஏற்படுவது என்பது சவாலான விடயமாகும்.

ஒவ்வொரு நோய்க்கும் ஒவ்வொரு மருந்து எடுக்க முடியாது. ஒவ்வொரு மருந்துக்காகவும் வைத்தியரை நாட முடியாது. ஒரு பிரச்சினைக்கு ஒரு வகையான சிகிச்சை முறையினை பின்பற்ற முடியாது. இவை அனைத்தும் சவாலான விடயங்களாகவே காணப்படுகின்றன. இதற்கு மேலாக இன்றைய நிலைப்படி, நவம்பர் மாதம் 2022ஆம் ஆண்டு உலகசனத்தொகை 8 பில்லியனை எட்டுகின்றது. இந்த சனத்தொயினை உலகம் எவ்வாறு சமாளிக்கப்போகின்றது? அடுத்த வருடத்தில் இருந்து அதிக சனத்தொகை கூடிய நாடாக இந்தியா முன்னிலை பெறுவதுடன், சீனா இரண்டாவது இடத்திற்கு செல்லவிருக்கின்றது. சுகாதாரத்துறையினை பொறுத்தவரையில் மேற்கூறப்பட்ட அனைத்து விடயங்களும் பெரும் சவாலான விடயங்களாகவே காணப்படுகின்றன. மறுபுறம் நோய் என்ற எண்ணக்கருவை விடுத்து நாங்கள் நலமாக வாழ்தல் பற்றி சிந்திக்க வேண்டியுள்ளது. அதிலும் உடல் நலம் (Physical Wellbeing) என்பது முக்கியமான விடயமாகும். உடல் நலம் என்பது உடல் செயல்பாடுகளைச் செய்வதற்கும், உடல் வரையறைகள் மற்றும் உடல் வலியின் அனுபவங்கள் மற்றும் உயிரியல் ஆரோக்கியக் குறிகாட்டிகளால் தடையில்லாத சமூகப் பாத்திரங்களைச் செய்வதற்கும்

உள்ள திறன் என வரையறுக்கப்படுகின்றது. மனம் சார்ந்த நலம் (Mental Wellbeing) என்பது கண்ணுக்குப் புலப்படாத விடயமாகக் காணப்படுகின்றது. மனம் சார்ந்த நலம் என்பது ஒவ்வொரு தனிமனிதனும் தன் திறனை உணர்ந்து, வாழ்க்கையின் இயல்பான அழுத்தங்களைச் சமாளித்து, ஆக்கப்பூர்வமாகவும் பலனளிக்கக்கூடியதாகவும், அவருடைய சமூகத்திற்குப் பங்களிப்பை வழங்கக்கூடிய நல்வாழ்வு நிலையாகும் என உலக சுகாதார ஸ்தாபனம் குறிப்பிடுகின்றது. இன்றைய பொருளாதாரத்தின் இக்கட்டான சூழ்நிலையில் அதிகமாக ஆராயப்பட வேண்டிய விடயம் இந்த மனம் சார்ந்த நலனாகும்.

## பொருளாதார நெருக்கடிக்கான காரணங்கள்

இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்குக் காரணமான விடயங்களினை அவதானிக்க வேண்டியது முக்கியமாகும். அந்த வகையில் அரசியல் ஸ்திரமின்மை, நாட்டில் நீண்டகாலமாக நிலவுகின்ற அமைதியின்மை, கொவிட் தொற்று நோயின் சர்வதேச ரீதியான பரவல், சுற்றுலாத்துறையில் ஏற்பட்ட சரிவு, நிதி கையாளலில் ஏற்பட்ட முறைகேடுகள், வரி விதிப்புக் கொள்கைகள், மோசமான நாணய இருப்பு, ஊழல், மிகைப் பணவீக்கம், கறுப்புச்சந்தை, குறைந்த ஏற்றுமதி, குறைந்த உற்பத்தி நிலை, ரஷ்ய – உக்ரேன் யுத்தம் மற்றும் பொதுமக்களின் பொறுப்பற்ற தன்மை ஆகியவற்றை குறிப்பிடலாம். உண்மையில் எமது சமூகத்தில் காணப்படுகின்ற அனைவரும் இதன் பங்காளிகளாக மாற்றப்பட வேண்டும். ஏனெனில் ஏதோ ஒரு வகையில் எல்லோரும் இதற்கு காரணமானவர்களாகவே காணப்படுகின்றனர். தேவைக்கதிகமான பணவிரையம், தேவைக்கதிகமான விளையாட்டு விடயங்கள், தேவைக்கதிகமான அங்கலாய்ப்பு விடயங்கள், உற்பத்தியினை மேற்கொள்வதில் காட்டுகின்ற சோம்பல் தன்மைகள் என அனைத்துமேதான் இந்த பொருளாதார நெருக்கடியினை வலுவூட்டமடையச் செய்துள்ளன.

பொது சுகாதார நிபுணரான வைத்தியர். குமாரி விநோதனி நவரத்னே என்பவர் ‘‘வரம்பிற்குட்பட்டதான டொலர் அணுகல், இறக்குமதி விதிமுறைகள் மற்றும் எரிபொருள் தட்டுப்பாடு ஆகியவை நிரம்பல் சங்கிலிகளை முடக்கியுள்ளது. விநியோக முறைகளில் உள்ள சீரற்ற நிலை காரணமாக அனைத்து மருத்துவமனைகள் மற்றும் சேவை வழங்குனர்களுக்கு சுகாதார அமைச்சு உரிய நேரத்தில் மருந்துப் பொருட்களை வழங்கமுடியாமல் உள்ளது’’ எனக் குறிப்பிடுகின்றார். இதன் விளைவாக எதிர்பார்க்கப்படும் பிரச்சினைகளாக நோய்த்தடுப்பு மற்றும் அதன் மேலாண்மையில் கவனம் செலுத்த வேண்டி ஏற்படும், ஊட்டச்சத்துக் குறைபாடு ஏற்படும், மனரீதியான சஞ்சலங்கள், குடும்ப மற்றும் சமூக மோதல்கள், வறுமை, குடியேற்றம் மற்றும் குடும்ப செயலிழப்புக்கள் ஏற்படல், சமூக விரோத நடத்தைகள் ஏற்படல், திருமணத்திற்கு பிறகு ஏற்படக்கூடிய பிரச்சினைகள் மற்றும் கற்பழிப்பு என பல சமூகச் சீரழிவான நிலைமைகளை எடுத்துக்காட்டலாம்.

எனவேதான் மனித மூலதனமானது விருத்தி செய்யப்படவேண்டும், அதற்கான சிறந்த முறைமைகளையும் கட்டமைக்க வேண்டும்.

## சவால்கள்

குறிப்பாக சவால்களை விரிவாக ஆராய வேண்டிய தேவை உள்ளது. முக்கியமாக முதியவர்கள், சிறுவர்கள் ஆகியோர் ஊட்டச்சத்துக் குறைபாட்டின் காரணமாக மிகவும் மோசமாக பாதிக்கப்படுவர். அத்தியாவசியமான மருந்துப் பொருட்களைக் கூட பெற்றுக்கொள்ள முடியாத நிலை காணப்படும். பொருளாதார நெருக்கடியில் அரசாங்கம் தனது அத்தியாவசியமான பொதுச்சேவை வழங்கலில் பாரிய நெருக்கடிகள் ஏற்படும். அத்தியாவசியமான மருந்துப் பொருட்களின் தட்டுப்பாடுகள் காரணமாக நோய்களில் இருந்து பாதுகாப்பு பெறுதல் என்பது கேள்விக்குறியான விடயமாக மாறிவிடும். அனைத்து சமூக அங்கத்தவர்களும் வேறுபாடுகள் இன்றி பொருளாதார நெருக்கடியின் சவாலுக்கு ஈடுகொடுக்க முடியாத நிலை உருவாகும்.

உற்பத்தி இன்மை காரணமாக மருந்துப் பொருட்கள் கறுப்புச் சந்தையில் அதிக விலைக்கு விற்கப்படுகின்ற நிலை காணப்படலாம். ரூபாவின் பெறுமதி குறைப்பினால் அதிக விலை கொடுத்து பொருட்களை கொள்வனவு செய்ய வேண்டிய நிலை காணப்படும். மருத்துவத் துறையினைப் பொறுத்தவரையில் அடிக்கடி ஏற்படுகின்ற மின்சாரத்தடைக்கு முகங்கொடுக்க வேண்டியது மிகப்பெரிய சவாலாகக் காணப்படுகின்றது. சில வேளைகளில் பொதுமக்கள் தங்களின் சொந்த வருமானத்தில் மருந்துப் பொருட்களை பெற வேண்டிய துர்பாக்கிய நிலையும் ஏற்படலாம். 2021ஆம் ஆண்டு எங்களுடைய நாடு கொவிட்-19 தொற்றுக் காலத்திலும் கூட மிகப் பெரிய சேவைகளை வழங்கிக் கொண்டிருந்தது. இதன்போது கூட பொருளாதாரப் பிரச்சினை என்பது குறைவாகத்தான் காணப்பட்டது. அனைத்தும் சிறந்த முகாமைத்துவத்தினைக் கொண்டிருந்தது. ஆனால் தற்போது அனைத்துமே பெரும் சவாலாக மாறிவிட்டது. பொருளாதார நெருக்கடி சுகாதாரத் துறையின் செயற்பாட்டிற்கு பெரும் அச்சுறுத்தலாக மாறியுள்ளது என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

யுனிசெ.ஃப் நிறுவனமானது இலங்கையின் உணவுப் பணவீக்கம் 2022 பெப்ரவரியில் 25.7 வீதமாகவும் சில்லறை பணவீக்கம் 15.1 வீதமாகவும் உயர்ந்துள்ளது. இது 2008ஆம் ஆண்டுக்கு பின்னர் ஆசியாவில் அதிகூடிய பெறுமதியெனவும் மற்றும் இலங்கையில் மிக உயர்ந்த பெறுமதியெனவும் குறிப்பிடுகின்றது. ஐக்கிய நாடுகள் சபையின் உலக உணவுத் திட்டங்கள் (WFP) உணவுப் பாதுகாப்பின்மை குறித்த சமீபத்திய மதிப்பீட்டில், ஒவ்வொரு பத்தில் மூன்று குடும்பங்கள் அல்லது கிட்டத்தட்ட 6.26 மில்லியன் மக்கள் தங்களின் அடுத்த உணவு எங்கிருந்து கிடைக்கும் என்பது குறித்து உறுதியாகத் தெரியாதவர்களாகக் காணப்படுகின்றனர் எனக் குறிப்பிடுகின்றது. உலக வங்கியின் கூற்றுப்படி, “அதிக அளவிலான கடன் மற்றும் கடன்

சேவையை நிவர்த்தி செய்வதற்கும், நிதிப் பற்றாக்குறையைக் குறைப்பதற்கும், வெளி ஸ்திரத்தன்மையை மீட்டெடுப்பதற்கும், ஏழைகள் மற்றும் பாதிக்கப்படக்கூடியவர்கள் மீதான பாதகமான தாக்கங்களைக் குறைப்பதற்கும் இலங்கை அவசர கொள்கை நடவடிக்கைகளினை நடைமுறைப்படுத்த வேண்டும்'' எனக் குறிப்பிடுகின்றது. கடந்த ஆண்டு வரை, இலங்கையின் சுகாதாரப் பாதுகாப்பு முறையானது WHO - சுகாதார அமைப்பு மற்றும் கொள்கைகள் பற்றிய ஆசிய பசுபிக் கண்காணிப்பகத்தால் வலுவானதாகக் கருதப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதய நோய், பக்கவாதம், புற்றுநோய் போன்ற தொற்றாத நோய்கள், இலங்கையில் 80 சதவீத இறப்பிற்கு காரணமாகின்றன. சுகாதாரப் பாதுகாப்பில் உள்ள இந்த சவால்கள் ஒவ்வொரு நோயாளியின் வாழ்க்கையையும் பாதிக்கலாம், குறிப்பாக கவனிப்பில் உள்ள சிக்கலான தன்மை மற்றும் அதன் பாதிப்புகள் வயதானவர்களுக்கு தீங்கு விளைவிக்கும். இத்தகைய நோய்களுக்கு தொடர்ச்சியாக மருந்து எடுத்துக்கொள்ள வேண்டியது அவசியமாகின்றது. ஆனால் இந்நிலை பொருளாதார நெருக்கடியினால் பாதிக்கப்படலாம். இது உண்மையில் சுகாதார அனர்த்தமாகவே பார்க்கப்படுகின்றது. எனவே இது சுகாதாரத்தினை நம்பி இருக்கக்கூடிய அனைத்து மக்களையும் பாதிக்கும். இந்த அனர்தத்தினை நாங்கள் பிரச்சினையாக பார்ப்பதா? அல்லது ஒரு சந்தர்ப்பமாக பார்ப்பதா? என்பது ஒரு கேள்விக்குரிய விடயமாகும்.

சுகாதாரப் பிரிவின் ஒரு நிபுணராக, ஒரு கல்வியலாளராக, பல்கலைக்கழக நிர்வாகத் தலைவராக இந்த பொருளாதார நெருக்கடியினை நாங்கள் ஒரு சந்தர்ப்பமாகவே பார்க்கின்றோம். மருத்துவத் தொழிலுக்கு முக்கிய பங்கு உண்டு. சமூக நோயறிதல் என்பது பொதுவாக இறப்பு மற்றும் நோயுற்ற விகிதங்கள் மற்றும் விகிதங்களின் அடிப்படையில் ஒரு சமூகத்தில் உள்ள சுகாதாரப் பிரச்சினைகளை அடையாளம் கண்டு அளவீடு செய்வதையும், ஆபத்தில் உள்ளவர்கள் அல்லது சுகாதாரப் பாதுகாப்பு தேவைப்படுபவர்களை வரையறுக்கும் நோக்கத்திற்காக அவற்றின் தொடர்புகளை அடையாளம் காண்பதையும் குறிக்கின்றது. எனவே தற்போது வைத்தியர்களின் சேவை வைத்தியசாலை சார்ந்ததாக காணப்படுவதை விட சமூகம் சார்ந்த சேவையாகக் காணப்பட வேண்டும்.

## பல்கலைக்கழக ஆசிரியராக பரிந்துரை முன்வைப்பு

இறுதியாக பொருளாதார நெருக்கடியில் இருந்து சுகாதாரத்துறையானது கட்டாயமாக தன்னை பாதுகாக்க வேண்டிய தேவையிலுள்ளது. எனவே ஒரு பல்கலைக்கழக ஆசிரியராக இப்பிரச்சினைகளில் இருந்து விடுபடுவதற்கு பின்வருகின்ற பரிந்துரைகளை முன்வைக்க முடியும். அந்த வகையில், தொலைநிலை ஆலோசனையை ஊக்குவிக்க வேண்டும் (தொலைபேசி மூலம் அறிவுரை வழங்குதல்), நோயுற்றவர்களுக்கு ஆற்றுப்படுத்தல்களை மேற்கொள்ளல், ஊட்டச்சத்து தலையீடுகளை

நோக்கிய ஆராய்ச்சியைத் தொடங்குதல், நாள்பட்ட நிலைமைகள் மற்றும் முதியோர், பாதிக்கப்படக்கூடிய குழுக்களுக்கான சேவை மாதிரியை உருவாக்குதல் மற்றும் சமூக நலனுக்கான பொழுதுபோக்கு மாதிரிகளை உருவாக்குதல் போன்றவற்றை ஆரம்பிக்க வேண்டும்.

## சுகாதாரத் துறையின் ஒரு நிர்வாகியாக பரிந்துரை முன்வைப்பு

மறுபுறம் சுகாதாரத் துறையின் ஒரு நிர்வாகியாக பின்வருகின்ற பரிந்துரைகளை முன்வைக்கலாம். அந்தவகையில் தொழில்முறை (தேசிய / சர்வதேச - மருத்துவ முகாம்கள்) மூலம் சமூக வலைப்பின்னலை உருவாக்குதல், செலவு குறைந்த தலையீடுகள் - ஆய்வக விசாரணைகளை விட மருத்துவ தீர்ப்பு சார்ந்த விடயங்களில் அதிக முன்னுரிமை காட்டல், உளவியல் சமூக ஆதரவு அமைப்பினை உருவாக்குதல், மலிவான விலையில் கிடைக்கும் மருந்து மேலாண்மைக்கான பொருத்தமான செலவு குறைந்த நெறிமுறையினை உருவாக்குதல், வலுவான பாதுகாப்பு அமைப்பை நிறுவுதல் மற்றும் செலவைக் குறைத்தல் மற்றும் நோய் மேலாண்மையில் மருந்தியல் அல்லாத அணுகுமுறை, சேவைகளை மறுசீரமைப்பதன் மூலம் செயல்திறனை மேம்படுத்துதல், மருத்துவ தலையீடுகளின் தேவையற்ற ஈடுபாட்டின் அடிப்படையில் ஆரம்ப சுகாதாரத்தை வலுப்படுத்துதல், வீட்டுத்தோட்டம் / ஒருங்கிணைந்த உணவு உற்பத்தியினை ஊக்குவித்தல், ஆரோக்கிய வாழ்க்கை முறை மாற்றத்தினை உடல் செயல்பாட்டின் (சைக்கிள் ஓட்டுதல், நடைபயிற்சி, வேலை செய்தல், மது அருந்துதல், புகைபிடிப்பதை நிறுத்துதல், சமூக ஈடுபாடு, சமூக அதிகாரமளித்தல்) மூலம் உருவாக்குதல் மற்றும் தொழில்களை உருவாக்குதல் (உணவு மற்றும் உணவுப் பொருட்கள், மருந்துத் தொழில்) ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

## முடிவுரை

நெருக்கடியின் போதான இலங்கையின் சுகாதார நிலைமையை மேம்படுத்த ஒவ்வொரு வீட்டுக்கு வீடும் பொருளாதார நெருக்கடியின் வீரியத்தின் ஆழம் பற்றிய செய்தியை எடுத்துச் செல்ல வேண்டியது முக்கியமானதாகும். அத்தியாவசிய பொருட்களுக்கான விநியோக சங்கிலியை மீளமைக்க வேண்டும். வழக்கமான எரிபொருள் விநியோகத்தின் மூலம் சுகாதார சேவைகளை சீராகச் செயல்படுத்துவதற்காக சுகாதாரப் பாதுகாப்பு வல்லுநர்கள் மற்றும் பிற ஊழியர்களுக்கான போக்குவரத்து வசதிகளை மேம்படுத்த வேண்டும். நோய்களைத் தடுப்பது மற்றும் நிர்வகிப்பது குறித்த தகுந்த தலையீடுகளைச் செயல்படுத்துதல் வேண்டும். பொதுமக்களுக்கு போதிய மனநல உதவிகளை வழங்குவதோடு, சிறந்த பராமரிப்புக்கான புதிய திறன்கள் மற்றும் தொழில்நுட்பங்களுடன் பொதுமக்களுக்கு அதிகாரமளித்தல் வேண்டும். அத்துடன் சுகாதாரத்தை மேம்படுத்துதல் மற்றும் சுகாதாரம் தொடர்பான தொழில்களை நிறுவுதலும் அத்தியாவசியமானதாகும்.

## அத்தியாயம் 09

# இலங்கையில் உணவுப்பாதுகாப்பின் புத்துயிர்ப்பாக்கம்

# Recovery of Food Security in Sri Lanka

**Dr. K. Premakumar**
Senior Lecturer,
Department of Agricultural Chemistry,
Faculty of Agriculture,
Eastern University, Sri Lanka.

(20.07.2022 அன்று நடைபெற்ற நிகழ்நிலைக் கருத்தரங்கின் தொகுப்பு)

## அறிமுகம்

உணவு என்பது மனிதன் உயிர்வாழ மிகவும் முக்கியமானதாகும். அதாவது மனித வாழ்வில் தவிர்க்க முடியாத விடயமாக இவ் உணவு காணப்படுகின்றது. உணவினை பிரதானமாக ஐந்து வகைக்குள் அடக்கலாம். அவையாவன தானியங்கள் சார்ந்ததாக அரிசி, கோதுமை, கிழங்கு வகைகள், இரண்டாவது மரக்கறிகள் மற்றும் பழங்கள், மூன்றாவது புரதம் சார்ந்த பால், மீன் முட்டை, பருப்பு வகைகள், இறைச்சி மற்றும் கொழுப்பு என்பனவாகும். மனிதனின் அடிப்படைத் தேவைகளில் ஒன்றான உணவு மிகவும் முக்கியமானதாகவும் பாதுகாக்கப்பட வேண்டியதாகவும் காணப்படுகின்றது. உணவினை நிறை உணவாக நாம் உட்கொள்ள வேண்டும். உணவுப் பாதுகாப்பு என்பது உணவினை பாதுகாத்தல் Food Preservation மற்றும் Food Security என இரு வகையாக ஆங்கிலத்தில் குறிப்பிடலாம். இங்கு உணவுப் பாதுகாப்பு (Food Security) தொடர்பாக விரிவாக நோக்குவோம். உணவுப் பாதுகாப்பு என்பது எல்லா மக்களுக்கும் எல்லா நேரத்திலும் பௌதீக, சமூக மற்றும் பொருளாதாரம் சார்பாக கிடைக்கும் ஒரு தன்மையுடையதாவும், பாதுகாப்பானதாகவும், போசனைத் தன்மையுடையதாகவும் மற்றும் சிறந்த சுகாதாரமுடையதாகவும் இருக்க வேண்டும்.

உணவுப் பாதுகாப்பின் மிகமுக்கியமான 4 தூண்களாக, கிடைக்கும் தன்மை (Availability), பெறக்கூடிய தன்மை (Accessibility), பயன்படுத்தும் தன்மை (Utilisation) மற்றும் உறுதித் தன்மை (Stability) என்பன காணப்படுகின்றன. இங்கு கிடைக்கும் தன்மை தொடர்பில் குறிப்பிடுவதானால், இது உள்நாட்டு உற்பத்திகளிலும் இறக்குமதிகளிலும் கிடைக்கும் உணவுகளிலும் உணவு உதவிகளிலும் தங்கியுள்ளது. கிடைக்கும் தன்மையானது சமூகம், அரசியல், பொருளாதாரம் சார்ந்ததாக காணப்படுகின்றது. கிடைக்கும் தன்மையானது எல்லா சந்தர்ப்பங்களிலும் உறுதிப்படுத்த முடியாததாக காணப்படும். சில நாடுகளில் சில பொருட்கள் தடை செய்யப்பட்டிருக்கும். சில வேளைகளில் பொருளாதார நிலை காரணமாக சில பொருட்களை

கொள்வனவு செய்ய முடியாமல் போகும். உதாரணமாக இலங்கையில் தற்பொழுது பொருளாதாரப் பின்னடைவு காரணமாக சில பொருட்களை இறக்குமதி செய்ய முடியாத நிலை காணப்படுகின்றது. அடுத்ததாக அனைவருக்கும் பெறக்கூடிய தன்மை அல்லது அனைவருக்கும் சமமாக கிடைக்கும் தன்மையானது, சந்தை வசதிகள், கொள்வனவு சக்தி என்பவற்றில் தங்கியுள்ளது. இவ்வாறாக உணவு கிடைக்கின்ற போதிலும் அதன் பயன்படுதன்மை அதாவது அதன் தரம் மற்றும் அதன் போசனைத் தன்மை என்பவற்றுடன் அனைத்தும் சமநிலையில் பேணப்படுமாக இருந்தால் அது உணவுப் பாதுகாப்பு எனப்படும். இலங்கையினைப் பொறுத்தவகையில் இந்த நான்கு தூண்களில் எவற்றில் அதிக பாதிப்பு ஏற்பட்டுள்ளது என நோக்குவோமானால், கிடைப்பனவிலும் தேவையான இருப்பு இன்மை மற்றும் அணுகும் தன்மையிலும் பாதிப்பு ஏற்பட்டிருக்கின்றது. சில சந்தர்ப்பங்களில் பயன்பாட்டுத் தன்மையிலும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதாரப் பிரச்சினை காரணமாக மக்கள் இவ்வாறான சவால்களை எதிர்கொள்கின்றனர்.

இலங்கையில் ஏன் உணவுப் பாதுகாப்பு ஒரு பிரச்சினையாக உருவெடுத்துள்ளது என ஆராய்வோமானால் உலகமயமாக்கத்தின் பாதிப்பு, வறுமை, முரண்பாடுகள் மற்றும் காலநிலை மாற்றம் போன்ற நான்கு விடயங்களும் ஒருசேர அமைந்து மக்களுக்கு பிரச்சினையினை ஏற்படுத்தியிருக்கின்றது. இதன்காரணமாக உணவுப் பற்றாக்குறை, உணவுகளின் விலையேற்றம், உணவுப் பொருட்கள் மறைக்கப்படல் (Food Hoarding) உதாரணமாக அங்கர் பால்மா மறைக்கப்பட்டமையை குறிப்பிடலாம். அதேபோன்று பழுதடைந்த மற்றும் தொற்றுக்குள்ளாக்கப்பட்ட உணவுப்பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றமை போன்றன உணவுப் பாதுகாப்பின்மையை உருவாக்கி அதன்மூலம் மனிதனது ஆரோக்கியம், போசணை என்பவற்றில் பாதிப்பினை ஏற்படுத்தி, பட்டினி நிலையினை தோற்றுவித்துள்ளன. பொருளாதாரத்தில் நிலையற்ற தன்மை, மக்கள் புரட்சி, அரசியல் மற்றும் சமூகத்தில் நிலையற்ற தன்மை போன்றனவும் இதற்கு காரணமாக அமைந்துள்ளன எனலாம்.

இலங்கையில் உணவுப் பாதுகாப்பின்மைக்கான காரணங்களை ஆராய்வோமானால், உள்நாட்டு அரசியல், பூகோள அரசியல் எனும் இந்த இரண்டுக்கும் இடைப்பட்ட அரசியல் பிரச்சினைகள் மற்றும் அதனூடாக ஏற்பட்ட பொருளாதார பிரச்சினைகள் காரணமாக பணவீக்கம் ஏற்படுத்தப்பட்டு உணவு இறக்குமதிகளில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. ஒரு நாடானது Food Balance Sheetஇனை கையாள வேண்டியது கட்டாயமானதாகும். அதாவது ஒரு நாட்டிற்கு மாதாந்தம் எவ்வளவு உணவு வருகின்றது? எவ்வளவு பயன்படுத்தப்படுகின்றது? மற்றும் ஒரு தனிமனிதனுக்கு கிடைக்க வேண்டிய உணவுகளை பட்டியலிட வேண்டியதும் அரசாங்கத்தின் பொறுப்பாகக் காணப்படுகின்றது. உதாரணமாக தானியத்தினை எடுத்துக்கொண்டால், எவ்வளவு தானியங்கள் இருப்பில் இருக்கின்றன? மக்களுக்கு எந்தளவில் பயன்படுகின்றது? என்பது தொடர்பாக Food Balance Sheet இல் பார்க்க முடியும். ஆனால் தற்போது இது சீராக இல்லை. அரசியல், பொருளாதார

பிரச்சினைகளினால் உற்பத்திகளிலும் இறக்குமதிகளிலும் குழப்பம் ஏற்பட்டு Food Balance Sheetஇல் குழப்பம் ஏற்பட்டிருக்கின்றது. 2009ஆம் ஆண்டு சிவில் யுத்தம் முடிவடைந்து ஒரு சுமுகமான சூழல் ஏற்பட்ட போதும் 2019ஆம் ஆண்டில் வரிகள் குறைக்கபட்டமை, 2020ஆம் ஆண்டில் கொவிட்-19 பெருந்தொற்று ஏற்பட்டமை, அதேபோன்று 2021ஆம் ஆண்டில் இரசாயண உரப்பாவனைக்கு தடை விதிக்கப்பட்டமை, 2022 ஏப்ரலில் எரிபொருள் நெருக்கடி ஏற்பட்டமை போன்றன வெளிநாட்டு இருப்பில் பாரிய வீழ்ச்சியை ஏற்படுத்தியிருந்தன. இதன்காரணமாக பொருட்களுக்கான விலை அதிகரித்து அது பணவீக்க நிலையைத் தோற்றுவித்திருந்தது. உதாரணமாக தேங்காய் ஒன்றின் விலை 80 வீதத்தினால் அதிகரிக்கப்பட்டிருந்தது.


இவ்வாறான நெருக்கடிகளுக்கான முக்கிய காரணங்களாக அதிகமாக இறக்குமதிகளில் தங்கியிருத்தல், வெளிநாட்டு நாணய கையிருப்பு குறைவடைந்துள்ளமை மற்றும் பாரிய கடனை செலுத்த தவறியமை போன்றவற்றைக் குறிப்பிடலாம். இதன்காரணமாக நாட்டில் போராட்டங்கள் நடைபெறுகின்றன. எரிபொருள் நெருக்கடி, உணவுப் பாதுகாப்பு, எரிவாயு பிரச்சினைகள் ஏற்பட்டிருக்கின்றன. எமது நாடான இலங்கை உணவுப் பாதுகாப்பு மட்டத்தில் (Food Security Rank) 65ஆவது இடத்தில் உள்ளது. இந்நிலையில் மேலும் வீழ்ச்சி ஏற்பட்டிருக்கலாம் என நம்பப்படுகின்றது. Prof. Buddhi Marambe இந்நெருக்கடி நிலை தொடர்பில் குறிப்பிடுகையில், ‘‘இது ஒரு மனிதனால் உருவாக்கப்பட்ட அனர்த்தம்’’ எனக் குறிப்பிட்டுள்ளார். இரசாயண உரங்களின் இறக்குமதிகளை நிறுத்தி சேதன உரப் பயன்பாட்டினைக் கொண்டுவந்தமை, பூகோள அரசியல் பிரச்சினைகள், பெருந்தொற்று, காலநிலை மாற்றங்கள் காரணமாக ஏற்றுமதிகள் தடைப்பட்டமை, உரங்களின் பற்றாக்குறை, எரிபொருட்களின் விலையேற்றம், சீரற்ற காலநிலை, மத்திய கிழக்கு மற்றும் ஆபிரிக்காவில் அதிகரித்த உணவுப் பாதிப்பு, தொற்றுநோய்களின் தாக்கம் போன்றவற்றினால் சாதாரணமாக ஒரு மனிதனுக்கு கிடைக்க வேண்டிய உணவுத்தட்டில் பிரச்சினைகள் ஏற்பட்டது எனலாம்.

பின்தங்கிய கொள்கைத் திட்டங்கள், பின்தங்கிய பேரினப் பொருளாதார முகாமைத்துவம், இரசாயண உரப் பாவனை நிறுத்தம் காரணமாக பணவீக்கம் ஏற்பட்டு உற்பத்திச் செலவுகள் அதிகரித்துடன் விவசாய உற்பத்திகள் குறைவடைந்து, குறைந்த வருமானம் ஏற்பட்டு உணவுகளுக்கான அதிகரித்த விலை உருவாகி அதனூடாக உணவுப்பாதுகாப்பு அற்ற தன்மையும் பின்தங்கிய வாழ்க்கைத் தரமும் உருவாகின்றன. இதற்கான வெளிப்படையான காரணங்களாக, உலக சந்தையில் நிலவும் உயர் உணவுப் பணவீக்கம், உயர் எரிபொருள் விலைகள், ஏற்றுமதித் தடைகள் மற்றும் விவசாய உரங்களுக்கான உயர் விலைகள் என்பன காணப்படுகின்றன. எரிபொருள் விலை, உணவு வீண்விரயம், இறக்குமதிகள் போன்ற காரணங்களினாலும் உணவு கிடைப்பது குறைக்கப்பட்டதுடன் ஊட்டச்சத்து அளவும் குறைக்கப்பட்டது. உணவு பாதுகாப்பின்மையினுடைய தாக்கமாகவே இதுவும் கருதப்படுகின்றது.


இவற்றை எவ்வாறு நிவர்த்தி செய்யலாம் என்று பார்ப்போமானால், இலங்கை ஒரு தீவாக இருக்கின்ற காரணத்தினால் கடலாலும் ஆறுகளாலும் சூழப்பட்ட நல்ல வாழ்வாதாரங்களையும் கால்நடை வளர்ப்புக்கான வளங்களைக் கொண்ட நாடாகவும் காணப்படுகின்றது. நெற்செய்கை, மரக்கறிச் செய்கை, இறப்பர் மற்றும் தேயிலை என்பன இங்கு பயிரிடப்படுகின்றன. இவற்றில் 24 வீதம் தென்னை உற்பத்திகளாகவும் 11 வீதம் அரிசி உற்பத்தியாகவும் 10 வீதம் மரக்கறிவகைகளாகவும் 8 வீதமானவை பழங்களாகவும் 17 வீதம் மீன்பிடியாகவும் மற்றும் 9 வீதம் விலங்கு உற்பத்தியாகவும் காணப்படுகின்றன. இவற்றில் மிகமுக்கியமான துறையாக இருக்கின்ற விவசாயத்துறை தொடர்பாக பார்ப்போமானால் வேளாண்மை 6 வீதமாகவும் பணப்பயிர்கள் 1 வீதமாகவும் மற்றும் பண்ணையல்லா உற்பத்திகள் 56 வீதமாகவும் காணப்படுகின்றன. அதிலும் வீட்டுப்பாவனை 76 வீதமாகவும் நெல்லுற்பத்தி 5 வீதமாகவும் பண்ணை சாராமல் காணப்படுகின்றன. இந்தப் பின்புலத்தில் மொத்த விவசாய உற்பத்தி வருமானத்தின் பங்களிப்பானது தற்காலத்தில் அதாவது 2020ஆம் ஆண்டில் 8.36 வீதமான பங்களிப்பையே வழங்கியுள்ளது. அதேவேளை விவசாயத்தில் ஈடுபட்டுள்ள வேலையாட்களின் எண்ணிக்கையும் குறைவடைந்துள்ளது. 2019ஆம் ஆண்டளவில் 24.98 வீதமாக இந்த எண்ணிக்கை காணப்படுகின்றது. இவை அனைத்தும் இணைந்து விவசாயத்தில் பாதிப்பை ஏற்படுத்தியதனூடாக இறுதியில் மொத்த உள்நாட்டு உற்பத்தியிலும், உணவுப் பாதுகாப்பிலும் பாதிப்பினை ஏற்படுத்தியிருக்கின்றன.

இதனடிப்படையில் Agriculture Stress Index (ASI) இலங்கையில் எவ்வாறு காணப்படுகின்றது என்பது தொடர்பான வரைபடத்தினை அவதானிக்கும் போது, சிவப்பு நிறங்களினால் காட்டப்பட்டிருப்பது அதிகம் பாதிக்கப்படக்கூடிய மாவட்டங்கள் ஆகும். இரண்டாவது வரைபடத்தில் வறட்சியை அடிப்படையாகக் கொண்டு சில மாவட்டங்கள் பிரிக்கப்பட்டுள்ளன. அவை விவசாயத்தில் பாரிய பங்களிப்பைச் செலுத்துகின்றன.

**வரைபடம்: 01**




**வரைபடம்: 02**



அடுத்ததாக கடல்வளம் தொடர்பாக குறிப்பிடுவோமானால், மட்டக்களப்பு மாவட்டத்தில் கடற்றொழில் வளர்ச்சியானது தரமான இனப்பெருக்க பொருட்கள் கிடைக்காத நிலை, சட்டவிரோத மீன்பிடி முறைகளை நடைமுறைப்படுத்துதல், நலிவடைந்த மீன்பிடி கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் போதுமான சந்தை வாய்ப்புக்கள் இன்மை போன்ற காரணங்களினால் சிக்கல்தன்மை வாய்ந்ததாக காணப்படுகின்றது. இவ்வாறான காரணங்கள் உணவுப் பாதுகாப்பில் நேரடியான தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கின்றன. அதேபோன்று நீலப் பொருளாதாரத்திற்கான (Blue Economy) வாய்ப்புக்களையும் நாம் சரியாகப் பயன்படுத்தவில்லை. இதுவும் உணவுப் பாதுகாப்பில் ஆதிக்கம் செலுத்துவதைக் காணலாம். அடுத்ததாக விலங்கு உற்பத்தி தொடர்பாக அவதானித்தால், எமது நாடான இலங்கையில் ஆடு, மாடு மற்றும் கோழி வளர்ப்பு போன்ற கால்நடை வளர்ப்பிற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன. இருந்தபோதிலும் அவற்றை முறையாகப் பயன்படுத்தி அதன் நன்மைகளைப் பெறத் தவறிவிட்டோம் என்றே கூறவேண்டும். இதற்காக மேற்கொள்ளக் கூடிய இடையீடுகள் (Intervention) தொடர்பில் நோக்கும் போது, வெளிநாட்டு உதவிகளைப் பெற்று அவற்றை மேம்படுத்தல், நெல் உற்பத்தியினை மீளக்கட்டியெழுப்பல், இரசாயண உரப் பயன்பாட்டினைக் கொண்டு நெல் உற்பத்தியினை மீளவும் புதுப்பித்தல் மற்றும் வீட்டுத்தோட்டங்களை ஊக்குவித்தல் ஆகியவற்றை மேற்கொள்வதன் ஊடாக வீட்டுப்பாவனைக்கான உணவுப் பாதுகாப்பினை வளப்படுத்த முடியும். வீட்டுத் தோட்டம் என்பது அடிப்படையான ஒன்றாகக் காணப்படுகின்றது. இரசாயண உரங்கள் கிடைக்கப்பெறாத சந்தர்ப்பங்களிலும்கூட வீட்டுத்தோட்ட செய்கையின் மூலமாக பயன்பெற முடியும். அதேபோன்று சோளன் உற்பத்தியை மீளவும் புதுப்பிக்கச் செய்ய வேண்டும். சோளன் போன்றவற்றினை இறக்குமதி செய்வதினாலும் டொலரின் கையிருப்பு குறைவடைகின்றது. உலர் சோளன் கிடைப்பது கடினமான ஒன்றாக உள்ளதுடன் பச்சை சோளன் அதிகளவில் கிடைக்கப்பெறுகின்றது. எனவே இவற்றையெல்லாம் கருத்திற்கொண்டு அதிகளவாக சோளன் உற்பத்தியில் ஈடுபட வேண்டும். அதேபோன்று தென்னை உற்பத்திகளுக்கு சிறந்த வருமானம் கிடைத்திருக்கின்றது. குறிப்பாக தேங்காய் எண்ணெய்யைக் குறிப்பிடலாம். இவற்றை புத்துயிர்ப்பிக்க வேண்டும். இவ்வாறாக வளங்களுக்கு பெறுமதி சேர்ப்பது சிறந்ததொரு உபாயமாகும்.

இலங்கையை 2025ஆம் ஆண்டளவில் ஒரு அபிவிருத்தியடைந்த நாடாக மாற்றியமைக்க வேண்டுமானால் தற்போது பின்வரும் நடவடிக்கைகளில் கவனம் செலுத்தல் வேண்டும். அந்தவகையில் உலக வங்கியின் அறிக்கைக்கமைவாக, உற்பத்தியினை அதிகரிக்க வேண்டும், விவசாயம் அல்லாத துறைகளில் (Non-Farming Sectors) தொழில்வாய்ப்புக்களை அதிகரிக்க வேண்டும், பாதுகாப்பான மற்றும் அதிக உற்பத்தித் திறன்களைக் கொண்ட தொழிலாளர்களை ஊக்குவிக்கும் வகையில் சீர்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும், பொதுச் சேவைகள் மற்றும் கல்வி உள்ளிட்ட அனைத்து சேவைகளையும் அனைவருக்கும் கிடைக்கச் செய்ய வேண்டும், விவசாயம் சார்ந்து அதற்குத் தேவையான உள்ளீடுகளையும் நீரையும் உரிய காலத்திற்கு வழங்குதல் வேண்டும்,

சந்தை வாய்ப்புக்களை அதிகரிக்க வேண்டும், சந்தைகளைப் புனரமைப்புச் செய்ய வேண்டும், உணவு உற்பத்தி தரவுத்தளமும் பொதுத்துறை விநியோக வழிகளும் பலப்படுத்தப்பட வேண்டும், தொற்றுநோய்களின் போது தனியார் துறையின் நுகர்வோர் சுரண்டல் மற்றும் முறைகேடுகளைத் தடுத்தல் வேண்டும், அத்துடன் பிரதேசங்களுக்கு இடைப்பட்ட, நாடுகளுக்கு இடைப்பட்ட உணவுப் பரிமாற்றங்களை ஊக்குவிக்க வேண்டும், உள்நாட்டு உற்பத்தியை அதிகரிக்க வேண்டும், அதாவது விவசாய உற்பத்தி, மீன்பிடி உற்பத்தி, விலங்கு உற்பத்திகளின் ஊடாகவும் தன்னிறைவு பெறலாம். சமகால மற்றும் குறுகியகால சவால்களை நிர்வகித்தல், சேமிப்பு வசதிகளை அதிகரித்தல், அதேபோன்று வனவிலங்குகளான யானைகள், குரங்குகள் மற்றும் முதலைகளினால் ஏற்படக்கூடிய பிரச்சினைகள் யாவும் கிராமங்களில் பாரிய பிரச்சினைகளாக இருக்கின்றன. அவற்றிற்கு தகுந்த தீர்வுகளைக் காண வேண்டும், பொருளாதாரம் சார்ந்து மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ள மக்களுக்கு வருவாய் சார்ந்த சந்தர்ப்பத்தினை வழங்க வேண்டும். தனிநபர்களிடையே ஆரோக்கியமான உணவுப் பழக்கம் குறிப்பாக ஊட்டச்சத்து மற்றும் உணவுப் பாதுகாப்பு தொடர்பாக பொதுமக்களுக்குக் கல்வி கற்பிப்பதில் கொள்கைகளை உருவாக்க வேண்டும். சிறந்த பொருளாதாரக் கொள்கைகளை உருவாக்கி செயற்படுத்த வேண்டும்.

உணவு விலைகளை குறைத்தலின் சாத்தியப்பாடுகளை அவதானிக்கும் போது, உணவு பதுக்கலைக் குறைத்தல், உள்நாட்டு உற்பத்தியை அதிகரித்தல், இறக்குமதி செய்யப்படும் உணவுகளின் விலைகளைக் குறைத்தல், கட்டுப்பாட்டு விலைகளை உருவாக்குதல் மற்றும் அறுவடைக்கு பின்னரான தொழில்நுட்பங்கள் என்பன முக்கியமான சிபாரிசுகளாக காணப்படுகின்றன. அதேபோன்று வருமானத்தை எவ்வாறு அதிகரிக்கலாம் என்று அவதானித்தால், உற்பத்திகளை பெறுமதி சேர்க்கப்பட்ட முடிவுப் பொருட்களாக மாற்றுவதற்கான தொழில்நுட்பத்தைக் கையாள வேண்டும். உற்பத்திகளை அதிகரித்து சந்தைப்படுத்தலை எவ்வாறு மேற்கொள்ள வேண்டும் என்பதில் கவனம் செலுத்த வேண்டும். உற்பத்திச் செலவைக் குறைக்க வேண்டும். விளைபொருட்களுக்கான விலையை அதிகரிக்க வேண்டும். வருமானத்தினை பன்முகப்படுத்த வேண்டும். விளைச்சலை அதிகரிக்க வேண்டும். இதனடிப்படையில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளாக உடனடியாக நலிவுற்றோர் எனப்படும் ஐந்து வயதுக்குட்பட்ட சிறுவர்கள், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் வயது முதிர்ந்தவர்களை சரியாகக் கண்டறிந்து அவர்களுக்கான போசாக்கு உணவுகள், போசணைக் கலவை போன்றவற்றை அரசாங்கம் வழங்க வேண்டும். அவர்களுக்கான மிகச்சிறந்த தரவுத் தளத்தினைப் பேணுதல் இச் செயற்பாடுகளை ஒழுங்கமைக்க வழிவகுக்கும். இது அடிப்படையான முதலாவது சிபாரிசாக காணப்படுகின்றது. உலர் உணவுகளை வழங்குதல், விழிப்புணர்வுகளை வழங்குதல் என்பன உடனடித் தேவைகளாக காணப்படுகின்றன. அதேபோன்று சில தொழிற்சாலைகள் வருவாயின்றி செயலிழந்து காணப்படுகின்றன. அவற்றிற்கான பொருத்தமான இடையீட்டினைச் செய்ய வேண்டும். தற்போது கோழி வளர்ப்பானது

தீவனம் இல்லாத காரணத்தினால் பாதிக்கப்பட்டிருக்கின்றது. உரத்திற்கான தட்டுப்பாடு காரணமாக விவசாய உற்பத்திகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. இந்நிலையினை நிவர்த்தி செய்ய விவசாயிகளுக்கான நெல், உரம் மற்றும் விதைகளை வழங்க வேண்டும். அதேபோன்று பொதுமக்களுக்கான உடனடி இடையீடாக அத்தியாவசிய உணவுகளை எவ்வாறு வழங்க வேண்டும்? எப்படி வழங்க வேண்டும்? உதாரணமாக பால் பொருட்களை வழங்குதல், போசணைகளை வழங்குதல், சில பொருட்களை தேவைப்படும் இடங்களுக்கு பொதுவாக வழங்குதல் என்பவற்றை ஒரு முறைமையூடாக மேற்கொள்ள வேண்டும். தோட்டத் தொழிலாளர்களின் நலன் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும். யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு வடக்கு கிழக்கில் வாழ்கின்ற மக்களின் தேவைகள் தொடர்பாக கவனிக்க வேண்டும். எரிபொருள் பற்றாக்குறையானது விவசாயிகளுக்கு பாரிய பிரச்சினையாக காணப்படுவதனால், அவர்களுக்கென தனியான எரிபொருள் நிரப்பு நிலையங்களை உருவாக்கி அல்லது ஒரு நிரப்பு நிலையத்தையே அதற்கு என ஒதுக்கி அதன்மூலம் எரிபொருட்களை வழங்க வேண்டும்.

அதேபோன்று விலங்கு உற்பத்தியினை எடுத்துக்கொண்டால் பால் உற்பத்திகள், மீன் உற்பத்திகள் என்பன பாதிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றை மீளக்கட்டியெழுப்புவதற்கான வழிவகைகளை மேற்கொள்ள வேண்டும். அந்தவகையில் மீன்வளர்ப்பினை ஊக்குவிக்க வேண்டும். பால் சேகரிப்பு, கால்நடை வளர்ப்பினை மேற்கொள்ள வேண்டும். கொள்கை திட்டமிடல்களை தொழில்வாண்மையினூடாக மேற்கொள்ள வேண்டும். இவை கொள்கைசார் தீர்மானங்களாக இருக்க வேண்டும். விவசாய வல்லுநர்கள், பொருளாதார வல்லுநர்கள் மற்றும் ஏனைய துறைசார் வல்லுநர்கள் போன்றோர் இத்திட்டக்குழுவில் இருக்க வேண்டும். தொழில்வாண்மை (Entrepreneurship) சார்ந்து சிறந்த விவசாய ஆராய்ச்சிகள் இருக்க வேண்டும். நல்ல சந்தைவாய்ப்புக்கள் இருக்க வேண்டும். நல்ல தொழில்வாண்மையான திட்டமிடல்கள் இருக்க வேண்டும். அதற்கு உதவியளிக்கும் நிறுவனங்கள் இருக்க வேண்டும். நல்ல சமூகம் அல்லது கலாசாரம் இருக்க வேண்டும்.

அதேபோன்று பயிர், விலங்கு மற்றும் மீன் ஆகிய மூன்றும் உணவுப் பாதுகாப்பினுடைய அடிப்படையாகக் காணப்படுகின்றன. இவற்றினூடாக உணவுப் பாதுகாப்பு ஏற்படுத்தப்பட்டு இயற்கை முதல்களான நீர், நிலம் என்பன வளப்படுத்தப்படவேண்டும். முக்கியமாக விவசாய உள்ளீடுகளான விதைகள், உரம் மற்றும் கிருமிநாசினிகள் கிடைப்பனவு இருக்க வேண்டும். விவசாய விரிவாக்கம், காப்புறுதிகள், நிதியுதவிகள் என்பன இருக்கும்போது உணவுப் பாதுகாப்பான தேசம் உருவாக்கப்படும். இவையே அடிப்படைகளாகக் காணப்படுகின்றன. இவை தொடர்பான கொள்கையில் ஏற்பட்ட குழப்பமே உணவுப் பாதுகாப்பின்மைக்கான முக்கிய காரணமாகும். இவற்றுள் அரசியல் காரணங்களும் இருக்க முடியும். சிலவேளைகளில் சந்தைவாய்ப்பு (Markets) காரணமாக இருக்கலாம். கலாசாரம் காரணமாக இருக்கலாம். எவ்வாறாயினும் திட்டமிடல்கள் சரியாக அமையாததன் காரணமாக நாட்டின் உணவுப் பாதுகாப்பு குறைவடைந்து கொண்டிருக்கின்றது.

உணவுப் பாதுகாப்பினைப் பேணுவதற்காக மேற்கொள்ளவேண்டிய செயற்பாடுகளாக, இறக்குமதிகளைக் குறைக்கலாம், மிகவும் அவசியமான பொருட்களை மாத்திரம் இறக்குமதி செய்துவிட்டு ஏனையவற்றை உள்நாட்டிலே உற்பத்தி செய்யலாம். உதாரணமாக மைசூர் பருப்பு போன்றவற்றை இறக்குமதி செய்யலாம். ஆனால் வெங்காயம், சோளன் மற்றும் உருளைக்கிழங்கு போன்ற அனைத்தும் இறக்குமதி செய்யப்படுகின்றது. இவ்வாறு அனைத்தையும் இறக்குமதி செய்வதனால் டொலர் கையிருப்பு குறைந்துகொண்டே செல்கின்றது. எமது நாட்டில் அரிசி உணவுகளை விட்டு கோதுமை உணவுகளையே அதிகம் பயன்படுத்துகின்றோம். பொதுவாக ஐரோப்பிய நாடுகளில்தான் கோதுமைப் பாவனை இருந்தது. ஆனால் நாங்கள் முற்றுமுழுதாக கோதுமைக்கு மாறிவிட்டோம் என்று கூறுமளவிற்கு நாட்டில் கோதுமை பாவனை அதிகரித்துவிட்டது. உண்மையில் அரிசி மற்றும் உழுந்து சார்ந்த உணவுகள் எவ்வளவோ இருக்கின்றன. உதாரணமாக இடியப்பம், இட்லி, தோசை என்று எல்லாம் இருக்கின்றன. அவற்றின் பயன்பாட்டினை அதிகரிக்கலாம். அதேபோன்று தற்காலத்தில் சேதனைப் பசளைகள், இயற்கை விவசாயம் போன்ற விடயங்கள் அதிகம் பேசப்படுகின்றன. இம்முறைமை நன்மைபயப்பனவாக இருந்தபோதிலும் பாரியளவிலான வர்த்தக விவசாயம் (Commercial Agriculture) சாத்தியமற்றது ஆகும். இயற்கை விவசாயம் சிறியளவிலான விவசாயத்துக்கு நன்மை தரும். எனவேதான் உரமானியத்தை மீளவும் கொண்டுவர வேண்டும். அதேபோன்று இலகுவில் பாதிக்கப்படக்கூடிய பாடசாலை மாணவர்கள், கர்ப்பிணித்தாய்மார்கள் மற்றும் வயது முதிர்ந்தோர்களுக்கான உணவு வழங்கும் திட்டங்களை கொண்டுவந்து போசாக்கான உணவுகளை விநியோகிக்க வேண்டும். இவ்வாறான உணவுப் பாதுகாப்பினை மேம்படுத்தும் போது வறுமையற்ற மற்றும் பட்டினியற்ற தேசம், நல்ல ஆரோக்கியம்மிக்க போசாக்குமிக்க ஒரு சமுதாயம், இதனூடாக நல்ல பருவகாலம் மற்றும் அமைதியான நிலத்தில் வாழ்க்கை என்பன அமையப்பெறும். Life on Landஇல் ஏற்பட்ட குழப்பம் காரணமாகவே யானைகள் மக்களின் வாழ்விடத்திற்குள் வருகின்றன. மனிதர்கள் உணவுப் பாதுப்புக்காக அங்கலாய்த்துக் கொண்டிருக்கின்றார்கள். விறகுக்காக மரங்களை அதிகமாக வெட்டும்போது அங்கு காலநிலையில் பிரச்சினை உருவாகின்றது.

அந்தவகையில் கிடைக்கும் தன்மை, வாங்கக்கூடிய தன்மை, பாதுகாப்பான உணவு என்பன ஒரு சமநிலையில் பேணப்பட்டால் இந்த உணவுப் பாதுகாப்பானது ஒரு நிலையானதாக இருக்கும். உணவுகள் கிடைத்தாலும் உணவுகள் வீணாக்கப்படுகின்றன. உணவுகளை அதிகமாக சாப்பிட்டு வீணாக்குபவர்களுக்கு மத்தியில்தான், நீரிழிவு நோய்களும் புற்றுநோய்களும் (Cancer), இரத்த அழுத்தமும் (Blood Pressure) ஏற்படுகின்றது. அதேநேரம் உணவு கிடைக்காமையினாலும் பிரச்சினைகள் ஏற்படுகின்றது. உணவுப் பற்றாக்குறையினால் போசணைக் குறைபாட்டு நோய்கள் ஏற்படுகின்றன. இவை இரண்டிலும் சமநிலையினை

ஏற்படுத்த வேண்டும். உணவை எடுத்துக்கொள்ளும் போது கார்போஹைதரேற்றை சமநிலையாக எடுத்துக்கொள்ள வேண்டும். சோற்றில்கூட நல்ல கார்போஹைதரேற்று இருக்கின்றது. நார்ச்சத்து நிறைந்த உணவுகளை அதிகம் எடுத்துக் கொள்ளல் வேண்டும். எவ்வாறாயினும் உண்ணும் உணவில் தானிய புரதத்தில் சமநிலையைப் பேண வேண்டும். இட்லி, தோசை என்பன ஒரு நிறையுணவாகக் காணப்படுகின்றன. இத்தகைய நிறையுணவுகளான இட்லி, தோசையை மறந்து தற்பொழுது வெதுப்பக உற்பத்திகளை நாடுகின்றோம். இதன்காரணமாக மாரடைப்பு போன்ற பிரச்சினைகள் ஏற்படுகின்றன. சரியான கொழுப்புத் திட்டமிடல் (Proper Fat Plan) இருக்க வேண்டும். குறிஞ்சா போன்ற இயற்கை சார்ந்த உணவுகளை உண்ண வேண்டும். 1008 மில்லியன் அளவிலான நுண்ணுயிர்கள் எங்களது குடலில் வாழ்ந்து கொண்டிருக்கின்றன. அதற்காகவே அடிக்கடி தயிர் சாப்பிட வேண்டும் எனக் கூறுவார்கள். அதேபோன்று வயதுக்கேற்ற உடற்பயிற்சி செய்ய வேண்டும். அத்துடன் போதுமான நேரம் (7 - 8 மணித்தியாலங்கள்) தூக்கம் அவசியமாகும். உணவுப் பாதுகாப்பு இருந்தாலும் இவற்றினை கடைப்பிடிக்காவிடின் பிரச்சினைகள் ஏற்படலாம். இதனடிப்படையில் இரண்டு விதமான அடிப்படைக் கருதுகோள்கள் இருக்கின்றது. உணவே மருந்து. மருந்தே உணவு (Let Food Be Thy Medicine And Medicine Be The Food). அதேபோன்று ஆயர்வேத மருத்துவத்தின் அடிப்படையில் உணவு சரியாக இல்லாவிடின், என்ன மருந்து எடுத்தாலும் சரிப்படுத்த முடியாது. அதேநேரம் உணவு சரியாக இருக்குமாயின் எந்த மருந்தும் எங்களுக்குத் தேவைப்படாது (When Diet is Wrong Medicine is of No Use. When Diet is Correct Medicine is of No Need). இவை இரண்டும் உணவுசார்ந்த தாரகமந்திரங்கள் ஆகும்.

## உசாத்துணை

Food Security and Nutrition Crisis in Sri Lanka- Relief Web.

Gunaratne., M. S., Radin Firdaus., R. B. & Rathnasooriya., S. I, Climate Change and Food Security in Sri Lanka: Towards Food Sovereignty, www.Nature.com

National Strategic Review of Food Security and Nutrition in Sri Lanka - World Food Programme Report.

Sangakkara., U. R. & Nissanka., S. P. (2008). Food Security in Sri Lanka - Agronomic implications and potentials. *Journal of the National Science Foundation of Sri Lanka.* 36(2), 17-24.

Sri Lanka’s Food Security in the Context of COVID 19, CBSL Annual Report-2020.

## அத்தியாயம் 10

# தற்போதைய பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வாக ஒருங்கிணைந்த கைத்தொழில் அபிவிருத்தி

# Integrated Industrial Development is a Solution for the Current Economic Crisis

**Prof. S. Sivesan**
Professor in Marketing,
Department of Marketing,
Faculty of Management Studies & Commerce,
University of Jaffna.

(27.07.2022 அன்று நடைபெற்ற நிகழ்நிலைக் கருத்தரங்கின் தொகுப்பு)

## அறிமுகம்

இலங்கையின் பொருளாதாரமானது பாரிய பொருளாதார நெருக்கடிக்குள் சிக்குண்டு தற்போது மெல்ல மெல்ல மீண்டெழுந்து வருகின்றது. குறிப்பாக 2022ஆம் ஆண்டின் மத்திய பகுதியில் இலங்கையில், பொருளாதார நெருக்கடியானது மிகவும் தீவிரமடைந்து காணப்பட்டதோடு எரிபொருள் நெருக்கடி, எரிவாயு நெருக்கடி மற்றும் மின்சாரத் துண்டிப்பினால் நாட்டின் அன்றாடச் செயற்பாடுகள் மிகவும் பாதிக்கப்பட்டன. தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கான முக்கியமான காரணங்களாக அரசியல் ஸ்திரமின்மை, உலக அரசியல் மாற்றங்கள் குறிப்பாக ரஷ்ய மற்றும் உக்ரைன் நாடுகளுக்கிடையிலான தீவிர மோதல், பாரிய பொதுப்படுகடன் நெருக்கடி, பாதுகாப்புச் செலவீனங்களுக்காக அதிகளவு நிதி ஒதுக்கீடு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு வருமானத்தில் ஏற்பட்ட வீழ்ச்சி, சுற்றுலா வருமானத்தில் ஏற்பட்ட பின்னடைவு மற்றும் திட்டமிடப்படாத உட்கட்டமைப்பு அபிவிருத்தி போன்வற்றைக் குறிப்பிடலாம்.

## இலங்கையின் தற்காலப் பொருளாதார நெருக்கடிக்குரிய காரணங்கள் தொடர்பான விரிவான பார்வை

குறிப்பாக சுதந்திரத்திற்குப் பின்னர் ஆட்சிக்கு வந்த அரசாங்கங்களின் தவறான கொள்கைத் தீர்மானங்கள், எதிர்பாராத ஆட்சி மாற்றங்கள் மற்றும் நெருக்கடி காலத்தில் அரசாங்கத்திற்கு எதிராக பொதுமக்கள் மேற்கொண்ட பாரிய ஆர்ப்பாட்டங்கள் மற்றும் போராட்டங்களால் நாட்டில் அரசியல் ஸ்திரமின்மையானது ஏற்பட்டது. ஒருபுறம் பொருளாதார நெருக்கடியினாலும் மறுபுறம் அரசியல் ஸ்திரமின்மையாலும் நாடு பாரிய பிரச்சினைகளைச் சந்தித்தது. இலங்கையானது 1948ஆம் ஆண்டு சுதந்திரம்பெற்ற காலத்திலிருந்து தற்போது வரைக்கும் அரசியல் ரீதியாக உறுதியற்றுக் காணப்பட்டது என்பதற்கு மாற்றுக்கருத்துக்கு இடமில்லை.

சுதந்திரத்திற்குப் பின்னர் இலங்கையானது எதிர்கொண்ட பாரிய பொருளாதார நெருக்கடியாக தற்போதைய பொருளாதார நெருக்கடியானது பார்க்கப்படுகின்றது. 1982இல் அரசியல் ரீதியாக நெருக்கடி எற்பட்டு இனரீதியிலான மோதலாக அது மாற்றப்பட்டு உள்நாட்டு யுத்தம் ஆரம்பித்த காலத்திலிருந்து 2009இல் யுத்தம் முடிவுக்கு வரும் வரைக்கும் உள்நாட்டு யுத்தத்தினால் குறிப்பாக நாட்டின் வடகிழக்குப் பகுதியிலுள்ள வளங்கள் மோசமாகப் பாதிக்கப்பட்டன. 2009ஆம் ஆண்டு யுத்தமானது மௌனித்த போதிலும் தமிழ் மக்களுக்கான நிரந்தரத் தீர்வு இன்றி யுத்தமானது முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. யுத்தம் முடிவடைந்தாலும் கூட பாதுகாப்புச் செலவினங்கள் தொடர்ந்தும் அதிகரித்து வருகின்றன. அதற்கு இணையாக அரச வருமானத்தில் போதிய வளர்ச்சியினைக் காணமுடியாமலுள்ளது. இதனால் நாடு பாரிய பொதுப் படுகடன் பற்றாக்குறையை எதிர்கொள்கின்றது.

மேலும் இலங்கையின் பொருளாதாரத்தில் பூகோளரீதியான அரசியலும் செல்வாக்குச் செலுத்துகின்றது. குறிப்பாக அண்மைய நாடான இந்தியா, சீனா, அமெரிக்கா மற்றும் ஏனைய தூரகிழக்காசிய நாடுகளின் செல்வாக்கு மற்றும் சர்வதேச அரசியலில் ஏற்படும் மாற்றங்கள் பலவற்றை இதற்கு உதாரணமாகக் குறிப்பிடலாம். யுத்ததிற்குப் பின்னர் வடகிழக்கு மாகாணங்களின் அபிவிருத்தியில் சீனாவும் இந்தியாவும் போட்டிபோட்டுக்கொண்டு செல்வாக்குச் செலுத்துகின்ற தன்மையை அவதானிக்க முடிகின்றது. இருப்பினும் அவ் அபிவிருத்தியானது வீதிகள், நெடுஞ்சாலைகள், பாலங்கள் போன்ற சமூக மற்றும் பொருளாதார ரீதியிலான அபிவிருத்தியோடு சுருங்கிவிட்டதே தவிர கைத்தொழில் ரீதியிலான அபிவிருத்திக்கான மூதலீடுகளாக அவை அமையப்பெறவில்லை. உட்கட்டமைப்பு ரீதியிலான அபிவிருத்திகள் இடம்பெற்றாலும் அவற்றுக்கு மேலதிகமாக பிராந்தியங்களில் கைத்தொழில் ரீதியிலான அபிவிருத்திக்கான வெளிநாட்டு முதலீடுகள் இடம்பெற்றால் மாத்திரமே அப்பிராந்தியங்களை பொருளாதார ரீதியாக முன்னேற்றலாம். மேலும், இலங்கையில் ஆட்சிக்கு வருகின்ற ஆட்சியாளர்களினுடைய சிந்தனைகளுக்கேற்றவாறும், அவர்கள் ஆதரிக்கின்ற வெளிநாட்டுக் கொள்கைகளுக்கு ஏற்றவாறும் பூகோளரீதியான அரசியல் தலையீடுகள் மாற்றமடைகின்றன.

இது தவிர உலக அரசியலில் ஏற்படுகின்ற மாற்றங்கள் என்ற வகையில் பார்க்கும்போது உக்ரைன் மற்றும் ரஸ்யாவுக்கிடையிலான மோதலால் சர்வதேச ரீதியாக நாடுகளினுடைய பொருளாதாரங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக உலகளவில் மசகெண்ணெய், பெற்றோல், டீசல் மற்றும் சமையல் எரிவாயு என்பவற்றின் விலைகள் அதிகரித்து விநியோக சங்கிலியில் பாரிய தாக்கமானது ஏற்பட்டுள்ளது. இதற்கு இலங்கையும் விதிவிலக்கல்ல. இலங்கையில் அன்றாடத் தேவைகளுக்கான எரிபொருள் மற்றும் எரிவாயு என்பவற்றின் விலைகள் உலகசந்தையில் பாரியளவில் அதிகரித்ததால், அவற்றை இறக்குமதி

செய்வதில் பாரிய சிக்கல் ஏற்பட்டது. இவற்றை இறக்குமதி செய்வதற்கு இலங்கையிடம் போதிய வெளிநாட்டு ஒதுக்குகள் இல்லாமையால் இவற்றுக்குப் பாரிய தட்டுப்பாடு ஏற்பட்டு அவற்றின் விலை அதிகரிப்பினால் எரிபொருளைப் பயன்படுத்தி இயங்குகின்ற அனைத்து உற்பத்திகளும் முடங்கின. பெற்றோல், டீசல், மசகெண்ணெய் மற்றும் சமையல் எரிவாயு போன்றவற்றிற்கு ஏற்பட்ட தட்டுப்பாட்டால் நாட்டு மக்கள் நீண்ட வரிசையில் காத்திருக்க வேண்டிய அவல நிலையேற்பட்டது. இதனால் உணவுப் பொருட்களின் விலை, போக்குவரத்துக் கட்டணங்கள், வாழ்க்கைச் செலவு போன்ற அனைத்தும் உயர்ந்தன.

மேலும், உக்ரைன் மற்றும் ரஷ்யா ஆகிய இரண்டும் இலங்கையின் சுற்றுலாத்துறைக்கு முக்கியமான சந்தைகளாக இருப்பதனால், ரஷ்யாவிற்கும் உக்ரைனுக்கும் இடையிலான யுத்தம் அதிகரித்ததானது இலங்கைக்கு பின்விளைவுகளை ஏற்படுத்தியது. இந்த வருடம் பெப்ரவரி 11ஆம் திகதி வரை இலங்கைக்கு வருகை தந்த மொத்த சுற்றுலாப் பயணிகளில் ரஸ்யர்கள் மட்டும் 15.8 வீதமாகவும், உக்ரேனியர்கள் 8.7 வீதமாகவும் காணப்பட்டனர். ஆனால் இரு நாடுகளுக்குமிடையில் யுத்தம் ஆரம்பித்ததிலிருந்து சுற்றுலாப் பயணிகளின் வருகை குறைவடைந்தமை நாட்டின் சுற்றுலாத்துறை வருவாயில் பாரிய பாதிப்பை ஏற்படுத்தியது. இவையும் இலங்கையின் சமகாலப் பொருளாதார நெருக்கடிக்கான முக்கிய காரணங்களாகச் சுட்டிக்காட்டப்படுகின்றன.

மேலும் இலங்கையின் தொடர்ச்சியான பாரிய வரவுசெலவுத்திட்டப் பற்றாக்குறையும் தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கான ஒரு முக்கிய காரணமாகும். குறிப்பாக கொவிட்-19 தொற்றுப் பரவலைத் தடுப்பதற்காகவும், பெற்றுக்கொண்ட கடனுக்கான வட்டிக் கொடுப்பனவை மீளச்செலுத்துவதற்காகவும் இலங்கை அரசாங்கம் பாரிய செலவீடுகளை மேற்கொண்டது. இருப்பினும் அதற்கு இணையாக அரச வருமானத்தில் போதிய வளர்ச்சியானது காணப்படவில்லை. முன்னாள் ஜனாதிபதி கோட்டாபாய ராஜபக்ஷ தன்னுடைய ஆட்சிக்காலத்தில் வழங்கிய வரிச்சலுகைகள், வரிக்குறைப்புக்கள் மற்றும் வரி நீக்கங்கள் போன்றவற்றால் இலங்கையில் வரி வருமானம் குறைவாகக் காணப்பட்டது. இதனால் இலங்கை அரசாங்கத்தின் பாதீட்டுப் பற்றாக்குறையானது பாரியளவால் அதிகரித்து, 2021ஆம் ஆண்டு மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வீதமாக 101 வீதத்தைப் பதிவுசெய்தது. எனவே இப்பாரிய வரவுசெலவுத்திட்டப் பற்றாக்குறையும் வரிவீதங்களைக் குறைக்கும் அரசாங்கத்தின் பிழையான கொள்கைத் தீர்மானங்களும் தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கான முக்கிய காரணங்களாகச் சுட்டிக்காட்டப்படுகின்றன.

மேலும் இலங்கைக்கு கூடுதலான வெளிநாட்டுச் செலாவணியை உழைத்துத் தருகின்ற துறையாக சுற்றுலாத்துறை காணப்படுகின்றது. சுற்றுலாத்துறையானது ஆரம்பகாலத்திலிருந்து இலங்கையில்

வளர்ச்சிபெற்ற போதிலும் குறிப்பாக 2009ஆம் ஆண்டு உள்நாட்டு யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டதைத்தொடர்ந்து பாரிய வளர்ச்சிகண்டது. இக்காலப்பகுதியில் 447,890 சுற்றுலாப் பிரயாணிகள் இலங்கைக்கு வருகை தந்திருந்தார்கள். அவ்வாண்டில் சுற்றுலாத்துறையினூடாக உழைத்த வருமானம் 2,152 மில்லியனாகக் காணப்பட்டது. அதனைத்தொடர்ந்து 2018ஆம் ஆண்டு இலங்கை வரலாற்றிலே கூடுதலான சுற்றுலாப் பிரயாணிகள் (2.3 மில்லியன்) இலங்கைக்கு வருகை தந்திருந்தார்கள். அவ்வாண்டில் 12874.8 பில்லியன் வருமானத்தை இலங்கை அரசாங்கம் உழைத்திருந்தது.

இருப்பினும் துரதிஷ்டவசமாக அதிக வருவாயை ஈட்டித் தருகின்ற சுற்றுலாத் தொழிற்துறையானது ஈஸ்டர் குண்டுத் தாக்குதல், கொவிட்-19 தொற்றுப் பரவல் மற்றும் சமகாலப் பொருளாதார நெருக்கடி போன்ற தொடர் பிரச்சினைகளால் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டது. குறிப்பாக, 2019ஆம் ஆண்டில் உருவான கொவிட்-19 பெருந்தொற்றால் ஏற்பட்ட பொருளாதார மந்தநிலையின் தொடக்கமானது நெருக்கடியை விரைவுபடுத்தியது. இலங்கையும் அண்டைய நாடுகளும் சர்வதேச விமான சேவைகளை நிறுத்தின. நாடு முடங்கியது. சுற்றுலாப் பயணிகளின் வருகை சடுதியாகக் குறைந்தது.

இதனால் பொருளாதாரத்தின் தூண்களாக விளங்குகின்ற தேயிலை, ஆடை உற்பத்திக்கு அடுத்ததாக அதிக வருவாய் ஈட்டித்தந்த சுற்றுலாத்துறையும் முற்றிலுமாகப் பாதிக்கப்பட்டது. இந்த மூன்றைத் தவிர வேறு எந்த குறிப்பிடத்தக்க வருமானமும் இல்லாத இலங்கை படிப்படியாகப் பொருளாதாரப் பின்னடைவைச் சந்திக்கத் தொடங்கியது. மேலும் 2021ஆம் ஆண்டில் வெளிநாட்டுக்கடன் அதிகரிப்பானது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் தாக்கத்தை ஏற்படுத்தியது. அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட பொருளாதார நடவடிக்கையானது 2022இல் இலங்கைப் போராட்டங்களுக்கு வழிவகுத்தன. மேலும் திட்டமிடப்படாத உட்கட்டமைப்பு அபிவிருத்திகளும் அரசின் பிழையான கொள்கைத் தீர்மானங்களும் கூட தற்போதைய பொருளாதார நெருக்கடிக்குக் காரணங்களாகும். மேலும் அரச நிர்வாகத்தில் காணப்படுகின்ற குறைபாடுகள் மற்றும் ஊழல், இலஞ்சம் என்பனவும் மேலைத்தேய நாகரீக மோகத்தை நோக்கிய நுகர்வோர் நடத்தையில் ஏற்பட்ட பாரிய மாற்றங்களால் அதிகரித்த நுகர்வுச் செலவுகளும் தற்போதைய பொருளாதார சிக்கல்களுக்குக் காரணங்களாகும்.

## தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கான குறுங்கால மற்றும் நீண்டகாலத் தீர்வுகள்

குறுங்காலத் தீர்வுகள் என்ற அடிப்படையில் பார்க்கும்போது வரி வீதத்தைக் அதிகரித்தல், வரி ஏய்ப்புகளைக் கட்டுப்படுத்துதல் மற்றும் வரிச்சலுகைகளைக் குறைத்தல் அல்லது நீக்குதல் போன்றவற்றினூடாக அரச வருமானத்தை அதிகரிப்பது சிறந்த ஒரு உத்தியாக அமைந்துள்ளது. இது தவிர பொதுமக்களுக்கு அடிப்படை வசதிகளை

ஏற்படுத்திக் கொடுப்பதனூடாக தற்போதைய நெருக்கடிக்கு ஓரளவு தீர்வு காணலாம். அதாவது எரிபொருள், சமையல் எரிவாயு, இரசாயணப் பசளை மற்றும் கிருமிநாசினிகள், மருந்துப் பொருட்கள் மற்றும் ஏனைய அத்தியாவசியப் பொருட்கள் என்பவற்றிற்குக் காணப்படுகின்ற தட்டுப்பாடுகளாலும் தினமும் பலமணிநேரம் ஏற்பட்ட மின்சாரத் துண்டிப்பினாலும் மக்கள் மத்தியில் அமைதியின்மையும் நாடளாவியரீதியில் பல போராட்டங்களும் வெடித்தன. எனவே பொதுமக்களுக்குத் தேவையான அத்தியாவசியத் தேவைகளைப் பெற்றுக்கொடுப்பதனூடாக தற்போதைய சமகால நெருக்கடிகளுக்கும் மக்கள் மத்தியில் ஏற்பட்ட பிரச்சினைகளுக்கும் ஓரளவு தீர்வுகாணமுடியும்.

தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு குறுங்காலத்தில் தீர்வுகாண்பதென்பது மிகவும் கடினமான விடயமாகும். அதனைக் கட்டுப்படுத்தி அதிலிருந்த மீண்டுவர உண்மையில் மிகநீண்டகாலம் தேவை. தற்போதைய பொருளாதார நெருக்கடியைக் கட்டுப்படுத்தத் தேவையான நீண்டகாலத் தீர்வுகளாக ஒருங்கிணைந்த கைத்தொழில் அபிவிருத்தியை ஏற்படுத்துதல், விசேட நாட்டங்கொண்ட சுற்றுலாத்துறையை முன்னேற்றுதல், நாட்டின் ஏற்றுமதித் துறையையும் ஏற்றுமதிப் பதிலீடுகளையும் வலுப்படுத்துதல் மற்றும் பொதுத்துறையின் வினைத்திறனைக் கூட்டுவதனூடாக பொதுத்துறையின் உற்பத்தித் திறனை அதிகரித்தல் போன்றவற்றினைக் குறிப்பிடலாம். இவற்றுள் மிக முக்கியமானது ஒருங்கிணைந்த கைத்தொழில் அபிவிருத்தியை நாட்டில் ஏற்படுத்துவதாகும். பொதுவாக எல்லாக் கைத்தொழில்களும் ஒன்றோடொன்று தொடர்புபட்டதாகவே காணப்படுகின்றன. அபிவிருத்தியை தனித்து ஒரு துறையினூடாக ஏற்படுத்த முடியாது.

எல்லாக் கைத்தொழிற்துறைகளும் ஒரு குடைக்குக் கீழ் (Umbrella Industry) காணப்படுகின்றன. குறிப்பாக சுற்றுலாத்தொழிற்துறையை கருதினால், அது விருந்தோம்பல் துறை (Hospitality Industry), வாழ்வாதாரத் தொழிற்துறை (Livelihood Sector), விவசாயத்துறை, மீன்பிடித்துறை, கல்வித்துறை மற்றும் சுகாதாரத்துறை எனப்பல துறைகளோடு தொடர்புபட்டதாகக் காணப்படுகின்றன. ஒவ்வொரு துறைகளுக்குமிடையில் ஒவ்வொரு விதமான தொடர்பு காணப்படுகின்றது. எனவே, ஒருங்கிணைந்த அபிவிருத்தியின் கீழ் ஏனைய துறைகளோடு சுற்றுலாத்துறையும் இணைந்து சமாந்தரமாக அபிவிருத்தியடையும்.

## இலங்கையில் விவசாயத்துறையூடான ஒருங்கிணைந்த கைத்தொழில் அபிவிருத்தி

இலங்கை ஒரு விவசாய நாடாகக் காணப்படுவதால் நாட்டின் மொத்த உற்பத்திக்கு விவசாயத்துறையும் குறிப்பிடத்தக்க முக்கியமான பங்களிப்பினைச் செய்கிறது. இலங்கை சுதந்திரம் பெற்ற காலத்தில் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு அதிக பங்களிப்பினைச்

செய்த விவசாயத்துறையின் சார்புரீதியான பங்களிப்பானது தற்போது குறைவடைந்துவருவதோடு அத்துறையானது பாரிய பின்னடைவையும் எதிர்நோக்கியுள்ளது. இலங்கையில் விவசாயத்துறையில் காணப்படுகின்ற மிகமுக்கியமான பிரச்சினை குறைந்த உற்பத்தித் திறனாகும். இதற்கு மிகமுக்கியமான காரணம் வினைத்திறன் கூடிய அதிநவீன தொழில்நுட்பங்களின் கையாளுகை விவசாயத்துறையில் குறைவாக இருத்தல் (மரபுரீதியான தொழில்நுட்பங்களின் கையாளுகை), குறைந்தளவிலான நவீன இயந்திரங்களின் பாவனை மற்றும் உரத்தட்டுப்பாடு போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

குறிப்பாக முன்னாள் ஜனாதிபதி கோட்டாபாய ராஜபக்ஷ, இலங்கையில் இயற்கை விவசாயத்தை 100 சதவீதம் உருவாக்கும் நோக்குடன் இரசாயணப் பசளைகளின் இறக்குமதிக்கு முற்றாகத் தடைவிதித்ததன் காரணமாக உரங்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டு அவற்றின் விலை அசாத்தியமாக மிகவும் உயர்வடைந்ததால் விவசாயிகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டனர். இலங்கையில் யுத்தம் இடம்பெற்ற காலத்தில் கூட கைத்தொழில் மற்றும் சேவைத்துறைகள் பாதிக்கப்பட்டாலும் விவசாயத்துறை ஓரளவுக்கு முன்னேற்றகரமான நிலையில் இருந்தது. ஆனால், இரசாயண உரங்களின் இறக்குமதியைக் கட்டுப்படுத்துவதற்காக முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மேற்கொண்ட தவறான கொள்கைத் தீர்மானங்களால் விவாசாய உற்பத்தியானது மோசமாகப் பாதிக்கப்பட்டு உற்பத்தித் திறன் குறைவடைந்து விவசாயிகள் பாரிய நட்டத்தைத் தழுவினர். ஏனெனில் இலங்கையிலுள்ள விவசாய நிலங்கள் இரசாயண உரப் பாவனைக்கு அதிகம் பழக்கப்பட்டமையினால் விரைவாக இரசாயண உரங்களின் இறக்குமதிக்கு தடையேற்பட்டு இயற்கை உரங்களை பாவிக்க முற்பட்டவேளையில் எதிர்பார்த்த விளைச்சலைத் தரவில்லை. இதனால் விவசாயத்துறையில் உற்பத்தி குறைவடைந்தது. எனவே, விவசாயிகளுக்குத் தேவையான உரத்தைப் பெற்றுக்கொடுப்பது, விவசாயத்திற்கு உகந்த சூழலையும் அடிப்படை வசதிகளையும் ஏற்படுத்திக்கொடுப்பது போன்றவற்றினூடாக நீண்ட காலத்தில் விவசாய உற்பத்தியில் தன்னிறைவை ஏற்படுத்திக்கொள்ள முடியும்.

மேலும், விளைநிலங்கள் சரியானமுறையில் வினைத்திறனாகப் பயன்படுத்தப்படாமையும் நாட்டின் பொருளாதாரத்திற்குப் பங்களிப்புச்செய்யாத பிழையான முதலீடுகளும் சமகால நெருக்கடிக்கு முக்கிய காரணங்களாகும். முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவர்கள் ஆட்சிக்கு வந்ததும் வங்கிகளில் வட்டிவீதத்தைக் குறைத்ததால், மக்கள் வங்கியில் வைத்துள்ள தமது வைப்புக்கள் அனைத்தையும் மீளப்பெற்று நாட்டின் பொருளாதாரத்திற்குப் பங்களிப்புச்செய்யாத வினைத்திறனற்ற முதலீட்டு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். அதாவது, காணிகள் மற்றும் தங்க நகைகளைக் கொள்வனவு செய்வதிலும், கட்டிடங்களைக் கட்டுவதிலுமே பெருமளவு முதலீடுகளைச் செய்தார்கள். தெருவோரங்களில் காணப்பட்ட

பெரும்பாலான விளைநிலங்களை, கட்டிடங்களைக் கட்டி அவற்றை வாடகைக்கு விடுவதற்காகப் பயன்படுத்தினர். இவ்வினைத்திறனற்ற மற்றும் குறைவான வளப்பயன்பாடும் அத்துமீறல்களும் திட்டமிடப்படாத முதலீட்டு நடவடிக்கைகளும் தற்போது விவசாயத்துறை எதிர்நோக்கும் முக்கியமான பிரச்சினைகளாகும்.

இதுதவிர நிறுவனரீதியான குறைபாடுகள் என்ற வகையில் பார்க்கும்போது விவசாயத்துறைசார் திறமையான ஊழியர்களுக்குக் காணப்படும் தட்டுப்பாடு, பொருத்தமற்ற அரச நியமனங்களால் மனித வலு விரயமாக்கப்படுதல், விவசாயிகளுக்கு நவீன தொழில்நுட்பங்களைக் கையாளும் தொழில்நுட்ப அறிவு குறைவாகவிருத்தல், கைத்தொழில்சார் நிறுவனங்களுக்கிடையில் போதிய ஒருங்கிணைப்பு காணப்படாமை மற்றும் அரசிடம் விவசாயத்துறை அபிவிருத்திக்குத் தேவையான நீண்டகால மற்றும் குறுங்கால அபிருத்தித் திட்டங்கள் இல்லாமை போன்றவை முக்கிய குறைபாடுகளாகச் சுட்டிக் காட்டப்படுகின்றன.

எனவே இப்பிரச்சினைகளை சமாளிப்பதற்கு விவசாயத்துறையில் நவீன தொழில்நுட்பத்தின் கையாளுகையை ஊக்குவித்தல், மண்வளத்தைப் பாதுகாத்தல், விவசாயிகளிடையே நவீன தொழில்நுட்பசார் அறிவு மற்றும் திறன்களை விருத்தி செய்தல், அறுவடைசார் தொழில்நுட்பங்களை முன்னேற்றுதல், சந்தைசார் தகவல்களைப் பெற்றுக்கொடுத்தலும் சந்தையை விரிவுபடுத்துதலும், உற்பத்திகளைப் பன்முகப்படுத்துதல், நீர்பாசனத்தில் நவீன தொழில்நுட்பங்கள் மற்றும் சந்தை உத்திகளைக் கையாளுதல், சேமிப்பினை ஊக்குவிக்கும் வகையில் வட்டி வீதங்களைக் கூட்டுதல் மற்றும் சிறந்த முதலீட்டு ஆலோசனைச் சேவைகளை வழங்கல் போன்ற உபாயங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

## இலங்கையில் சுற்றுலாத்துறையூடான ஒருங்கிணைந்த கைத்தொழில் அபிவிருத்தி

இலங்கைக்கு அதிக வருவாய் ஈட்டித் தருகின்ற சுற்றுலாத் தொழிற்துறையினுடைய அபிவிருத்தியை நோக்கும்போது சுற்றுலாத்துறை அபிவிருத்தியினூடாக ஏனைய துறைகளும் ஒருங்கிணைந்து அபிவிருத்தியடையும் வாய்ப்பு காணப்படுகின்றது. இதனை ஒருங்கிணைந்த அபிவிருத்தி என்போம். இலங்கையானது இயல்பாகவே சுற்றுலாத்துறைக்கான சிறந்த வளங்களைக்கொண்ட ஒரு நாடு. குறிப்பாக இலங்கையில் சூழல்சார் சுற்றுலா (Eco - Tourism), விவசாய மற்றும் பண்ணைசார் சுற்றுலா (Agro and Farm Tourism), கலாச்சாரப் பாரம்பரிய சுற்றுலா (Cultural Heritage Tourism), நலன்சார் சுற்றுலா (Wellness Tourism), ஆன்மீகச் சுற்றுலா (Spiritual Tourism) மற்றும் சாகச மற்றும் இயற்கைசார் சுற்றுலா போன்றவை சிறந்து விளங்குகின்றன. இவ்வாறு பல்வேறு வகையான சுற்றுலாப் பொதிகளை வழங்கக்கூடியதாக இருந்தாலும் இலங்கையின் சுற்றுலாத்துறையானது பாரிய பல்வேறு சவால்களையும் எதிர்கொள்கின்றது. குறிப்பாக

இலங்கையின் வடகிழக்குப் பகுதிகளில் சுற்றுலாத்துறையானது தொடர்ந்தும் பின்தங்கியிருப்பதற்கு பல குறைபாடுகள் சுட்டிக்காட்டப்படுகின்றன. அதாவது இங்கு சுற்றுலாத்துறை அபிவிருத்திக்கான உட்கட்டமைப்பு வசதிகள் பற்றாக்குறையாகக் காணப்படுகின்றன. இதுதவிர இப்பகுதிகளில் மட்டுப்படுத்தப்பட்ட அல்லது குறைவான விருந்தோம்பல் மற்றும் சுற்றுலா வசதிகள் காணப்படுகின்றன.

அதாவது சுற்றுலாப் பிரயாணிகளுக்கான தங்குமிட வசதிகள், சுற்றுலா வழிகாட்டிகள் (Tourist Guide) மற்றும் சுற்றுலா முகவர்களுடைய (Tourist Agent) சேவையைப் பெற்றுக்கொள்வதில் பல சிக்கல்கள் காணப்படுகின்றன. மேலும் சுற்றுலாவினை விளம்பரப்படுத்துவதில் காணப்படுகின்ற வினைத்திறனின்மைகள் மற்றும் கலாச்சாரரீதியிலான பிரச்சினைகள் போன்றவையும் சுற்றுலாத்துறை எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளாகக் குறிப்பிடலாம். மேலும், சுற்றுலாத்துறையினுடைய அபிவிருத்தியில் மத்திய அரசாங்கத்திற்கும் சுற்றுலாத்துறையோடு தொடர்புடைய நிறுவனங்களுக்குமிடையில் காணப்படுகின்ற புரிந்துணர்வின்மைகள் மற்றும் ஒருங்கிணைவின்மையும் ஒரு முக்கியமான பிரச்சினையாகப் பார்க்கப்படுகின்றது. குறிப்பாக வடகிழக்குப் பகுதியில் இவ்வாறான தன்மைகளை அதிகம் காணமுடிகின்றது. இதற்குமேலதிகமாக, சுற்றுலாத்துறைசார் முதலீகள் குறைவாக இருத்தல், நிலப் பிரச்சினைகள் மற்றும் வினைத்திறனற்ற உயிர்ப் பல்வகைமைப் பாதுகாப்பு மற்றும் நிலைபேறற்ற சுற்றுலாத்துறை அபிவிருத்தியும் காரணமாக அமைகின்றன.

இலங்கையில் நலன்சார் சுற்றுலாவானது (Wellness Tourism) சிறப்பாக வளர்ந்துவருகின்றது. குறிப்பாக கொவிட்-19 இற்குப் பின்னரான காலத்தில் உலகளவில் கூட நலன்சார் சுற்றுலாவினுடைய முக்கியத்துவமானது துரிதமாக அதிகரித்துவருகின்றது. கொவிட்-19 தொற்றுக் காரணமாக ஐரோப்பிய நாடுகளில் குறிப்பாக இத்தாலி, ஜேர்மன் மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளில் உள்ள மூத்த பிரஜைகள் அதிகமாகப் பாதிக்கப்பட்டனர். எனவே அவர்கள் தமது நலனுக்காகவும் தற்காலிக அமைதிக்காகவும் நலச் சுற்றுலாவினை அதிகம் நாடினர். இலங்கையில் கூட நலச்சுற்றுலாவிற்கு அதிக வரவேற்பு காணப்படுகின்றபடியினால் அதனைக் கற்கைநெறியாக இலங்கைப் பல்கலைக்கழகங்கள் வழங்குகின்றன. கிழக்குப் பல்கலைக்கழகத்தின் திருகோணமலை வளாகமானது ஆயுர்வேதக் கற்கைநெறியையும், யாழ் பல்கலைக்கழகமானது சித்தமருத்துவக் கற்கைநெறியையும் வழங்குகின்றது. இவ்வாறு இலங்கைக்கென்று தனித்துவமான கலாச்சாரம் மற்றும் பாரம்பரியமான மருத்துவத்துவ முறையானது காணப்படுகின்றது. மருத்துவத்துறையினை இலங்கையின் சுற்றலாத்துறையோடு இணைத்து சுற்றுலாவினை வளர்ச்சியடையச் செய்யமுடியும். இதனையே ஒருங்கிணைந்த அபிவிருத்தி என்போம்.

இருப்பினும் சுற்றுலாவானது தற்போது பாரிய சவால்களையும் எதிர்கொள்கின்றது. சுற்றுலாவிற்கான கேள்வியானது தற்போது குறைந்திருக்கின்றது. பிராந்தியரீதியான சுற்றுலா அபிவிருத்தி தொடர்பான போதிய அக்கறையின்மை தற்போது சுற்றுலாத்துறை எதிர்நோக்கும் சவாலாகப் பார்க்கப்படுகின்றது. அதாவது 2015ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட சுற்றுலா தொடர்பான திட்டமிடலானது ஒரு நாளில் 200 டொலரினைச் செலவழிக்கின்ற வெளிநாட்டு சுற்றுலாப் பிரயாணிகளை முக்கியமாகக் கருத்திற்கொண்டதே தவிர இந்தியா, சீனா, ஜேர்மனி, பிரான்ஸ் என உலகின் பலபாகங்களிலிருந்து வரும் சுற்றுலாப் பிரயாணிகளைக் கருத்திற்கொள்ளவில்லை. உதாரணமாக இலங்கையின் வடகிழக்கு மாகாணங்களைப் பொறுத்தவரையில் தென்னிந்திய சுற்றுலாப் பிரயாணிகளின் வருகை அதிகமாகக் காணப்பட்டது. அவர்களை மையப்படுத்தி அப்பிராந்தியங்களில் சுற்றுலாத்துறைசார் அபிவிருத்தியானது போதியளவு இடம்பெறவில்லை. மேலும் உள்நாட்டு சுற்றுலாப் பிரயாணிகளைக் கவரக்கூடியவகையில் முறையான உள்நாட்டு சுற்றுலாத்துறைசார் அபிவிருத்தியானது காணப்படவில்லை. மேலும் பிராந்தியங்களுக்கிடையில் நிலவும் சுற்றுலாவுக்கான போட்டிகளும் சுற்றுலாத்துறை எதிர்நோக்கும் முக்கிய சவாலாகும்.

2009ஆம் ஆண்டு யுத்தத்திற்குப் பின்னர் இலங்கையில் சுற்றுலாத்துறையானது மிகவேகமாக வளர்ச்சியடைய ஆரம்பித்ததோடு 2014ஆம் ஆண்டு கலாச்சார சுற்றுலாவாக அது பரிமாணம்பெற்றது. இலங்கையில் கலால்படுத்தப்பட்ட உணவுகளை தயாரிப்பதும் மற்றும் அவற்றை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதும் தொடர்பில் கலாச்சார ரீதியான பிரச்சினைகள் ஏற்பட்டபடியினால் முஸ்லீம் வலய நாடுகளான சவூதிஅரேபிய நாடுகளிலிருந்து சுற்றுலாப்பயணிகள் இலங்கைக்கு வருகைதருகின்ற அளவானது குறைவடையத்தொடங்கியது. அவர்கள் மாலைதீவு, இந்தோனேசியா மற்றும் சிங்கப்பூர் போன்ற பலநாடுகளை நோக்கி தமது பிரயாணங்களை மேற்கொண்டனர். குறிப்பாக மாலைத்தீவானது கடல்சார் சுற்றுலா (Sea Tourism) மற்றும் தீவகரீதியான சுற்றுலா (Island Tourism) போன்றவற்றில் மிகவும் பிரசித்தம்பெற்று அதற்கு ஏற்ற இயற்கை வளங்களைக் கொண்டு காணப்படுகின்றது. மேலும் கலாச்சாரச் சுற்றுலாவினைப் பொறுத்தமட்டில் இந்தியா மற்றும் நேபாளம் போன்ற நாடுகள் தெற்காசியப் பிராந்தியத்தில் சிறந்து விளங்குகின்றன. இவ்வாறான போட்டிநாடுகளின் ஆதிக்கத்தாலும் இலங்கையின் சுற்றுலாத்துறை கடும் போட்டிகளை எதிர்கொள்கின்றது.

மேலும், நலன்சார் சுற்றுலாவினூடாக இலங்கையின் சுற்றுலாத்துறையினை அபிவிருத்தி செய்வதற்கான நலன்சார் சுற்றுலா நடவடிக்கைகள் மிகவும் குறைவாகக் காணப்படுகின்றன. எனவே இலங்கையானது குறிப்பிட்ட சில நடவடிக்கைகளில் மாத்திரம் தங்கியிருக்காமல் சுற்றுலாப் பொதியினையும் நடவடிக்கைகளையும் பன்முகப்படுத்த வேண்டும். இதுதவிர சுற்றுலாத்துறைசார் சேவைகள்

மற்றும் உட்கட்மைப்பு வசதிகளினுடைய குறைவான அபிவிருத்தியும் ஒரு முக்கிய காரணமாகும். சுற்றுலாத்துறைசார் உட்கட்டமைப்பு வசதிகள் என்ற வகையில் பார்க்கும்போது சுற்றுலா விடுதிகள் மற்றும் தங்குமிடங்கள் பலமாடிக்கட்டிடங்களாக இருக்கவேண்டும் என்ற அவசியமில்லை. அவை இயற்கையோடு தொடர்புடைய வகையில் கடற்கரையோரமாகவோ மலைசார்ந்த அரணாகவோ சுற்றுலாப் பயணிகளைக் கவரக்கூடிய வகையில் இயற்கையான அம்சங்களுடன் அவை அமையப்பெற்றிருந்தால் அவற்றை அதிகளவில் சுற்றுலாப் பயணிகள் நாடுவர்.


குறிப்பாக திருகோணமலையில் கடற்கரையோரமாக சுற்றுலாப் பிரயாணிகளைக் கவரும் வகையில் கவாலா முறையுடனும் இயற்கையான அம்சங்களுடனும் சுற்றுலா விடுதிகள் உருவாக்கப்பட்டுள்ளன. இதே போன்ற சுற்றுலா விடுதிகளை, இலங்கையில் இயற்கையான அம்சங்களுடன் இணைந்து விளங்குகின்ற கண்கவர் சுற்றுலாத்தலங்கள் அனைத்திலும் பரவலாக்கவேண்டும். மேலும் கால ஓட்டத்திற்கேற்றவாறு நவீன தொழில்நுட்பத்தின் பயன்பாட்டை சுற்றுலாத்துறையில் புகுத்துவதும் சுற்றுலாத்துறையை முன்னேற்ற அவசியமான விடயங்களாகும்.

இலங்கையில் நலன்சார் சுற்றுலாக் கைத்தொழிலினை விருத்திசெய்வதற்காக அவற்றைச் சந்தைப்படுத்தும் உத்திகள் தொடர்பில் கவனம் செலுத்துவது அவசியமாகும். இதற்காக நான்கு விடயங்களை அபிவிருத்திசெய்வது கட்டாயமானதாகும். அதாவது இலங்கையில் சுற்றுலாவுக்கான சந்தையை விரிவுபடுத்துதல், சுற்றுலா நடவடிக்கைகளைப் பன்முகப்படுத்துதல், சுற்றுலாத்துறையில் தகவல்தொழில்நுட்பத்தின் பயன்பாட்டைக் கூட்டுதல் மற்றும் உட்கட்மைப்பு வசதிகளை முன்னேற்றுவது போன்றன மிகவும் அவசியமான விடயங்களாகும். அந்தவகையில் சுற்றுலாவுக்கான சந்தையை விரிவுபடுத்தல் மற்றும் பன்முகப்படுத்தல் என்பதனுள் சுற்றுலாவுக்கான புதிய சந்தையை அறிமுகப்படுத்துதல். ஏற்கனவேயுள்ள சந்தைகளை வலுப்படுத்துதல், சுற்றுலாப்பொருட்களுக்கு விலைச்சலுகைகளை வழங்குதல் மற்றும் சுற்றுலாச் சந்தையை இடம்மாற்றுதல் மற்றும் மறுபெயரிடல் (Rebranding and repositioning) என்பனவும் இதனுள் உள்ளடங்கும்.

நலன்சார் சுற்றுலா நடவடிக்கைகளைப் பரவலாக்குதல் என்பதனுள் வயதானவர்களின் பராமரிப்பு நடவடிக்கைகள், சுகாதாரப் பாதுகாப்பு நடவடிக்கைகள், மருத்துவரீதியான உணவுகள், மீட்பு நடவடிக்கைகள் (Recovery Activities) என்பன உள்ளடங்குகின்றன. சுற்றுலாத்துறையில் தகவல்தொழில்நுட்பத்தின் பயன்பாட்டைக் கூட்டுதல் என்பதனுள் செயற்கையான நுண்ணறிவுப் பயன்பாடு (AI), Block chain, M-Health, மெய்நிகர் தொழில்நுட்பப் பயன்பாடு மற்றும் தொலை மருத்துவம் (Telemedicine) என்பனவும் உள்ளடங்குகின்றன.

குறிப்பாக இலங்கையிலுள்ள சுற்றுலா விடுதிகள் சில மெய்நிகர் தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்தி சுற்றுலா விடுதிகளை ஒதுக்கீடு செய்வதற்கான வசதிகள் மற்றும் பல சுற்றுலாச் சேவைகள் (யோகா வகுப்புக்களை நடாத்துதல்) போன்றவற்றை வழங்குகின்றன. மேலும், சுற்றுலாசார் உட்கட்மைப்பு வசதிகளை முன்னேற்றுதல் என்பதனுள் தங்குமிடவசதிகளை அதிகரித்தல் நன்கு ஒழுங்குபடுத்தப்பட்ட போக்குவரத்து வசதிகளைப் பெற்றுக்கொடுத்தல், தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கான வசதி மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகளைச் சுற்றுலாப்பிரயாணிகளுக்கு பெற்றுக்கொடுத்தல் என்பனவும் உள்ளடங்கும்.


**வரைபடம் 1: சுற்றுலாத்துறையைச் சந்தைப்படுத்துவதற்கான உத்திகள் (Tourism Marketing Strategies)**




குறிப்பாக இலங்கையில் நலன்சார் சுற்றுலாவினூடாக சுற்றுலாத்துறையை விருத்திசெய்ய நலன்சார் சுற்றுலா நடவடிக்கைகளை விரிவுபடுத்துவது அவசியமானதாகும். குறிப்பாக சுற்றுலாப் பிரயாணிகள் எப்போதும் ஒரேவகையான சுற்றுலாப் பொருளையோ அல்லது சேவையையோ கொள்வனவுசெய்ய விரும்பமாட்டார்கள். எனவே சுற்றுலாப் பிரயாணிகளைக் கவரக்கூடிய வித்தியாசம் வித்தியாசமான பொருட்களையும் நடவடிக்கைகளையும் சந்தையில் அடிக்கடி அறிமுகம் செய்யவேண்டியது அவசியமாகும். நலன்சார் சுற்றுலாவினுடைய உற்பத்தி பன்முகப்படுத்தலை ஆறு முக்கியமான தலைப்புக்களின் கீழ் பார்வையிடலாம். அவையாவன சுகாதாரப் பராமரிப்பு மற்றும் விளம்பரப்படுத்தல் நடவடிக்கைகள், மீட்கும் நடவடிக்கைகள் மற்றும் விளையாட்டு (Recovery activities and Sports), மருத்துவரீதியான குணப்படுத்தல், பாரம்பரிய உணவுகள் மற்றும் வயதானவர்களின் பராமரிப்பு நடவடிக்கைகள் என்பனவாகும். இவற்றில் மிகமுக்கியமானது சுகாதாரப் பராமரிப்பு நடவடிக்கைகளாகும். இதன்கீழ் Hot water Bath, Forest Bath, Herbal Bath, Mud Bath, Sand Bath போன்ற பலதரப்பட்ட சுற்றுலாப் பிரயாணிகளைக் கவருகின்ற மனதிற்கு ஆறுதல் அளிக்கின்ற சிகிச்சை முறைகள் காணப்படுகின்றன. இலங்கையில் சாராசரியாக 8 - 10 நாட்களுக்கு மாத்திரமே சுற்றுலாப் பிரயாணிகள் தங்க

விரும்புகின்றனர். எனவே, நலன்சார் சுற்றுலா நடவடிக்கைகளை அதிகரித்துக்கொண்டு செல்லும்போது சுற்றுலாப் பிரயாணிகள் இலங்கையில் தங்கும் காலப்பகுதியும் அதிகரிக்கும். இதன் மூலமாக இலங்கையின் சுற்றுலா வருவாயையும் அதிகரித்துக்கொள்ள முடியும். இது தவிர வயதானவர்களின் பராமரிப்பு நடவடிக்கைகளை அதிகரிப்பதன் மூலமாக Senior Citizen சுற்றுலாவினை இலங்கையில் ஊக்குவிக்கமுடியும். குறிப்பாக ஐரோப்பாவிலிருந்து வருகை தருகின்ற வயதான சுற்றுலாப்பிரயாணிகள் இலங்கையில் கண்டி, நுவரெலியா போன்ற அமைதியான இயற்கையான இடங்களிலுள்ள வீடுகளில் அவர்களும் குடும்ப அங்கத்தவர்கள் போலிருந்து பாரம்பரிய உணவுகளை உண்டு ஆகக்குறைந்தது ஆறு மாதகாலமாவது தங்கியிருந்து சுற்றுலாவினை மேற்கொள்ளக்கூடிய வாய்ப்பு காணப்படுகின்றது. இதனை ஊக்குவிப்பதனூடாகவும் இலங்கையில் நலன்சார் சுற்றுலாவினை முன்னேற்ற முடியும்.

**வரைபடம் 2: இலங்கையின் நலன்சார் சுற்றுலா நடவடிக்கைகள் (Wellness Tourism Activities)**




இலங்கையில் சுற்றுலாத்துறையினை ஏனைய துறைகளுடன் தொடர்புபடுத்துவதன் மூலம் ஒருங்கிணைந்து அபிவிருத்தியடையச் செய்யக்கூடிய வாய்ப்பு காணப்படுகின்றது. குறிப்பாக விவாயத்துறையுடன் சுற்றுலாத்துறையினை இணைப்பதன் மூலம் Agrotourism ஆக அது பரிணாமம் பெறுவதோடு விவசாயத்துறைக்கும்

அதுசார்ந்த உற்பத்திப் பொருட்களுக்கும் பெறுமதிசேர்க்கக்கூடியதாகவும் சந்தைவாய்ப்பை அதிகரிகரிக்கக்கூடியதாகவும் அமையும். இதற்கு Tea-Tourism இனை உதாரணமாகக் குறிப்பிடமுடியும்.

**வரைபடம் 03: சுற்றுலாத்துறையுடன் தொடர்புபடும் துறைகள்**




இதேபோன்று சுற்றுலாத்துறையானது போக்குவரத்துத்துறை, மருத்துவத்துறை, மீன்பிடித்துறை, கல்வித்துறை, பாரம்பரிய கலாச்சாரம் மற்றும் சுயகைத்தொழில் துறை, தேயிலை தயாரிப்புத்துறை, தங்குமிடசேவைகள் எனப் பலதுறைகளோடு தொடர்புபடுத்துவதனால் சுற்றுலாத்துறையானது பாதிக்கப்பட்டாலும் ஏனையதுறைகள் அனைத்தும் ஒன்று சேர்ந்து சுற்றுலாத்துறையினை முன்னேற்றக்கூடிய வாய்ப்புக் காணப்படுகின்றது. இது ஒருங்கிணைந்த அபிவிருத்தியினூடாகவே சாத்தியமாகும்.

## அத்தியாயம் 11

# இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடியும் பேண்தகு பொருளாதார அபிவிருத்தியும்

# Current Economic Crisis and Sustainable Economic Development in Sri Lanka

**Prof. S. Vijesandiran**
Professor in Economics,
Department of Economics & Statistics,
Faculty of Arts,
University of Peradeniya.

(03.08.2022 அன்று நடைபெற்ற நிகழ்நிலைக் கருத்தரங்கின் தொகுப்பு)

## இலங்கையின் பொருளாதார நிலைமை

இலங்கையில் பொருளாதார வளர்ச்சி என்பது அண்மைக் காலங்களில் மிகவும் பின்தங்கிய ஒன்றாகக் காணப்படுகின்றது. 2021ஆம் ஆண்டில் 3.5 சதவீதத்தினை பதிவு செய்த பொருளாதார வளர்ச்சியானது 2022ஆம் ஆண்டின் முதல் அரையாண்டில் எதிர்க்கணியப் பெறுமதியினை அடைந்திருக்கின்றது. இலங்கையில் ஏற்பட்டிருக்கின்ற போக்குவரத்து நெருக்கடிகள், உற்பத்தித் தொழிற்பாடுகளில் ஏற்பட்ட பாதிப்புக்கள், எரிபொருள் தொடர்பான பிரச்சினைகள், தவறான முகாமைத்துவங்கள் போன்றன இதற்கு காரணங்களாக அமைந்துள்ளன. 2021ஆம் ஆண்டு காலப்பகுதியில் பிரதானமாக பொருளாதார வளர்ச்சியில் பங்களிப்புச் செய்த துறைகளாக உற்பத்தித் துறை, நிதிச் சேவைகள், கட்டிடத்துறை, போக்குவரத்து மற்றும் சொத்து பரிமாற்றம் போன்ற துறைகள் காணப்படுகின்றன. ஏற்றுமதித் துறையினை பொறுத்தவரையில் குறிப்பாக ஆடைக் கைத்தொழில் அதற்கு அடுத்ததாக தேயிலை ஏற்றுமதிகள் மிக முக்கியமான பங்களிப்பினைச் செலுத்தியிருக்கின்றன.

இன்றைய காலகட்டத்தில் ஏற்பட்டிருக்கக்கூடிய பொருளாதார பின்னடைவுகளில் இந்த துறைகளில் ஏற்பட்டிருக்கின்ற வீழ்ச்சியானது எரிபொருள் பிரச்சினையினைத் தொடர்ந்து உற்பத்தித் துறையினையும், நிதி சேவைகளில் பாதிப்பினையும், கட்டிடத்துறையில் முற்றாக வேலைகள் இடைநிறுத்தப்பட்டுள்ள நிலையையும் மற்றும் பாதிப்புக்குள்ளான நிலையையும் உருவாக்கியுள்ளது. போக்குவரத்து தொடர்பாடல் என்பது முற்றாக வரைறுக்கப்பட்ட ஒரு விடயமாக மாறியிருக்கின்றது. அதன் மூலமான பொருளாதார பங்களிப்பு குறைவடைந்திருக்கின்றது. இலங்கையில் ஏற்பட்டிருக்கின்ற அதிகூடிய பணவீக்க நிலைமையினால் சொத்துப் பரிமாற்றம் தொடர்பான வியாபார நடவடிக்கைகள் முடங்கியிருக்கின்றன. இதே போன்ற ஏனைய காரணங்கள் இலங்கையின் அண்மைக்கால எதிர்க்கணிய பொருளாதார

விளைவுகளுக்கு பங்களிப்புச் செய்த காரணிகளாகவும் காணப்படுகின்றன.

இலங்கையின் விவசாயக் கொள்கை என்பது குறிப்பாக தேயிலை ஏற்றுமதியில் பாரிய பாதிப்பினை ஏற்படுத்தியமை காரணமாக தேயிலை ஏற்றுமதியானது வீழ்ச்சியடைந்திருக்கின்றது. அதேபோல் ஆடைக் கைத்தொழிலானது, எரிபொருள் மற்றும் மின்சாரப் பிரச்சினை காரணமாக பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. அதேநேரத்தில் ஏற்றுமதி மற்றும் இறக்குமதியினை நோக்கும் போது இறக்குமதிகள் அதிகரித்திருப்பதோடு, குறிப்பாக இலங்கையின் பிரதான கைத்தொழில் துறைகள் மற்றும் செயற்பாட்டுத் துறைகள் அனைத்தும் வெளிநாடுகளில் இருந்தே தமது உள்ளீட்டுப் பொருட்களை இறக்குமதி செய்கின்ற நிலையே காணப்படுகின்றன. அண்மைக் காலத்தில் இலங்கையின் வெளிநாட்டு இருப்பில் ஏற்பட்ட வீழ்ச்சி டொலர் பற்றாக்குறையின் காரணமாக இறக்குமதிச் செயற்பாடுகளை முழுமையாக மேற்கொள்ள முடியாமையினை ஏற்படுத்தியுள்ளது. அதேபோல் முதலீட்டுக்குத் தேவையான மூலப்பொருட்களை இறக்குமதி செய்ய முடியாமையினால் இலங்கையில் அதிகளவில் உற்பத்தித் துறைகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. ஆடைக் கைத்தொழிலுக்குத் தேவையான 70 சதவீதமான மூலப்பொருட்கள் பெருமளவில் வெளிநாடுகளில் இருந்தே இறக்குமதி செய்யப்படுவதும் குறிப்பிடத்தக்கதாகும். இதுமட்டுமல்லாது கட்டிடத்துறைகள், நிதிபங்களிப்புத் துறைகள் ஆகியவற்றிலும் இதன் பாதிப்பினை நாம் அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

எனவேதான் 2021இல் 10.9 சதவீதமாகக் காணப்பட்ட வறுமையானது தற்போது 2022இல் அதி உயர்வுக்கு சென்றிருக்கின்றது. குறிப்பாக தொழில் இழப்புகள், வாழ்க்கைச் செலவில் ஏற்பட்ட அதிகரிப்பு, அத்தியாவசிய மற்றும் அடிப்படைத் தேவைகளின் குறைப்பு, அரசாங்கத்தின் சமூக நலத்திட்டங்களில் ஏற்பட்ட வீழ்ச்சி ஆகியவையும் இந்த வறுமைக்கு அதிகளவான பங்களிப்புச் செலுத்தியவையாகக் காணப்படுகின்றன. இலங்கையில் உத்தியோகபூர்வமான பணவீக்கம் 17.5 ஆகக் காணப்பட்டாலும், உணவுப் பணவீக்கமானது 24.7 எனக் கணிப்பிடப்பட்டாலும் கூட நடைமுறையில் பொருட்கள் சேவைகளின் விலைகள் 4 மடங்கு அதிகரித்திருப்பதனைக் காணக்கூடியதாக உள்ளது. வாழ்க்கைச் செலவினைப் பொறுத்தவரையில் 3 – 4 மடங்கு அதிகரிப்பினை கொள்வனவின்போது காணக்கூடியதாக உள்ளது. வெளிநாட்டு வியாபாரப் பற்றாக்குறை என்பது விரிவடைந்திருக்கின்றது. 2020ஆம் ஆண்டு 6 பில்லியன் அமெரிக்க டொலராகக் காணப்பட்ட வெளிநாட்டு வியாபாரப் பற்றாக்குறையானது 2021ஆம் ஆண்டளவில் அதாவது குறிப்பிட்ட 6 மாத காலப்பகுதிக்குள் 8.1 பில்லியன் அமெரிக்க டொலராக அதிகரித்திருப்பதனைக் காணமுடிகின்றது.

வெளிநாட்டிலிருந்து உழைக்கின்றவர்களின் மூலமான அந்நியச் செலாவணி 22.7 சதவீதத்தினாலும், சுற்றுலாத் துறையின் மூலமான

வருமானம் 61.7 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்திருக்கின்றன. நடைமுறைக் கணக்கு பற்றாக்குறை என்பது 3.2 பில்லியன் பெறுமதியினை அடைந்திருக்கின்றது. ஆகவேதான் இதன் விளைவுகளினை உள்நாட்டுத்துறை, வெளிநாட்டுத்துறை, உற்பத்தித் துறை, நிதித்துறை என அனைத்துத் துறைகளிலுமே அவதானிக்க முடிகின்றது. வெளிநாட்டு இருப்பு என்பது 2022ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 2.3 பில்லியனாகக் குறைவடைந்திருக்கின்றது. ஆகக்குறைந்தது 6 - 8 பில்லியன் அமெரிக்க டொலரினை பேணவேண்டிய தேவைப்பாடு காணப்படுகின்றது. இவ்வாறிருக்கும் நிலையில்தான் 6 மாதங்களுக்குத் தேவையான இறக்குமதியினை உறுதிப்படுத்தக்கூடிய நிலையானது காணப்படும். வரவுசெலவுத்திட்டப் பற்றாக்குறை என்பது இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 2021ஆம் ஆண்டு 11.1 சதவீதமாக தனது பெறுமதியினை பதிவு செய்திருக்கின்றது. வெளிநாட்டுக் கடனினைப் பொறுத்தவரையில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 117 சதவீதமாக அதிகரித்துள்ளது. இவைகள்தான் தற்போதைய எமது பொருளாதாரத்தின் அடைவுகளாகக் காணப்படுகின்றன. மேற்படி எடுத்துக்காட்டப்பட்ட அனைத்து எடுத்துக்காட்டுதல்களும் இலங்கைப் பொருளாதாரத்தின் அண்மைய பொருளாதார நெருக்கடிக்கான நிலையினை எடுத்துக்காட்டும் புள்ளிவிபரச் சான்றுகளாகக் காணப்படுகின்றன.

## தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கான காரணங்கள்

இலங்கையின் தற்போதைய பொருளாதார வீழ்ச்சிக்கான காரணங்களினை அடிப்படையாகக் கொண்டுதான் எதிர்காலத்தில் ஒரு பேண்தகு அபிவிருத்தியினை வடிவமைத்துக் கொள்ள முடியும். ஆகவே அது தொடர்பான விடயங்களை மேலோட்டமாக அடையாளப்படுத்திக் கொண்டு செல்ல வேண்டியது அவசியமாகின்றது. இலங்கையில் ஏற்பட்டிருந்த 30 வருடகால யுத்தமானது இலங்கை நாட்டின் உள்நாட்டுப் பொருளாதாரத்தினை பெரிதும் பாதித்திருந்தது. இதுவரை காலமும் 200 பில்லியன் அமெரிக்க டொலர் நிதியினை யுத்தத்திற்குப் பயன்படுத்தியுள்ளது. இலங்கையின் இன்றைய வெளிநாட்டுக் கடனினை விட இது நான்கு மடங்கு அதிகமானதாகக் காணப்படுகின்றது. யுத்த காலப்பகுதியிலே வட கிழக்குப் பகுதியில் உள்ள உற்பத்தி வளங்களானது அழிக்கப்பட்டது. குறிப்பாக கடல் வளங்கள் மற்றும் விவசாய வளங்கள் அழிக்கப்பட்டன. மொத்த உள்நாட்டு உற்பத்திக்குப் பங்களிப்புச் செய்த சிறு கைத்தொழில்களும் அழிக்கப்பட்டன. உற்பத்திக்கு பங்களிப்புச் செய்யக்கூடிய மனித வளம் என்பது வெளிநாடுகளுக்கு இடம்பெயரக்கூடிய நிலையினையும் உருவாக்கியது. தென்பகுதி, வடபகுதி ஆகியவற்றினைப் பொறுத்தவரையில் இந்த யுத்தத்தினால் அதிகளவான மனித முதல் இழப்பீடுகள் ஏற்பட்டிருக்கின்றது. முதிர்ச்சியடைந்த மனித முதலீட்டினை நாங்கள் பெற்றுக்கொள்ள முடியாமல் இருப்பதற்கு யுத்தம் ஒரு காரணியாக இருந்தது.

2008ஆம் ஆண்டு ஏற்பட்ட சர்வதேச நிதி நெருக்கடியினை அப்போதைய அரசாங்கம் அன்றைய நிலையினை கருத்திற்கொள்ளாமல், வெளிநாட்டு யுத்தத்தினை நிறைவு செய்வதற்காக பயன்படுத்தியிருந்தது. வெளிநாட்டு இருப்புக்களைப் பயன்படுத்தி அதிகளவு யுத்த ஆயுதங்களை, உபகரணங்களை கொள்வனவு செய்வதில் முனைப்புடன் செயற்பட்டிருந்தது. உண்மையில் இதுவே அன்றைய வெளிநாட்டு இருப்பு பற்றாக்குறைக்கு பிரதான முதலாவது காரணமாக கூறப்படுகின்றது. இதன் தாக்கம் இன்றைய பொருளாதார நெருக்கடிக்கு அடிப்படையாக அமைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. அதாவது கடந்த 30 வருடகாலமாக ஆட்சியிலிருந்த அரசாங்கங்களின் தவறான பொருளாதார முகாமைத்துவமும் பொருளாதார நெருக்கடிக்கு காரணமாக அமைந்திருக்கின்றது. அந்தவகையில் தேர்தல் காலங்களில் தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கும் மற்றும் அடுத்து வருகின்ற தேர்தலினை முகங்கொடுக்கக்கூடிய வகையில் இலங்கையினது நிதி வளங்கள் அதாவது மானியங்களாகவோ, வேறு அரசியல் தேவைகளுக்காகப் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. இந்தக் காலங்களில் இலங்கை பெற்றுக் கொண்ட வெளிநாட்டுக் கடன்கள் உற்பத்தித் திறன் சாராத, மீளுற்பத்தியினை மேற்கொள்ளாத துறைகளிலே முதலீடு செய்யப்பட்டது. குறிப்பாக ஹம்பாந்தோட்டை துறைமுகம், விமான நிலையம், தென் மாகாணத்தை நோக்கிய அதிவேக நெடுஞ்சாலை ஆகிய உடனடியாக பொருளாதாரத்தின் வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்யாத முதலீடுகளின் மீது செலவீடு செய்யப்பட்டுள்ளது. தொடர்ந்து அரசாங்கங்கள் ஊழலை அதிகரித்துக் கொள்வதற்காக, தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றிக்கொள்வதற்காக மற்றும் அடுத்த தேர்தலில் வாக்குகளை பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற அடிப்படையில்தான் பொருளாதார முகாமைத்துவங்களை செயற்படுத்தியிருக்கின்றன.

கொவிட்-19 உயிர் கொல்லியின் தாக்கமும் பொருளாதார நெருக்கடிக்கான ஒரு காரணியாக அடையாளப்படுத்தப்படுகின்றது. இந்த தொற்றினைக் கட்டுப்படுத்துவதற்கு, ஆசியாவிலே நோயைக் கட்டுப்படுத்திய சிறந்த நாடு என்ற பெருமையினை பெற்றுக்கொள்ளவென அநாவசியமான செலவீடுகளை மேற்கொண்டிருக்கின்றது. உலக சந்தையில் 4 டொலருக்கு முதலாவது தடுப்பூசியினைப் பெற்றுக்கொள்ள முடியுமாகக் காணப்பட்டாலும் கூட இலங்கை அதனை 15 டொலருக்கு வாங்கியதாக கூறப்பட்டிருக்கின்றது. இது திட்டமிடப்படாத அரச செலவீடு ஆகும். கொவிட்-19 என்பது இலங்கையின் சுற்றுலாத் துறையினை பெரிதும் பாதித்திருக்கின்றது. இலங்கை சுற்றுலாத்துறையினை அடிப்படையாகக் கொண்ட பொருளாதார நகர்விலே, குறிப்பாக யுத்தத்திற்குப் பிறகு இலங்கையினது பொருளாதார வளர்ச்சிக்கான இயந்திரமாக அது உற்றுநோக்கப்பட்டிருக்கின்றது. கொவிட்-19 தொற்றுக்குப் பின்னர் அந்த அதிர்ச்சியிலிருந்து மீள முடியாமல் இருந்து சுற்றுலாத்துறையானது தற்போதைய பொருளாதார நெருக்கடியின் காரணமாக அதாவது போக்குவரத்துப் பாதிப்பு, உணவுப் பொருட்களின்

விலையேற்றம், தங்குமிட வசதிகளுக்கான விலை அதிகரிப்பு, சுமுகமான நகர்வுகளை மேற்கொள்ள முடியாத நிலை ஆகியவற்றால் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

உத்தரவாதங்களை வழங்காத, உத்தரவாதப்படுத்தப்படாத பொருளாதார விவசாய சீர்த்திருத்தம் என்று கூறப்படுகின்ற சேதன வளமாக்கிக் கொள்கைகளினை எந்தவித ஆலோசனைகளுமின்றி நடைமுறைப்படுத்தி இரசாயண உரங்களுக்குத் தடை விதித்தமையானது தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு ஒரு காரணமாக அமைந்துள்ளது. இரசாயண உரங்களில் பழக்கப்பட்டிருந்த விவசாயிகள் சேதனப் பசளையினை பெற்றுக்கொள்ள முடியாத பாதிப்பு நிலை ஏற்படுத்தப்பட்டது. இலங்கையின் பிரதான ஏற்றுமதித் துறையான தேயிலை ஏற்றுமதித் துறையில் 30 – 40 வீதம் வரையான விருத்தியினை கொண்டு வந்திருக்கின்றது. பொதுவாக இலங்கையின் அனைத்து விதமான விவசாய உற்பத்திகளிலும் 30 – 40 வீதமான விருத்தி வருவதற்கு சேதனக் உரக்கொள்கை ஒரு காரணமாக இருந்திருக்கின்றது. இலங்கையில் 65 வீதத்திற்கு மேற்பட்டதாகக் காணப்படும் கிராமிய விவசாயத்தில் அவர்களினுடைய வருமான விருத்திக்கும், அக்கிராமத்தினது ஜீவனோபாயத்திலும் அதிகளவு தாக்கத்தினை இந்த விவசாயக் கொள்கை ஏற்படுத்தியிருப்பதும் பொருளாதார நெருக்கடிக்கு காரணமாக அமைகின்றது. சிறு ஏற்றுமதி எனக் குறிப்பிடக்கூடிய வாசனைத் திரவியங்களின் அனைத்து ஏற்றுமதிகளும் இந்தக் காலங்களில் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தன.

இலங்கையில் தொடர்ந்து வந்த அரசாங்கங்கள் போட்டி போட்டு வெளிநாட்டுக் கடன்களை வாங்கியதும், அதன் மூலமாகவே பொருளாதாரக் கொள்கைகளினை முன்னெடுப்பதற்கான நடவடிக்கைகளினை மேற்கொண்டதும் இலங்கையினது நெருக்கடிக்கு இன்னுமொரு காரணமாகக் பார்க்கப்படுகின்றது. உக்ரேன் - ரஷ்ய போரும் ஒரு காரணமாக அமைகின்றது. இலங்கையில் இருந்து தேயிலையினை இறக்குமதி செய்யும் நாடுகளில் ரஷ்யா மிக முக்கியமான நாடாகக் காணப்படுகின்றது. இலங்கைக்குத் தேவையான கோதுமை மாவினையும் இரும்புப் பொருட்களையும் ஏற்றுமதி செய்யும் நாடுகளாக உக்ரேன் மற்றும் ரஷ்யா காணப்படுகின்றது. அதேபோன்று இலங்கைக்கு வருகை தருகின்ற சுற்றுலாப் பிரயாணிகளில் அதிகளவினர் உக்ரேன் மற்றும் ரஷ்யாவில் இருந்து வருகை தந்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. எனவே இவ்விரு நாடுகளுக்கும் இடையிலான யுத்தம் என்பது இலங்கையின் வெளிநாட்டு வருமான வரவுகளிலும் பொருட்களை இறக்குமதி செய்வதிலும் பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளது. அதுமட்டுமல்லாது அண்மையில் தோற்றம் பெற்றிருக்கக்கூடிய சக்தி வளங்களின் நெருக்கடியானது அதிகளவு போக்குவரத்து துறை மற்றும் கைத்தொழில் துறை, விவசாயத்துறை ஆகியவற்றில் பெருமளவான தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது. இலங்கையின் அனைத்து துறைகளுக்கான தொடர்பாடலை மேற்கொள்ளக்கூடியதான ஒரு

துறையாக போக்குவரத்துத் துறையானது காணப்படுகின்றது. பெரும்பாலான வெளிநாட்டு நேரடி முதலீடுகளை மீளவும் வேறு நாடுகளுக்கு கொண்டு செல்வதற்கான ஒரு அபாய நிலையும் தற்போது உருவாக்கப்பட்டுள்ளது.

மேலும் இலங்கையில் காணப்பட்ட அரசியல் சூழ்நிலையும் அதனைத் தொடர்ந்து மக்கள் மேற்கொண்ட போராட்டமும் பொருளாதாரத்தின் மீது அதிகளவான தாக்கத்தினை ஏற்படுத்தியிருக்கின்றது. கடந்த நான்கு மாதங்களாக மக்கள் உழைப்பில் ஈடுபடுவதற்குப் பதிலாக போராட்டங்களில் ஈடுபட்டிருந்தார்கள். அரச நிறுவனங்கள், பாடசாலைகள், சிறு நடுத்தர உற்பத்தி நிறுவனங்கள், வங்கித்துறைகள் என்பன தொழிற்படவில்லை. மேற்படி கூறப்பட்ட அனைத்துக் காரணங்களினது தொடர்ச்சியான தாக்கமும், அவற்றினது நீண்ட கால செல்வாக்கும் அதாவது ஒன்றோடு ஒன்று திரட்டப்பட்டதான தாக்கங்கள் அனைத்துமே இறுதியாக ஏற்பட்ட சக்தி வளங்களின் பற்றாக்குறையுடன் இணைக்கப்பட்டு இலங்கையினது இன்றைய பொருளாதார நெருக்கடிக்கு பாரிய ஒரு சவாலை உருவாக்கியுள்ளது என்னும் முடிவுக்கு வரமுடிகின்றது.

அடிப்படையில் சென்மதி நிலுவைப் பற்றாக்குறை, அரசிறைப் பற்றாக்குறை என்பது இலங்கையினைப் பொறுத்தவரையில் 1970ஆம் ஆண்டு காலப்பகுதியில் இருந்து நெடுங்காலமாகக் காணப்பட்டு வருகின்ற பிரச்சினையாகும். இது பொருளாதாரத்தில் திரட்டுரீதியானதொரு தாக்கத்தினை உருவாக்கி தற்போதைய இலங்கையின் பொருளாதாரத்தினை பாதித்துள்ளது. கடந்த பல தசாப்பதங்களாக, இலங்கையில் தேசிய சேமிப்பினையும், தேசிய முதலீட்டினையும் பார்த்தோமேயானால், தேசிய முதலீட்டினை விட தேசிய சேமிப்பு என்பது மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது. இந்த இடைவெளிக்கான காரணம் வெளிநாட்டுக் கடன்களாகும். தேசிய சேமிப்பு குறைவாகக் காணப்பட்ட போது தேசிய முதலீடுகள் என்பது வெளிநாட்டுக் கடன்கள் மூலமாகத்தான் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளது. இலங்கையினுடைய வர்த்தக நிலுவையினை நாம் நோக்கும் போது 2000ஆம் ஆண்டு காலப்பகுதியில் இருந்து எதிர்க்கணியமாக காணப்படுவதோடு, தொடந்து அதிகரித்து சென்றிருப்பதனையும் அவதானிக்க முடியும்.

நடைமுறை மற்றும் முதலீட்டுக் கணக்கு மீதியினை நோக்கும் போது மூலதனக் கணக்கினை விட நடைமுறைக் கணக்கானது தொடர்ந்து எதிர்க்கணியமாகவே இருந்து வந்திருக்கின்றது. வெளிநாட்டு நாணய இருப்பினைப் பொறுத்தவரையில் 2018இற்குப் பிறகு தற்போதுவரை மிகவும் ஒரு சடுதியான வீழ்ச்சியினை வெளிப்படுத்தியிருக்கின்றது. இலங்கையினது பணவீக்கத்தினை அவதானிக்கும் போது 2021 பெப்ரவரி மாதத்திற்குப் பிறகு சடுதியான அதிகரிப்பினை கொண்டுள்ளது. மேலும் அது ஒக்டோபர் மாதம் பாரிய சடுதியான அதிகரிப்பினை

வெளிப்படுத்தியுள்ளமையினையும் காண முடியும். கொழும்பு நுகர்வோன் விலைச்சுட்டெண், தேசிய நுகர்வோன் விலைச்சுட்டெண் ஆகிய இரண்டும் சம அளவிலே அதிகரித்து வந்திருக்கின்றது. 2010 வரையான உள்நாட்டு யுத்ததத்திற்குப் பிறகு இலங்கையில் சுற்றுலாப் பயணிகளினது எண்ணிக்கை அதிகரித்திருந்தது மாத்திரமல்லாமல், அதன் மூலம் கிடைக்கின்ற வருமானமும் அதிகரித்துக் காணப்பட்டது. இந்நிலை 2019இற்குப் பிறகு குறைவடைந்துள்ளது.

வெளிநாட்டுக் கடனினைப் பொறுத்தவரையில் 2010இற்குப் பிறகு அதிகரித்து வந்துள்ளது. யுத்தத்திற்குப் பிறகு பெறப்பட்ட அதிகளவான கடன்கள் முறையாக அபிவிருத்தியில் பயன்படுத்தப்பட்டதா? என்கின்ற கேள்வி காணப்படுகின்றது. இதில் பல ஊழல்கள் இடம்பெற்றுள்ளதாக பல ஆய்வின் முடிவுகள் எடுத்துகாட்டுகின்றன. இலங்கையில் 2010இற்குப் பிறகு பெறப்பட்ட கடன்களில் பெருமளவு வர்த்தக ரீதியான கடன்களாகக் காணப்படுகின்றன. இலகு ரீதியான கடன்களின் அளவு குறைவடைந்து உள்ளமையினையும் காணமுடிகின்றது. மேற்கூறப்பட்டவைகளின் காரணமாக இன்று இலங்கை பாரிய பொருளாதார நெருக்கடியினை சந்தித்துள்ளது. எனவே இலங்கையினது பொருளாதார நெருக்கடி என்பது திடீரெனத் தோன்றியது அல்ல. இலங்கையினது நீண்ட காலப் பொருளாதார முகாமைத்துவங்கள், தவறான நிதிப் பிரயோகங்கள், பிழையான அரசியல் வழிநடத்தல்கள் போன்றவை காரணமாக ஏற்பட்டவை என்பதை எங்களால் விளங்கிக் கொள்ள முடிகின்றது.

## எதிர்கால இலங்கைக்கான சவால்கள்

எதிர்கால இலங்கைக்கான சவால்களினை நாங்கள் பார்த்தோமேயானால், கடன்களினை திருப்பி செலுத்த முடியாத நாடு என்ற பட்டியலில் இலங்கை சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளமையினால், எதிர்காலத்தில் கடன்களினை பெறுவதில் கடின நிலை காணப்படும். வெளிநாட்டு இருப்பினை நாங்கள் எவ்வாறு அதிகரித்துக் கொள்ளப் போகின்றோம் என்பதும் கேள்விக்குறியான விடயமாக உள்ளது. அரசிறைப் பற்றாக்குறை மற்றும் சென்மதி நிலுவைப் பற்றாக்குறை ஆகியவை இலங்கையில் பாரிய பிரச்சினையாகக் காணப்படுகின்றது. இவைகள் இலங்கையினது எதிர்கால பொருளாதார நிலைப்பாடுகள் தொடர்பான நிச்சயமற்ற தன்மையினை ஏற்படுத்தியுள்ளது. வரவுசெலவுத்திட்டப் பற்றாக்குறை என்பது இலங்கையினது உள்ளார்ந்த சமூகத்துறை சார்ந்த அபிவிருத்தியில் தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது. கல்வி, சுகாதாரம் மற்றும் வறுமையொழிப்பு போன்ற துறைகளிலும் இது பாரிய தாக்கத்தினை ஏற்படுத்தக்கூடியதாக இருக்கலாம். அரசிறைப் பற்றாக்குறை ஏற்படுகின்ற போது வரவுசெலவுத் திட்டங்களுக்கான வெளிநாட்டு மூலமான நிதியீட்டம் எங்களுக்கு கிடைக்காதபோது இது பாரிய தாக்கத்தினை ஏற்படுத்தலாம்.

ஏற்றுமதி அதிகரிக்கக்கூடிய வாய்ப்பானது இன்னும் காணப்படவில்லை. ஏற்றுமதித் துறைகள் அனைத்தும் மிகவும் இறுக்கமான சூழ்நிலைக்குச் சென்று கொண்டிருக்கின்றது. அது விவசாயத்துறை சார்ந்ததாக இருக்கலாம் அல்லது கைத்தொழில் துறை சார்ந்ததாக இருக்கலாம். இன்று மனித ஏற்றுமதிதான் அதிகளவில் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றது. இலங்கையினது உள்நாட்டு உற்பத்தியில் ஏற்பட்டிருக்கும் வீழ்ச்சி, குறிப்பாக உள்நாட்டு விவசாய உற்பத்தில் ஏற்பட்டிருக்கின்ற வீழ்ச்சி மற்றும் கைத்தொழில் துறைகளில் ஏற்பட்டிருக்கும் வீழ்ச்சி காரணமாக மக்களது வாழ்க்கைத் தரத்துக்குத் தேவையான உணவுப் பற்றாக்குறையினைப் போக்குவதற்கு அல்லது ஏனைய தேவைகளை பூர்த்தி செய்வதற்கு மீண்டும் வெளிநாடுகளில் இருந்து அதிகளவில் இறக்குமதிகளை மேற்கொள்ள வேண்டியதாகக் காணப்படுகின்றது. இறக்குமதிகளை தொடர்ந்து நாங்கள் மேற்கொள்கின்ற போது சென்மதிநிலுவையின் சமநிலையற்ற தன்மை என்பது மேலும் அதிகரிக்கும். மேலும் அரசிறை தொடர்பான பிரச்சினைகளும், சென்மதி நிலுவை தொடர்பான பிரச்சினைகளும் எதிர்காலத்திற்கான ஒரு பெரிய சவாலாகக் காணப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

கொவிட்-19 மற்றும் தற்போதுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக கைத்தொழில், விவசாயத்துறையில் ஏற்பட்ட வீழ்ச்சி குறிப்பாக சேவைகள் சார்ந்த பல நிறுவனங்கள் மூடப்படுகின்றமை அதாவது வங்கித்துறைகள், ஏனைய காப்புறுதித் துறைகள் மற்றும் போக்குவரத்துத் துறைகள் ஆகியவற்றினது பின்னடைவு சேவைகள் துறையிலே வீழ்ச்சியினை ஏற்படுத்தியுள்ளது. இலங்கையில் முச்சக்கரவண்டியின் சாரதிகள் 14 இலட்சம் பேர் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அவர்களது தொழில் இன்று உத்தரவாதம் இல்லாத நிலையில் காணப்படுகின்றது. உணவகத் கைத்தொழில், சுற்றுலாக் கைத்தொழில் ஆகியவற்றில் வேலை செய்கின்றவர்கள் தொழில் வாய்ப்புக்களை இழந்துகொண்டிருக்கின்றார்கள். அதிகரித்து வருகின்ற வேலையின்மை என்பது குடும்ப வருமானத்தினை குறைவடையச் செய்திருக்கின்றது. மறுபுறம் பணவீக்கத்தினை அதிகரித்துள்ளது. இலங்கையில் தற்போது வறுமையான மக்களின் எண்ணிக்கையும், பொருளாதார ரீதியாக பலமிழந்த மக்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. இந்நிலை எதிர்காலத்தில் இலங்கையின் வறுமை நிலையினை மேலும் அதிகரிப்பதற்கு காரணமாக அமையும். இளைஞர்களின் மத்தியில் தொழில் இன்மை ஏற்படுத்தப்படுவதன் காரணமாக அரசியல் ஸ்திரமற்ற தன்மைகள், மக்கள் சமூக எழுச்சிகள் ஏற்படுவதற்கு காரணமாக அமையும் எனவும் கருதப்படுகின்றது.

சக்தி மற்றும் உணவுப் பற்றாக்குறைகள் மற்றும் வாழ்வாதாரத்தினது இழப்பு என்பது பொதுவாக இலங்கையினது சூழல் சார்ந்த பிரச்சினைகளை அதிகரித்துள்ளது. சமையல் எரிவாயுத் தட்டுப்பாடு

காரணமாக மக்கள் அதிகளவில் விறகினைப் பயன்படுத்துகின்றனர். இதன் காரணமாக அதிகளவில் காடழிப்புக்கள் இடம்பெறுகின்றது. காடழிப்பு என்கின்ற ரீதியில் மக்கள் மரங்களை வெட்டுதல், தாவரங்களை அழித்தல் போன்ற செயல்களில் அதிகளவில் ஈடுபட்டுவருகின்றனர். உணவுப் பற்றாக்குறை காரணமாக வறிய மக்கள் காட்டுப்பிரதேசங்களில் காடுகளினை வெட்டுதல், வேட்டையாடுதல், மீன்பிடியில் தாக்கத்தினை ஏற்படுத்தக்கூடிய முறைகளினைக் கையாளுதல், பொருத்தமற்ற மீன்பிடி உபகரணங்களை கையாளுதல், தரிசு நிலங்களில், இயற்கையான பாதுகாப்புக் கொண்ட நிலங்களினை உழுதல் போன்ற பல செயற்பாடுகளில் ஈடுபட்டுவருகின்றனர். இதனால் சூழலுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

பொருத்தமற்ற அல்லது ஏற்றுக்கொள்ள முடியாத அல்லது சாத்தியமற்ற அல்லது பாதிப்பினை ஏற்படுத்தக்கூடிய சூழல் அல்லது விரும்பத்தகாத சூழல் சமமின்மை, திறனற்ற பொருளாதார வளர்ச்சி போன்றவைகள் காரணமாக இலங்கையினது வளர்ச்சி அபிவிருத்திப் பாதை என்பது ஒரு பேண்தகு நிலையற்ற தன்மை கொண்டதாகக் காணப்படுகின்றது. பேண்தகு அபிவிருத்தி என்பது பொருளாதாரத் திறன், சமூக ரீதியான நியாயமான சமநிலைத்தன்மை மற்றும் சூழல் பாதுகாப்பு ஆகிய மூன்று விடங்களைக் கொண்டமைந்ததாகும். இந்த மூன்றினையும் உறுதிப்படுத்திக்கொள்கின்ற போதுதான் அபிவிருத்திப் பாதையினை நாங்கள் பேண்தகு அல்லது நிலையான அபிவிருத்திப் பாதை என்கின்ற வகையில் வரையறுத்துக் கொள்ள முடியும். இந்த மூன்று விடயங்களும் இலங்கையில் அச்சுறுத்தலுக்கு உட்பட்டிருப்பதன் காரணமாக இலங்கையினது பொருளாதார அபிவிருத்தியென்பது பேண்தகு அற்ற நிலைமையில் காணப்படுகின்றது.

எனவே இவற்றில் இருந்து விடுபடுவதற்கு இருக்கின்ற இந்த சவால்களை ஒரு வாய்ப்புகளாக இலங்கை பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இன்று காணப்படுகின்ற சவால்கள் அனைத்தும் உடனடியாக தீர்த்துக் கொள்ளக்கூடியதாகவோ அல்லது விடுபட முடியாததாகவோ காணப்படுகின்றது. இதிலிருந்து மீள குறைந்தது 10 வருடங்களாவது தேவைப்படும் என பொருளாதார வல்லுனர்கள் குறிப்பிடுகின்றனர். அதாவது நிலையான ஒரு பாதையினை வடிவமைத்துக் கொள்வதற்கு நீண்டகாலம் எடுக்கலாம் என்பதுதான் உண்மையாகும். எனவே இந்த சவால்களை இலங்கையும் இலங்கை அரசாங்கமும் ஏற்றுக்கொண்டு, இங்கு ஏற்பட்டிருக்கக்கூடிய பிரச்சினைகளை, அதிலுள்ள வாய்ப்புகளை, வெளிப்பாடுகளை நன்கு அவதானித்து ஒரு பேண்தகு அபிவிருத்திக்கான மாற்று உபாயங்களைக் கையாண்டு அவைகளை சீரமைக்க வேண்டும்.

பேண்தகு அபிவிருத்திக்கான பாதையானது சூழல், பொருளாதாரம் மற்றும் சமூகம் ஆகிய மூன்று விடயங்களைக் கொண்டிருக்கும். சாத்தியப்படக்கூடிய ஒரு இயற்கை சூழல் எமக்குத் தேவை. ஏனெனில் அபிவிருத்திக்குத் தேவையான சக்தி வளங்களையும் மூலப்

பொருட்களையும் நாங்கள் சூழலில் இருந்துதான் பெற்றுக்கொள்ள வேண்டும். எனவேதான் அபிவிருத்திக்கான அடிப்படைத் தளமாக இந்த சூழல் காணப்படுகின்றது. இவ்வளங்கள் சமத்துவமான முறையில் பங்கீடு செய்யப்பட வேண்டும். போதுமான அளவான பொருளாதார வளர்ச்சியினை ஒரு நாடு அடைந்து கொள்ள வேண்டும். சமூகமானது ஒரு சக்தி மிக்க சமுதாயமாக வளர்ச்சியடைய வேண்டும். எனவே மேற்படி மூன்று விடயங்களும் ஒன்றாக இணைகின்ற போது அவற்றிற்கு இடையிலான ஒத்த தன்மை காரணமாக நாம் பேண்தகு அபிவிருத்தியினை அடைந்து கொள்ள முடியும்.

இன்றைய சமூகமானது தனது சமூக பொருளாதார தேவைகளை அடைந்து கொள்ளுகின்ற போது எதிர்கால சந்ததிகளினுடைய தேவைகளினையோ அவர்களுடைய நிலைத்திருக்கக்கூடிய தன்மையினையோ பாதிக்காத வகையில் இயற்கைச் சூழலைப் பயன்படுத்திக்கொண்டு இன்றைய சமூகம் தங்களுடைய தேவைகளை பூர்த்தி செய்து கொள்கின்ற நிலைப்பாட்டினைத்தான் நாம் பேண்தகு அபிவிருத்தி என்கின்றோம். எனவே நிலைத்திருக்கக் கூடிய அபிவிருத்தியென்பது இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட பரம்பரையில் இணக்கப்பாட்டினை ஏற்படுத்திக்கொண்டு, அதேவேளை இன்றைய சமூகங்களுக்கு இடையில் சூழல், சமூகம், பொருளாதாரங்களுக்கு இடையில் ஒரு இணக்கப்பாட்டினை ஏற்படுத்திக் கொள்ளக்கூடிய ஒரு வழிமுறைகளுக்கு ஊடாக நாங்கள் பொருளாதார அபிவிருத்திச் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும். அது எதிர்கால சந்ததிகளினது தேவைகளினையும், அவர்களுடைய வாழ்வாதாரத்தினையும், அபிவிருத்தியினையும், அவர்களுக்கான சூழல் மீது உள்ள உரிமையினையும் பாதுகாப்பவைகளாக இருக்க வேண்டும் என்பதனைத்தான் நிலைத்திருக்கக்கூடிய அபிவிருத்தி என்கின்றோம்.

## நிலைத்திருப்பிற்கான விடயங்கள்

ஒரு உறுதியான நிலைத்திருப்பினை நாங்கள் பெற்றுக் கொள்வதற்கு மனித முதல், இயற்கை முதல், மனிதனால் உருவாக்கப்பட்ட முதல் ஆகியவற்றிற்கு இடையில் ஒரு நெருக்கமான ஒன்றிணைப்புக் காணப்பட வேண்டும். மனித முதல் என்பது அறிவையும் திறனையும் கொண்ட மனிதர்களையே குறிக்கின்றது. எனவே இந்த மனித முதலையும், இயற்கையாகக் கிடைக்கக்கூடிய வளங்களையும் மற்றும் மனிதனால் உருவாக்கப்படுகின்ற பௌதீக ரீதியான கட்டமைப்புக்களையும் ஒன்றாக இணைத்து கொண்ட ஒரு உறுதியான பேண்தகு அபிவிருத்திக்கு நாங்கள் செல்ல வேண்டியிருக்கின்றது. இலங்கையினைப் பொறுத்தமட்டில் இன்று வெளிநாட்டுக் கடன்களினைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலை காணப்படுகின்றது. வெளிநாட்டு முதல் இலங்கைக்கு இலகுவாக வரமுடியாதுள்ளது. இலங்கையின் விவசாயத்துறையில் இருக்கின்ற பாதிப்புக்களில் இருந்து நாம் மீண்டெழ

வேண்டியிருக்கின்றது. இலங்கையில் இன்றும் முழுமையாகப் பயன்படுத்தப்படாத வளமாக மனித முதல் காணப்படுகின்றது.

இலங்கையினைப் பொறுத்தவரையில் கல்வி அறிவு வீதம் 98 சதவீதமாகக் காணப்படுகின்றது. ஆயுள் எதிர்பார்க்கையானது 78.2 சதவீதமாகக் காணப்படுகின்றது. இவை இரண்டும் மனித முதலினது பிரதான அங்கங்களாகக் காணப்படுகின்றன. இலங்கையானது குறிப்பாக தென்கிழக்காசிய நாடுகளிலே அதிகளவான கல்வி மட்டங்களையும் மனித முதலையும் கொண்ட நாடாகக் காணப்படுகின்றது. இலங்கையில் காணப்படுகின்ற இலவசமான கல்வி மற்றும் இலவசமான சுகாதாரம் என்பது நீண்ட காலமாக மனித முதலை உருவாக்கி, சேமித்து வைத்திருக்கின்றது. ஆகவே இலங்கையில் பேண்தகு அபிவிருத்தியினை அடைந்து கொள்வதற்கு மனித முதலை ஒரு மூலதனமாகக் பயன்படுத்தும்போது மனித முதலைக் கொண்டு இயற்கை வளங்களை முழுமையாக் பயன்படுத்திக்கொள்ள முடியும். இதன் மூலம் பௌதீகக் கட்டமைப்புக்களை உருவாக்கிக் கொள்ளவும் முடியும். இவை அனைத்தினையும் மேற்கொள்வதற்கு மனித முதலை பிரதானமான கருவியாகப் பயன்படுத்த வேண்டிய தேவை காணப்படுகின்றது. இது இலங்கையில் இன்று வளர்ச்சியடைந்து வந்திருக்கின்ற டிஜிட்டல் தொழில்நுட்பத்தினை அடிப்படையாகக் கொண்டதாகவும், அதேவேளை இலங்கையிலே இருக்கின்ற அறிவு, திறன் மிக்க இளம் சமூக பரம்பரையினை ஒன்றிணைத்துக் கொண்ட அபிவிருத்திப் பாதையில் இலங்கை செல்ல வேண்டியதும் அவசியமாகின்றது.

உலகில் பொதுவாக கணினி அறிவு என்பது 32.3 சதவீமாகவும் இலங்கையினைப் பொறுத்தமட்டில் 67.9 சதவீதமாகவும் காணப்படுகின்றது. டிஜிட்டல் பற்றிய அறிவு என்பது பொதுவாக உலகில் 50.1 சதவீதமாகவும், இலங்கை மக்கள் மத்தியில் 82.3 சதவீதமாகவும் காணப்படுகின்றது. எனவே இன்றைய சமூக மூலதனத்தினை எதிர்கால அபிவிருத்திக்கான மூலதனமாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். கல்வி கற்ற, டிஜிட்டல் தொழில்நுட்பங்களை கையாளக்கூடிய திறனைக் கொண்ட வகையில் வளர்ந்து வருகின்ற வளம் மிக்க சமூகமாக இலங்கை காணப்படுகின்றது. அறிவுப் பொருளாதாரத்தினை நோக்கிய ஒரு கட்டமைப்பிற்குள் இலங்கை கொண்டு செல்லப்பட வேண்டும். அந்த அறிவியல் கட்டமைப்பிற்குள் செல்கின்றபோது மனித மூலதனத்தை அதற்கு பிரதானமாக பயன்படுத்திக் கொண்டு செல்ல வேண்டும்.

மனித முதலை மேலும் மேலும் வளர்த்தெடுப்பதன் காரணமாக பொருளாதாரத்தில் நிலைத்திருக்கக்கூடிய அபிவிருத்தியினை இலகுவாக அடையமுடிவதுடன், இன்று இலங்கையில் ஏற்பட்டிருக்கக்கூடிய பாரிய பிரச்சினைகளை இதன் மூலம் தீர்த்துக்கொள்ள முடியும். இளைஞர் சமூகம் தொழில்நுட்பம் சார்ந்த அறிவு வளர்ச்சியில் அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்கின்ற ஒரு புறம் அவர்களிடம் இருந்து சூழலினையும் பாதுகாத்துக் கொள்ள முடியும். மனித மூலதனம் என்பது பொதுவாக

இலங்கையில் மட்டுமல்லாமல் வெளிநாடுகளில் வேலைவாய்ப்பினைப் பெற்றுக்கொள்வதற்கும் அடிப்படைகளை உருவாக்கும். இதனால் வெளிநாடுகளில் இருந்து வளங்களைக் கொண்டு வருதற்கும் ஏதுவான வாய்ப்புக்களை உருவாக்கும். எனவே இதனை பிரச்சினைகளை எதிர்கொள்வதற்கான ஒரு அடிப்படைக் கருவியாகவும் நோக்க முடியும். இலங்கையில் தற்போது காணப்படுகின்ற உற்பத்தி சார்ந்த வளங்களினது திறனை, அவற்றினது உற்பத்தியினது அளவினை அதிகரிப்பதன் மூலமாக பொருளாதார வளர்ச்சிக்கு அதிகளவான பங்களிப்பினை செலுத்தக்கூடியதாக இருக்கும். கணினித்துறை சார்ந்தவர்கள் வெளிநாடுகளுக்குச் செல்கின்ற போது இலங்கைக்கு அதிகளவு வருமானம் கிடைக்கும். இந்த வருமான உயர்வின் காரணமாக சமூகத்திலே பல்வேறுபட்ட மாற்றங்கள் ஏற்படலாம். சமூக சமத்துவங்கள் ஏற்படக்கூடியதாக இருக்கும். சமூகத்திலே விரும்பக்கூடிய மாற்றங்கள் உருவாகும். கணினி அறிவினைப் பெறுவதற்கான முதலீடு தேவையே தவிர கணினியினை அடிப்படையாகக் கொண்டு ஒரு தொழிலினை உருவாக்குவதற்கு அதிகளவு முதலீடுகள் தேவைப்படாத நிலையில் அறிவையே முதலீடாகப் பயன்படுத்துகின்றனர்.

## நிலையான அபிவிருத்திக்குத் தேவையான அடிப்படைக் கொள்கைகள்

உள்ளார்ந்த அல்லது அனைத்தினையும் ஒன்றிணைத்துச் செல்லக்கூடிய ஒரு பொருளாதார அணுகுமுறையொன்று காணப்படுகின்றது. அதாவது இலங்கை கடல்வளத்தினால் சூழப்பட்ட ஒரு நாடாகும். இந்தக் கடல் வளத்தினது உண்மையான பயனை இதுவரை இலங்கை பெற்றுக்கொள்ளவில்லை. அடுத்ததாக சூழலை அடிப்படையாகக் கொண்ட விவசாய உற்பத்தியையும் அவதானிக்க வேண்டியிருக்கின்றது. கைத்தொழில் துறை சார்ந்த உற்பத்தியினை மேற்கொள்வதற்கு எமக்கு அதிகளவான முதலீடுகள் தேவைப்படுகின்றது. ஆனால் கடல் சார்ந்த வளங்களை நாங்கள் அறுவடை செய்வதற்கு முதலீடுகள் அதிகம் தேவைப்படுவதில்லை. இலங்கையினது விவசாயம் சார்ந்த உற்பத்தி வளங்கள், நீர் நிலைகள் ஆகியவை இயற்கையாகக் கிடைக்கின்றது. இவை சார்ந்த இலங்கையின் உற்பத்திகளுக்கு வெளிநாடுகளில் அதிகளவு கேள்வி நிலவுகின்றமையினை காணக்கூடியதாக உள்ளது. மேலும், தற்போது உள்ள மனித வளத்தினை விட விருத்தியடைந்த மனித வளத்தினைப் பயன்படுத்த வேண்டும்.

இலங்கையினது அனைத்து உற்பத்தித் துறைகளிலும், தொழில்நுட்பம் சார்ந்த அறிவியலை அடிப்படையாகக் கொண்ட தொழில்நுட்பத்திற்கு ஊடான ஒரு நிலைமாற்றத்தினை நோக்கிய நகர்வினை ஏற்படுத்த வேண்டும். ஏனெனில் அதற்குத் தேவையான கல்வி வளர்ச்சியும் டிஜிட்டல் அறிவும் அதிகளவில் காணப்படுவதன் காரணமாக, அவை மனித மூலதனத்தின் வளர்ச்சி நிலையினை நோக்கிச் செல்ல வேண்டும். ஆசியாவில் அதிகளவான எழுத்தறிவு வீதம் கொண்டிருந்த ஜப்பான் நாடானது தனது அறிவினை அபிவிருத்திற்கான அடிப்படையாக மாற்றிக்

கொண்டுள்ளது. மேலும் சீனாவும் இந்த அணுகுமுறையினைக் கையாண்டுள்ளது.

இலங்கையில் டிஜிட்டல் தொழில்நுட்பத்திற்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். இலங்கையினது பொருளாதாரத்தினை முன்னெடுத்துச் செல்வதற்கான இயந்திரமாக இதனை நாம் பயன்படுத்த வேண்டும். டிஜிட்டல் அறிவு என்பது சர்வதேச ரீதியாக வர்த்தகமயப்படுத்தக்கூடிய ஒன்றாகக் காணப்படுகின்றது. சர்வதேச சந்தையில் இதற்கு அதிகளவான கேள்வி காணப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது. உள்நாட்டில் பல உற்பத்தித் துறைகளில் உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்கு இது உதவக்கூடியதாகும்.

இலங்கையில் இருந்து வெளிநாடுகளுக்குச் செல்லும் அதிகளவான இளைஞர்கள் உடல் உழைப்பினை வழங்கி சம்பாதிக்கக்கூடியவர்களாகவே செல்கின்றனர். இதனால் எதிர்பார்த்த அளவிற்கு அதிகளவான அந்நியச் செலாவணியினைப் பெறமுடியாத நிலை காணப்படுகின்றது. டிஜிட்டல் அறிவு கொண்டவர்களாக குறிப்பிட்ட அத்தொழிலாளர்களை குறிப்பிட்ட காலத்திற்குள் மாற்றியமைக்க முடியும். பாடசாலைக் கல்வியினை நிறைவு செய்தவர்கள், பல்கலைக்கழக பட்டப்படிப்பினை பூர்த்தி செய்தவர்கள் மத்தியில் டிஜிட்டல் அறிவினை வளர்த்தெடுப்பது என்பது மிகவும் இலகுவான விடயமாகும். 82.3 சதவீமானவர்கள் மத்தியிலே இது தொடர்பான அறிவு காணப்படுகின்றது.

இலங்கை அரசாங்கமானது வரியினைக் குறைத்து மானியத்தினை அதிகரித்தமை காரணமாக வரவுசெலவுத்திட்டப் பற்றாக்குறையானது ஏற்பட்டுள்ளது. 80 வீதமான வரிகள் நேரடி வரிகளாகவும், உயர்வருமானத்தினை பெறுகின்றவர்கள் செலுத்துகின்ற வரிகள் 20 சதவீதத்திற்குக் குறைவாகவும் காணப்படுகின்றது. வருமானம் குறைந்தவர்கள் அதிகளவில் நேரடி வரிகளுக்கு ஊடாக வரியினை செலுத்துகின்றனர். ஆகவே இதன் காரணமாக வரிமுறைமையில் ஒரு சீர்திருத்தம் அவசியமானது என அண்மைக்காலங்களில் கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன.

இரண்டு மூன்று வருடங்களில் உற்பத்தி துறை சாராத, முதலீட்டுத்துறை சாராத, அதே நேரத்தில் சேவைகள் துறை சார்ந்த துறைகளில் முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. சுகாதாரத்திற்கும் கல்விக்குமான முதலீடுகள் இலங்கையில் குறைவாகக் காணப்படுகின்றன. தேசிய உற்பத்தியில் 1.6 சதவீதமான அளவு கல்விக்கும் 1.4 சதவீதமான அளவு சுகாதாரத்திற்கும் செலவிடப்படுகின்றது. உண்மையில் கல்விக்கான ஒதுக்கீடு என்பது 6 சதவீதமளவில் இருக்க வேண்டும் என பல்கலைக்கழகங்கள் மத்தியிலே ஆர்ப்பாட்டங்களின்போது கருத்துக்கள் முன்வைக்கப்பட்டாலும் கூட அது நடைமுறைப்படுத்தப்படவில்லை. இலங்கை அரசாங்கங்கள் உற்பத்தித் திறன் மிக்க துறைகளிலே முதலீடுகளை மேற்கொள்ளவில்லை.

இலங்கையினது பொதுத்துறையில் 14 இலட்சம் பேர் நேரடியாக வேலைபுரிகின்றனர். மறைமுகமாக 7 இலட்சம் பேர் வேலை செய்கின்றனர். எனவே மொத்தமாக 21 இலட்சம் பேர் அதாவது மொத்த சனத்தொகையில் 10 வீதமான மக்களைத்தான் இது உள்ளடக்கியிருக்கின்றது. இலங்கையில் 10 பேருக்கு ஒரு அரசாங்க அதிகாரி என்ற அடிப்படை காணப்படுகின்றது. இது எதிர்கால சந்ததிக்கு பெரிய சுமையாக காணப்படப்போகின்றது. எனவே அரச வேலைவாய்ப்புக்கள், அரச செலவீடுகள், அரச வருமானங்கள் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு புதிய ஒரு கட்டமைப்பினை உருவாக்க வேண்டியது அவசியமாக இருக்கின்றது.

மேலும் பேரினப் பொருளாதார உறுதிப்பாட்டினைப் பேணுதல் என்பதும் மிகவும் முக்கியமான ஒன்றாகும். வர்த்தக நிலுவை சார்ந்த பிரச்சினையைக் குறைப்பதற்கு ஏற்றுமதியினை அதிகரித்து இறக்குமதியினை குறைக்க வேண்டிய தேவை காணப்படுகின்றது. இதன் மூலம் ஏற்றுமதி வருமானத்தினை அதிகரித்துக் கொள்ள முடியும். அல்லது வெளிநாடுகளிற்கு மனித முதல்களை ஏற்றுமதி செய்வதன் மூலம் இதற்குத் தீர்வுகாண முடியும் அத்தோடு எதிர்காலங்களில் வெளிநாட்டுக் கடன்களினை நாங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர வேண்டும். கடன்கள் என்பது எதிர்கால சந்ததிக்கான பாரிய சுமையாக இருப்பதன் காரணமாக இதனை கருத்திற் கொள்ள வேண்டியது அவசியமாகும். அரசிறைப் பற்றாக்குறை, முதலீட்டுப் பற்றாக்குறை ஆகியனவும் பெரிய பிரச்சினைகளாக உள்ளது.

வெளிநாட்டு முதலீடுகள் இலங்கைக்கு வருவதற்கு பதிலாக இலங்கையில் இருந்து மீள எடுத்துச் செல்கின்ற போக்கானது காணப்படுகின்றது. இதனால் வெளிநாடுகளில் இருந்தான முதலீட்டு வருகை மற்றும் வெளியேற்றம் ஆகியவற்றில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றது. இதைவிட வேலையின்மை என்பது பாரிய பிரச்சினையாக உள்ளது. 10 இலட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் தொழிலினை இழந்திருக்கின்றார்கள். கொவிட்-19 மற்றும் தற்போதுள்ள பொருளாதார நெருக்கடி போன்றன காரணமாக தொழிலின்மையானது ஏற்பட்டுள்ளது. இலங்கையில் வறுமை, சமூக சமமின்மை போன்ற பிரச்சினைகளும் காணப்படுகின்றன. வறுமையிலுள்ள மக்களைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டுமாக இருந்தால், அதிகரித்துச் செல்லும் பணவீக்கம், வாழ்க்கைச் செலவு என்பவற்றினைக் கட்டுப்படுத்த வேண்டும்.

சூழலைப் பாதுகாத்துக் கொள்வதற்கான ஒன்றிணைக்கப்பட்ட ஒரு அர்ப்பணிப்பு இலங்கையில் தேவைப்படுகின்றது. அந்தவகையில் உற்பத்தியாளர்களாகவோ, சாதாரண மக்களாகவோ, அரசாங்கமாக அல்லது சூழல் சம்பந்தமான அக்கறை கொண்டவர்களாகவோ காணப்படுகின்றவர்கள் மிகவும் முக்கியமானவர்கள். இவர்களுக்கிடையிலான ஒன்றிணைக்கப்பட்ட அர்ப்பணிப்புத்

தேவைப்படுகின்றது. சூழல் பாதுகாக்கப்பட்டால்தான் உறுதியான அல்லது நிலையான பேண்தகு அபிவிருத்தியினை நாங்கள் பாதுகாத்துக் கொள்ள முடியும். இன்றைய சமூகத்தினரும் எதிர்கால சமூகத்தினரும் நன்மையினைப் பெற்றுக்கொள்ளக்கூடிய அல்லது எதிர்கால சந்ததியினர் அபிவிருத்தியில் பயனடைந்து செல்வதற்கான நிலைமையினை ஏற்படுத்திக் கொள்ள முடியும்.

## அத்தியாயம் 12

# சமகால பொருளாதார நெருக்கடியும் பணவீக்கமும்

# Current Economic Crisis and Inflation

**Mrs. Sarojini Maheswaranathan**
Senior Lecturer,
Department of Economics,
Faculty of Commerce and Management,
Eastern University, Sri Lanka.

(17.08.2022 அன்று நடைபெற்ற நிகழ்நிலைக் கருத்தரங்கின் தொகுப்பு)

## அறிமுகம்

இலங்கை தற்போது எதிர்நோக்கிவரும் பொருளாதார நெருக்கடி காரணமாக பணவீக்கத்தினால் இலங்கை மக்கள் எத்தகைய பாதிப்புக்களை எதிர்நோக்குகின்றார்கள்? மற்றும் இவ் நெருக்கடியால் எதிர்காலத்தில் இலங்கைப் பொருளாதாரம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் எவ்வாறு அமையப்போகின்றது? என்பது பற்றியதாக இக்கட்டுரை காணப்படுவதோடு, பணவீக்கம் என்றால் என்ன? இலங்கை அனுபவிக்கும் உயர் பணவீக்கத்திற்கான முக்கிய காரணங்கள் யாவை? உயர் பணவீக்கத்தினால், நாட்டில் காணப்படுகின்ற பல்வேறு வர்க்கத்தினரும் எவ்வாறு பாதிக்கப்படுகின்றார்கள்? மற்றும் இப்பணவீக்கத் தாக்கத்திலிருந்து நாட்டு மக்களை பாதுகாப்பதற்கான சாத்தியமான வழிமுறைகள் யாவை? எனும் அடிப்படையில் இக்கட்டுரை வடிவமைக்கப்பட்டுள்ளது.

முதலில் பணவீக்கம் என்பது பற்றிய பொருளியலாளர்களது கருத்தை நோக்கின், Coulborn என்பவர் பணவீக்கம் என்பது குறைந்தளவு பொருட்களை அதிகளவு பணம் துரத்திச் செல்கின்ற ஒரு நிலை என விபரிக்கின்றார். Parkin and Bade ஆகியோர்கள் பணவீக்கம் என்பது சராசரி விலையில் ஏற்படுகின்ற உயர்வு எனக் குறிப்பிடுகின்றனர். மேலும் Samuleson – Nordhaus எனும் பொருளியலாளர்கள் பொது விலை மட்டங்களில் ஏற்படுகின்ற அதிகரிப்பு பணவீக்கம் என குறிப்பிடுகின்றனர். Johnson என்பவர் பணத்தின் அளவை விட பொருட்களின் அளவு குறைவாக காணப்படும் ஒரு நிலையே பணவீக்கமாகும் என விபரிக்கிறார். அதேவேளை Keynesஇனது பார்வையில் பொருளாதாரம் நிறை தொழில் மட்ட நிலையில் காணப்படும் போது வெளியீட்டின் அளவு அதிகரிப்பை விட பணத்தின் அளவு அதிகரிக்கும் ஒரு நிலையே பணவீக்கமாகும். பொது விலை மட்டத்தில் ஏற்படுகின்ற தொடர்ச்சியான அதிகரிப்பே பணவீக்கமாகும் என Paterson விளக்குகின்றார்.

இதனடிப்படையில் உண்மையில் இலங்கையில் தற்போது பொருட்களின் அளவானது, நாட்டில் ஏற்பட்ட ஈஸ்டர் குண்டுத் தாக்குதல், கொரோனாத் தொற்றுப் பரவல், நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி, இரசாயணப் பசளை இறக்குமதிக்கான தடை என்பவற்றால் மிகவும் குறைவாகக் காணப்படுவதுடன் நாட்டின் பல்வேறு தேவைகள் கருதி இலங்கை மத்திய வங்கி அதிகளவான பணத்தை அச்சிட்டு வெளியிட்டுமுள்ளது. இதனால் மக்களின் கைகளில் காணப்படும் அதிகளவான பணம் குறைந்தளவான பொருட்களை கொள்வனவு செய்வதற்கு பயன்படுத்தப்படுவதோடு, போட்டியிட்டு, அதிக பணம் செலுத்தி வாங்க வேண்டிய நிலைக்கும் மக்களைத் தள்ளியுள்ளது. இந்நிலைமையே பொருட்களின் விலைமட்ட அதிகரிப்பிற்கு காரணமாக அமைவதுடன் பொருளியலாளர்களின் கணிப்பீட்டினடிப்படையில் பணவீக்கம் எனவும் அழைக்கப்படுகின்றது.

பொதுவாக நோக்கும்போது மேலுள்ள காரணங்களால் இலங்கையின் பணவீக்க வீதமானது மத்திய வங்கி தகவல்களினடிப்படையில் ஜுலை 2022 காலப்பகுதியில் 54.6 சதவீதமாகக் காணப்பட்டது. ஆனால் ரஷ்யப் பொருளியல் பேராசிரியர்களின் கணிப்பீட்டினடிப்படையில் இலங்கையின் பணவீக்க வீதமானது மே 2022 காலப்பகுதிகளிலேயே 100 சதவீதத்தினை விட அதிகமாக காணப்படுகின்றது என குறிப்பிட்டுள்ளனர். இலங்கை மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் அவர்களின் கருத்தின் படி, எதிர்வரும் செப்டம்பர் 2022இல் நாட்டின் பணவீக்க வீதமானது 70 சதவீதத்தினைத் தாண்டிச் செல்லக் கூடிய சாத்தியக் கூறு காணப்படுவதாக குறிப்பிட்டுள்ளார். அதாவது பொருட்கள் சேவைகளின் விலைகள் இன்னும் தொடர்ச்சியாக அதிகரிப்பதற்கான வாய்ப்புக் காணப்படும் என்பது அவரது கணிப்பீடாகும். மேலும் வரைபடம் 1, இலங்கையின் ஜனவரி 2020 தொடக்கம் மே 2022 வரையான காலப்பகுதியில் (ஓடும்) பணவீக்க போக்கினைக் காட்டி நிற்கின்றது.

**வரைபடம் 1: இலங்கையின் ஜனவரி 2020 தொடக்கம் மே 2022 வரையான (ஓடும்) பணவீக்கம் (Galloping Inflation)**




**Source: Department of Census and Statistics**

அத்துடன் தேறிய நுகர்வோர் விலைச் சுட்டெண், ஏப்ரல் மாதத்தில் 38.8% ஆகக் காணப்பட்டதுடன் மே மாதத்தில் 45.3 சதவீதத்தால் அதிகரித்துக் காணப்பட்டது. அதே வேளை உணவுப் பணவீக்கமானது ஏப்ரல் மாதத்தில் 45.1 சதவீதமாகக் காணப்பட்டதுடன் மே மாதத்தில் 58 சதவீதமாக ஒரு பாய்ச்சல் வேகத்தில் அதிகரித்திருந்தது. இவ்வாறு இந்த உணவுப் பணவீக்கம் மற்றும் பொதுவான பணவீக்கத்தினால் ஏறத்தாழ 62,000 இலங்கை மக்கள் மோசமாகப் பாதிக்கப்பட்டு, உடனடியான உதவியை வேண்டி நிற்பவர்களாகக் காணப்படுவதாக உலக உணவுத்திட்டத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறு பணவீக்கமானது அதிகளவான சதவீதத்தில் அதிகரித்து செல்கின்ற அதேநேரம் இது ஒரு தலைமுறையான பணவீக்கத்திற்கான பாரிய பிரச்சனையை உருவாக்கும் என்பது பொருளியலாளர்களின் கருத்தாகவும் காணப்படுகின்றது.

அடுத்ததாக இலங்கையில் காணப்படுகின்ற இப் பணவீக்கத்திற்கான முக்கியமான காரணங்களை அவதானித்தால், பொதுவாக பணவீக்கத்திற்கான காரணமாக, பொது மக்களால் ஏற்படுத்தப்படுகின்ற பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான கேள்விகளுக்கு ஏற்ப நிரம்பல் காணப்படாமையாகும். அந்தவகையில் இப் பணவீக்கத்திற்கான காரணங்களாக நாம் இரு விடயங்களை குறிப்பிடலாம். ஒன்று கேள்வி பக்கம் மற்றயது நிரம்பல் பக்கமாகும்.

முதலில் இக்கேள்விப் பக்கத்தை அவதானிக்கும் போது, வெளியீடு அதிகரிக்கப்படாத நிலையில் பண நிரம்பலானது அதிகரிக்குமாக இருந்தால் பொதுமக்களின் கையிலுள்ள பணத்தின் அளவு அதிகரித்து பணவீக்கமானது ஏற்படுத்துவதாகக் காணப்படும். இலங்கையில் தற்பொழுது இந்நிலைமையே காணப்படுகின்றது. இவ்வாறு பணநிரம்பலானது அதிகரித்தால் மக்களின் செலவிடக்கூடிய வருமானமும் அதிகரித்துக் கொண்டே செல்லும். ஏனைய நாடுகளைப் போலல்லாது இலங்கை வரி செலுத்தும் அளவானது குறைவாகவே காணப்படுகின்றது. இதனால் மக்களின் கைகளில் செலவிடக் கூடிய பணத்தின் அளவானது அதிகரித்து இது கேள்விப்பக்க பணவீக்கத்திற்கு வழிவகுக்கும்.

அடுத்ததாக நிரம்பல் பக்க காரணங்களை அவதானிக்கும் போது, தற்காலத்தில் இலங்கையில் காணப்படுகின்ற நெருக்கடிகளாக எரிபொருள் மற்றும் எரிவாயுத் தட்டுப்பாடு அத்துடன் மின்சாரத் துண்டிப்பு போன்றவற்றினால் உற்பத்தித் துறைகள் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டு உற்பத்தி பொருட்களுக்கான தட்டுப்பாடு நிலவி வருகின்றது. உதாரணமாக, இலங்கையில் தற்போது 90 சதவீதமான வெதுப்பகங்கள் மூடப்பட்டுள்ளன. அத்துடன் வியாபாரத் துறையானது சொந்த மூலதனம் இல்லாமல் வங்கிகளிலிருந்து கடன்களைப் பெற்று அதன் மூலமே தங்களது வணிகங்களை நடத்திச் செல்லக் கூடிய நிலைமையும் காணப்படுகின்றது. மற்றும் விவசாயத்துறையானது

உரமானியங்களுக்கு விதிக்கப்பட்ட இறக்குமதித் தடையினால் மிகவும் பாரதூரமான பாதிப்பு நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளது. இவ்வாறான காரணங்களினால் உற்பத்தியானது குறைவடைந்து பொருட்களுக்கான தட்டுப்பாடு ஏற்பட்டு பொருட்களுக்கான விலைகள் அதிகரித்து நிரம்பல் பக்க பணவீக்கத்திற்கு வழிவகுக்கின்றது.

அடுத்ததாக இப்பணவீக்கத்தினால் இலங்கையில் தற்பொழுது காணப்படுகின்ற தாக்கங்கள் எவை? என்பதை இலங்கையில் ஏற்பட்டுள்ள இந்த நெருக்கடி காரணமாக பொருட்களுக்கான பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதுடன் பல்வேறு காரணங்களுக்காக பணம் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டமை போன்ற காரணங்களால் விலை மட்டமானது அதிகளவில் உயர்வடைந்தமையால் ஏற்பட்ட அதிகரித்த பணவீக்கமானது நாட்டின் பல்வேறு பிரிவு மக்களிடையே மிகவும் மோசமான தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது. பணவீக்கம் தாக்கம் செலுத்தியுள்ள பல்வேறு பிரிவு மக்களாக குறைந்த வருமானம் பெறும் மக்கள், நிரந்தர வருமானம் பெறுவோர், உற்பத்தியாளர்கள், சிறுவர்கள், கர்ப்பிணித் தாய்மார்கள், வயதானோர், விவசாயிகள், உணவகங்களில் வேலை செய்வோர், வியாபாரிகள், முயற்சியாளர்கள், கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் ஆகியோரைக் குறிப்பிடலாம்.

முதலில் குறைந்த வருமானம் பெறும் மக்கள் எவ்வாறு இப் பணவீக்கத்தினால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்னும் போது, 22 மில்லியன் மக்கள் தொகையில் 10 வீதமான மக்கள் புதிதாக வறுமைக் கோட்டின் கீழ் சென்றுள்ளனர். பெரும்பாலான மக்கள் தொழில் வாய்ப்புக்களை இழந்துள்ளதுடன் சுகாதாரம் மற்றும் உணவுப் பற்றாக்குறையை எதிர்நோக்கி நிற்பவர்களாகவும் காணப்படுகின்றனர். உலக வங்கியின் அறிக்கையின்படி, 2023இல் இத்தொகையானது 22 வீதமாக அதிகரிக்கக் கூடும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறு வறுமைக் கோட்டின் கீழ் வாழ்கின்ற மக்கள் தொகையானது அதிகரிக்கின்ற போது அது மானிட அபிவிருத்தியில் பாரியளவிலான ஒரு தாக்கத்தினை ஏற்படுத்தி பொருளாதார நெருக்கடியினை மேலும் தீவிரமாக்கும் ஒரு விடயமாகவே மாறியுள்ளது. அதேவேளை இவ் நெருக்கடியானது வீட்டுத்துறையினர் தங்களுக்குக் தேவையான அத்தியாவசியத் தேவைகளை பூர்த்தி செய்வதற்கான இயலுமையைக் குறைப்பதோடு போதியளவு போசாக்கின்மையையும் ஏற்படுத்துவதாகக் காணப்படுகின்றது. தற்போழுது இலங்கையில் பார்த்தோமானால், சாதாரணமாக 3 வேளை சாப்பாட்டைக்கூட சாப்பிடுவதற்கு இயலாதவர்களாகவே இக்குறைந்த வருமானம் பெறும் மக்கள் காணப்படுகின்றனர். இவ்வாறான நிலை காணப்படும் போது நிகழ்காலத்திலோ அல்லது எதிர்காலத்திலோ உற்பத்தியினை மேற்கொள்ளக்கூடிய அளவுக்கான வலு குறைந்த வருமானம் பெறும் மக்களிடத்தில் இல்லாமல் போகின்றது. இந்நிலையிலிருந்து மக்களை மீட்டெடுக்க முடியாமல் போகுமானால் இது

நீண்ட காலத்தில் தலைமுறை ரீதியான வறுமை நிலைமைக்கே இட்டுச் செல்லும்.

Save the Children எனும் அமைப்பினால் மே தொடக்கம் ஜூன் 2022 வரையான காலப்பகுதியில் 9 மாகாணங்களில் 2309 வீட்டுத்துறையினரிடம் மேற்கொள்ளப்பட்ட சேவைக் கணக்கெடுப்பின் அடிப்படையில் 2/3 பகுதி மக்கள் போதுமான உணவு இன்மையினால் கஷ்ட்டப்படுவதாகவும் 85 வீதமான மக்கள் அவர்களது வருமானத்தை மேலும் இழந்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளது. இவ்வாறான நிலைமை தொடருமாக இருந்தால் எதிர்காலம் என்பது கேள்விக் குறியாகவே காணப்படும். ஏழை மக்கள் எவ்வாறு பாதிக்கப்படுகின்றார்கள் என்பதை மின்சாரத்தடை, பொருட்தட்டுப்பாடு, உணவுப் பற்றாக்குறை, பாடசாலைகள் மூடப்பட்டுள்ளமை, வாழ்க்கைச் செலவானது அதிகரித்துச் செல்தல், எரிபொருட்தட்டுப்பாடு, எரிபொருட்களைப் பெறுவதற்கு வரிசைகளில் காத்திருத்தல், அதிக நெருக்கடியான பொதுப் போக்குவரத்துச் சேவையினை பயன்படுத்தல் மற்றும் போக்குவரத்து செலவுகள் அதிகரித்து செல்கின்றமை போன்ற காரணங்கள் ஊடாகக் காணக்கூடியதாக உள்ளது. ஆகவே இவைகளை தாங்கிக் கொள்ளும் அளவிற்கான சக்தி எழை மக்களிடம் காணப்படாமையினால் குறைந்த வருமானம் பெறும் ஏழை மக்கள் இவ் பணவீக்கத்தினால் மிகவும் மோசமாக பாதிப்புக்குள்ளாகின்றார்கள்.

அடுத்ததாக நாம் நடுத்தர வருமானம் பெறும் மக்கள் இப் பணவீக்கத்தினால் எவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர் எனப் பார்ப்போமானால் இலங்கையில் 15 வீதம் தொடக்கம் 20 வீதமான மக்கள் நகர்ப்புற சனத்தொகையாகக் காணப்படுகின்றனர். இவர்கள் கிராமப்புற மக்களைவிட எரிபொருள் பற்றாக்குறை மற்றும் எரிவாயு தட்டுப்பாடு என்பவற்றினால் பாதிக்கப்பட்டுள்ளனர். தற்காலத்தில் உணவுப் பொருட்களின் விலைகள் மூன்று மடங்காக அதிகரித்துக் காணப்படுகின்றது. அத்துடன் மக்களுக்குப் போதுமானளவு வருமானமும் கிடைப்பதில்லை. இதனால் இவர்கள் தங்களது கடந்தகால சேமிப்புகளையே பயன்படுத்தும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். பொருளியல் நிபுணர்கள் இந்நிலைமையினை 30 வருடகால யுத்தம் மற்றும் சுனாமிப் பேரழிவு போன்ற பாதிப்புக்களைவிட ஒரு மோசமான நிலையாகவே கருதுகின்றனர். அதேவேளை உக்ரைன் மற்றும் ரஷ்யா யுத்தமானது தொடர்வதனால் உணவுப் பற்றாக்குறையானது 2023 வரை நிலைத்திருப்பதற்கு வாய்ப்புக்கள் காணப்படுவதாக உலக வங்கியின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே இவ்வாறான காரணங்களால் நகர் புறத்தில் வாழ்கின்ற உயர் வருமானம் பெறும் மக்களை விட நடுத்தர வருமானம் பெறும் மக்கள் இப் பணவீக்கத்தினால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நிரந்தர வருமானம் பெறும் மக்களை எடுத்துக் கொண்டால், ஆகக் கூடிய நிரந்தர வருமானம் பெறும் மக்கள் ஓரளவு தங்களது வாழ்கைச் செலவுகளைச் சமாளிக்கக் கூடிய நிலைமை காணப்பட்டாலும் நடுத்தர மற்றும் நிரந்தர வருமானம் பெறும் மக்கள் விலை வாசி அதிகரிப்பினால் தங்களது கொள்வனவு சக்தியை குறைத்துள்ள நிலைமையும் காணப்படுகின்றது. எனவே இந்த நிரந்தர வருமானம் பெறும் மக்களும் ஒரு பாதிக்கப்பட்ட பிரிவினராகவே கருதப்படுகின்றனர்.

அடுத்ததாக உற்பத்தியாளர்கள் மிகவும் மோசமான பாதிப்பிற்கு உள்ளாகியுள்ளனர். உதாரணமாக, ஆயிரக்கணக்கான ஆடைத் தொழிற்சாலைகள் உற்பத்தியினை மேற்கொண்டு தங்களது இலக்கை அடையமுடியாதவர்களாகக் காணப்படுகின்றனர். உற்பத்தியாளர்கள் இறக்குமதியை மேற்கொள்வதற்குப் போதுமான வெளிநாட்டு ஒதுக்குகள் இல்லாமல், எரிபொருள் பற்றாக்குறையினால் உற்பத்தி குறைவடைந்து தொழிலிலுள்ள மக்கள் வேலையினை இழக்கும் நிலைமை ஏற்பட்டு வருமானத்தினை இழந்துள்ளமை போன்ற பாதிப்புக்களை எதிர்நோக்கியுள்ளனர். ஆடைத் தொழிலானது இரண்டாவது பெரியதொரு வெளிநாட்டு நாணய மாற்று வீதத்தினை உழைக்கின்ற துறையாகக் காணப்பட்டு வந்தது. கொரோனாத் தொற்று பாதிப்பினால் மிகவும் பாதிக்கப்பட்ட துறையாகயும் இது காணப்பட்து. அதன் பின்னர் 2022 ஜனவரியிலிருந்து இதன் ஏற்றுமதி வருமானமானது 22 வீதமாகக் காணப்பட்டது. பின்னர் மீண்டும் இந்தப் பொருளாதார நெருக்கடிக்குப் பின்னர் வீழ்ச்சி நிலைமைக்குத் தள்ளப்பட்டு வருகின்றது.

அடுத்து சிறுவர்களை எடுத்துக் கொண்டால், அவர்களும் இவ் விலை உயர்வினால் பாதிக்கப்பட்ட பிரிவினராகவே கருதப்படுகின்றனர். 5600 சிறுவர்கள் குறைந்த போசாக்குள்ளவர்களாக காணப்படுவதாக UNICEF அமைப்பு குறிப்பிடுகின்றது. அதே வேளை வருமானம் குறைந்த மக்கள் போசணை உணவுகளை வாங்குவதில் பாரிய சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றனர். உதாரணமாக ஓர் அப்பிளின் விலை ரூபா 200ஆகக் காணப்படுகின்றது. இவ் விலையில் சிறுவர்களுக்கு அப்பிள் சாப்பிடக் கொடுக்க முடியாத நிலையில் மக்கள் காணப்படுகின்றனர். இது சிறுவர்களின் உடற் சக்கியைக் குறைப்பதுடன் கல்வியில் அவர்களின் கவனத்தை குறைவடையச் செய்வதாகவும் காணப்படுகின்றது. இவ்வாறு கல்வி நடவடிக்கைகளில் சிறுவர்களின் கவனம் குறைவடையும் போது பொருளாதாரத்தின் முதுகெலும்பாக காணப்படும் கல்வித் துறையிலும் பாரிய வீழ்ச்சி ஏற்படுவதுடன் அதனுடாக ஏனைய துறைகளும் பாதிப்புள்ளாகக் கூடிய நிலைமை காணப்படுகின்றது. திரிபோஷா எனப்படும் போசாக்குணவுத் திட்டமானது இலங்கையில் முன்னய காலப்பகுதியில் போசாக்கு குறைந்த கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டது. ஆனால் தற்போது காணப்படுகின்ற உரமானிய இறக்குமதித் தடையினால் சோளம் உற்பத்தி குறைவடைந்துள்ள நிலையில் திரிபோஷா போசாக்குணவை

வழங்க முடியாத நிலைக்கு அரசாங்கம் தள்ளப்பட்டுள்ளது. அதே வேளை 2 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் 80 வீதமான மூளை வளர்ச்சியை பெற்றுக் கொள்பவர்களாகக் காணப்படுகின்றனர். அவர்கள் போதியளவான நாளாந்த போசாக்குணவுகளை பெற்றுக் கொள்ளாதவிடத்து அவர்களின் வளர்ச்சி பாதிக்கப்பட்டு அவர்களது எதிர்காலம் கேள்விக்குறியாகி அவர்கள் வளர்ந்து பெரியவர்களாகி தனித்து இயங்க, உற்பத்தி செயற்பாடுகளில் ஈடுபட முடியாத நிலைக்குத் தள்ளப்படுவதுடன், கல்வி நடவடிக்கைகளிலும் அதிகபட்சத் திறனை வெளிப்படுத்த முடியாதவர்களாகவும் காணப்படுவர்.

அடுத்து கர்ப்பிணித் தாய்மார்களைப் பார்ப்போமேயானால், இவர்கள் இப் பொருளாதார நெருக்கடி காரணமாகப் பாதிக்கப்பட்டு வருகின்றனர். வசதி வாய்ப்புக்களைக் கொண்டுள்ள கர்ப்பிணிப் பெண்கள் அதிகளவு பாதிப்புள்ளாகாவிட்டாலும் குறைந்த வருமானம் பெறும் குடுப்பத்தை சேர்ந்த கர்ப்பிணித் தாய்மார்கள் மிகவும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். இதற்குக் காரணமாக கூடிய வருமானங்கள் பெறுகின்ற குடும்பத்தில் 1 அல்லது 2 குழந்தைகளே காணப்படுகின்றனர். ஆனால் குறைந்த வருமானம் பெறும் குடும்பத்தில் அதிகளவான குழந்தைகள் காணப்படுகின்றனர். இதனால் அதிகரித்து செல்லும் வாழ்க்கைச் செலவில் சரியான ஊட்டச்சத்து உணவுகளைப் பெற முடியாதவர்களாக குறைந்த வருமானம் பெறும் குடும்பத்தை சேர்ந்த கர்ப்பிணித் தாய்மார்கள் காணப்படுகின்றனர். இதனால் இவர்கள் விலை கூடிய மீன் இறைச்சி சாப்பிடுவதைத் தவிர்த்து விலை குறைவாகப் பெற்றுக் கொள்ளக்கூடிய உணவு வகைகளையே உட்கொள்ளக்கூடிய நிலையில் காணப்படுகின்றனர். வருமானம் கூடிய மக்கள் தங்களது கையில் கூடிய பணம் இருந்து சந்தையில் காணப்படும் பொருட் பற்றாக்குறையினால் பொருட்களுக்கான தட்டுப்பாட்டை முதலில் கொடுப்பவர்களாகவே காணப்படுகின்றனர். இலங்கை அரசாங்கத்தினால் இலவசமாக கர்ப்பிணித் தாய்மார்களுக்கு வழங்கப்படும் திரிபோஷா மற்றும் இரும்புச்சத்து மாத்திரைகள் போன்றவற்றைக் கூட தற்கால பொருளாதார நெருக்கடி காரணமாக அரசாங்கமானது வழங்க முடியாத நிலையில் காணப்படுவதனால், ஊட்டச்சத்து மற்றும் மருத்துவம் போன்றவற்றினைப் பெற்றுக் கொள்ள முடியாதவர்களாக இக் கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் காணப்படுகின்றனர்.

அடுத்ததாக தற்காலத்தில் காணப்படுகின்ற மருந்துத் தட்டுப்பாடு காரணமாக வயதானோர் மிகவும் பாதிப்புக்குள்ளான பிரிவினராகக் கருதப்படுகின்றனர். இருதய வலிப்பு மற்றும் புற்று நோயாளர்கள் இவ்வாறு பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். அதே வேளை சத்திர சிகிச்சைகள் சரியான நேரத்தில் செய்வதில் தாமதம் காணப்படுகின்றமை, அவசரமான சத்திர சிகிச்சைகள் மாத்திரம் தற்காலத்தில் செய்யப்படுகின்றமை மற்றும் ஏனைய சத்திர

சிகிச்சைகளைப் பிற் போடுவதற்கான நிலைமை ஆகியவை தற்பொழுது காணப்படுவதனால் வயதானோர் மிகவும் சிரமப்பட்டு வருகின்றனர்.

விவசாயிகளை எடுத்துக் கொண்டால் தற்கால பொருளாதார நெருக்கடி காரணமாக தங்களது பயிர்ச்செய்கையினை நிறுத்தும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். உரமானியத்திற்கான இறக்குமதித் தடை விதிக்கப்பட்டு நோய் எதிர்ப்பு சக்திகள் குறைவடைந்து பயிர்களுக்கான நோய்த்தாக்கங்கள் அதிகரித்து உற்பத்தி குறைவடைவதோடு எரிபொருட் தட்டுப்பாடு காரணமாக தங்களது பொருட்களை சந்தைப்படுத்த முடியாத நிலைமைக்குத் தள்ளப்பட்டு பெரும்பாலானோர் நஷ்டங்களை எதிர்க் கொண்டு உற்பத்தியினை கைவிடும் நிலைமைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

இலங்கை பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பயிர்ச்செய்கை விஞ்ஞான சிரேஷ்ட பேராசிரியர் Buddhi Marambe அவர்களின் ஆய்வின்படி, கரீம (Organic) பசளையின் பாவனையானது உற்பத்தியின் இழப்பிற்கு இட்டுச் செல்வதுடன் 50 வீதமான நெல் உற்பத்தி தடைப்பட்டுள்ளது. 60 - 70 சதவீத சோளம் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. அத்துடன் இச் சோள உற்பத்தியானது மிருகங்களுக்குரிய முக்கியமான உணவாகவும் காணப்படுவதால் சோளத்தினை பயன்படுத்தியே கோழி மற்றும் கால்நடைகளுக்குரிய தீனி தயாரிக்கப்படுவதனால் தற்போது சோளம் உற்பத்தி குறைவடைந்துள்ளமையினால் இவற்றிற்கான தீனிகளுக்கான விலை அதிகரித்து, கோழி இறைச்சி மற்றும் முட்டைகளுக்கான விலைகளும் அதிகரித்துக் காணப்படுகிறன. ஆகவே இந்த பொருளாதார நெருக்கடி காரணமாக விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

Hotel Industryயானது பெரிதும் சுற்றுலாத்துறையினை பிரதானமாக வைத்தே இயங்கி வருகின்ற நிலையில் நாட்டில் ஏற்பட்ட ஈஸ்டர் குண்டுத்தாக்குதல், கொவிட் தொற்று பரவல் மற்றும் தற்கால பொருளாதார நெருக்கடி போன்றவற்றினால் நாட்டிற்குள் சுற்றுலாப் பயணிகள் வருகை தரும் வீதம் குறைவடைந்து ஹொட்டல் துறையானது பெரிதும் பாதிப்புக்குள்ளான ஒரு பிரிவாகக் கருதப்படுகின்றது. வியாபாரிகளும் தற்பொழுது காணப்படுகின்ற விலை அதிகரிப்பு மற்றும் எரிபொருட் தட்டுப்பாடு என்பவற்றினால் தங்களது தொழில்களை கைவிடும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். பொருட்களுக்கான விலை அதிகரிப்பினால் கேள்வியானது குறைவடைந்து தங்களது வியாபாரத்தினை தொடர்ந்து நடத்துவதில் சிரமத்தினை எதிர் நோக்கி வருகின்றனர்.

அடுத்ததாக முயற்சியாளர்கள் பணவீக்கதின் காரணமாக, தங்களது தொழிற்பாட்டு செலவானது அதிகளவில் அதிகரித்து தங்களது உற்பத்திக்கான விலை அதிகரித்து அதனை கூடிய விலைக்கே

வாடிக்கையாளர்களுக்கு கொடுக்கவேண்டிய நிலையில் உள்ளனர். அத்துடன் உற்பத்தியினைத் தொடர்ந்து கொண்டு செல்வதில் மூலப் பொருட்பற்றாக்குறைக்கும் முகம் கொடுக்க வேண்டியவர்களாகக் காணப்படுகின்றனர்.

சுற்றுலாத்துறையானது நாட்டில் காணப்படுகின்ற தொடர்ச்சியான நெருக்கடி காரணமாக மிகவும் பாதிக்கப்பட்டு வருகின்ற துறையாகக் காணப்படுகிறது. இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) சுற்றுலாத்துறையானது கிட்டத்தட்ட 5 வீதமான பங்களிப்பினைச் வழங்கி வருகின்ற ஒரு துறையாகக் காணப்பட்டது. ஆனால் நாட்டில் ஏற்பட்டுள்ள தற்கால நெருக்கடி நிலைமை காரணமாக மிகவும் பாதிப்புக்குள்ளான துறையாக இது காணப்படுவதுடன், வெளிநாட்டுப் பயணிகள் நாட்டுக்குள் வருவதற்கான அவர்களின் ஆர்வத்தினையும் குறைத்துள்ளது. இதற்கான காரணங்களாக, ஈஸ்டர் தாக்குதல் கொவிட், பரவல், தற்கால எரிபொருள் நெருக்கடி, விலை வாசி அதிகரிப்பு போன்றவற்றைக் குறிப்பிடலாம். இதனால் நாட்டிற்குக் கிடைக்க வேண்டிய சுற்றுலாத்துறை வருமானத்தில் ஒரு பாரிய வீழ்ச்சி காணப்பட்டு வருகின்றது.

அடுத்ததாக நாட்டின் மிக முக்கிய துறையான கல்வித்துறையானது தற்காலத்தில் மிகவும் பாரிய அளவில் பாதிப்புக்குள்ளாகியுள்ளதை நம் அனைவராலும் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. தற்கால எரிபொருள் பற்றாக்குறை காரணமாக பாடசாலைகள் மூடப்பட்டு நிகழ்நிலை (Online) ஊடாகவே கற்றல் நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன. அத்துடன் பல்கலைக்கழகங்களில் நேரடி விரிவுரைகள் நிறுத்தப்பட்டு நிகழ்நிலை ஊடாகவே அனைத்துக் கற்றல் செயற்பாடுகளும் நடைபெற்று வரும் நிலையில் பல்வேறு நிபுணர்கள் இந்நிகழ்நிலை கற்றல் தொடர்பாகக் கருத்துக் கூறுகையில் நிகழ்நிலைக் கற்றல் நடவடிக்கையினுடான வெளியீடானது மிகவும் குறைவான மட்டத்திலேயே காணப்படுகின்றது என்பதை தமது கருத்தாக பதிவுசெய்துள்ளனர். இதை விட மக்களிடையே காணப்படுகின்ற வருமான சமத்துவமின்மை மற்றும் பணவீக்கத்தைக் கட்டுபடுத்துவதற்காக வட்டி வீதங்கள் அதிகரித்துச் செல்கின்றமை போன்ற காரணங்களையும் நாட்டில் தற்கால அதிகரித்துச் செல்லும் பணவீக்கத்திற்கான காரணங்களாகக் குறிப்பிட முடியும்.

இவ்வாறு நாட்டில் தற்போழுது காணப்படுகின்ற பொருளாதார நெருக்கடி மற்றும் அதிகரித்துச் செல்லும் பணவீக்கம் என்பவற்றிலிருந்து மீண்டெழுவதற்கான சில ஆலோசனைகளாக அரசியல் மற்றும் பொருளியல் ரீதியான உறுதித்தன்மையை நாட்டில் பேணுதல், சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்குள் வருவதற்கான அவர்களின் ஆர்வத்தினைத் துண்டுவதற்கான வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்துவதற்கான முயற்சிகளை அதிகரித்தல், டிஜிட்டல் முயற்சி முறையினை நாட்டிற்குள் ஊக்குவித்தல், நகர்பபுறத் தோட்டங்களை அமைப்பதற்கு மக்களை

ஊக்குவிப்பதுடன் உணவுப் பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வினை மக்கள் மத்தியில் ஏற்படுத்தல் என்பவற்றைக் குறிப்பிடலாம். உள்ளூரில் உற்பத்தி செய்யக்கூடிய பழங்கள், மரக்கறிகள் மற்றும் தானிய உற்பத்தியினை ஊக்கப்படுத்தி அவற்றை பெறுமதிசேர் முறையில் மாற்றியமைக்கும் போது அவர்களால் செலவுகளை ஈடு செய்யக்கூடியதாகக் காணப்படும். அதேவேளை சந்தை வாய்ப்பு மற்றும் சந்தை வாய்ப்பிற்கான இணைப்புக்களை உருவாக்குதல் போன்றவற்றையும் முன்வைக்கலாம்.

இருந்த போதிலும் கொள்கை வகுப்பாளர்கள் இரண்டு வகையான சவால்களை முகங்கொடுக்கின்றனர். ஒன்று வெளிநாட்டுக் கடன்களை முகாமை செய்தல், இரண்டாவது உள்நாட்டு தேவைகளைப் பூர்த்தி செய்தல் போன்ற சவால்களை முகங்கொடுக்க வேண்டியுள்ளனர். இருந்தபோதிலும் பொருளியல் நிபுணர்களால் சரியான கருத்துக்களைப் பின்பற்றி செயற்படுமிடத்தே இவ் இக்கட்டான நிலைமையிலிருந்து நாட்டையும் நாட்டு மக்களையும் பாதுகாத்துக்கொள்ள முடியும்.

## அத்தியாயம் 13

# உலகப் பொருளாதார நெருக்கடிகள்: ஒரு மீள்பார்வை

# World Economic Crises: A Review

**Dr. (Mrs.). K. Karunaanithy**
Senior Lecturer in Economics,
Department of Economics,
Faculty of Arts,
University of Jaffna.

(24.08.2022 அன்று நடைபெற்ற நிகழ்நிலைக் கருத்தரங்கின் தொகுப்பு)

## அறிமுகம்

வரலாறானது எப்போதும் நேர்கோட்டில் பயணிப்பதில்லை. வரலாற்றுச் சம்பவங்கள் எப்போதும் மீளவும் மீளவும் உருவாகுவதனைக் காணலாம். தற்போது நாம் எதிர்நோக்கிக்கொண்டிருக்கின்ற பொருளாதார நெருக்கடி அல்லது பொருளாதாரப் பேரவலம் வேறு நாடுகளால் அனுபவிக்கப்பட்டிருக்கிறதா? அவ்வாறாயின் அவர்கள் எவ்வாறு மீண்டுவந்தார்கள்? அந்த நெருக்கடிக்கான மூலம் (காரணம்) என்ன? என்பதை அறிந்துகொள்ளும்போதுதான் இலங்கை இந்த நெருக்கடியிலிருந்து மீள்வதற்கான வாய்ப்புகளை நாம் தெரிந்தும் புரிந்தும்கொள்ளவும் முடியும். அதேசமயம், ஒவ்வொரு பொருளாதார நெருக்கடிக்குள்ளும் ஏதோ ஒரு நல்ல விடயம் அல்லது சந்தர்ப்பம் ஒளிந்திருக்கும் என்றும் எந்தவொரு பொருளாதார நெருக்கடியையும் வீணாக்கக்கூடாது எனவும் கூறப்படுகின்றது (John F. Kennedy, 1959). அதாவது புதிய விடயங்களை அறிமுகப்படுத்துவதற்கு இந்தப் பொருளாதார நெருக்கடியை விட வேறொரு காலம் பொருத்தமாக இருக்காது என்பதே அதன் கருத்தாகும்.

உலகப் பொருளாதார வரலாற்றைப் பார்த்தால் பல வெற்றிக்கதைகள் தெரியும். அதே போல பல மறக்கமுடியாத நெருக்கடிகளும் அங்கு ஏற்பட்டிருக்கின்றன. அவற்றிலேயிருந்து நாடுகள் சில பாடங்களைக் கற்றுக்கொண்டிருக்கின்றன. ஆனால் பல சமயங்களில் கற்றுக்கொண்ட பாடங்களை மறந்தும் விடுகின்றன. ரஷ்ய எழுத்தாளரான லியோ ரோல்ஸ்ரோய் (Leo Tolstoy) தனது அனா கரீனினா (Anna Karenina) என்ற நூலில் "நாங்கள் வெற்றியை அடைந்து மகிழ்ச்சியில் மிதக்கின்ற போது, அதைப் பற்றி நாம் பெரிதாக அலட்டிக்கொள்வதில்லை. ஆனால் தோல்வி அடைகின்ற போது நிச்சயமாக அந்தத் தோல்வி எதனால் வந்தது என்பதை அறிய வேண்டியது அவசியமாகும். ஏனெனில் தோல்விகளொவ்வொன்றும் ஒவ்வொருவருக்கும் தனிச்சிறப்பு வாய்ந்ததாக அமையக்கூடும்" எனக் குறிப்பிட்டிருந்தார். எனவேதான் நாம் உலகப்

பொருளாதார நெருக்கடிகளைப் பற்றி அறிந்துவைத்திருப்பது நம் நாட்டு நெருக்கடியைப் புரிந்து கொள்ள அவசியமானதாகின்றது. இவ்வகையில், உலகப்பொருளாதார நெருக்கடிகளின் தோற்றம், காரணங்கள், வெளிப்பாடுகள், மற்றும் தீர்வுத்திட்டங்கள் பற்றி ஆராய்வதாகவும் இலங்கைக்கான பொருத்தமான உத்திகளெவை எனப் பரிந்துரைப்பதாகவும் இக்கட்டுரை அமைகிறது.

சாதாரணமாக 'நெருக்கடி' என்றால் 'அடைய வேண்டிய இலக்கை அடையமுடியாதிருப்பதாகும்'. வேறு விதத்தில் கூறினால் 'இதைவிட மோசமான நிலையைத் தவிர்ப்பதற்கோ அல்லது மேம்பட்டதொரு நிலைக்குச் செல்வதற்கோ அவசியமான முடிவை எடுக்க வேண்டிய திருப்பு முனை' (மரியம் - வெப்ஸ்டர் அகராதி) என்பதாகும். நெருக்கடி என்பதனை நிதி நெருக்கடி மற்றும் பொருளாதார நெருக்கடி என இரண்டாகப் பிரித்து நோக்க முடியும். இதில் நிதி நெருக்கடி என்பது நிதிச் சொத்துக்களின் பெறுமதியில் ஏற்படும் சடுதியான வீழ்ச்சியும் அதன் விளைவுகளுமாகும்.

பொருளாதார நெருக்கடி என்பது நிதி நெருக்கடியின் விளைவாக நாடு அனுபவிக்கும் சடுதியான பொருளாதார வீழ்ச்சியும் அதன் பரவல் விளைவுகளுமாகும். இவ்விரு நெருக்கடிகளும் எவ்வாறு தொடர்புபடுகிறது என நோக்குவோமாயின், ஒரு நிதி நெருக்கடியானது ஆரம்பிக்கின்றபோது அது பொருளாதார நெருக்கடியாக மாறலாம் அல்லது மாறாமல் விடலாம் ஆனால் பொருளாதார நெருக்கடியானது உருவாகி விட்டால் அதற்குள் நிச்சயமாக நிதி நெருக்கடியானது இருக்கும். எனவே நாடுகள் நிதிநெருக்கடிக்கு முகங்கொடுக்கும்போது அதனை முளையிலேயே கிள்ளிவிடவேண்டும். கண்காணித்துக்கொண்டிருந்து அந்த நிதிநெருக்கடி கட்டுப்படுத்தப்படவேண்டிய சந்தர்ப்பத்தில் அதனைக் கட்டுப்படுத்தாவிட்டால் அது பொருளாதார நெருக்கடியாக மாறுவதற்கான வாய்ப்பு நிச்சயமாக இருக்கின்றது. குறிப்பாக நிதிநெருக்கடி என்கின்றபோது அது நிச்சயமாக நிதித்துறை நிறுவனங்களில் பாதிப்பை விளைவிப்பதோடு முக்கியமாக வங்கித்துறையைத் தீவிரமாகப் பாதிக்கும்.

மறுபுறம் பொருளாதார நெருக்கடி என்கின்ற போது அது நாட்டினுடைய சகல பொருளாதார நடவடிக்கைகளையும் பாதிக்கக்கூடியதாக இருக்கும். பொருளாதார நெருக்கடியின் பரவல் விளைவு (Spill Over Effect/ Ripple Effect) என்பது, ஒரு அமைதியான குளத்தில் கல்லைவிட்டெறிந்தால் எப்படி அந்த அதிர்வு அலைகள் பரவிச்செல்லுமோ அதேபோல பொருளாதாரத்தில் ஏற்படுகின்ற சடுதியான விளைவொன்று எவ்வாறு ஏனைய துறைகளுக்கும் பரவிச்செல்லும் என்பதைத்தான் குறிப்பிடுகின்றது. ஆகவே நிதி நெருக்கடியொன்று ஏற்படும்போது பொதுவாக நுகர்வோனது நடத்தை கட்டுப்படுத்தப்படாமல் பிறழ்வான

வேறு ஒரு நடத்தையைக் காட்டுகின்ற போது அது நிதிநெருக்கடியை ஏற்படுத்துவதற்குக் காரணமாக அமையும். உதாரணமாக நிதிநெருக்கடியால் வங்கிகள் வங்குரோத்து நிலைமையை அடையும்போது மக்கள் பீதியடைந்து வங்கிகளிலுள்ள தமது பணத்தினை மீள எடுக்கும்போது அது வங்கித்துறைக்கு திரவத்தன்மை நெருக்கடியை உருவாக்கும்.

எனவே, அவ்வாறான நிலைமை உருவாகாமல் அதனை சரியான முறையில் கண்காணித்து ஒழுங்குபடுத்தி முறைசாராத்தோல்வி ஏற்படாதவகையில் நடவடிக்கைகளைத் தொடர்ந்து எடுத்துக்கொண்டு இருக்கவேண்டும். அவ்வாறு உடனுக்குடன் உரிய நடவடிக்கை எடுக்காவிட்டால் அது பொருளாதார நெருக்கடியாக உருவாகுவதற்கு வாய்ப்பிருக்கிறது. ஏற்கனவே நோய்வாய்ப்பட்டு நலிவடைந்த ஒருவருக்கு மீண்டும் நோய் ஏற்பட்டால் அந்தநோயினுடைய தாக்கமானது பாரதூரமாக இருக்கும். அதேபோன்றதொரு நிலைதான் இலங்கையில் காணப்படுகின்றது. இலங்கையின் பொருளாதாரம் திறந்துவிடப்பட்ட காலத்திலிருந்து தற்போது வரைக்கும் இரட்டைப் பற்றாக்குறை நிலைமை (Twin Deficit Situation) என்ற நோயானது காணப்படுகின்றது. இதனை நாம் ஒழுங்காகக் கவனிக்காமல் விட்டதினாலேயே இலங்கைக்கு இப்பேரவல நிலையானது ஏற்பட்டிருக்கின்றது. எனவே நிதி நெருக்கடியானது ஏற்படும்போது உடனேயே அதனை நாம் கவனிக்கவேண்டியது அவசியமானதாகும்.

## பொருளாதார நெருக்கடிகள்

கடந்த சகாப்தத்தில் உலகளாவிய ரீதியில் ஏற்பட்ட ஏழு பிரதான நெருக்கடிகள் வரலாற்றில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

- உலகப் பெருமந்தம் (1932)
- சுயஸ் நெருக்கடி (1956)
- சர்வதேச கடன் நெருக்கடி (1982)
- கிழக்காசியப் பொருளாதார நெருக்கடி (1997 - 2001)
- ரஷ்யப் பொருளாதார நெருக்கடி (1997 - 2001)
- இலத்தீன் அமெரிக்க கடன் நெருக்கடி (1994 - 2002)
- உலக நிதி நெருக்கடியும் பொருளாதாரப் பின்னடைவும் (2007 - 2009)

ஒவ்வொரு நெருக்கடிக்கு முன்னரும் உயர்ந்த வளர்ச்சியானது அடையப்பட்டிருக்கின்றது என்பதை இங்கு குறிப்பிட்டாக வேண்டும். இந்த நெருக்கடிகளை ஒவ்வொன்றாக நோக்குவோம்.

## உலகப் பெருமந்தம்

கடந்த சகாப்தத்தில் உலகளாவிய ரீதியில் ஏற்பட்ட ஏழு பிரதான நெருக்கடிகளுள் மிக முக்கியமானது உலகப் பெருமந்தமாகும் (The Great World Depression). உலகப் பொருளாதாரங்கள் பெரும்பாலானவை 1930களில் அனுபவித்த ஒரு மந்தநிலையாக இது பார்க்கப்படுகின்றது. பெரும்பாலும் ஒவ்வொரு மந்தகாலத்திற்கு முன்னர் அந்த நாடு அல்லது அந்தப் பிரதேசம் அல்லது உலகம் அதீத வளர்ச்சியை அனுபவித்திருப்பதைக் காணலாம். 1929களில் அமெரிக்கப் பங்குச் சந்தைகளில் ஏற்பட்ட எதிர்பாராத வீழ்ச்சியினாலேயே இவ்வுலகப் பெருமந்தம் ஏற்பட்டது. அதற்கு முன்னராக 1920களில் அமெரிக்காவில் வளர்ச்சி வீதம் 42 சதவீதமாக இருந்திருக்கின்றது. அதேபோன்று 1922 - 1929ஆம் ஆண்டு காலப்பகுதியில் அமெரிக்க பங்குச் சந்தைகளின் திரள் வளர்ச்சி வீதம் (Cumulative Growth Rate) 218 சதவீதத்தினை பதிவுசெய்திருந்தது. இந்த அதீதவளர்ச்சிக்குப் பின்னால் என்னவிருந்தது என நோக்குவோமானால் 1914 முதல் 1918ஆம் ஆண்டு வரை நிலவிய முதலாம் உலகமகா யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதைத் தொடர்ந்து மக்கள் மத்தியில், நேர்மறை எண்ணப்பாங்கு ஒன்று ஏற்பட்டமையால் நுகர்வு பலமடங்காக அதிகரிக்கின்றது. இந்த அதிகரித்த நுகர்வு பங்குச்சந்தையை வளர்ச்சியடையத் தூண்டியிருக்கின்றது. இதனை பொருளியல் வல்லுனர்கள் சொத்துக் குமிழி (Asset Bubble) நிலைமையொன்று உருவானதாக வர்ணிக்கின்றார்கள். அதாவது சொத்துக்களிற்கெல்லாம் செயற்கையாக ஒரு பெறுமதியளிக்கப்பட்டு அவை அதிகரித்தவண்ணமே சென்று, எதிர்பாராத ஒரு சந்தர்ப்பத்தில் முறிவடைந்துவிடுகின்றன. இச் சொத்துக் குமிழிக் கோட்பாடுதான் 1930களில் ஏற்பட்ட மந்தத்திற்கான விளக்கமாகவும் குறிப்பிட்டிருக்கிறார்கள். இவ்வுலகப் பெருமந்த நிலையானது 1929ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 29ஆம் திகதி ஆரம்பித்தது. இப்பெருமந்தம் ஆரம்பித்த அந்த நாள் 'கறுப்புச் செவ்வாய்க்கிழமை' (Black Tuesday) எனப் பெயரிட்டிருக்கின்றது. ஐக்கிய அமெரிக்காவில் நடைபெற்ற இப்பங்குச் சந்தை முறிவிற்கு பொருளியலாளர்கள் "Wall Street Crash or Great Crash" எனப் பெயரிட்டிருக்கின்றனர்.

1929ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் அமெரிக்கப் பங்குச் சந்தைகளில் எதிர்பாராத சரிவு ஏற்படுவதற்கு முன்னர் அதேயாண்டு மார்ச் மாதமே இதைப்பற்றிய சமிக்ஞைகள் கிடைக்கப்பெற்றிருக்கின்றன. இருப்பினும் அமெரிக்கப் பொருளாதார வல்லுனர்கள் அதனைக் கவனிக்கத் தவறிவிட்டார்கள். அமெரிக்காவினுடைய Federal Reserve Bank நெருக்கடியின் பிரதிபலிப்பாக அமெரிக்க அழைப்புக்கடன் சந்தைகளில் ஏற்பட்ட திரவத்தன்மை நெருக்கடியைக் கண்டு முதன்முதலில்

எச்சரித்திருக்கிறது. ஆனால் அது கருத்திலெடுக்கப்படாததால், அது பின்னர் பாரிய உலகப்பெருமந்த நிலையை உருவாக்கியது.


இப்பெருமந்த காலத்தில் 1.3 மில்லியன் பங்குகள் விற்றுத் தீர்க்கப்பட்டதோடு ஒருநாளிலேயே 30 US$ பில்லியன் இழப்பு ஏற்பட்டிருக்கின்றது. அமெரிக்கப் பங்குச் சந்தை வீழ்ச்சியின் எதிரொலியாக உலகளாவிய ரீதியிலுள்ள 4000 வங்கிகள் முறிவடைந்தன. அமெரிக்க வங்கிகளுக்கு அடுத்ததாக 1931ஆம் ஆண்டு ஐரோப்பிய வங்கிகள் முறிவடைந்ததோடு முழு உலகமும் இப்பெருமந்த நிலைக்குள் சிக்கிக்கொள்கிறது. அதனால் ஒரு தசாப்தத்திற்கு மேலாக (1929 – 1939 ஆண்டு வரை) இப்பெருமந்த காலம் நீடித்திருக்கிறது. அமெரிக்காவிலுள்ள பிரபல்யமான பங்குச்சுட்டியான Dow jones 1929ஆம் ஆண்டு செப்டெம்பர் 03ஆம் திகதி உச்சத்தை எட்டியிருக்கிறது. இந்த உச்சம் 25 ஆண்டுகளுக்குப் பின்னர் 1954ஆம் ஆண்டுதான் மீண்டும் எட்டப்பட்டது. எனவே உலகப் பெருமந்த காலம் 10 ஆண்டுகள் (1929 – 1939 ஆண்டு வரை) எனக் குறிப்பிடுகின்றோம். ஆனால் Dow jones சுட்டெண்ணின்படி உலகப்பெருமந்தம் 25 ஆண்டுகள் நீடித்திருக்கின்றது என்று கூறப்படுகின்றது. இதிலிருந்து கற்றுக்கொள்ளக்கூடிய பாடம் என்னவெனில் பொருளாதாரத்தில் மந்தநிலை தோன்ற அனுமதிக்கக் கூடாது. ஏனெனில் மந்தம்வந்தால் அதனுடைய தாக்கம் நீடித்து நிலைக்கக்கூடியதாகவிருக்கும்.

இவ்வுலகப்பெருமந்த நிலையிலிருந்து மீள்வதற்கு கைகொடுத்து உதவியது கைத்தொழில்துறையாகும். குறிப்பாக 1933ஆம் ஆண்டிற்குப் பின்னர் பெரிய பிரித்தானியா, பிரான்ஸ், ஜேர்மனி, ஐக்கிய அமெரிக்கா போன்ற நாடுகளின் கைத்தொழில் துறையில் ஏற்பட்ட வளர்ச்சி அந்த நாடுகளில் மேல்நோக்கிய எழுச்சிக்கு வழிவகுத்தது. ஐக்கிய அமெரிக்காவில் இந்த மேல்நோக்கிய எழுச்சிக்கு முக்கிய பங்குவகித்தவர் அமெரிக்க ஜனாதிபதியான Franklin Roosewelt ஆவார். இவர் "New Deal" என்ற கொள்கையைக் கொண்டு வந்து அதுவரையும் நிலவிய பங்கு நியமங்களை நீக்கினார். அதாவது "New Deal"இன் கீழ் பங்கு நியமங்களில் மாற்றங்களைக் கொண்டுவந்தார்.

சென்மதிநிலுவையில் குறைநிலையை அனுபவிக்கின்ற நாடுகள் தமது நாட்டிலுள்ள தங்கத்தை வெளியேற்றும். மாறாக சென்மதிநிலுவையில் மிகைநிலுவையை அனுபவிக்கின்ற நாடுகள் தங்கத்தை உள்வரச்செய்ய வேண்டுமென்கிற, 1933வரை தொடர்ந்த, பழமைவாதச் சிந்தனையால் மந்த நிலைமையிலிருந்து மீண்டுவர முடியாது என்பதையுணர்ந்துகொண்ட ரூஸ்வேல்ட் அதிலிருந்து மெல்ல மெல்ல வெளியேறத்தொடங்கினார். அவரது வெளியேற்றத்தோடு 35 நாடுகள் தங்க நியமத்தைக் கைவிடுகின்றன. Barry Eichengreen எனபவர் 1992இல் தான் எழுதிய Golden Fetters என்ற புத்தகத்தில் தங்க நியமமானது எவ்வாறு உலகப்

பெருமந்தத்தை ஏற்படுத்தியது எனக் குறிப்பிட்டிருக்கிறார். அதாவது தங்க நியமமானது தங்கத்தை பணநிரம்பலோடு இணைத்திருக்கின்றது. பணநிரம்பலானது பொருளாதார நடவடிக்கைகளோடு இணைக்கப்பட்டிருந்தது. ஆகவே தங்கம் பற்றாக்குறையாக வரும் சந்தர்ப்பங்களிலெல்லாம் பொருளாதார நடவடிக்கைகள் யாவும் வீழ்ச்சியடைவதைத் தவிர்க்கமுடியாதிருந்ததால் ரூஸ்வேல்ட் இவ்வாறான ஒரு முடிவுக்கு வந்ததாக அப்புத்தகம் கூறுகிறது. தங்க நியமத்தைக் கைவிட்டதும் பணநிரம்பலை அதிகரித்து அதனூடாகப் பொருளாதார நடவடிக்கைகளை விரிவடையச் செய்யக் கூடியதாக இருந்தமையால், அதன்வழி அமெரிக்கா பெருமந்த நிலையிலிருந்து படிப்படியாக மீண்டதைப் பின்வரும் வரைபடமானது காட்டுகின்றது. அதுமட்டுமல்லாமல் விரிவாக்கப் பணக்கொள்கை மற்றும் விரிவாக்க இறைக்கொள்கை என்பவற்றைப் பின்பற்றக்கூடிய வாய்ப்பை இத்தங்க நியமத்திலிருந்து வெளியேறியமை உருவாக்கிக்கொடுத்திருக்கின்றது.

**வரைபடம் 1: கைத்தொழில் உற்பத்தி**




**மூலம்: https://uneasymoney.com/**

இத்தங்க நியமக் கொள்கை மட்டும் இப்பெருமந்த நிலையிலிருந்து மீள்வதற்கு உதவியதா? என்றால் அது மட்டும் கிடையாது. உற்பத்தித் திறனில் ஏற்பட்ட அதிகரிப்பும் முக்கியமான ஒரு காரணமாகும். அக்காலத்தில் ஊழியம் மற்றும் மூலதனம் ஆகியவற்றின் உற்பத்தித்திறனில் அதிகரிப்பை ஏற்படுத்துவதற்காக பல புத்தாக்கங்களை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இக்காலகட்டத்தில் ஏற்பட்ட மீட்சி நிலைமையினை (Recovery) "Jobless recovery" என்கின்றனர். அதாவது புதிய வேலைவாய்ப்புக்களை உருவாக்காமலேயே பொருளாதார மீட்சியினை அடைவதற்கு முயன்றார்கள். அது உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்கு பங்களிப்பதனூடாகச் சாத்தியமாகியிருக்கின்றது. எனவே, நெருக்கடி நிலைமை வருகின்றபோது அதிலிருந்து மீண்டுவருவதற்கு காத்திரமான, காலோசிதமான, அந்தந்த நாட்டினுடைய சூழலுக்கு உகந்தவகையிலான நாணயக்கொள்கை மற்றும் இறைக்கொள்கை என்பவற்றைப் பயன்படுத்தவேண்டும் என்பது உலகப் பெருமந்த நெருக்கடியிலிருந்து நாம் கற்றுக்கொண்ட பாடமாகும்.

## சுயஸ் நெருக்கடி

சுயஸ் நெருக்கடியென்பது 1950களில் ஏற்பட்ட நெருக்கடியாகப் பார்க்கப்படுகின்றது. எகிப்து ஜனாதிபதி அப்துல் நசார் (Abdul Nazar) என்பவர் 1956ஆம் ஆண்டு ஜூலை மாதம் 26ஆம் திகதி சுயஸ் கால்வாய் கம்பனியை தேசிய மயமாக்கியதன் விளைவாக அதன் மீதான முழு ஆதிக்கத்தையும் தன்வசப்படுத்திக்கொண்டார். அதன் காரணமாக சுயஸ்கால்வாய் வழியாகப் பயணிக்கின்ற கப்பல்கள் அனைத்தும் இவருடைய அனுமதியைப் பெற்று அதற்கான அனுமதிக் கட்டணத்தைச் செலுத்தித்தான் இதன் வழியாகப் பயணிக்கவேண்டிய நிர்ப்பந்தம் உருவானது. கப்பல்கள் சுயஸ்கால்வாயினூடாகப் பயணிக்க முடியாவிட்டால் முழு ஆபிரிக்காவையும் சுற்றிப் பயணிக்கவேண்டியிருப்பதனால் அதிக செலவையும் நேரவிரயத்தையும் ஏற்படுத்தும். இதனால் சுயஸ் கால்வாய் கம்பனியில் பங்குதாரர்களாகவிருந்த இஸ்ரேல், பிரித்தானியா மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகள் தமது நலன்கள் பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்டமையினால் எகிப்து மீது படையெடுத்தன.

இது உலகத்தில் ஒரு பாரிய பிரச்சினையாக மாறி, சுயஸ் கால்வாய் ஆறு மாதங்கள் வரை மூடப்பட்டதோடு, உலகத்தில் பல எதிர்பாராத விளைவினையும் நிச்சயமற்றதன்மையையும் சர்வதேச வர்த்தகத்தில் பாதிப்பினையும் இந்நிகழ்வு தோற்றுவித்தது. இச்சுயஸ் கால்வாய் நெருக்கடியோடு நேரடியாகப் பாதிக்கப்பட்ட எகிப்து, இஸ்ரேல், பிரித்தானியா மற்றும் பிரான்ஸ் ஆகிய நான்கு நாடுகளிலும் நடைமுறைக்கணக்கு நிலுவையானது மோசமாகப் பாதிக்கப்பட்டது.

இந்நெருக்கடி நிலைமையிலிருந்து நாடுகள் மீள்வதற்கு சர்வதேச நாணயநிதியத்தினுடைய தலையீடு அவசியமானதாகக் காணப்பட்டது. பிரித்தானியாவிடம் மிகை நிதி காணப்பட்டதனால் பிரித்தானியா தவிர்ந்த ஏனைய மூன்று நாடுகளுக்கும் துணைநில் நிதி உதவிகள் அவசியமாகக் காணப்பட்டதனால் அந்நாடுகளுக்கு மாத்திரம் சர்வதேச நாணயநிதியமானது துணைநில் நிதி வசதிகளை வழங்கியது. பிரித்தானியா தன்னுடைய நாணயத்தை உறுதியாக வைத்திருப்பதற்காக அமெரிக்காவிடமிருந்து 1.3 US$ பில்லியனை கடன் வாங்கிக்கொள்கின்றது.

அதாவது ஒரு வல்லரசு நாடாக இருந்தாலும் கூட தன்னுடைய நாணயத்தை உறுதியாக வைத்திருக்காவிடின் வெளிநாட்டு முதலீட்டாளர்களின் நம்பிக்கை என்பது ஆட்டங்காணத் தொடங்கிவிடும். இதுவே இந்த நெருக்கடியானது எமக்குக் கற்றுத் தருகின்ற பாடமாகும். சூரியன் அஸ்தமிக்காத சாம்ராஜ்ஜியம் என்று புகழப்பட்ட பிரித்தானியாவே இந்த நெருக்கடியிலிருந்து மீள்வதற்காக அமெரிக்காவிடமிருந்து கடன்வாங்கி தனது நாணயத்தை உறுதியாக

வைத்துக்கொண்டதென்பது இலங்கைக்கோர் பாடமாகும். இவ்வாறான ஒப்பீடுகளின் மூலமாகக் கற்றுக்கொண்ட பாடங்களினூடாகவே இந்நெருக்கடி காலத்திலிருந்து இலங்கையை மீட்டெடுக்க ஆவண செய்யவேண்டும்.

## சர்வதேச கடன் நெருக்கடி

உலகளாவிய ரீதியில் ஏற்பட்ட அடுத்த பாரிய நெருக்கடியாக 1980களிலேற்பட்ட சர்வதேச கடன் நெருக்கடியானது காணப்படுகின்றது. இதனை மெக்சிகோ நெருக்கடி அல்லது சென்மதி நிலுவை நெருக்கடி என்றும் அழைக்கின்றார்கள். 1981ஆம் ஆண்டு ஐரோப்பிய நாடுகளுள் ஒன்றான போலந்து நாடானது தான் கடனை மீளச்செலுத்த முடியாத நிலையிலிருப்பதாக அறிவித்தது. அதனைத் தொடர்ந்து ஏனைய ஐரோப்பிய நாடுகளான ரொமானியா, ஹங்கேரி, யூகோஸ்லாவியா ஆகிய நாடுகளும் தாம் கடன் நெருக்கடியிலிருப்பதாக அறிவிக்கின்றன. அதேநேரம் கடன் செலுத்தலில் மீள்கட்டமைப்பையும் கோருகின்றன. மறுபுறம் இலத்தீன் அமெரிக்க நாடான மெக்ஸிகோவும் தான் கடனை மீளச்செலுத்த முடியாத நிலையிலிருப்பதாக அறிவிக்கின்றது. இப்பொருளாதார நெருக்கடியும் அதன் விளைவான கடன் நெருக்கடியும் ஆரம்பித்து ஒரு தசாப்த காலம் வரை நீடிக்கின்றது. இச்சர்வதேச கடன் நெருக்கடிக்குள் 20 நாடுகள் சிக்கிக்கொள்கின்றன.

இச்சர்வதேச கடன் நெருக்கடிக்கான முக்கிய பின்னணி என்னவெனில் ஐக்கிய அமெரிக்காவில் 1970 மற்றும் 1980 காலப்பகுதிகளில் ஏற்பட்ட பணச்சுருக்கமும் ஐக்கிய அமெரிக்க டொலரின் மதிப்பு ஏற்றமுமாகும். இது கிழக்கு ஐரோப்பிய மற்றும் இலத்தீன் அமெரிக்க நாடுகளின் டொலர் வடிவ கடன் மீளளிப்பைப் பாதித்தது. உண்மையில் இதன் பின்னணி 1970களின் எண்ணெய் விலை அதிர்ச்சிகளுடன் ஆரம்பிக்கின்றது. 1980களில் எண்ணெய் வளநாடுகள் பணச்செழிப்பை அனுபவிக்கின்றன. அதாவது எண்ணெய் வளநாடுகள் அபிவிருத்தியடைந்த நாடுகளுக்கும் அபிவிருத்தியடைந்து வருகின்ற நாடுகளுக்கும் கனியஎண்ணெய் வளத்தை ஏற்றுமதி செய்து அதிக வருவாயைத் திரட்டிக் கொள்கின்றன. இச்செல்வச் செழிப்பானது சர்வதேச வணிக வங்கிகளிடம் வைப்பாக (Petro Dollars) வந்துசேருகின்றன. இப்பெற்றோ டொலரினை வணிக வங்கிகள் அபிவிருத்தியடைந்த நாடுகளுக்கு கடனாக வழங்குகின்றன. எனவே இச்சந்தர்ப்பத்தில் அமெரிக்க டொலரினுடைய மதிப்பானது அதிகரிக்கும்போது இக்கடன்கள் அனைத்தும் அபிவிருத்தியடைந்த நாடுகளுக்கு சுமையாக வந்து சேருகின்றன. குறைந்த வட்டியுடன் நுகர்வுத் தேவைக்காகவும் முதலீட்டுத் தேவைக்காகவும் கடனைப் பெற்றுக் கொண்ட நாடுகள், டொலரின் பெறுமதியுயர்வால் கடன்சேவை விகிதங்கள் அதிகரித்து கடுமையாகப் பாதிக்கப்பட்டன. இதில் மிகவும் கடுமையாகப் பாதிக்கப்பட்ட நாடுகளாக இலத்தீன் அமெரிக்க நாடுகளான

மெக்ஸிகோ, ஆர்ஜென்ரீனா, பிரேசில், சிலி, ஈக்வடோர், பேரு, உருகுவே போன்ற நாடுகளைக் குறிப்பிடலாம்.
கடன் நெருக்கடியின் ஆரம்பம், விளைவுகள் மற்றும் அதன் தீவிரத்தன்மை போன்றவை நாட்டுக்கு நாடு வேறுபடலாமென்பதால் பொருளாதார நெருக்கடியிலிருந்தான மீட்சியைப் பற்றியும் நீண்டகால வளர்ச்சி தொடர்பாகவும் திட்டமிடும்போது அந்தந்த நாடுகளின் தனித்துவத்தினை அவை கவனிக்கவேண்டும். அதனால்தான் புத்தாக்கங்கள் மற்றும் பரந்துபட்ட தந்திரோபாயங்கள் அவசியமென பொருளியலாளர்கள் குறிப்பிடுகின்றனர். அந்தவகையில் திரவத்தன்மை நெருக்கடி தொடர்பான திட்டமிடலினை (Baker Plan) 1985இலும் திவாலாகும் நெருக்கடி தொடர்பான திட்டமிடலை (Brady Plan) 1989 இலும் அறிமுகப்படுத்தினர். இதில் Baker Plan எனப்படும் திரவத் தன்மை தொடர்பான திட்டமிடலானது நிதி நிறுவனங்கள் திரவத் தன்மைப் பற்றாக்குறையை அனுபவிக்கின்றபோது அதனைப் போக்குவதற்காக உருவாக்கப்பட்டது.

எனவே திரவத் தன்மைப் பற்றாக்குறையை நீக்கியதும் அப்பிரச்சினையானது இல்லாமல் போய்விடும். ஆனால் Brady Plan எனப்படுவது முறிவடையும் நிறுவனங்களுக்கானது, அதாவது திரவத் தன்மை நெருக்கடியைப் போக்கினாலும் கூட நாடுகளில் அடிப்படையான பிரச்சினைகள் இருக்கும் வரைக்கும் அந்நிலைமையானது தொடரும். இந் நெருக்கடி நிலைமையிலிருந்து மீள்வதற்கான வழிவகைகளை நோக்கினால் அபிவிருத்தியடைந்த நாடுகள், கடன் நெருக்கடியால் பாதிக்கப்பட்ட அபிவிருத்தியடைந்து வருகின்ற நாடுகளிற்கு உதவலாம். அதாவது நேரடியாகத் தலையிடாமல் கடன்கள் மற்றும் தமது பங்களிப்பினை Paris Club, IMF, World Bank போன்ற சர்வதேச நிதி நிறுவனங்களினூடாக அபிவிருத்தியடைந்த நாடுகளுக்கு வழங்கினர். ஏனெனில் வங்கிகளிலிருந்து பெற்றுவந்த வர்த்தகக் கடன்களை அபிவிருத்தியடைந்த நாடுகள் பெறமுடியாத நிலைக்குத் தள்ளப்பட்டன. எனவே நெருக்கடியொன்று வரும்போது அதற்கு உதவி அவசியமாக இருக்கின்ற பட்சத்தில், உதவியைத்தரக்கூடிய நிறுவனங்களை உடனடியாக நாடுவது சாலச்சிறந்தது என்பது தெளிவாகப் புலனாகிறது.

இந்நெருக்கடிக்கான மீட்சித் தந்திரோபாயங்களைப் பார்த்தோமானால் அவை கடன்கொடுத்த வங்கிகள், கடன் பெற்ற நாடுகள் மற்றும் பன்னாட்டு நிதி நிறுவனங்கள் என மூன்று முனைகளிலிருந்து மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதில் கடன்கொடுத்த வங்கிகள் தாம் வழங்கிய கடன்களை கடன் மன்னிப்பின் கீழ், வழங்கிய கடனை தள்ளுபடி செய்துவிடலாம். உதாரணமாக போலந்து மற்றும் எகிப்து போன்ற நாடுகள் இந்நெருக்கடி காலகட்டத்தில் தாம்பெற்ற கடனை மன்னித்துவிடுமாறு வங்கிகளைக் கோரியுள்ளன. இரண்டாவது வழியாக கடனைப் பெற்றுக்கொண்ட நாடுகள் கடன் மீள் கட்டமைப்பு மற்றும்

கடன் மீள் கொள்வனவு நடவடிக்கைகளில் ஈடுபடலாம். மூன்றாவது வழியாக இருப்பது சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கியினுடைய உதவிகளைப் பெற்றுக்கொள்வதாகும். அதாவது சர்வதேச நாணய நிதியத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட Enhance Structural Adjustment Facilities (SAF) மற்றும் உலக வங்கியினால் அறிமுகப்படுத்தப்பட்ட Structural Adjustment Loans (SAL) மற்றும் Structural Adjustment Credits (SAC) ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

இங்கு பன்னாட்டு நிதி நிறுவனங்களால் வழங்கப்படுகின்ற உதவிகள், நிபந்தனைகளுடன் கூடிய கடன் உதவிகளாகக் காணப்படுகின்றன. அத்தடன் இவை அமைப்பு ரீதியிலான சீராக்கங்கள் மேற்கொள்ளப்படவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகின்றன. இதன் மூலமாக கடன் நெருக்கடியை அனுபவித்த நாடுகள் முறைமைசார் நெருக்கடியின் (Systemic Crisis) தீவிரத்தினை ஓரளவுக்கு குறைத்துக்கொண்டன. முறைமைசார் நெருக்கடியென்பது வங்கி நிறுவனமொன்றில் ஏற்படுகின்ற ஒரு நெருக்கடியானது வங்கித்துறையைப் பாதித்து, நிதித்துறையைப் பாதித்து, அதனூடாக முழுப் பொருளாதாரத்தையும் பாதிக்கின்ற நிலைமையாகும். முறைமைசார் நெருக்கடியானது இந்நாடுகளில் 1983ஆம் ஆண்டிலிருந்து மேற்படி வழிவகைகளினுடாகக் குறைவடைந்து 1985 – 1987களில் மீட்சி அடைவதனைக் காணலாம். இருப்பினும் அடிப்படையான சில பிரச்சினைகள் அந்நாடுகளில் இருக்கும்போது மீட்சிக்காலம் குறுகியதாக இருக்காமல் நீட்சியடைவதை அவதானிக்கலாம். 1989ஆம் ஆண்டில் புறவயப் பொருளாதாரச் சூழலில் ஏற்பட்ட முன்னேற்றமானது இந்நாடுகளின் நெருக்கடி நிலைமையின் தீவிரத் தன்மையைக் குறைவடையச்செய்தது என்பது குறிப்பிடத்தக்கது.

## கிழக்காசிய பொருளாதார நெருக்கடி

உலகளாவிய ரீதியில் ஏற்பட்ட அடுத்த முக்கியமான நெருக்கடியாக 1997ஆம் ஆண்டு ஏற்பட்ட கிழக்காசிய நெருக்கடியானது பார்க்கப்படுகின்றது. இந்நெருக்கடியால் பாதிக்கப்பட்ட முக்கியமான கிழக்காசிய நாடுகளாக இந்தோனேஷியா, தாய்லாந்து, மலேசியா, தென்கொரியா மற்றும் பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளைக் குறிப்பிடலாம். இந்நாடுகள் 1990களின் முற்பகுதியில் தமது அபிவிருத்தித் தந்திரோபாயமாக நடைமுறை மற்றும் மூலதனக் கணக்குகளைத் திறந்துவிட்டன. இதனால் சூடான பணத்தின் (Hot Money) உள்வருகையை அதிகரித்தது. சூடான பணம் எனப்படுவது எங்கு வட்டிவீதம் அதிகமாகக் காணப்படுகின்றதோ அதைநோக்கி ஊகவணிக நோக்குடன் பணமானது நகர்வதையும். மாறாக அங்கு நெருக்கடி ஏற்படும்போது, வட்டிவீதம் குறைவாகக் காணப்படும் போது, பணமானது வெளிப்பாயும். இப்பணமே அந்நாடுகளில் வளர்ச்சிக்கு உதவியிருக்கின்றது. இந்நாடுகள் 8 - 12 வீதமான துரித வளர்ச்சியைப்

பதிவுசெய்ததோடு மக்களினுடைய வாழ்க்கைத்தரத்தில் முன்னேற்றத்தையும் ஏற்படுத்தியது. இதனால் சொத்துக்களிற்கெல்லாம் செயற்கையாக ஒரு பெறுமதியளிக்கப்பட்டு அவை அதிகரித்தவண்ணமே சென்று எதிர்பாராத ஒரு சந்தர்ப்பத்தில் முறிவடைந்து, சொத்துக் குமிழி (Asset Bubble) எற்படுகின்ற போது பொருளாதார வளர்ச்சிக்கு இடையூறு ஏற்படுகின்றது. இதனை வெளிப்படுத்தும் விதத்தில் பெயரளவுத் தலா தேசிய வருமானமானது, இந்தோனேஷியாவில் 43.2 வீத்தினாலும் தாய்லாந்தில் 21.2 வீதத்தினாலும் மலேசியாவில் 19 வீதத்தினாலும் தென்கொரியாவில் 18.5 வீதத்தினாலும் பிலிப்பைன்ஸில் 12.5 வீதத்தினாலும் வீழ்ச்சிகண்டது.

இவ்வாறு ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியானது குறித்த பொருளாதாரத்திற்குள் மட்டும் மட்டுப்படுத்தப்படாமல் அது அரசியல் நெருக்கடியாகவும் மாற்றம்பெற்றது. இலங்கையின் தற்போதைய நிலவரங்கூட இதற்கு நல்ல உதாரணமாகக் காணப்படுகின்றது. இந்தோனேஷியாவில் இவ்வாறான நிலையே அனுபவிக்கப்பட்டிருக்கின்றது. இந்தோனேஷியாவில் 32 வருடம் அரசாட்சியிலிருந்த சுகார்டோ, அரசியல் நெருக்கடியால் இராஜினாமா செய்தார். இந்நெருக்கடியானது கற்றுத்தந்த பாடம் என்னவெனில் நெருக்கடிக்குத் தீர்வுகாணப் பொருளாதார நல்லாட்சியும் அரசியல் நல்லாட்சியும் அவசியம் என்பதாகும். இந்நெருக்கடிக்கான முக்கிய மூலங்களாக பாரிய வெளிநின்ற குறைநிலைகள், நிலம், சொத்து மற்றும் பங்குச் சந்தை விலைகளின் மிதமிஞ்சிய வீக்கம், ஒழுங்குபடுத்தலின் அசட்டையீனம், விவேகமான கண்காணிப்பின்மை, அமெரிக்க டொலருடனான பிணைப்பும் மற்றும் பெறுமதி ஊசலாட்டம் என்பனவும் காணப்பட்டன. இதனால் நாடுகளின் பொருளாதாரங்கள் மோசமாகப் பாதிக்கப்பட்டதோடு நிதி நெருக்கடி, வேலையில்லாத் திண்டாட்டம், வருமான வீழ்ச்சி போன்ற பல பிரச்சினைகளால் நாட்டில் அமைதியின்மையும் மக்கள் மத்தியில் போராட்டங்களும் வெடித்தன.

கிழக்காசிய நெருக்கடியானது 1997ஆம் ஆண்டு முதன்முதலில் தாய்லாந்திலேயே ஆரம்பமானது. இங்கு ஏற்கனவே நடைமுறையிலிருந்த பிணைக்கப்பட்ட நாணமாற்றுவீதமானது மிதக்கவிடப்படும்போது நெருக்கடி நிலையானது ஆரம்பிக்கின்றது. நாணயமானது மிதக்கவிடப்படுவதற்கு முன்னர் 1997இல் 25 Baht/ US$ ஆகவிருந்த நாணயமாற்று வீதமானது, மிதக்கவிடப்பட்ட பின்னர் 1998ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 56 Bhat/ US $ஆக நாணயத்தின் பெறுமதியானது வெறும் ஆறு மாத காலத்திற்குள்ளேயே பாரியளவால் வீழ்ச்சியடைகின்றது. தாய்லாந்தினைத் (பாட்) தொடர்ந்து இந்தோனேஷியா (ருபையா), கொரியா (வொன்), மலேசியா (ரிங்கிற்) போன்ற நாடுகளின் நாணயத்தினுடைய பெறுமதியும் தேய்வடைகின்றன. அதுமட்டுமல்லாமல் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வீதமாக வெளிநாட்டுக் கடன்களும் பாரியளவால் அதிகரிக்கின்றன. இதனால் ஒட்டுமொத்தமாக

இக்கிழக்காசியப் பிராந்தியத்தில் நாணயத்தின் பெறுமதியானது உருகியது. இதனை ஆங்கிலத்தில் "Melt Down" எனக் குறிப்பிடுகின்றார்கள். கிழக்காசியப் பிராந்தியத்திலுள்ள தாய்லாந்து, பிலிப்பைன்ஸ், தென்கொரியா போன்ற நாடுகளில் நாணயத்தின் பெறுமதியானது தேய்வடைந்து அவை பாரிய நெருக்கடியை எதிர்கொண்டதும் தங்களுக்கான கடன் உதவியைப் பெற்றுக்கொள்வதற்காக உடனடியாக IMF இனை நாடிச்செல்லுகின்ற தன்மையை அவதானிக்க முடிகின்றது.

இருப்பினும் IMFஇடமிருந்து மீட்புக்கான நிதியானது நிபந்தனைகளுடனேயே வருகின்றது. அந்தவகையில் தாய்லாந்திற்கு 20 பில்லியன் டொலர்களும், இந்தோனேஷியாவிற்கு 40 பில்லியன் டொலர்களும் கொரியாவிற்கு 59 பில்லியன் டொலர்களும் நிபந்தனைகளுடன் கடனாகக் கிடைக்கின்றன. இதற்காக IMF அந்நாடுகளின் மீது பல நிபந்தனைகளையும் விதிக்கின்றன. அதாவது அரசாங்க செலவீனத்தைப் பலமடங்குகளாகக் குறைத்தல், திவாலாகும் மீட்கமுடியா நிறுவனங்களை மூடுதல், போட்டித் தன்மையுள்ள உயர்ந்த வட்டிவீதங்களைப் பேணுதல் என்பவை இக்கடனுக்காக IMF விதித்த நிபந்தனைகளாக அமைகின்றன. இதன்விளைவாக இந்த நாடுகள் விரும்பத்தகாத விளைவுகளை அனுபவிக்கவேண்டி ஏற்பட்டது. விலைகள் பன்மடங்கு அதிகரித்தன. அதிலும் குறிப்பாக உணவுவிலை 35 வீதமாக அதிகரித்தது. மேலும், வேலையிழப்புக்களைத் தவிர்க்க முடியவில்லை. இந்தோனேஷியாவில் 12 வீதமும், கொரியாவில் 09 வீதமும் தாய்லாந்தில் 08 வீதமும் என மக்கள் வேலைவாய்ப்பை இழந்ததோடு இவர்களுக்கான சமூகப் பாதுகாப்புக்கூடக் காணப்படவில்லை.

எனவே கிழக்காசியப் பிராந்திய நாடுகளை நெருக்கடியிலிருந்து மீட்டெடுக்க மீள்கட்டமைப்பு மற்றும் மீள் முதலீடு என்பன நிதிநிறுவனங்கள் சார்பாக முன்வைக்கப்படுகின்றன. மேலும் தனியார் மற்றும் பொதுத்துறைகளால் வெளிப்படைத் தன்மை மற்றும் பொறுப்புக்கூறலுடன் கூடிய நல்லாட்சி மாதிரிகள் அங்கு முன்வைக்கப்பட்டுள்ளன. வெளிநாட்டுச் சேமிப்பில் தங்கியிருக்காமல் உள்நாட்டுச்சேமிப்பில் தங்கியிருத்தலும் அதனை ஊக்குவிக்கும் இறைக்கொள்கையும் இந்நெருக்கடியிலிருந்தான மீட்சிக்கான உபாயங்களாக முன்வைக்கப்பட்டன. அபிவிருத்தியடைந்த நாடுகள் வளரும் பொருளாதார நாடுகளுக்கு நெருக்கடிக்கு முன்னர் நேரடியாகக் கடன் உதவியை மேற்கொண்டாலும் நெருக்கடிக்குப்பின்னர் நேரடியாக வழங்காமல் IMF, World Bank போன்ற சர்வதேச நிதிநிறுவனங்களின் வழியாக இருபுடை ஒப்பந்தங்களினூடாகக் கடன்வழங்குகின்ற தன்மையை அவதானிக்க முடிகின்றது. இந்நெருக்கடியிலிருந்தான மீட்சி என்பது தனியொரு நாட்டை நம்பியிருப்பதல்ல. அதுபல்பக்க உதவிகளை வேண்டிநிற்கின்ற ஒன்றாகப் பார்க்கப்படுகின்றது.

## ரஷ்யப் பொருளாதார நெருக்கடி

உலகளாவிய ரீதியில் ஏற்பட்ட அடுத்த பாரிய நெருக்கடியாக ரஷ்ய நெருக்கடியானது பார்க்கப்படுகின்றது. இது Ruble Crisis அல்லது Russian Flu எனவும் அழைக்கப்படுகின்றது. இது 1990களின் நடுப்பகுதியில் அனுபவிக்கப்பட்ட நெருக்கடியாகும். ரஷ்யாவானது சோவியத் யூனியனாகவிருந்து பின்னர் ரஷ்யாவை தலைமையாகக் கொண்ட அந்த நாடுகளின் கூட்டமைப்பானது உடைந்து ரஷ்யாவானது சந்தைப் பொருளாதாரத்தை நோக்கி நகரும்போது இவ் நெருக்கடியானது வெடித்தது. இக்காலத்தில் பணவீக்கவீதமானது 300 வீதத்திற்கு மேல் காணப்பட்டதால், பணத்தின் மீதுள்ள நம்பிக்கை குறைந்து மக்கள் பண்டமாற்றுமுறை நோக்கி நகருகின்ற நிலை காணப்பட்டது. இந்நிலைமைக்கு நிதி ஒழுங்கின்மையே முக்கிய குறைபாடாகச் சுட்டிக் காட்டப்பட்டது. இங்கு வரவுசெலவுத் திட்டப் பற்றாக்குறையை மத்திய வங்கியே நிதியீட்டம் செய்வது நிதி ஒழுங்கின்மை என வல்லுனர்களால் சுட்டிக்காட்டப்பட்டது. அதுமட்டுமல்லாமல் வரி ஏய்ப்புக்கள் மற்றும் மூலதன வெளிப்பாய்ச்சல்கள் பல இக்காலத்தில் காணப்பட்டன. இதனால் நாடு பாரிய நெருக்கடிக்குள் சிக்கிக்கொள்கின்றது. எனவே இவ்நெருக்கடி நிலையைக் கட்டுப்படுத்துவதற்காக 1995இல் பாதீட்டுக் குறைநிலையைக் கட்டுப்படுத்துவதற்கும், நிலையான நாணயமாற்றுவீதத்தை பேணுவதற்கும், பணநிரம்பலைக் கட்டுப்படுத்துவதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இதன் மூலமாக 1996இல் பணவீக்கவீதமானது 50 வீதமாகவும் 1997இல் 15 வீதமாகவும் குறைவடைந்தமை ஒரு முன்னேற்றகரமான ஒரு நடவடிக்கையாகும்.

ரஷ்யா இந்த நெருக்கடி நிலையிலிருந்து மீண்டுவருவதற்கு, நிதிப்பத்திரங்களை விற்று (GKO) சர்வதேச மூலதனச் சந்தைகளிடமிருந்து (Euro Bond) நிதிபெறும் வாய்ப்புக் காணப்பட்டது. அதுமட்டுமல்லாமல், நடைமுறைக்கணக்கு உறுதிப்படுத்தப்பட்டமை, ஒதுக்குகளின் அதிகரிப்பு நாணயமதிப்பு உயர்வுங்கூட கடன்சேவை விகிதம் அதிகரித்த போதும் மீண்டுவர வாய்ப்பளித்தன. இவ்வாறு ரஷ்யா பணச்சந்தைக் கருவிகளைப் பயன்படுத்தி இந்நெருக்கடி நிலைமையிலிருந்து மீண்டுவரக்கூடிய வாய்ப்புக் காணப்பட்டது. இருப்பினும் ரஷ்யாவானது 1997இல் கிழக்காசியப் பிராந்தியத்தில் ஏற்பட்ட நெருக்கடியின் பரவல் விளைவினால் இன்னுமொரு நெருக்கடியை எதிர்கொள்கின்றது. எண்ணெய் விலை வீழ்ச்சி, கிழக்காசிய நெருக்கடி, ஏற்றுமதி வர்த்தகம் 25 வீதத்தால் வீழ்ச்சி போன்ற காரணங்களால் 1997இல் வர்த்தக மாற்றுவீதமானது பாதகமாக மாறியதோடு 20 பில்லியன் US $ வெளிநின்ற கடனாகக் காணப்பட்டது.. இதனால் 1997 - 1998 காலப்பகுதிகளில் சென்மதிநிலுவைப் பிரச்சினை ஏற்பட்டது. இதனால் ரஷ்ய மத்திய வங்கி, அந்நியச் செலாவணி ஒதுக்குகளை விற்று நாணயமாற்று விகிதத்தை உறுதியாகப்பேண முயற்சித்தது. இருப்பினும் ரஷ்யாவின் ரூபிள் 70 வீதம்

பெறுமதித்தேய்வுக்கு உட்பட்டதோடு, பணவீக்கவீதம் 90 வீதமாகக் காணப்பட்டது. இதற்காக ரஷ்யா, சர்வதேச நிறுவனங்களிடமிருந்து கடன்பெற்றபோதும் சந்தை மீதான நம்பிக்கை மற்றும் ஒதுக்குகள் தொடந்தும் வீழ்ச்சியடைந்தன.

எனவே, ரஷ்யா கடன் மீளச்செலுத்தலை தற்காலிகமாக நிறுத்துவதாக தற்போதுள்ள நெருக்கடிக்காலத்தில் இலங்கை அறிவித்தது போன்று ஒரு அறிவிப்பை வெளியிட்டது. இருப்பினும் ரஷ்யா இந்நெருக்கடியிலிருந்து மீண்டுவருவதற்கு சர்வதேச சந்தையில் எண்ணெய் மற்றும் எரிவாயு விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பு இந்நாட்டினுடைய மீட்சிக்குப் பங்களித்தது. இதனூடாக ஒதுக்குகளை அதிகரித்து சர்வதேச சந்தையில் மீண்டுவருவதற்கு வாய்ப்பு ஏற்பட்டதுடன் ஏனைய நாடுகளைவிட விரைவான மீட்சியை அடையக்கூடிய வாய்ப்பு ஏற்படுகின்றது. எனவே ஒரு நாடு தன்னுடைய வளங்கள் எவை, எவ்வளங்கள் சர்வதேச சந்தையில் போட்டிகரமான சூழ்நிலையைப் பெற்றுத்தரும் என்பதைத் துல்லியமாகப் புரிந்து வைத்திருக்கவேண்டும். இலங்கை தற்போது எதிர்கொண்டிருக்கின்ற நெருக்கடிக்கு இதுவும் ஒரு பாடமாக அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## இலத்தீன் அமெரிக்க கடன் நெருக்கடி

இலத்தீன் அமெரிக்க நாடுகளில் 1990களில் ஏற்பட்ட ஒரு நெருக்கடியாகப் பார்க்கப்படுகின்ற இது வங்கித்துறை சார்ந்த நெருக்கடியாகவோ சென்மதிநிலுவை நெருக்கடியாகவோ அல்லது இரண்டுமாகவோ காணப்பட்டது. இந் நெருக்கடியால் அதிகம் பாதிக்கப்பட்ட நாடுகளாக மெக்ஸிகோ (1995), பிரேசில் (1998) மற்றும் ஆர்ஜென்டீனா போன்ற நாடுகள் காணப்படுகின்றன. இதில் மெக்ஸிகோ நாட்டை எடுத்துக்கொண்டால் உயர்ந்த வட்டிவீதம், நாணயப்பெறுமதி இறக்கம், மூலதன வெளிப்பாய்ச்சல் மற்றும் அதனால் உருவான நிதிச்சந்தை நெருக்கடி என்பன இப்பாரிய பொருளாதார நெருக்கடிக்கு இட்டுச்சென்றது. இதிலிருந்து மீட்சி பெறுவதற்காக இலத்தீன் அமெரிக்க நாடுகளும் IMFஇனுடைய உதவியினை நாடிச்சென்றன.

மெக்ஸிகோவிற்கு 1995ஆம் ஆண்டு 17.8 பில்லியன் US $ கடனானது 18 மாதகால தவணைக்குள் திருப்பிச்செலுத்த வேண்டும் என்ற நிபந்தனையுடன் IMFஇனால் வழங்கப்பட்டுள்ளது. அதேபோல பிரேசிலும் நெருக்கடிக்குள்ளாகி மீட்சிக்காக IMFஇனை நாடிச்சென்றபோது 1998ஆம் ஆண்டு 18 பில்லியன் US $ கடனானது 36 மாதகால தவணைக்குள் திருப்பிச்செலுத்தப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் IMFஇனால் வழங்கப்பட்டுள்ளது. இதேபோல இலத்தீன் அமெரிக்க நாடான ஆர்ஜென்டீனா நெருக்கடியிலிருந்து மீள்வதற்காக முன்மாதிரியான பல உத்திகளைக் கையாண்டு நெருக்கடியிலிருந்து மீண்டுவந்தது.

ஆர்ஜென்டீனா 2000ஆம் ஆண்டில் ஒற்றை இலக்க பணவீக்கத்துடன் வெற்றிகரமான பொருளாதாரச் சீர்திருத்தங்களுக்கான முன்மாதிரியாகத் திகழ்ந்த ஒரு நாடாகவும் திருப்திகரமான பொருளாதார வளர்ச்சி வீதத்துடன் பொருளாதார நல்லாட்சிக்கு உதாரணமாகவும் திகழ்ந்தது. ஆனால் 2002இல் அதன் நிலைமை மாறியது. மொத்த உள்நாட்டு உற்பத்தியானது தொடர்ந்து 3 வருடங்களுள் 20 வீதத்தால் குறைந்தது. பணவீக்கவீதம் உயர்ந்ததோடு 2002ஆம் ஆண்டு அது 80 வீதத்தைப் பதிவுசெய்தது. 2002ஆம் ஆண்டு அரசாங்கக் கடனைக் கொடுக்க முடியாமல் திவாலாகி வங்கி முறைமையானது உறைந்து போனதோடு, நாணயசபையானது முறிவடைந்த ஒரு நிலைமையை அவதானிக்க முடிகின்றது. இப்பிரச்சினைக்குரிய காரணம் பொதுப்படுகடனை சரியானமுறையில் முகாமைத்துவம் செய்யாமையாகும். குறிப்பாக 2002இல் ஆர்ஜென்டீனாவின் மொத்த கடன்கொடுப்பனவுகள் மொத்த ஏற்றுமதிச் சம்பாத்தியத்தில் ¾ பங்காகக் காணப்பட்டது. பொருளாதாரவளர்ச்சி வீதம் 2002இல் 11 வீதத்தால் குறைந்தது. வேலையின்மை வீதம் 25 வீதத்திற்கு அதிகமாக உயர்ந்தது. இந்நெருக்கடியிலிருந்து மீள்வதற்காக ஆர்ஜென்டீனாவானது ஏனைய நாடுகளைப் போலவே இறுதியில் IMFஇனுடைய உதவியை நாடுகின்றது. IMFஆனது 14 பில்லியன் US $இனை ஆர்ஜென்டீனாவிற்கு சில நிபந்தனைகளுடன் வழங்குகின்றது. அதாவது பொதுத்துறையில் மிகைநிதியினை உருவாக்குதல் (Surplus Budget), மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி வீதத்தினை 0.5 வீதத்திலிருந்து 1.5 வீதமாக உயர்த்துதல் மற்றும் வரவுசெலவுத்திட்டப் பற்றாக்குறையினை 6.4 வீதத்திலிருந்து 3 வீதமாக (GDPஇன் சதவீதமாக) குறைத்தல் போன்ற நிபந்தனைகளுடன் IMFஆனது கடனை வழங்குகின்றது.

எனவே ஒரு நாடானது நெருக்கடிநிலைமைக்குள் போகின்றபோது அதிலிருந்து மீள்வதற்காக IMF மற்றும் World Bank போன்ற சர்வதேச நிதி நிறுவனங்களை நாடும்போது அவை விதிக்கும் நிபந்தனைகளை தவிர்க்கமுடியாத நிலை உருவாகின்றது. எனவே நாடுகள் புத்தாக்கங்களை, சில புதிய முயற்சிகளை அமுலாக்கம் செய்வதற்கு முயற்சிக்க வேண்டும். அந்தவகையில் குறுங்காலக் கடன்களை நீண்டகாலக் கடனாக மாற்றுவதற்கான நடவடிக்கைகள், புதிய ஒருவகை நாணயத்தினை உருவாக்குவதற்கான நடவடிக்கைகள் மற்றும் மிதக்கும் நாணயமாற்றுவீதத்தை நடைமுறைப்படுத்தும் முயற்சிகள் போன்ற சில நடவடிக்கைகளை அவர்கள் முன்னெடுத்திருக்கிறார்கள்.

## சர்வதேச நிதிநெருக்கடி

1930களின் உலகப்பெருமந்தத்தைத் (Great Depression) தொடர்ந்து சர்வதேசரீதியாக 2008ஆம் ஆண்டு நாடுகள் அனுபவித்த

பெரும்பின்னடைவாக (Great recession) இது பார்க்கப்படுகின்றது. இது ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவினை மோசமாகப் பாதித்தது. இது உண்மையில் 2007இல் ஐக்கிய அமெரிக்காவினுள் ஆரம்பித்து உலகம் முழுவதும் வியாபித்தது. இதற்கு உலகமயமாதலே முக்கிய காரணமாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது. உலகமயமாதல் எவ்வளவிற்கு எவ்வளவு வியாபித்ததோ அந்தளவிற்கு இச்சர்வதேச நிதிநெருக்கடியானது பாதிப்பை ஏற்படுத்தியிருந்தது. மற்றும் நாடுகளின் பேரினப் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் கண்காணிப்பு ஒழுங்குபடுத்தலின் நெகிழ்ந்த போக்கு என்பனவும் நெருக்கடிநிலைமையை மேலும் தீவிரப்படுத்தியது. இதனால் சர்வதேச நிதிமுறைமையே ஆட்டங்கண்டது. இப்பொருளாதார நெருக்கடியின் விளைவாக கைத்தொழில் ரீதியாக அபிவிருத்தியடைந்த உயர்வருமானம் பெறும் பொருளாதார நாடுகளின் கைத்தொழில் உற்பத்தியானது 2008ஆம் ஆண்டிலிருந்து வீழ்ச்சி கண்டது.

அதேபோல வளர்ந்துவரும் பொருளாதாரங்களிலும் (Emerging Economies) கைத்தொழில் உற்பத்திகள் குறைவடைந்தன. இச்சர்வதேச நிதி நெருக்கடிகளால் வளர்ச்சியடைந்த நாடுகளைவிட வளர்முக நாடுகளே அதிகமாகப் பாதிக்கப்பட்டன. இந்நெருக்கடியானது ஏற்பட்ட ஆரம்பகாலத்தில் குறிப்பாக 2008ஆம் ஆண்டு ஐக்கிய அமெரிக்காவினுடைய மொத்த உள்நாட்டு உற்பத்திகள் 4 சதவீத வீழ்ச்சியைச் சந்தித்துள்ளன. தொடர்ந்து பங்குகளின் விலையானது 4.5 சதவீதத்தால் வீழ்ச்சி கண்டன. உலகளாவிய உள்நாட்டு உற்பத்தியை நோக்கினால் 2007ஆம் ஆண்டு 5 வீதமாகவும் 2008இல் 3.75 வீதமாகவும் அதனைத்தொடர்ந்து 2009ஆம் ஆண்டு 2 வீதமாகவும் குறைவடைந்ததை அவதானிக்கமுடிகின்றது. மேலும் சர்வதேசரீதியாக உலக நிதி நிறுவனங்கள் இழந்த கடன்கள் 1.5 ரில்லியன் US $ஆக அதிகரித்தது. மேலும், லேமன் சகோதரர்களின் முறிவும் 2008இல் சம்பவித்தது. இதனால் கடன்களின் தேக்கநிலை உலக நிதிமுறைமையினை அழிவின் விளிம்பிற்கே இட்டுச்சென்றது.


இருந்தபோதிலும் இதிலிருந்து மீள்வதற்காக 2009இல் நம்பிக்கையூட்டும் விதத்தில் பொருளாதார நடவடிக்கைகளில் மீள எழுச்சியேற்படுகின்றது. இதன் வாயிலாக கேள்வி அதிகரிக்கிறது. இதுதவிர தயாரிப்புத் தொழிலின் மீளெழுச்சி, பண்டவிலைகளின் உயர்வு, நிதிக்கொள்கையூடான தூண்டுதல் முயற்சி, மீளெழுச்சியை உறுதிப்படுத்தும் வகையிலான பேரினப் பொருளாதாரக் கொள்கைகள் என்பனவும் மீளெழுச்சிக்கு வழிவகுத்தன. பொருத்தமான இக்கொள்கை இடையீடுகள் 2010இல் 4.25 வீத பொருளாதார வளர்ச்சியை அடையும் விதமாக நகர்த்திச்சென்றதை அவதானிக்க முடிந்தது. இதனூடாக நாணயக்கொள்கை மற்றும் இறைக்கொள்கைகள் இலக்கை எட்டியதோடு அடுத்துவரும் வருடங்களிலும் நிதிக்கொள்கை சீராக்கப்பட்டு

ஒழுங்குபடுத்தப்படும்பொழுது பொருளாதாரம் மீண்டும் வளர்ச்சியை அடைவதனை அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

## ஐரோப்பிய (யூரோ வலய) நெருக்கடி

இவ் ஐரோப்பிய நெருக்கடியானது 2010இல் யூரோவலய நாடுகளில் அனுபவிக்கப்பட்ட ஒரு நெருக்கடியாகப் பார்க்கப்படுகின்றது. இந்நெருக்கடியால் ஐரோப்பிய வலய நாடுகளில் அதிகம் பாதிக்கப்பட்ட நாடாக கிரேக்கம் விளங்குகின்றது. இந்நெருக்கடியின் தீவிரத்தால் கிரேக்கம் தன்னுடைய தீவுகளையே விற்கவேண்டிய நிலைக்குச்சென்றிருந்தன. பாரியளவுப் பொதுப்படுகடன், உயர்ந்த வரவுசெலவுத் திட்டம் மற்றும் வெளிநாட்டுக்கடனில் தங்கியிருத்தல் ஆகியன கிரேக்கத்தினை நெருக்கடிக்குள் தள்ளியது.

**வரைபடம் 2: மொத்த அரச பொதுப்படுகடன் (மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வீதம்)**




**மூலம்:** https://www.researchgate.net/profile/Samantha-

மேற்படி வரைபடத்தின்படி, மொத்த அரச பொதுப்படுகடனை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வீதமாகப் பார்க்கும்போது ஐரோப்பிய வலய நாடுகளில் கிரேக்கத்திலேயே பாரிய கடன் சுமையானது காணப்படடது. அது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 80 வீதத்திற்கு அதிகமாகக் காணப்படுவதனை அவதானிக்க முடிகின்றது. இந்நிலைமைக்கு இலகு கடன்களை பெறக்கூடியதாக இருந்தமையும் அதற்கான அதிகரித்த கேள்வியும், வரிக்குறைப்புடன் கூடிய இறைக்கொள்கை, வரவுசெலவுத்திட்டப் பற்றாக்குறையில் ஏற்பட்ட வளர்ச்சி, மாற்றல்கொடுப்பனவுகளில் ஏற்பட்ட அதிகரிப்பு (உள்நாட்டு உற்பத்தியின் வீதமாக ஓய்வூதியம் 12.5%) என்பன முக்கிய காரணங்களாகச் சுட்டிக்காட்டப்படுகின்றன. இது தவிர பலவீனமான நல்லாட்சி, திறனற்ற பொதுத்துறை, அரசாங்க முறைமையின் பலவீனம், நெருக்கடியைக்

கண்டுகொள்ளாத அதிகாரிகளின் அசமந்தப் போக்கு போன்ற பல காரணங்களும் கிரேக்கத்தை பாரிய பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளியது. இவையெல்லாம் சேர்ந்து கிரேக்கத்தில் வங்கிகளின் இருப்பினை கேள்விக்குறியாக்கியுள்ளது. இதற்குமேலதிகமாக தகவல்கள் உண்மைக்குப் புறம்பாகக் காணப்படுகின்றன. 2009இல் கிரேக்கத்தில் மொத்தப்படுகடன் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வீதமாக 99.6 வீதமெனக் கூறப்பட்டது. ஆனால் இது திருத்தப்பட்டபோது 115.1 வீதமெனக் கூறப்பட்டது. இவற்றில் பெரும்பாலான நிலைமைகள் இலங்கையின் தற்போதைய நெருக்கடிக்கான காரணங்களோடு ஒத்துப்போவதாக உள்ளன. இதேபோல்தான் இலங்கையின் பணவீக்க நிலைமையும் உண்மைக்குப் புறம்பாகக் காணப்படுகின்றன. இலங்கையில் இருந்து வருகின்ற தரவுகள் குறிப்பிட்ட ஒரு சதவீதத்தைக் குறிப்பிட ஜோன்பேர்கின் பல்கலைக்கழகத்தினுடைய பணவீக்கச் சுட்டெண்ணின்படி அது இன்னொருவீதமாகக் காட்டப்படுகின்றது. எனவே எந்தத் தகவல் உண்மையானது என்பதில் குழப்பம் நிலவுகின்றது.

கிரேக்கம் கூட இப் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு IMFஇனையே நாடியதோடு 2010இல் 28 பில்லியன் யூரோவினைக் கடனாகப் பெற்றுக்கொண்டது. மேலும் அது ஒரு யூரோவலய நாடாகவிருந்தபடியினால் ஏனைய யூரோ வலய நாடுகளிடமிருந்தும் ஐரோப்பிய மத்தியவங்கியிடமிருந்தும் இருபக்க உதவிகளைப் பெற்றுக்கொண்டது. ஐரோப்பிய நிதி நெருக்கடியால் பாதிக்கப்பட்ட அயர்லாந்து, போர்த்துக்கல் போன்ற பல நாடுகளும் யூரோ வலய நாடுகளிடமிருந்தும் IMFஇடமிருந்தும் கடனுதவியைப் பெற்று மீண்டுவரக்கூடிய வாய்ப்புக் காணப்பட்டது. எனவே, உலக நிதி நெருக்கடியின் விளைவாக ஏற்பட்ட எதிர்பாராத பரவல்விளைவு (Ripple Effect) மற்றும் தொற்று விளைவு (Contagion Effect) என்பன உலகமயமாதலின் பிரிக்கமுடியாத தன்மையாகும் என்பதனை யூரோவலய நெருக்கடியினூடாக நாம் கற்றுக்கொள்ளமுடிகின்றது.

இதிலிருந்து மீள்வதாகவிருந்தால் கட்டமைப்புக்கள் பலமானதாகவிருக்க வேண்டும். கட்டமைப்புக்கள் பலவீனமானவையாக இருந்தால் எதிர்பாராத பரவல்விளைவு (Ripple Effect) மற்றும் தொற்று விளைவு (Contagion Effect) என்பவற்றை தவிர்க்க முடியாமல் இருப்பதோடு பாதிப்பும் தீவிரமாகவிருக்கும். மேலும், யூரோவலயம் கொண்டிருந்த விதிகள் மற்றும் பிரமாணங்களை அந்நாடுகள் புறக்கணித்தமையும் கூட்டு முயற்சி இல்லாமையும் இவை நெருக்கடியை எதிர்கொள்ளக் காரணமாக அமைந்தது. எனவே ஒரு அமைப்புக்குள் இருக்கும்போது அதன் ஒழுங்குவிதிகளை ஒழுங்காகக் கடைப்பிடித்துக் கூட்டாகச் செயற்படவேண்டியது அவசியமானதாகும். மேலும் ஏதாவதொரு புறநடையான விடயம் நடக்குமாகவிருந்தால் அதனைக் கண்காணித்து ஒழுங்குபடுத்துவதற்கு நிறுவனங்கள் இருக்க வேண்டும். இவ்வாறான

நிறுவனங்கள் இல்லாமையும் நெருக்கடியை வளரச்செய்து தீவிரமானநிலைக்கு இட்டுச்சென்றுவிடும். இப்பாடங்களை யூரோவலய நெருக்கடியினூடாகக் கற்றுக்கொள்ள முடிகின்றது.

மேற்கண்டவாறு விரிவாக நோக்கிய உலகளாவிய பொருளாதார நெருக்கடிக்கான பொதுக்காரணிகளை பின்வருமாறு பட்டியல்படுத்த முடியும்.

- அழுத்தங்களின் அதிகரிப்பும் பொருத்தமற்ற கொள்கைப் பிரயோகங்களும்
- பிணைக்கப்பட்ட அந்நியச் செலாவணி வீதம்
- நிதிமுறைமையைக் கண்காணிக்கும் சுயாதீன அமைப்புக்களும் மதிநுட்பம்மிக்க விதிகளும் பிரமாணங்களும் இல்லாமை
- தரவுகளின் வரையறுத்த கிடைப்பனவும் வெளிப்படைத் தன்மையின்மையும்
- நல்லாட்சியின்மையும் பொறுப்புக்கூறலின்மையும்
- வெளிநின்ற காரணிகள்

## முடிவுரை

எனவே இந்நெருக்கடி நிலைமையைக் கட்டுப்படுத்த பொருத்தமான தந்திரோபாயங்களை அந்தந்த நாடுகளின் அகப் புறச்சூழலிற்கு ஏற்றவாறு கடைப்பிடிக்கவேண்டும். அந்தவகையில் எதிர்த்துப் போராடும் நாணயக்கொள்கையும் அரசியல் அழுத்தங்களுக்கு அடிபணியாத கொள்கைத் திட்டங்களும் நாட்டிற்கு அவசியமானதாகும். குறிப்பாக நாட்டில் சுயாதீனமான மத்தியவங்கியின் சுதந்திரமான செயற்பாட்டினை உறுதிப்படுத்த வேண்டும். மேலும், நிதித்துறைச் சீர்திருத்தங்கள், வெளிப்படைத் தன்மை, பொறுப்புக்கூறலுடன் கூடிய நல்லாட்சி மற்றும் தங்கியிருத்தலைக் குறைக்கும் இறைக் கொள்கை என்பன அவசியமானதாகும். அதுமட்டுமல்லாமல், பிரச்சினையினுடைய ஆணிவேர் எதுவெனக் கண்டு அதனைக் களையும் கொள்கைகள் மறுபுறத்தில் தார்மீக ஆபத்துக்களை உருவாக்கிவிடக்கூடாது. உதாரணமாக உணவுப் பற்றாக்குறை மற்றும் உணவுப் பாதுகாப்பின்மையிலிருந்து காக்க விவசாயத்துறையில் எடுக்கும் கொள்கைகள் விவசாயத்துறையை மேம்படுத்த வேண்டும். மாறாக இருக்கின்ற நிலைமையினை மேலும் தீவிரப்படுத்திவிடக்கூடாது. இருப்பினும் ஒரு நெருக்கடியைச் சரியாக எதிர்வுகூறுவது கடினமாகும். ஆயினும் கூட சில சமூக பொருளாதாரக் குறிகாட்டிகளை சரியாக அவதானித்து வந்தால் அடையாளங்காண்பது சாத்தியமாகக்கூடும். உதாரணமாகப் பணவீக்கம், மெய்யான நாணயமாற்றுவீதம், நடைமுறைக் கணக்கு குறைநிலை, உள்நாட்டுக்கடன், சொத்துக்களின் விலை, பங்குச் சந்தைகளின் விலை போன்றவற்றை தொடர்ச்சியாகக் கண்காணித்து வந்தால் வருமுன் காப்பதென்பது சாத்தியமானதாக இருக்கும்.

## உசாத்துணை

Kirman, A., 2010. The Economic Crisis is A Crisis for Economic Theory. *CESifo economic studies*, *56*(4), 498-535.

Lawson, T., 2009. The Current Economic Crisis: Its Nature and The Course of Academic Economics. *Cambridge Journal of Economics*, *33*(4), 759-777.

Mattick, P., 2020. *Economic crisis and crisis theory*. Routledge. Retrieved from https://doi.org/10.4324/9781003069690

Pop-Eleches, G., 2008. From Economic Crisis to Reform. In *from Economic Crisis to Reform*. Princeton University Press.

Simou, E. and Koutsogeorgou, E., 2014. Effects of the economic crisis on health and healthcare in Greece in the literature from 2009 to 2013: a systematic review. *Health policy*, *115*(2-3), 111-119.

Stiglitz, J., 2000. What I learned at the world economic crisis. *The New Republic*, *17*, 2000.

அத்தியாயம் 14

# இலங்கையின் தற்போதைய உணவு நெருக்கடியும் நிவர்த்திக்கான வழிகளும்

# The Current Food Crisis in Sri Lanka - Roadmap to Overcome

**Dr. T. Geretharan**
Senior Lecturer,
Department of Crop Science,
Faculty of Agriculture,
Eastern University, Sri Lanka.

(31.08.2022 அன்று நடைபெற்ற நிகழ்நிலைக் கருத்தரங்கின் தொகுப்பு)

## அறிமுகம்

இலங்கையில் உணவு நெருக்கடி காணப்படுகின்றதா?, எவ்வாறு அது உருவாகியது?, அதனை எவ்வாறு நிவர்த்தி செய்து கொள்ளலாம்? என்பதைப் பற்றிய ஆழமான பார்வையாகவே இந்த கட்டுரை அமைந்துள்ளது. நாங்கள் தற்போது பொருளாதார நெருக்கடியில் இருக்கின்றோமா? என்கின்ற கேள்விக்கு சான்றுகளாக கீழ்வருவனவற்றைக் குறிப்பிடலாம். தற்போது இலங்கையில் அடிப்படை சேவைகளைக்கூட வழங்குவதற்கான எரிபொருள் இல்லை. எரிபொருட்களின் விலை பாரியளவில் அதிகரித்துள்ளது. பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன. எமது நாட்டுக்குத் தேவைான பொருட்களை வெளிநாடுகளிடம் இருந்து பெற்றுக் கொள்ள முடியாத நிலை காணப்படுகின்றது. வெளிநாடுகளிடம் இருந்து பெற்றுக் கொண்ட கடனினை உரிய முறையில் செலுத்த முடியாமல் உள்ளது. அந்நியச் செலாவணிப் பற்றாக்குறையினை நாடு எதிர்நோக்கியுள்ளது. இவையெல்லாம் உண்மையில் பொருளாதார நெருக்கடிக்கான அறிகுறிகளாகக் காணப்படுகின்றது. இதில் மிகவும் முக்கியமான விடயமாக அவதானிக்கப்பட வேண்டியதுதான் உணவு நெருக்கடி நிலையாகும். இலங்கையின் பணவீக்க குறிகாட்டியான நுகர்வோன் விலைச் சுட்டெண்ணானது 2022ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம் ஜூன் மாதம் வரை அதிகரித்துச் செல்லும் போக்கினைக் காட்டியுள்ள அதேவேளை ஜூன் மாதம் அளவில் 54.6 சதவீதமாகவும் காணப்படுகின்றது.

## இலங்கையில் உணவு நெருக்கடி காணப்படுகின்றதா?

இலங்கையில் உணவு நெருக்கடியானது காணப்படுகின்றதா என்பதை பிரபலமான மூன்று நிறுவனங்கள் வெளியிட்ட அறிக்கைகளினை அடிப்படையாக வைத்து விளக்க முடியும். பொருளாதார நெருக்கடியின்

அறிகுறிகள் என்னும் அடிப்படையில் நாட்டின் கையிருப்பானது குறைவடைந்துள்ளது. டொலருக்கான தட்டுப்பாடு மட்டுமன்றி ரூபாய்கான தட்டுப்பாடும் நிலவுகின்றது. இதனாலேயே அரசாங்கம் பணத்தினை அச்சிட்டு வருகின்றது. இதன் காரணமாக தொடர்ச்சியாக பணவீக்கமும் அதிகரித்து வருகின்றது.

Save the Children நிறுவனம் ஜுலை மாதத்தில் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிட்டுள்ள விடயம் யாதெனில், அவர்கள் 2300 குடும்பங்களிடம் இருந்து தகவல்களினை சேகரித்துள்ளனர். அதில் 89 சதவீதமான குடும்பங்கள் தங்களது வருமானத்தினை இழந்துள்ளார்கள். இதில் 10இல் ஒருவர் தனது முழு வருமானத்தினையும் இழந்துள்ளார்கள். அதாவது எரிபொருள் இல்லை. விலையேற்றம் அதிகரிப்பு ஆகியவற்றினால் பாரிய நெருக்கடியினை மக்கள் எதிர்நோக்கியுள்ளனர். 35 வீதமான குடும்பங்கள் தமது உணவு நுகர்வினை குறைத்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளனர். 30 சதவீதமான குடும்பத்தினர் உணவு எடுத்துக் கொள்ளுகின்ற தடவைகளினை குறைத்துள்ளதாகத் தெரிவித்துள்ளனர். மூன்றில் ஒரு பங்கினர் மட்டுமேதான் தமது உணவினை சரிவரப் பெற்றுக் கொள்கின்றனர் எனக் குறிப்பிட்டுள்ளனர். 12 சதவீதமான மக்கள் கடன் பெற்று அல்லது தங்களது சொத்துக்களினை விற்று வாழ்க்கையினை நடத்துகின்றனர் எனக் குறிப்பிட்டுள்ளனர். சில குடும்பங்களில் பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்புவதைக் குறைத்துள்ளனர். மூன்று குடும்பங்களில் இரண்டு குடும்பங்கள் சாப்பிட முடியாத இயலுமையினைக் கொண்டதாகக் காணப்படுகின்றது. இது எமது நாட்டில் உணவு நெருக்கடி காணப்படுகின்றது என்பதை தெளிவாகக் காட்டுகின்றது.

உலக உணவு ஸ்தாபனமானது வீட்டுத்துறையினர் 10 பேரில் 3 பேர் (6.26 மில்லியன் மக்கள்) தேவையான அளவு உணவு, போசாக்கான உணவு கிடைக்காமல் உள்ளனர் என்றும், 65,600 மக்கள் தொகையினர் மிகவும் தீவிர வறுமையினை எதிர்கொண்டுள்ளனர் எனவும் தமது அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. பெரும்பாலான வீட்டுத்துறையினர் குறைந்தளவான உணவினை உட்கொள்ளுகின்றனர். அதேவேளை போசாக்கான உணவு உட்கொள்ளுகின்ற அளவும் குறைவடைந்துள்ளது. அரசாங்கம் கோதுமை மாவினை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்கின்றது. விலை உயர்வாக காணப்படுகின்ற நிலையில் மக்களுக்கும் அதே விலையில் வழங்குவது என்பது வறிய மக்களை பெரிதும் பாதிக்கும். எனவே விலையினை குறைத்து வழங்க வேண்டும் என அக்கறை செலுத்தப்படுகின்றதே தவிர அதன் தரம் பற்றி நோக்கப்படுவதில்லை. உணவுப் பணவீக்கத்தினை பொறுத்தவரை ஜுன் மாதத்தில் 57.4 சதவீதமாகக் காணப்படுகின்றது. 61 சதவீதமான மக்கள் ஏதாவதொரு திட்டத்தினை மேற்கொள்கின்றனர். ஒன்றில் உணவினைக் குறைக்கின்றனர். உணவின் போசாக்குத் தன்மையினைக் குறைக்கின்றனர். யுனிசெ·ப் நிறுவனத்தின் நாடுகளின் பணிப்பாளர் தெரிவித்திருக்கும் கருத்து என்னவெனில் பெருமளவான பிள்ளைகள்

பசியுடனே படுக்கைக்குச் செல்கின்றார்கள். அவர்களுக்கு அடுத்தவேளை உணவு எப்போது கிடைக்கும் என்பது கூடத் தெரியாமல் இருக்கின்றது. நாட்டுக்கான பெரியளவிலான உணவுப் பஞ்சமானது காணப்படுகின்றது. எனவே மேற்படி மூன்று வகையான அறிக்கைகளில் (ஆய்வின் அடிப்படையில் பெறப்பட்ட முடிவுகளின் படி) இருந்து இலங்கையில் உணவுப் பிரச்சினை காணப்படுகின்றது என உறுதியாகக் கூறிக்கொள்ள முடியும்.

## பொருளாதார நெருக்கடி எப்படி வந்தது?

அரசாங்கம், கொவிட்-19 தொற்றுக் காரணமாக சுற்றுலாத்துறையானது மிகவும் பாதிப்பட்டுள்ளது என்றும் ஈஸ்டர் குண்டுத் தாக்குதலின் பின்னர் அதிகளவான சுற்றுலாப் பயணிகளின் வருகை குறைவடைந்தது எனவும் குறிப்பிடுகின்றது. ஆனால் பெருமளவான பொருளியல் நிபுணர்கள் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவர்களின் ஒழுங்கமைப்பு இல்லாத ஒரு முகாமைத்துவம் காரணமாகத்தான் பொருளாதார நெருக்கடியானது ஏற்பட்டுள்ளது எனக் குறிப்பிடுகின்றனர். 2009ஆம் ஆண்டு உள்நாட்டுப் போர் நிறைவுற்றதும் இலங்கை அரசாங்கம் பெருமளவான வெளிநாட்டு சந்தை வாய்ப்புக்களினைக் கைப்பற்றுவதனை தவறிவிட்டது என்றும், அவர்கள் பெருமளவிற்கு உள்நாட்டுச் சந்தை வாய்ப்புக்களை மேம்படுத்துவதிலேதான் குறிக்கோளாக இருந்தனர். உதாரணமாக வெளிநாட்டுச் சந்தைகளில் இருந்து பொருட்களை இறக்குமதி செய்து உள்நாட்டுச் சந்தையில் விற்பனை செய்தது. இதனால் ஏற்றுமதிக்கும், இறக்குமதிக்கும் இடையிலான இடைவெளி தொடர்ந்து அதிகரித்துக் கொண்டிருக்கின்றது. ஏற்றுமதியினை விட இறக்குமதிக்கு மேலதிகமாக 3 பில்லியன் டொலர் தேவைப்படுகின்றது எனக் குறிப்பிடுகின்றது. இதனால் வர்த்தக நிலுவையானது குறைவடைந்து கொண்டு செல்வதால் நாணயமாற்று வீதப் பெறுமதிகளும் பெரும் பாதிப்பினை அடைகின்றன.

2019ஆம் ஆண்டு ஜனாதிபதி பதவியேற்றத்திற்குப் பின்பு அரசாங்கமானது வரியின் அளவினைக் குறைத்தமையானது இன்றைய பொருளாதார நெருக்கடிக்கு காரணமாக அமைந்துள்ளது எனவும் கூறப்படுகின்றது. இதனால் கிட்டத்தட்ட அரசாங்கத்தின் வருமானம் 1.4 பில்லியன் அளவினால் குறைவடைந்திருந்தது. இது அரசாங்கத்திற்கு பெரிய அளவிலான நெருக்கடியினை ஏற்படுத்தியிருந்தது. இது பணத்தினை அதிகளவு அச்சிடுவதற்கு காரணமாக அமைந்திருந்தது. இரசாயண உரங்களின் இறக்குமதியினை தடுத்து இயற்கை சேதனப் பசளையினை அறிமுகப்படுத்தியமையும் இலங்கையின் இன்றைய உணவு நெருக்கடி நிலைக்குக் காரணமாகும். 06.05.2021ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட அரசாங்கத்தின் வர்த்தமானிப் பத்திரிகையில் சகல அசேதன பசளையினையினையும் அரசாங்கம் தடை செய்திருந்தது.

பெரிய அளவில் சூழலுக்குப் பாதிப்பாக அசேதனப் பசளை காணப்படுகின்றது என்கின்ற அடிப்படையிலேதான் இந்த தடை விதிக்கப்பட்டிருந்தது. ஏனைய நாடுகளினை அவதானிக்கும் போது, குறிப்பாக கனடா, பாக்கிஸ்தான் மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகளில் அவர்கள் உற்பத்தி செய்கின்ற அல்லது பாவிக்கின்ற அதேனப் பசளை நமது நாடு பாவிக்கின்ற அளவிளை விடக் குறைவானதாகும். அதாவது ஏனைய நாடுகளை விட ஒப்பிட்டு ரீதியில் குறைந்தளவான அசேதனப் பசளையினையே இலங்கை நாடு பாவிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

அதேனப் பசளையினை இலங்கையில் தடை செய்தமையானது நெல் விளைச்சலினை 30 – 35 சதவீதத்தினால் குறைத்திருந்தது. தேயிலை விளைச்சலானது 50 சதவீமாக குறைவடைந்திருந்தது. சோள விளைச்சலானது 50 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது. இது கால்நடைகளுக்கான தீனி உற்பத்தியில் பாதிப்பினை ஏற்படுத்தியது மட்டுமல்லாமல் கால்நடைகள் சார்ந்த விளைச்சல்களுக்கு அதிக விலையேற்றத்தினையும் ஏற்படுத்தியுள்ளது. அதுமட்டுமல்லாது, உருளைக்கிழங்கு உற்பத்தியானது 30 – 50 சதவீதத்தினாலும் கரும்பு உற்பத்தியானது 30 – 40 சதவீதத்தினாலும் இலவங்கம்பட்டை உற்பத்தியானது 25 சதவீதத்தினாலும் வெற்றிலை உற்பத்தியானது 20 சதவீதத்தினாலும் தோட்டத்துறை மரக்கறிகள் 30 – 50 சதவீதத்தினாலும் மலர் வளர்பானது 100 சதவீதத்தினாலும் மற்றும் பாதுகாக்கப்பட்ட விவசாயமானது 100 சதவீதத்தினாலும் குறைவடைந்திருந்தன. அதுமட்டுமல்லாது, இலங்கையின் பொருட்கள் ஏற்றுமதியானது கடந்த 2020ஆம் ஆண்டு ஜுலை மாதம் வரையில் 5497.7 மில்லியன் US$ ஆகக் காணப்பட்டது.

## தீர்வுகள் / பரிந்துரைகள்

தீர்வுகள் என்ற அடிப்படையில் நோக்கும் போது சில அடிப்படையான அசேதனப் பசளைகளினை வழங்க வேண்டும். விவசாயிகளுக்குத் தேவையான எரிபொருட்களினை தங்கு தடையின்றி வழங்குதல் வேண்டும். அவர்களின் அறுவடைக்காக, அறுவடையினை விற்பனை செய்வதற்கு அதனை கொண்டு செல்வதற்கான போக்குவரத்து ஆகியவற்றிற்கு எரிபொருட்களானது மிகவும் அவசியமானதாகக் காணப்படுகின்றது. எனவே இதனை வழங்குவதற்கான ஒரு சரியான அமுலாக்கத்தினை மேற்கொள்ள வேண்டும். வெளிநாட்டு அந்நியச் சந்தையினை நாம் அதிகளவு பெற்றுக்கொள்ள வேண்டும் எனில், வெளிநாட்டு சந்தை வாய்ப்புக்களை உருவாக்கிக் கொள்ளுதல் வேண்டும். விதை உற்பத்திகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அத்துடன் அவரை இனம் சார்ந்த உற்பத்திகளை ஊக்குவிக்க வேண்டிதும் அவசியமாகின்றது. கால்நடைகளுக்குத் தேவையான மருந்துகள், கிருமிநாசினிகள் மற்றும்

களைநாசினிகள் போன்றவற்றை இறக்குமதி செய்வதற்கு அனுமதியளிக்க வேண்டும். அத்தோடு அதன் தரம் சரியான முறையில் பரிசோதிக்கப்பட வேண்டும். பயிர்ச்செய்கை செய்வதற்கான முறையான பயிற்சியினை விவசாயிகளுக்கு வழங்குதல் வேண்டும். விவசாயிகளுக்குரிய இலகுபடுத்தப்பட்ட கடன் வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும்.

உற்பத்திக்குப் பின்னரான தொடர்பாடல், அதாவது உற்பத்தியினை எங்கு விற்பனை செய்யலாம், எவ்வாறு விற்பனை செய்யலாம் என்பதையும் அறிமுகப்படுத்த வேண்டும். எதிர்பாராத இடர்கள் ஏற்படுகின்ற நிலையில் அதனை சமாளிக்கக்கூடிய கட்டமைப்பினை உருவாக்க வேண்டும். விவசாயம் சார்ந்த அறிவுப் பகிர்வு விரிவாக்கத்தினை ஏற்படுத்த வேண்டும். உள்நாட்டில் உற்பத்தி செய்கின்ற தன்மையினை அதிகரிக்க வேண்டும். பண்ணை உற்பத்திகள், அறுவடை சார்ந்த உற்பத்திகளினை மேற்கொள்ள வேண்டும். ஒரு பயிர் சார்ந்த உற்பத்தியில் சரியான இடத்தினை தெரிவு செய்ய வேண்டும். சரியான பயிரினை தெரிவு செய்ய வேண்டும். வீட்டுத் தோட்ட பயர்ச்செய்கையினையும் ஊக்குவிக்க வேண்டும். உற்பத்திக்குத் தேவையான விதைகள், நிலம், நீர் மற்றும் எரிபொருள் போன்ற உள்ளீடுகளைப் பற்றியும் ஒரு உற்பத்திச் செயற்பாட்டின் போது கவனம் செலுத்த வேண்டும்.

பெருமளவான உற்பத்தித் திட்டங்கள் வெற்றிகரமாக காணப்படாமைக்குக் காரணம் என்னவெனில் உற்பத்தி நிலையில் மட்டுமேதான் அதிகளவு கவனம் செலுத்தப்படும். ஆனால் உண்மையில் அதனை உற்பத்தி நிலையில் இருந்து நுகர்வோர் மட்டம் வரை கொண்டு செல்லுதல் வேண்டும். ஒரு பயிர்செய்கையினை தெரிவு செய்தால் அதனை எவ்வாறு அறுவடை செய்ய வேண்டும் எனவும் கவனம் செலுத்துதல் வேண்டும். இது அறுவடைக்குப் பின்னரான இழப்பினைக் குறைக்கும். உற்பத்திப் பொருட்களுக்கான பெறுமதியினை எப்படி சேர்க்கலாம் என்பது பற்றியும் கவனம் செலுத்துதல் வேண்டும். எப்படி உற்பத்திப் பொருளை நுகர்வோரை சென்றடையச் செய்வது என்பது பற்றியும் கவனம் செலுத்துதல் வேண்டும். நுகர்வோர் மட்டத்தில் அது சார்ந்த விழிப்புணர்வுகளை கொண்டுவர வேண்டும். இவ்வாறான விடயங்களை நாங்கள் மேற்கொள்ளும் நிலையில் எதிர்காலத்தில் இலங்கையில் ஏற்பட்டுள்ள உணவு நெருக்கடியில் இருந்து மீண்டெழ முடியும்.

## அத்தியாயம் 15

# இலங்கையின் பொருளாதார நெருக்கடி: பின்னணி, அண்மைக்கால அபிவிருத்திகள் மற்றும் மீட்சிக்கான பாதை

# Sri Lanka's Economic Crisis: Background, Recent Developments and Way Forward

**Dr. (Mrs.). S. Jegajeevan**
Additional Director,
Economic Research Department,
Central Bank of Sri Lanka.

(07.09.2022 அன்று நடைபெற்ற நிகழ்நிலைக் கருத்தரங்கின் தொகுப்பு)

## அறிமுகம்

இலங்கையின் பொருளாதார நெருக்கடி தொடர்பாக பொதுமக்கள் மத்தியில் பல்வேறு அபிப்பிராயங்கள் காணப்படுகின்றன. சில அபிப்பிராயங்கள் சரியானதாகவும் சில அபிப்பிராயங்கள் தவறானதாகவும் காணப்படுகின்றன. உண்மையில் என்ன நடந்தது என்பது தொடர்பாக பலருக்கு தெளிவில்லாமல் அல்லது பூரணமான தகவல்கள் இல்லாமல் இருக்கலாம். ஆகவே பொருளாதார நெருக்கடி எவ்வாறு உருவானது? அதன் பின்னணி என்ன? தற்போதைய நிலைமை எவ்வாறு காணப்படுகின்றது? எதிர்காலத்தில் இந்த பிரச்சினையில் இருந்து மீள்வதற்கு நாம் என்ன செய்யலாம்? என்பது தொடர்பான பல்வேறு விடயங்களைச் சுமந்ததாகவே இக்கட்டுரை அமைகின்றது. இலங்கையின் தற்கால பொருளாதார நெருக்கடி என்பது பல தசாப்தங்களாகவும் பல ஆண்டுகளாகவும் சிறிது சிறிதாக உருவாக்கப்பட்ட ஒரு பிரச்சினையாகவே காணப்படுகின்றது. பொதுமக்களைப் பொறுத்தவரையில் இவ்வாறானதொரு பொருளாதார நெருக்கடி இவ்வருட ஆரம்பத்தில் இருந்தே தெரிய வருகின்ற போதிலும் இந்த நெருக்கடிக்கான சூழ்நிலைகள் பல ஆண்டு காலமாகவே இலங்கையில் படிப்படியாக ஏற்பட்டு வந்தன என்பதனை தரவுகள் வெளிப்படுத்துகின்றன.

இலங்கையானது ஒரு இரட்டைப் பற்றாக்குறை நாடு (Twin Deficit Country) என்று சொல்லப்படுகின்றது. இலங்கையின் மிக முக்கியமான துறைகளான இறைத்துறையிலும் மற்றும் சென்மதி நிலுவையிலும் பெரும்பாலும் அனைத்து ஆண்டுகளிலுமே பற்றாக்குறை நிலைமையொன்றுதான் பதிவு செய்யப்பட்டு வந்துள்ளது. தரவுகளின் அடிப்படையில் நோக்கினால் 1950ஆம் ஆண்டில் இருந்து கடந்த ஆண்டு (2021) வரை அரசின் வரவுசெலவுத்திட்ட நிலுவை மற்றும் சென்மதி நிலுவையில் உள்ள நடைமுறைக்கணக்கு நிலுவை போன்றவை ஒரு

சில ஆண்டுகளைத் தவிர தொடர்ச்சியாக பற்றாக்குறையினை மாத்திரமே பதிவு செய்யப்பட்டு வந்துள்ளன. இவ்வாறாக அரசின் வரவு செலவுத்திட்டத்தினை எடுத்துக் கொள்வோமாக இருந்தால் அரசின் வருமானத்தினைவிட அரசின் செலவினமானது அதிகமாக காணப்பட்டதன் காரணமாக தொடர்ச்சியாக வரவுசெலவுத்திட்ட பற்றாக்குறை காணப்பட்டது. ஆகவே அவ்வாறு பற்றாக்குறை காணப்பட்டதனால் அதற்கு நிதியிடுவதற்கான தேவை காணப்பட்டது. அந்த நிதியானது கடன் மூலமாகவே எட்டப்படக்கூடியதாக இருந்தது. அவை உள்நாட்டு மூலங்களில் இருந்தும் நிதியிடப்படலாம் அல்லது வெளிநாட்டு மூலங்களில் இருந்தும் நிதியிடப்படலாம். இவ்வாறு வரவு செலவுப் பற்றாக்குறையை பூர்த்தி செய்வதற்காக இலங்கையானது தொடர்ச்சியாக கடன்களைப் பெற்றுக்கொள்ளத் தொடங்கியது. அவ்வாறு கடன்களைப் பெற்றுக்கொள்கின்ற போது அடுத்தடுத்த வருடங்களில் அந்தக் கடனிற்கான வட்டியையும் சேர்ந்து செலுத்த வேண்டியுள்ளதால் அரச செலவீனம் மேலும் அதிகரிக்கின்றது. இது மேலும் பற்றாக்குறையை ஏற்படுத்துகின்றது. அவ்வாறு தொடர்ச்சியாக பல்வேறு ஆண்டுகளாக பற்றாக்குறையை அதிகரித்ததன் மூலமாக வட்டிச் செலவினங்கள் அதிகரித்து தொடர்ச்சியாக இலங்கை வரவு செலவுத்திட்ட பற்றாக்குறையினை பூர்த்தி செய்வதற்காக கடனில் தங்கியிருக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.


அதேபோன்று சென்மதி நிலுவையினை நோக்குவோமாக இருந்தால், சென்மதி நிலுவையிலே நாட்டிற்கான வெளிநாட்டுச் செலாவணியின் உட்பாய்ச்சலுக்கும் வெளிப்பாய்ச்சலுக்குமான வேறுபாட்டினை நடைமுறைக்கணக்கு நிலுவை காண்பிக்கின்றது. இதில் பற்றாக்குறை ஏற்படுகின்ற போது அது கடன் மூலமாகவோ, நேரடி முதலீடுகள் மூலமாகவோ அல்லது சொத்துப்பட்டியல் முதலீடுகள் மூலமாகவோ பூர்த்தி செய்யப்படலாம். இலங்கையைப் பொறுத்தவரையிலே இலங்கையில் நேரடி வெளிநாட்டு முதலீடுகள் அவ்வளவு தூரத்திற்கு கவர்ச்சிகரமானதாக அமையவில்லை. மிகவும் தாழ்ந்த மட்டத்திலே காணப்படுவதன் காரணமாக தொடர்ச்சியாக சென்மதி நிலுவையின் பற்றாக்குறையினை பூர்த்தி செய்வதற்காக நாடு கடன்பெற வேண்டிய தேவை காணப்படுகின்றது.

**வரைபடம் 1: வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை மற்றும் வெளிநாட்டு நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை (மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக)**



அதேபோல அரசின் படுகடன் தொடர்பான பரிமாணங்களைப் பார்ப்போமானால், மத்திய அரசிற்கான படுகடன் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக 1980ஆம் ஆண்டுகளில் இருந்து தற்போது வரையிலே அதிகரித்த மட்டத்திலேயே தொடர்ந்தும் காணப்படுகின்றது. அண்மைய ஆண்டுகளில் இது மேலும் உயர்வடைந்துள்ளது. இதில் 40 தொடக்கம் 50 சதவீதமான பங்கு வெளிநாட்டிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட கடன்களாக காணப்படுகின்றன. அரசாங்கத்தின் படுகடனிலே சலுகை அடிப்படையிலான கடன்கள் மற்றும் சலுகை அல்லாத வர்த்தகக் கடன்கள் என்பன காணப்படுகின்றன. ஏறத்தாழ 2000ஆம் ஆண்டளவிலிருந்து இலங்கையானது ஒரு நடுத்தர வருமான மட்டத்திற்கு மாறியதன் பின்னர் சலுகை அடிப்படையிலே பெறப்படுகின்ற கடன்கள் குறைவடைந்ததன் காரணமாக இலங்கை வர்த்தக ரீதியான கடன்களில் தங்கியிருக்க வேண்டிய நிலைமையொன்று ஏற்பட்டுள்ளது. இந்த வர்த்தக ரீதியான கடன்களில் தங்கியிருக்கின்ற போது ஏற்படுகின்ற பிரச்சினையாக, வர்த்தக ரீதியான கடன்கள் சலுகைக் கடனுடன் ஒப்பிடும் போது அதிக வட்டி வீதங்களைக் கொண்டிருக்கும் அதேவேளை குறுங்கால முதிர்ச்சிக் காலத்தினையும் கொண்டிருக்கும். ஒரு சலுகை அடிப்படையிலான கடனானது பொதுவாக முப்பது வருடங்கள், இருபது வருடங்கள் அல்லது பத்து வருடங்களாகக் காணப்படுகின்ற பொழுது வர்த்தக அடிப்படையிலான கடன்கள் மூன்று வருடங்கள் அல்லது ஐந்து வருடங்களாகக் காணப்படுகின்றது. ஆகவே ஒவ்வொரு மூன்று வருடங்கள் அல்லது ஒவ்வொரு ஐந்து வருடங்களிலும் இந்தக் கடன்கள் முதிர்ச்சியடைகின்ற போது அதனை மீளச் செலுத்துவதற்காக மீண்டும் கடன் பெற வேண்டியதன் காரணமாக இலங்கையின் கடன் சுமையானது தொடர்ச்சியாக அதிகரித்துக் காணப்படுகின்றது.

**வரைபடம் 2: சலுகை ரீதியிலான எதிர் சலுகை ரீதியிலல்லாத மத்திய அரச படுகடன் (சதவீதப் பங்கு)**



அதேபோல் அரசாங்கமானது ஒவ்வொரு கடன்களின் முதிர்ச்சியிலும் அந்தக் கடன்களுக்கான மூலதனத்தை மாத்திரமல்லாது அதற்கான வட்டி கொடுப்பனவையும் மீளச்செலுத்துவதற்காக இன்னுமொரு கடனில் தங்கியிருக்க வேண்டியதனால் தொடர்ச்சியாக உயர்வடைந்து செல்கின்ற கடன் மட்டத்திற்கு இட்டுச்சென்று அதன் மூலம் ஒரு நீடித்து நிலைத்திருக்க முடியாத மாதிரியிலேயே இலங்கையின் கடன் அமைப்பானது காணப்பட்டு வந்துள்ளது. இலங்கையின் படுகடன் பணிக்கொடுப்பனவானது இரண்டாயிரம் ஆண்டுகளில் இருந்து மிக அதிகமாக அதிகரித்துள்ளது. இரண்டாயிரம் ஆண்டுகளில் இருந்து படிப்படியாக இந்த வெளிநாட்டு படுகடன்கள் அதிகரித்தது மாத்திரமல்லாது நாட்டின் மொத்த அலுவல்சார் ஒதுக்குகளில் பெரும்பாலானவை கடனினால் உருவானவையாகக் காணப்படுகின்றது. மத்திய வங்கியானது சந்தையில் இருந்து வெளிநாட்டுச் செலாவணியினை கொள்வனவு செய்வதன் மூலம் இந்த ஒதுக்குகளானது கட்டியெழுப்பப்படுமாக இருந்தால் அது ஒரு ஆரோக்கியமான ஒதுக்கு நிலைமையாகக் காணப்படும். அவ்வாறு இல்லாமல் இந்த ஒதுக்கு நிலைமை ஒரு கடனில் கட்டியெழுப்பப்படுமாக இருந்தால் அந்தக் கடன் முதிர்ச்சியடையும் போது புதிதாக கடன்பெற முடியாத நிலைமையிலே அலுவல்சார் ஒதுக்குகளில் இருந்து கடனை மீளச்செலுத்த வேண்டிய தேவை காணப்படுவதனால் அது ஒரு நீடித்து நிலைத்திருக்க முடியாத நிலைமையொன்றாகவும் ஆரோக்கியமற்றதாகவும் காணப்படும்.

அதேபோன்று அரசாங்கத்தின் வருமானத்தில் எத்தனை சதவீதம் வட்டிக்காக செலவிடப்படுகின்றது என்பதனைப் பார்த்தால் அண்மைய ஆண்டுகளில் இது 40 சதவீதங்களில் காணப்பட்டதைப் போல கடந்த இரண்டு ஆண்டுகளில், 2019ஆம் ஆண்டில் இருந்து இது மிக உயர்வாகக் காணப்பட்டு அரசாங்க வருமானத்தில் 72 சதவீத வருமானம் வட்டிக்காக செலவிடப்பட்டிருந்தது. இதனால் இலங்கையின் இறைச்சுமை அல்லது கடன்சுமையானது படிப்படியாக அதிகரித்து வந்துள்ளது. அதேபோல அரசாங்கத்தின் இறைச்செயற்பாட்டினை நோக்குவோமாக இருந்தால் முக்கியமாக அரசாங்கத்தின் வருமானம் மற்றும் அரசாங்கத்திற்கான செலவினம் பற்றி அறியக்கூடியதாக இருக்கும். இலங்கையினைப் பொறுத்தவரையில் செலவினத்தை விட அரைவாசியாகவே வருமானம் காணப்படுகின்றது. ஆகவே அந்த அரைவாசியும் கடனாக மாறும். அந்தக் கடனானது மீண்டும் கடனாக மாறும். அதற்குரிய வட்டிச்செலவுகளும் அதிகரிக்கும். அரசாங்கத்தின் வருவாயானது 1990களில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஏறத்தாழ 20 அல்லது 21 சதவீதத்தில் இருந்து அண்மைக்காலங்களில் மிக மோசமாகக் குறைவடைந்து 2021இல் 8 சதவீதமாக மாத்திரமே காணப்பட்டது. அதேபோன்று செலவினத்தை நோக்குவோமாக இருந்தால் செலவினமும் படிப்படியான குறைவினைக் காட்டிய போதிலும் அது இன்னமும் ஏறத்தாழ மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 20 சதவீதமாக மாத்திரமே காணப்படுகின்றது. ஆகவே வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையானது மிக அதிகமாக ஏறத்தாழ 11 சதவீதமாக அல்லது 12 சதவீதமாகக் காணப்பட்டதனால் வரவு செலவுத்

திட்ட பற்றாக்குறையானது தொடர்ச்சியான பிரச்சினைகளுக்கு வழிவகுத்தது.


அதேபோல் இறைத்துறை தொடர்பான மற்றுமொரு மிக முக்கிய பிரச்சினையாகக் காணப்படுவது, தொடர்ச்சியாக நட்டத்தில் இயங்குகின்ற அரசிற்குச் சொந்தமான தொழில் முயற்சிகளானது இலங்கையைப் பொறுத்த வரையிலே மிக அளவுக்கு அதிகமாக காணப்படுகின்றன. பொதுவாக ஒரு நாட்டிலே அரசாங்கத்தின் பிரசன்னம் என்பது முக்கியமானதாகக் காணப்படுகிறது. பொதுப்பண்டத்தினை வழங்குவதில் தனியார் துறை ஈடுபடாததன் காரணமாக பொதுப்பண்டத்தினை வழங்குவதற்கு அரசாங்கத்தின் தேவை காணப்படும். அதேபோன்று ஒரு நாட்டிற்கு மிகவும் அத்தியாவசியமான, தந்துரோபாயமான விடயங்கள் அல்லது ஒரு நாடு கட்டாயமாக தங்கியிருக்க வேண்டிய விடயங்களில் அரசின் பங்களிப்பு காணப்படலாம். ஆனால் இலங்கையைப் பொறுத்தவரையிலே அவசியமற்ற விடயங்களில் எல்லாம் அரசின் பிரசன்னம் காணப்படுகின்றது.

பொதுவாக் தனியார் துறையுடன் ஒப்பிடும் போது அரசாங்கத் துறையிலே வினைத்திறன் மற்றும் உற்பத்தித் திறனானது குறைவாகக் காணப்படுவதன் காரணமாக அரசாங்க நிறுவனங்களில் இருந்தும் அரசாங்கத்திற்கு சொந்தமான தொழில் முயற்சிகளில் இருந்தும் அரசாங்கத்திற்கு கிடைக்கவேண்டிய இலாபங்கள் இல்லாமல் போகின்றது. தொடர்ச்சியாக அதிகமான முக்கிய தொழில் முயற்சிகள் நட்டத்திலேயே இயங்கி வந்திருக்கின்றன. குறிப்பாக 2005ஆம் ஆண்டில் இருந்து இதுவரையில் முக்கியமான தொழில் முயற்சிகளான இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், இலங்கை மின்சார சபை மற்றும் ஸ்ரீலங்கா எயார்லைன்ஸ் போன்றவற்றின் நட்டங்கள் தொடர்ச்சியாக அதிகரிக்கப்பட்டு வந்துள்ளன. அந்தவகையில் கடந்த ஒரு தசாப்தத்தில் அதாவது 2010ஆம் ஆண்டிலிருந்து 2021ஆம் ஆண்டிலே இலங்கையில் பல்வேறு அரச நிறுவனங்கள் காணப்படுகின்ற போதும் இந்த மூன்று நிறுவனங்களினால் மாத்திரம் 1 ரில்லியன் ரூபா நட்டம் உருவாக்கப்பட்டிருக்கின்றது. இது மிக மோசமான அரசிற்கான சுமையாகக் காணப்படுகின்றது.

அரசின் இறைத்தொழிற்பாட்டினைப் போன்று நாட்டின் வெளிநாட்டுத் துறையினைப் பார்த்தால் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக ஏற்றுமதி வருவாயானது தொடர்ச்சியாகக் குறைவடைந்து வந்துள்ளது. இதேமாதிரியான ஒரு நிலைமை இறக்குமதிக்கு வந்தபோதிலும் இறக்குமதிக்கும் ஏற்றுமதிக்கும் இடையிலான இடைவெளியானது தொடர்ச்சியாக அதிகமாகவே காணப்பட்டது. ஏறத்தாழ மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 10 சதவீதத்திற்கு வர்த்தக இடைவெளி அல்லது வர்த்தகப் பற்றாக்குறையானது தொடர்ச்சியாகக் காணப்பட்டது. ஏறத்தாழ 2010ஆம் ஆண்டு காலப்பகுயில் இருந்து வர்த்தகப்

பற்றாக்குறையானது மிகமோசமாக அதிகரித்துள்ளமையை காணக்கூடியதாக இருக்கின்றது. இவ்வாறு மிக மோசமாக வர்த்தகப் பற்றாக்குறை அதிகரிக்கும்பொழுது, வர்த்தகப் பற்றாக்குறையில் ஏற்றுமதியினை விட இறக்குமதி அதிகமாகக் காணப்படுகின்ற போது இந்த இரண்டுக்கும் இடையில் உள்ள வெளிநாட்டுச் செலாவணிக்கான இடைவெளியினை நிரப்புவதற்கு வேறு மூலங்களிலிருந்து செலாவணியினைப் பெற்றுக்கொள்ள வேண்டிய தேவை ஏற்படுகின்றது. இலங்கையைப் பொறுத்த வரையில் சுற்றுலா மீதான வருவாய் மற்றும் ஏனைய பணிகள் தொடர்பான அல்லது சேவைகள் தொடர்பான ஏற்றுமதிகளின் வருமானங்கள், தொழிலாளர்கள் பணவனுப்புதல்கள் என்பன இலங்கைக்கு வெளிநாட்டுச் செலாவணியினை ஈட்டித் தருகின்ற மிக முக்கியமான துறைகளாகக் காணப்படுகின்றன. ஆகவே இந்த இரண்டு துறைகளிலும் இருந்து பெறுகின்ற வருமானத்தை வர்த்தகப் பற்றாக்குறையினைப் பூர்த்தி செய்வதற்காக பயன்படுத்த வேண்டிய தேவையொன்று காணப்படுகின்றது. அவ்வாறு பூர்த்தி செய்வதற்காக பயன்படுத்திய பின்னரும் மேலும் தேவைப்பாடு எழுமாயின் அது சென்மதி நிலுவையில் உள்ள நடைமுறைக்கணக்கில் பற்றாக்குறையினை உருவாக்கும்.

**வரைபடம் 3: வர்த்தகப் பற்றாக்குறை (1991-2021)**




அவ்வாறாக உருவாக்கப்படுகின்ற நடைமுறைக் கணக்கானது இலங்கையைப் பொறுத்த வரையிலே வரலாற்று ரீதியாக எவ்வாறாக நிதியிடப்பட்டது என்பதனைப் பார்ப்போமாக இருந்தால் சென்மதி நிலுவையில் காணப்படும் இரண்டு முக்கியமான கணக்குகளான நடைமுறைக் கணக்கு மற்றும் நிதிக்கணக்கு என்பவற்றில் நடைமுறைக் கணக்கிலே பற்றாக்குறை ஏற்படுகின்ற பொழுது அது நிதிக்கணக்கின் ஊடாக பூர்த்தி செய்யப்பட வேண்டிய தேவை காணப்படுகின்றது. நிதிக்கணக்கிலே மிகமுக்கியமாக இரண்டு அல்லது மூன்று கூறுகள் காணப்படலாம். வெளிநாட்டு நேரடி முதலீடுகள் அதேபோல பங்குசந்தை போன்ற சொத்துப்பட்டியல் முதலீடு காணப்படலாம். அல்லது கடனின் மூலமாக நடைமுறைக் கணக்கு பற்றாக்குறையானது பூர்த்தி செய்யப்படலாம். வெளிநாட்டு நேரடி முதலீட்டின் ஊடாக அது பூர்த்தி

செய்யப்படுமாக இருந்தால் அதிலிருந்து உருவாகப்படுகின்ற பொருளாதார சிக்கல்கள் குறைவாக இருப்பினும் வெளிநாட்டு நேரடி முதலீடானது பொருளாதாரத்தில் பல்வேறு நன்மைகளை உருவாக்கும். அவ்வாறு அல்லாமல் கடன்களின் மூலமாக இந்த நடைமுறைக் கணக்கு பற்றாக்குறை பூர்த்தி செய்யப்படுமாக இருந்தால் அது மேலதிகமாக வெளிநாட்டு கடனை அதிகரித்து புதிதாக கடன் சுமையினை ஏற்படுத்தும். அவ்வாறு கடனினாலும் நேரடி முதலீட்டினாலும் பூர்த்திசெய்ய முடியாதவிடத்து நடைமுறைக் கணக்கில் ஏற்படுகின்ற மீதியாக உள்ள தொகையினைப் பூர்த்தி செய்வதற்கு மொத்த அலுவல்சார் ஒதுக்கினை குறைக்க வேண்டிய தேவை காணப்படுகின்றது. அவ்வாறான நிலைமைதான் மிக அண்மைக் காலத்திலே ஏற்பட்டது.

இவ்வாறாக அரசின் இறைத்துறையிலும் வெளிநாட்டுத் துறையிலும் தொடர்ச்சியாக அதிகரித்து வந்த சிக்கல்கள் எவ்வாறான பிரச்சினைகளை பொருளாதாரத்தில் உருவாகியது என்பதனைப் பார்ப்போமாயின், பொருளாதாரச் சிக்கல்கள் படிப்படியாக இறுக்கமடையும்போது அதிலிருந்து மீண்டு வருவதற்கு ஒரு நாட்டிற்கு பல்வேறு சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றன. பன்னாட்டு நாணய நிதியத்தினை பொறுத்த வரையிலே ஒரு நாடானது சென்மதி நிலுவை தொடர்பான பிரச்சினை ஒன்றினை எதிர்கொள்ளும் போது அதிலிருந்து அங்கத்துவ நாடொன்றினை மீட்பதற்கு பன்னாட்டு நாணய நிதியத்திற்கு ஒரு கடப்பாடு காணப்படுகின்றது. அந்த அடிப்படையிலே இலங்கையும் கடந்த காலங்களிலே 16 தடவைகள் பன்னாட்டு நாணய நிதியத்திடமிருந்து கடன் வசதிகளை பெற்றுக்கொண்டுள்ளது. ஒரு வங்கிக் கடனை அல்லது ஒரு வர்த்தகக் கடனை விட இந்த நாணய நிதியத்திடமிருந்து பெறப்படுகின்ற கடன்களில் வேறுபாடு காணப்படுகின்றது. பன்னாட்டு நிதியத்திடமிருந்து கடன் பெறுகின்ற பொழுது பன்னாட்டு நாணய நிதியமானது அந்த நாடு மீண்டும் அதே மாதிரியான சென்மதி நிலுவை பிரச்சினைக்குள் போகாமல் இருப்பதற்காக நாட்டினை தயார்படுத்த வேண்டிய ஒரு நிபந்தனையினை விதிக்கின்றது. அவ்வாறு நிபந்தனைகளுக்கு உட்பட்டு சில பொருளாதார சீர்திருத்தங்களை உருவாக்கினால் மாத்திரமே அல்லது அவ்வாறான நிபந்தனைகள் பூர்த்திசெய்யப்பட்டால் மாத்திரமே அந்த நாட்டுக்கான கடனானது படிப்படியாக வழங்கப்படும். அந்த அடிப்படையில் இந்த 16 முறைகளிலும் இலங்கையானது பல்வேறு ஆண்டுகளிலே பல்வேறு தடவைகளில் இந்தப் பிரச்சினைகளில் இருந்து மீள்வதற்கு முயற்சி செய்திருக்கின்றது. இருந்தபோதிலும் அநேகமான காலப்பகுதியிலே பன்னாட்டு நாணய நிதியத்துடனான கடன் வசதியானது நிபந்தனைகளை பூர்த்தி செய்யப்படாமையினால் அல்லது வேறு காரணங்களினால் இடைநிறுத்தப்பட்டிருக்கின்றது. கடனிற்கான காலம் பொதுவாக நாணய நிதியத்திடமிருந்து கடன் பெறுகின்ற போது மூன்று அல்லது நான்கு வருடங்கள் கடனாக வழங்கப்படுகின்றது. அந்த மூன்று அல்லது நான்கு வருடங்களிலே சீர்திருத்தங்களை செய்து நிபந்தனைகளைப் பூர்த்தி செய்து அதற்கான பணத்தினை பெற்ற பின்னர் மீண்டும் அந்த

சீர்திருத்தங்களை மறுதலிக்கின்ற நிலைமையொன்று இலங்கையிலே அதிகமாக காணப்பட்டதன் காரணமாக இந்த சிக்கலில் இருந்து இலங்கையினால் மீண்டுவர முடியவில்லை.

வரலாற்று ரீதியாக இலங்கையினுடைய பொருளாதார நிலைமையினைப் நோக்குகின்ற போது, இந்தப் பிரச்சினையானது பல தசாப்தங்களாக இருந்திருக்கின்றது. ஆனால் அது ஏன் 2022 இல் மாத்திரம் ஒரு பொருளாதார நெருக்கடிக்கு இட்டுச் சென்றது? ஏன் இது 2015ஆம் ஆண்டில் நடைபெறவில்லை? அல்லது 2000ஆம் ஆண்டில் நடைபெறவில்லை? இலங்கையைப் பொறுத்தவரை கடந்தகாலத்தில் இருந்தது போல தொடர்ச்சியாக இலங்கையினால் கடன்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய நிலைமை இருந்திருந்தால் சிலவேளைகளில் பொருளாதார சிக்கலானது பிற்போடப்பட்டிருக்கும் அல்லது இலங்கையானது நெருக்கடிக்கு தள்ளப்பட்டுக் கொண்டிருக்கின்றது என்பதனையுணர்ந்து அரசாங்கமானது அதிலிருந்து விடுபடுவதற்காக சீர்திருத்த நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்குமாக இருந்தால் இந்த பிரச்சினையிலிருந்து படிப்படியாக மீண்டு வந்திருக்கலாம். ஆனால் இலங்கையைப் பொறுத்தவரையிலே இந்த இரண்டுமே நடைபெறவில்லை. ஆகவேதான் 2022இல் இலங்கை மிகத் தீவிரமானதொரு நெருக்கடியினை சந்தித்துள்ளது.

## தற்போதைய பொருளாதார நெருக்கடியினைத் தூண்டியவை எவை?

இலங்கையினைப் பொறுத்தவரையில் ஏற்கனவே பொருளாதார ரீதியான பிரச்சினைகள் இருந்துள்ளதுடன், இலங்கையின் பொருளாதார நிலைப்பாடுகள் படிப்படியாக மோசமடைந்து வந்திருக்கின்றன. இந்த நிலைமையிலே புதிதாக சிக்கல்கள் உருவாகின்ற போது இலங்கையினால் அதனை சமாளிக்க முடியாத நிலைமை ஏற்பட்டது. தற்போதைய பொருளாதார சிக்கலிற்கு பங்களிப்புச் செய்த காரணிகளில் ஒன்றாகக் காணப்படுவது அரசாங்கத்தினால் 2019ஆம் ஆண்டிலே மேற்கொள்ளப்பட்ட வரி சீர்திருத்தமாகும். 2019ஆம் ஆண்டில் அனைவராலும் வரவேற்கப்பட்ட ஒரு விடயமாக இவ்விடயம் காணப்படுகின்றது. வரிச் சீர்திருத்தமானது செய்யப்படும் பொழுது இருந்த எதிர்பார்ப்பு வேறாக இருந்தது. அதாவது அரசாங்கமானது வரி வீதத்தினைக் குறைத்து அதன் மூலமாக பொருளாதார செயற்பாடுகளை அதிகரித்து அதாவது பொருளாதாரத்தின் அளவினை அதிகரித்து வரி வீதத்தினைக் குறைத்து வரி வருமானத்தை அதிகரிக்க முடியும் என்ற கொள்கையிலே இருந்தது. ஆனால் 2020ஆம் ஆண்டிலிருந்து கொரோனா பரவியதன் காரணமாக பொருளாதாரத்திலே சுருக்கம் ஒன்று இடம்பெற்று பொருளாதார செயற்பாடுகள் முழுதாக இடம்பெறாததன் காரணமாக வரி வீதத்தில் சுருக்கம் ஏற்பட்ட வேளையில் வரித்தளத்திலும் சுருக்கம் ஏற்பட்ட போது இலங்கை அரசாங்கத்தின் வரி வருமானமானது மிக மோசமாகப் பாதிக்கப்பட்டது.

அந்த அடிப்படையிலே கடந்த 2017 - 2019ஆம் ஆண்டுகளில் ஏறத்தாழ மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 12 சதவீதமாகக் காணப்பட்ட அரசாங்கத்தின் வருமானமானது மிக மோசமாக 8.2 வீதத்திற்குக் குறைவடைந்தது. இது மாத்திரமல்லாமல் அரசாங்கமானது ஒரு கொள்கையாக வெளிநாட்டில் இருந்து பெறப்படுகின்ற கடனைக் குறைப்பது என்ற ஒரு நிலைப்பாட்டிற்கு வந்தது. அது ஒரு வரவேற்கத்தக்க விடயமாகக் காணப்பட்ட போதிலும் அதற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட காலமானது ஒரு சிக்கலாகக் காணப்பட்டது. படிப்படியாக வெளிநாட்டில் இருந்து பெறப்படுகின்ற கடன்களைக் குறைக்கலாம் அல்லது வெளிநாட்டிலிருந்து செயற்றிட்ட கடன்கள் பெறப்படுவதைக் குறைத்து உள்நாட்டு உற்பத்தியாளர்களை ஊக்குவித்து செயற்றிட்டங்களை மேற்கொள்வதனை படிப்படியாக நடைமுறைப்படுத்தியிருந்தால் படிப்படியாக நாடு வெளிநாட்டு கடனில் தங்கியிருப்பது குறைவடைந்திருக்கும். ஆனால் திடீரென்று மேற்கொள்ளப்பட்ட இந்த இரண்டு விடயங்கள் பல்வேறு சிக்கல்களை உருவாக்கின. வருமானம் குறைவடைந்ததன் காரணமாக செலவினங்கள் அதிகரித்தது. கொவிட்-19 காரணமாக அரசாங்கத்தின் செலவு மேலும் கூடியது எனலாம். இதனால் வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையானது மிக மோசமாக அதிகரித்தது.

அதேபோன்று தரவுகளின் அடிப்படையில் பார்த்தால், உள்நாட்டு மூலத்தில் இருந்து வரவு செலவுத்திட்ட பற்றாக்குறையானது முழுமையாக நிதியிடப்பட்டிருக்கின்றது. அதுமாத்திரமல்லாமல் ஏற்கனவே வெளிநாட்டிலிருந்து பெறப்பட்ட கடனினை பூர்த்திசெய்வதற்கும் உள்நாட்டில் இருந்தே கடன் பெற வேண்டிய தேவை காணப்பட்டது. இலங்கையைப் பொறுத்த வரையிலே உள்நாட்டு நிதியிடல் மூலங்கள் அவ்வளவு விரிவானதாகக் காணப்படுவதில்லை. ஆகவே அரசாங்கமானது பெருமளவில் அரசாங்கத்திற்குச் சொந்தமான அரச வங்கிகளிலும் மத்திய வங்கியிலுமே தங்கியிருக்க வேண்டிய தேவையொன்று காணப்பட்டது. ஆகவே கொவிட்-19 காலப்பகுதியிலே மேலும் சிக்கலின்றி பொருளாதாரம் தொடர்ந்து செல்ல வேண்டும் என்பதற்காக மத்திய வங்கியானது தொடர்ச்சியாக அரசாங்கத்திற்கு நிதியினை வழங்க வேண்டிய தேவை காணப்பட்டதனால் மத்திய வங்கியின் திறைசேரி உண்டியல்கள் மீதான கொள்வனவுகள் மிக அதிகமாகக் காணப்பட்டது. இதனை நாணய நிதியிடல் என்று சொல்வார்கள். பொதுவாக மத்திய வங்கியினால் வரவு செலவுத்திட்ட பற்றாக்குறையானது நிதியிடப்படும் போது அது புதிதாக பணத்தினை உருவாக்கி பொருளாதாரத்தில் வழங்குவதன் காரணமாக அது பொருளாதாரத்திலே கேள்வித்தூண்டல் பணவீக்க அழுத்தங்களை உருவாக்கும்.

அதேபோன்று வெளிநாட்டு செலாவணியின் உட்பாய்ச்சல்களை நோக்கினால், கடந்த ஆண்டுகளிலே நடைமுறைக் கணக்கானது

எவ்வாறு நிதியிடப்பட்டது என்பதனைக் காணலாம். நடைமுறைக் கணக்கு பற்றாக்குறையினைப் பூர்த்தி செய்வதற்கு இரண்டு கூறுகள் மிக முக்கியமாகக் காணப்படுகின்றது. சுற்றுலாத் துறையினரின் வருகை, தொழிலாளர் பணவனுப்புதல்கள், உயிர்த்த ஞாயிறு தாக்குதல் மற்றும் கொவிட் தொற்றுப் பரவலின் பின்னர் சுற்றுலாத்துறையானது மிக மோசமாக பாதிப்படைந்ததன் காரணமாக பொருளாதாரத்திற்கு கிடைக்கப்பெற்ற சுற்றுலாவில் இருந்து வருகின்ற வெளிநாட்டுச் செலாவணி குறைவடைந்துள்ளது. அதேபோன்று தொழிலாளர்களின் பணவனுப்புதல்களிலும் 2020ஆம் ஆண்டில் ஒரு வளர்ச்சி காணப்பட்ட போதிலும் 2021ஆம் ஆண்டிலே வீழ்ச்சியொன்று காணப்பட்டது. ஆனால் வர்த்தகப் பற்றாக்குறையினை நோக்குவோமாக இருந்தால் 2020ஆம் ஆண்டிலே ஒரு குறைவு காணப்பட்ட போதிலும் 2021ஆம் ஆண்டிலே வர்த்தகப் பற்றாக்குறையானது விரிவடைந்தது. ஆகவே இந்த விரிவடைந்த வர்த்தகப் பற்றாக்குறையினைப் பூர்த்தி செய்வதற்கு சுற்றுலாவிலிருந்தும் தொழிலாளர் பணவனுப்புதல்களிலிருந்தும் பெறப்பட்ட வெளிநாட்டுச் செலாவணி போதுமானளவில் காணப்படவில்லை. இதன் காரணமாக நடைமுறைப் பற்றாக்குறை அதிகரித்தது. நடைமுறைப் பற்றாக்குறை அதிகரிக்கும் போது அதனை நிதியிடுவதற்கு வெளிநாட்டு நேரடி முதலீடுகளைப் பெற்றுக்கொள்ளலாம் அல்லது கடன்களைப் பெற்றுக்கொள்ளலாம். இலங்கையைப் பொறுத்த வரையிலே வெளிநாட்டு நேரடி முதலீட்டில் ஏற்கனவே காணப்பட்ட குறைவு கொவிட் காலத்தின் பின்னர் இன்னும் மிக மோசமாக மாறியது. அதேபோன்று இந்தக் கடன்களைப் பெற்றுக் கொள்வதற்கான சாதகமான நிலைமையும் இலங்கையில் காணப்படவில்லை என்பதனால் கடனினை மீளச் செலுத்துவதற்காகவும் நடைமுறைக் கணக்கின் பற்றாக்குறையினை பூர்த்தி செய்வதற்காகவும் மொத்த அலுவல்சார் ஒதுக்கில் இருந்து பணத்தினை எடுக்க வேண்டிய தேவையும் காணப்பட்டதன் காரணமாக மொத்த அலுவல்சார் ஒதுக்கு குறைவடையத் தொடங்கியது.

கடந்த மூன்று ஆண்டுகளாக மொத்த அலுவல்சார் ஒதுக்குகளில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டது. 2019ஆம் ஆண்டின் இறுதியில் ஏறத்தாழ 7.6 ஐ.அ.டொலர் பில்லியனாகக் காணப்பட்ட மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் கடன் மீள்செலுத்தலின் காரணமாக மற்றும் தேவையான வெளிநாட்டு உட்பாய்ச்சல்கள் காணப்படாததன் காரணமாக அல்லது புதிதாக வெளிநாட்டு கடன்கள் உருவாகாமல் இருந்ததன் காரணமாக தொடர்ச்சியாக குறைவடைந்து தற்பொழுது 1.8 பில்லியன் ஐக்கிய ஐ.அ.டொலராக மாத்திரமே காணப்படுகின்றது.

இலங்கைக்காக நாட்டிற்கான தரமிடல் நிறுவனங்கள் மூன்று காணப்படுகின்றன. அந்தத் தரமிடல் நிறுவனங்கள் ஒரு நாட்டிலே முதலீடு செய்வது பாதுகாப்பானதா? என்பது தொடர்பாக ஒரு தகவலை வழங்குகின்ற தொழிலைச் செய்கின்றன. ஆகவே இலங்கைக்கு கடன்

வழங்குவதற்கு தயாராக இருக்கின்ற முதலீட்டாளர்கள் இலங்கை நாட்டினுடைய தரமிடல்கள் எவ்வாறு இருக்கும் என்பது பற்றி அக்கறை செலுத்துவார்கள். ஆகவே ஒரு நாடானது வெளிநாட்டு சந்தையிலே தனக்கான கடனினை பெற்றுக்கொள்ள வேண்டிய தேவை இருக்கும் போது அந்த நாட்டிற்கான தரமிடலை ஒரு உன்னதமான நிலையிலே பேண வேண்டிய தேவை காணப்படுகின்றது. இலங்கையைப் பொறுத்தவரையில் இறைத்துறை மற்றும் வெளிநாட்டுத் துறையிலே கடந்த இரண்டு வருடங்களிலே ஏற்பட்ட மிக மோசமான பின்னடைவின் காரணமாக இந்தத் தரமிடலானது படிப்படியாக குறைக்கப்பட்டு தற்பொழுது கடனை மீளச் செலுத்த முடியாத நாடு என்ற அடிப்படையிலே இலங்கை அடையாளங் காணப்பட்டிருக்கின்றது. இவ்வாறு தரமிடல் குறைகின்ற போது இலங்கைக்கு புதிதாக கடன் தருவதற்கு யாரும் தயாராக இருக்கமாட்டார்கள். ஆகவே நாட்டுக்கான பன்னாட்டு நிதியினை வெளிநாட்டுச் சந்தையிலே வழங்குவதற்கு இலங்கையினால் முடியாமல் போயுள்ளது.

மேற்குறிப்பிட்டதைப் போன்று ஒவ்வொரு வருடத்திலும் ஒரு குறிப்பிட்ட தொகையானது கடனாக முதிர்வடைந்து மீளச்செலுத்தப்பட வேண்டிய தேவை காணப்படுகின்றது. அதனை செலுத்துவதற்கான வழமையான தந்திரோபாயமாக, முதிர்ச்சியடைகின்ற காலப்பகுதியிலே அதே தொகைக்கு புதிதாக கடன் ஒன்று வழங்கப்பட்டதன் காரணமாக இவ்வளவு ஆண்டுகளிலும் தொடர்ச்சியாக அதனைக் கொண்டு செல்லக் கூடியதாக இருந்தது. ஆனால் இந்தத்தரமிடலில் ஏற்பட்ட வீழ்ச்சியின் காரணமாக புதிதாக கடன்பெற முடியாத நிலைமை காணப்பட்டது. ஆகவே கடனைத் தொடர்ச்சியாக செலுத்த வேண்டியதன் காரணத்தினால் அதற்காக பன்னாட்டு ஒதுக்குகள் பயன்படுத்தப்பட்டன. அதேவேளை ஒரு நாட்டிற்கான தரமிடல்கள் குறைவடைகின்ற போது அந்த நாட்டில் உள்ள அனைத்து நிறுவனங்களையும் தனிநபர்களையும் அது பாதிக்கும். இதனால் வங்கிகள் வேறு வங்கிகளிடம் இருந்து அல்லது வேறு பங்காளர்களிடம் இருந்து கடன்களைப் பெற்றுக்கொள்வதில் சிக்கல் ஏற்பட்டது. அதேபோல இலங்கையில் உள்ள தனியார் நிறுவனங்கள் வெளிநாட்டில் இருந்து கடன் பெறுவதிலும் சிக்கல்கள் ஏற்பட்டது. நாட்டிற்கான தரமிடல்கள் குறைக்கப்படுகின்ற போது அந்த நாட்டில் உள்ள தனியார் நிறுவனங்கள் மற்றும் வங்கிகளின் தரமிடல்களும் படிப்படியாகக் குறைக்கப்படும். அவ்வாறு குறைக்கப்படுகின்ற போது வங்கித் துறைக்கும் தனியார் துறைக்கும் வழமையாகக் கிடைக்கக் கூடிய கடனும் இல்லாமல் போகும். இதன்காரணமாக நாட்டிற்கு வழமையாகக் கிடைக்கக் கூடியதாக இருந்த வெளிநாட்டு செலாவணியின் கிடைப்பனவானது இல்லாமல் போயுள்ளது.

இதன் காரணமாக முக்கியமான இறக்குமதிகளுக்காக அல்லது தொடர்ச்சியான இறக்குமதிகளுக்காக வெளிநாட்டுச் செலாவணியின் தேவை காணப்பட்டது. அதேபோல ஏற்கனவே வெளிநாட்டுச்

செலாவணியை உழைப்பவர்கள் உதாரணமாக, ஏற்றுமதியாளராக இருக்கலாம் அல்லது இலங்கையில் உள்ள தொழிலாளர் பணம் அனுப்புதல்களை பெற்றுக்கொள்கின்ற இலங்கையிலுள்ளவர்களாக இருக்கலாம். அவர்கள் தங்களிடமுள்ள வெளிநாட்டுச் செலாவணியினை இலங்கை ரூபாவாக மாற்றிக்கொள்வதில் அக்கறையில்லாமல் இருந்தனர். ஏனெனில் இவ்வாறான நிலைமையொன்று காணப்படுகின்ற போது செலாவணி வீதமானது தேய்வடையும். ஆகவே தேய்வடைந்த பின்னர் அதனை மாற்றுவார்களாக இருந்தால் அவர்களுக்கு அதிகமாக இலாபம் கிடைக்கும் என்பதன் காரணமாக தங்களிடம் ஏற்கனவே இருந்த அந்த வெளிநாட்டுச் செலாவணியினை மாற்றுவதனை தாமதப்படுத்தினர். இவ்வாறாக இந்த வெளிநாட்டுச் செலாவணியின் நிரம்பலானது குறைவடைந்த போதும் கேள்வியில் மாற்றம் இருக்கவில்லை. ஆகவே கேள்வி மாறாமல் இருக்கும் போது நிரம்பலானது குறைவடையும் போது அந்த பொருளுக்கான விலையானது அதிகரிக்கும். ஆகவே இலங்கையின் செலாவணி வீதத்திற்கு அழுத்தமொன்று உருவாகத் தொடங்கியது.

செலாவணி வீதத்தினை நோக்குவோமாக இருந்தால் 2021ஆம் ஆண்டின் பெரும்பகுதியிலும் 2022ஆம் ஆண்டின் ஆரம்பப் பகுதியிலும் மத்திய வங்கியானது ஒரு தார்மீகக் கடப்பாட்டின் அடிப்படையிலே வங்கிகளுடன் இணக்கப்பாட்டினை ஏற்படுத்தி செலாவணி வீதத்தினை நிலையான மட்டத்திலே பேணுவதற்கான முயற்சியிலே ஈடுபட்டிருந்தது. செலாவணி வீதத்தினை ரூபா 200 - 203இற்கு இடையிலே பேணுவதற்கான முயற்சியிலே ஈடுபட்டிருந்தது. இருந்தபோதிலும் தொடர்ச்சியான செலாவணி வீதத்தின் கிடைப்பனவு குறைவடைந்ததுடன் மத்திய வங்கியினால் பேணப்பட்ட செலாவணி வீதம் தொடர்பாக ஏனைய சந்தைப்பங்காளர்களின் நம்பிக்கை இல்லாமல் போனதன் காரணமாகவும், மேலும் உலகச் சந்தையிலே நிலைமைகள் மோசமடைந்ததன் காரணமாகவும், உதாரணமாக உக்ரைன் போர், அதுமாத்திரமல்லாமல் இலங்கையில் கிடைக்கத்தக்கதாக உள்ள அலுவல்சார் ஒதுக்குகள் தொடர்ச்சியாக மிக மோசமான நிலைமைக்கு மாறியதன் காரணமாகவும் நிலையான மட்டத்திலே செலாவணி வீதத்தினைப் பேணுகின்ற தகுதியினை மத்திய வங்கி படிப்படியாக இழந்து வந்தது. இதன் காரணமாக ஒரு கட்டத்திலே செலாவணி வீதத்தினை மாற்றியமைக்க வேண்டிய தேவையொன்று காணப்பட்டதனால், மார்ச் மாதத்திலே செலாவணி வீதத்திற்கு பெறுமான தேய்வு அனுமதிக்கப்பட்டது. இதன் காரணமாகவும் சந்தைச் சக்திகளின் தாக்கத்தினாலும் செலாவணி வீதத்திலே மிகப் பாரியளவு பெறுமதிதேய்வு காணப்பட்டது. அது பல்வேறு பொருளாதார சிக்கல்களை உருவாக்கியது.

அடுத்ததாக இலங்கையின் பொருளாதார சிக்கலில் மிக முக்கியமான சிக்கலாக பணவீக்கம் காணப்படுகின்றது. பணவீக்கத்தினை நோக்குவோமாக இருந்தால், இலங்கையின் கடந்த ஆண்டுகளிலே ஒரு

தளம்பல் நிலை காணப்பட்டபோதிலும் கடந்த 2021இற்கு முன்னர் இருந்த 12 ஆண்டு காலப்பகுதியில் இலங்கையின் பணவீக்கமானது 10 சதவீதத்திற்கு உட்பட்டதாகவே காணப்பட்டு வந்தது. இருந்தபோதிலும் இந்த 2021ஆம் ஆண்டின் இறுதிப்பகுதியில் இருந்து பல்வேறு பாதகமான மாற்றங்கள் வெளிநாட்டுச் சூழலிலும் உள்நாட்டுச் சூழலிலும் உருவாகியதன் காரணமாக பணவீக்கமானது வரலாற்றிலே மிகமோசமான ஒரு உயர்வினை இந்த 2021ஆம் ஆண்டில் இருந்து பதிவுசெய்து 2022ஆம் ஆண்டில் மிக உயர்ந்த மட்டமான ஏறத்தாழ 70 சதவீதத்திற்கு அதிகரித்தது. இதற்கான காரணங்களாக, உலக பொருளாதாரத்தில் ஏற்பட்ட சில மாற்றங்களையும் குறிப்பிடலாம். அதாவது கொவிட்-19 ஓரளவுக்கு கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டதன் பின்னர் அனைத்துப் பொருளாதாரங்களிலும் பொருளாதார செயற்பாடுகள் வழமைக்கு திரும்பத் தொடங்கின. அவ்வாறு வழமைக்குத் திரும்பத் தொடங்குகின்றபோது பண்டங்களுக்கான கேள்வி அதிகரித்தது. ஆனால் இன்னமும் நிரம்பல் சங்கிலியில் சுமூகமான நிலைமை ஏற்படவில்லை.

கேள்விக்கும் நிரம்பலுக்கும் இடையில் ஒரு முரண்பாடு ஏற்பட்டதன் காரணமாக அனைவராலும் நுகரப்படுகின்ற முக்கியமான பண்டங்களின் விலைகள் உலக சந்தையிலே அதிகரித்தது. மிக முக்கியமாகக் காணப்படுவது எரிபொருள், எரிவாயு அதேபோன்று நிலக்கரி மற்றும் சில முக்கியமான பண்டங்கள் உதாரணமாக, பாற்பொருட்கள் அல்லது தானிய வகைகள் போன்றவற்றின் விலைகள் அதிகரித்தது. ஆனால் இது மிக மோசமாக அதிகரித்ததன் காரணமாக உள்நாட்டிலும் அதன் விலைகளை மாற்ற வேண்டிய ஒரு தேவை காணப்பட்டதனால் உள்நாட்டில் பல்வேறு பொருட்களின் விலைகள் மேல்நோக்கி சீர்திருத்தப்பட்டன. பல பொருட்களுக்கான விலைகள் ஒரே வருடத்தில் குறிப்பிட்ட மாத இடைவெளியினுள் உயர்த்தப்பட்டன. அதேபோன்று இலங்கையில் இதுவரையில் 44 சதவீதமான செலாவணி வீத தேய்மானம் ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது. பொதுவாக ஒரு சிறியளவினால் செலாவணி வீதம் தேய்வடைகின்றபோது அந்த செலாவணி வீதத்தின் தேய்வினால் உருவாகின்ற செலவினை பொதுவாக இறக்குமதியாளர்கள் நுகர்வோருக்கு விலைகளின் ஊடாக மாற்றுவது குறைவு. ஆனால் செலாவணி வீதத்தில் ஏற்பட்ட தேய்வானது மிக அதிகமாக அதிகரிக்கப்பட்டதன் காரணமாகவும் அநேகமான இறக்குமதியாளர்கள் முறைசாரா முறைமையில் இருந்து மிகவும் உயர்ந்த விலையிலே டொலரினை பெற்றுக்கொள்வதன் காரணமாகவும் அந்த செலவினை இறக்குமதிக்கான விலைகளிலே உள்ளடக்கியதன் காரணமாகவும் விலைகளிலே மிக மோசமான அதிகரிப்பு ஒன்று காணப்பட்டது.

அதேபோன்று இலங்கையில் 2021இல் இருந்து இரசாயணப்பசளைக்கான பற்றாக்குறை காணப்பட்டதன் காரணமாக விவசாயத்தில் ஈடுபடுவர்களின் அளவு குறைந்தது மாத்திரமல்லாது விளைச்சல் குறைவடைந்ததன் காரணமாகவும் உள்நாட்டிலே உணவுப் பொருட்களுக்கான தட்டுப்பாடு

காணப்பட்டு உள்நாட்டு உணவு விலைகள் அதிகரித்து 90 சதவீதத்திற்கு மேலதிகமாக உணவுப் பணவீக்கம் உயர்வாகக் காணப்பட்டது. மத்திய வங்கியின் நாணய நிதியிடல் காரணமாக கேள்வி தூண்டல் பணவீக்க அழுத்தங்களும் காணப்பட்டது. இவ்வாறாக கேள்வி நிரம்பல் போன்ற இரண்டு முறைகளில் இருந்தும் கேள்வி அழுத்தங்கள் அதிகரித்ததன் காரணமாக பொருட்களின் விலைகள் அதிகரித்து பணவீக்கம் மிக மோசமாக அதிகரித்தது. இவை ஏற்கனவே இருந்த பொருளாதார சிக்கலினை மேலும் சிக்கலாக்கி 2022 ஆம் ஆண்டில் ஒரு பாரிய வரலாறு காணாத சமூகப் பொருளாதார சிக்கலை உருவாக்கியிருந்தது.

ஆகவே இதிலிருந்து மீள்வதற்கும் நிலை மோசமாகாமல் தவிர்ப்பதற்கும் எவ்வாறான கொள்கை வழிமுறைகளை இலங்கை மேற்கொண்டது என்பதனை சுருக்கமாகப் பார்த்தால், அரசாங்கத்தினைப் பொறுத்தவரையிலே இவ்வாறான சென்மதி நிலுவை நெருக்கடி ஒன்றிற்கு நாடு செல்லும் போது அது முதலாவதாக அணுகும் ஒரு விடயமாக பன்னாட்டு நாணயநிதியம் காணப்படுகின்றது. இலங்கையைப் பொறுத்தவரையிலே பன்னாட்டு நாணய நிதியத்தினை அணுகியது காலதாமதத்திற்கு உட்பட்டதாக காணப்பட்டது. இது ஏற்கனவே செய்திருக்க வேண்டிய ஒரு விடயமாக இருந்தபோதிலும் 2022 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்திலே பன்னாட்டு நிதியத்திடம் இருந்து கடன் பெறுவதற்கு இலங்கை தயாராக இருப்பதாக கடிதம் ஒன்று நாணய நிதியத்திற்கு அனுப்பப்பட்டது.

அதேபோன்று அரிதாகக் காணப்பட்ட அலுவல்சார் ஒதுக்குகளை எவ்வாறு சிக்கனமாகப் பயன்படுத்துவது என்பது தொடர்பில் மத்திய வங்கியும் அரசாங்கமும் தீர்மானம் ஒன்றினை எடுக்க வேண்டிய தேவை ஒன்று காணப்பட்டது. மிகக் குறைவாக இருக்கின்ற இந்த அலுவல்சார் ஒதுக்குகளை நாங்கள் இறக்குமதிகளுக்காக பயன்படுத்தப் போகின்றோமா? முக்கியமாக அத்தியாவசியமான எரிபொருள், மருந்து, உணவுப் பொருட்களின் இறக்குமதிக்கு செலவழிக்கப் போகின்றோமா? அல்லது கடனை மீளச் செலுத்துவதற்கு செலவிடப் போகின்றோமா என்ற தீர்மானம் எடுக்க வேண்டிய தேவை காணப்பட்டது. மக்களுக்கான சிக்கல்கள் மற்றும் இலங்கையில் இருந்த மிக மோசமான நிலைமைகளைக் கருத்திற்கொண்டு கடனை மீளச் செலுத்துவதனை தற்காலிகமாக இடைநிறுத்துவதற்கு முடிவு எடுக்கப்பட்டு ஏப்ரல் மாதம் 12ஆம் திகதி அரசாங்கமானது ஒரு குறிப்பிட்ட வகையான வெளிநாட்டு படுகடன்களை தற்காலிகமாக மீளச் செலுத்துவதில்லை என்ற முடிவுக்கு வந்தது. அந்த அடிப்படையிலேயே தற்பொழுது பல்புடை பங்காளர்கள் தவிர்ந்த (உதாரணமாக, பன்னாட்டு நாணய நிதியம், உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி) அனைத்து நாடுகளுக்கான அல்லது வர்த்தக வெளிநாட்டு படுகடன்களுக்கான கடன் கொடுப்பனவானது தற்பொழுது தற்காலிகமாக நிறுத்தப்பட்டு வந்திருக்கின்றது. அதேபோன்று அரசாங்கமானது தற்பொழுது வரி தொடர்பான பல்வேறு சீராக்கங்களை

உருவாக்கி அதிலிருந்து அரச வருமானத்தை அதிகரிப்பதற்கான நடைமுறைகளில் ஈடுபட்டு வருகின்றது. இருக்கின்ற செலாவணியினை கவனமாகப் பாவிப்பதற்காக வெளிநாட்டுச் செலாவணியின் வெளிப்பாய்ச்சலைக் குறைப்பதற்காக இந்த ஆண்டிலே பல்வேறு இறக்குமதி கட்டுப்பாடுகள் உருவாக்கபட்டுவந்துள்ளன. கொடுப்பனவு முறைகள் தொடர்பாகவும் கட்டுப்பாடுகள் உருவாக்கப்பட்டது. அத்துடன் மிக முக்கியமான பொருட்களான எரிபொருள், மின்சாரம், நீர்வழங்கல் போன்றவற்றிற்கான விலைகள் பல ஆண்டுகளுக்குப் பின்னர் மேல்நோக்கி திருத்தப்பட்டுள்ளன. இது முக்கியமான நிறுவனங்களின் நட்டத்தினைக் குறைத்து அதன் மூலமாக பொருளாதாரத்தில் அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்ட சுமையினைக் குறைப்பது மாத்திரமல்லாமல் பொருட்களுக்கான தேவையற்ற கேள்விகளையும் குறைப்பதற்கு உதவி செய்யும்.

அதேபோன்று அரசாங்கத்திற்குச் சொந்தமான தொழில் முயற்சிகளை மறுசீரமைப்பது தொடர்பான பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. எரிபொருளுக்கான கேள்வியினைக் கட்டுப்படுத்துவதற்காக QR முறையில் அமைந்ததொரு எரிபொருள் பங்களிப்புத் திட்டம் ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டது. அதேபோன்று மத்திய வங்கியும் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. மத்திய வங்கியானது அதன் நாணயக் கொள்கையை மிக விரைவாக இறுக்கமாக்கியுள்ளது. வரலாறு கண்டிராத அளவில் 10 சதவீதமளவில் கொள்கை வட்டி வீதங்களை அதிகரித்துள்ளது. அதேபோன்று ஒதுக்கு வீதத்தினை அதிகரித்திருக்கின்றது. சில வட்டி வீதங்கள் தொடர்பாக காணப்பட்ட உச்ச மட்டத்தினை நீக்கியுள்ளது. வெளிநாட்டு செலாவணி தொடர்பான முகாமைத்துவத்தின் பொருட்டு செலாவணிவீதத்தில் நெகிழ்ச்சித் தன்மையினை வழங்கி அதேவேளையிலே தேவையற்ற தளம்பல்களை கட்டுப்படுத்துவதற்கான நடைமுறைகளையும் மேற்கொண்டுள்ளது.

அதேபோன்று இறக்குமதியைக் கட்டுப்படுத்துவதற்காக சில நடைமுறைகளை அதாவது எல்லை வைப்புத் தேவைப்பாடு (Margin Deposit) போன்றவற்றை நடைமுறைப்படுத்தியது. வெளிநாட்டிலிருந்து ஏற்றுமதியாளர்கள் வருவாய்களை மீளக் கொண்டுவருவது தொடர்பாக அதனை உறுதி செய்வதற்காக பல்வேறு கண்காணிப்பு முறைமைகள் நடைமுறைப்படுத்தப்பட்டு தற்பொழுது ஏற்றுமதியாளர்கள் தாங்கள் உழைக்கின்ற ஏற்றுமதி வருவாயினை குறிப்பிட்ட 180 நாட்களுக்கு இடையில் இலங்கைக்கு கொண்டுவர வேண்டும் என்பதனையும் அவர்கள் தமக்குத் தேவையான செலவினைப் பூர்த்திசெய்து முடிந்த பின்னர் மிகுதியாக இருக்கின்ற செலாவணி அனைத்தையும் இலங்கை ரூபாவிற்கு மாற்ற வேண்டிய தேவையொன்று விதிக்கப்பட்டது. அதில் 25 சதவீதத்தினை வங்கிகள் மத்திய வங்கிற்கு விற்க வேண்டும் என்ற ஒரு கட்டுப்பாடு விதிக்கப்பட்டது. அவ்வாறு விற்கப்படுகின்ற செலாவணியினைக் கொண்டே மத்திய வங்கியானது தற்பொழுது அத்தியாவசியப்

பொருட்களின் இறக்குமதிக்காக நிதியிட்டு வருகின்றது. அதேபோன்று தொழிலாளர் பணம் அனுப்புதல்களை ஊக்குவிப்பதற்கான பல்வேறு வழிமுறைகளை அரசாங்கத்திற்கு பரிந்துரைத்தல் போன்ற வழிமுறைகளை மத்திய வங்கி ஏற்கனவே நடைமுறைப்படுத்தியது.

இவ்வாறான பல்வேறு வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அது தொடர்பாக சில சாதகமான அபிவிருத்திகளைப் பார்க்கக்கூடியதாகவுள்ளது. அனைவரும் அறிந்தது போல செப்டெம்பர் மாதம் முதலாம் திகதியளவிலே இலங்கைக்கும் பன்னாட்டு நாணய நிதியத்தின் அலுவல்சார் குழுக்குமிடையிலே ஒரு அலுவல்சார் மட்ட உடன்படிக்கையொன்று எட்டப்பட்டுள்ளது. இது ஒரு பன்னாட்டு நாணய நிதியத்திடமிருந்து கடனைப் பெற்றுக்கொள்வதற்கான மிக முக்கியமானதொரு படிமுறையாகக் காணப்படுகின்றது. அதனை இலங்கை தற்பொழுது வெற்றிகரமாகப் பூர்த்தி செய்துள்ளது. அதேபோல இந்தப் படுகடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகளும் மிக விரைவாக முன்னேற்றம் கண்டு வருகின்றது. அதுவும் ஒரு சாதகமான மாற்றமாகக் காணப்படுகின்றது. அதேபோன்று ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டு வந்த இறக்குமதிகள் தொடர்பான கட்டுப்பாடுகளின் காரணமாகவும் இலங்கையிலே காணப்படுகின்ற செலாவணிக்கான பற்றாக்குறையின் காரணமாகவும் அண்மைய மாதங்களிலே இலங்கையின் வர்த்தகப் பற்றாக்குறையானது தொடர்ச்சியாகக் குறைவடைந்து வருகின்றது. இருபது ஆண்டுகளின் பின்னர் ஜூன் மாதத்திலே மிகச் சிறிய வர்த்தக மிகையொன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

அதேபோன்று கடந்த சில மாதங்களாக அதாவது ஜூலை மாதத்தில் இருந்து தொழிலாளர் பணம் அனுப்புதல்களிலும் சுற்றுலாப் பயணிகளின் வருவாய்களிலும் படிப்படியானதொரு முன்னேற்றம் காணப்படுவது ஒரு சாதகமான அபிவிருத்தியாகும். இவ்வாறான அதிகரித்த சுற்றுலாப் பயணிகள் வரும்போது அல்லது வெளிநாட்டுத் தொழிலாளர்கள் அதிகமாக பணம் அனுப்பும் போது அதிலிருந்து பெறப்படுகின்ற செலாவணியானது அத்தியாவசிய இறக்குமதிகளுக்காக பயன்படுத்தப்பட முடியும். அதேபோன்று ஏற்கனவே அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட வரி தொடர்பான சீர்திருத்தங்களின் காரணமாக அண்மைய மாதங்களில் அரசாங்கத்தின் வருமானமானது அதிகரித்துள்ளதை காணக் கூடியதாக இருக்கின்றது. செலவினை அடிப்படையாகக் கொண்ட விலையிடல் முறைமைகள் அதிகரிக்கப்பட்டதன் காரணமாக பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் மின்சார சபை போன்றவற்றின் நிதியியல் செயலாற்றத்திலே படிப்படியான முன்னேற்றமொன்று தற்பொழுது அவதானிக்கப்பட்டு வருகின்றது.

அதேபோல பணவீக்கத்தினை நோக்குவோமாக இருந்தால் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பல்வேறு சாதகமான அபிவிருத்திகள் தற்பொழுது நடைபெற்று வருகின்றன. உதாரணமாக, வெளிநாட்டினைப் பொறுத்தவரையிலே தற்பொழுது பொதுவாக உலகளாவிய ரீதியில்

பொருளாதார மந்தத்திற்கான சாத்தியங்கள் காணப்படுவதன் காரணமாக இந்த முக்கிய பண்டங்களின் கேள்விகள் குறைந்து எரிபொருள், எரிவாயு, நிலக்கரி போன்ற முக்கிய பொருட்களின் விலைகளும் முக்கியமான உணவுப் பண்டங்களின் விலைகளும் படிப்படியாக தற்போது வீழ்ச்சியடையத் தொடங்கி வருகின்றன. இவ்வாறான சூழ்நிலைகளின் காரணமாக எரிவாயுவின் விலையானது தற்போது குறையத் தொடங்கியுள்ளது. எதிர்வரும் காலப்பகுதியிலே எரிபொருளுக்கான விலையும் குறைவதற்கான சாத்தியங்கள் காணப்படுகின்றன. உலகச் சந்தையிலே இதற்கான விலைகள் குறைவடைந்து வருகின்றது. இவ்வாறான மாற்றங்கள் வரும் போது அது உள்நாட்டு விலைகளிலும் ஒரு சாதகத்தை உருவாக்கும். உள்நாட்டு ரீதியிலும் தற்போது அதிகளவிலான இரசாயணப் பசளைகள் கிடைக்கக் கூடியதாக இருப்பதன் காரணமாக உள்நாட்டு உணவு உற்பத்தியிலே சாதகமான மாற்றத்தினை எதிர்வரும் மாதங்களில் அவதானிக்க முடியும். இதுவும் விலைகளின் குறைவிலே பங்களிப்புச் செய்யும். இவற்றின் விளைவாக 2022 ஒக்டோபர் மாதத்திலிருந்து பணவீக்கமானது படிப்படியாக குறைவடையத் தொடங்கியுள்ளதுடன் இது எதிர்வரும் காலத்திலும் தொடருமென தற்பொழுது உறுதிசெய்யப்பட்டுள்ளது. இவை தற்போது எமக்குக் கிடைக்கத்தக்கதாக உள்ள சாதகமான அபிவிருத்திகளாகும்.

ஆகவே அனைவரும் பொதுவாகப் பேசுகின்ற விடயம் இலங்கையினுடைய பொருளாதார சிக்கல். ஆனால் தற்பொழுது இந்த சிக்கலில் இருந்து விடுபடுவதற்கான ஒளியொன்று தெரியத் தொடங்கியுள்ளது. இதனால் சமூக ரீதியிலும் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. எரிபொருளுக்கான அல்லது எரிவாயுவிற்கான வரிசைகள் குறைவடைந்திருக்கின்றன. மக்கள் பழையபடி தமது பொருளாதார செயற்பாடுகளில் ஈடுபடத் தொடங்கியிருக்கின்றார்கள். போராட்டங்கள் குறைவடைந்திருக்கின்றன. ஒரு ஸ்திரமான அரசியல் நிலைமையொன்று உருவாகியுள்ளது. இவை அனைத்து விடயங்களும் இந்த பொருளாதார சிக்கலில் இருந்து இலங்கை படிப்படியாக மீள்வதற்கான அறிகுறிகளாக நாங்கள் எடுத்துக் கொள்ளலாம்.

அடுத்துவரும் காலப்பகுதியிலே என்ன செய்ய வேண்டும் என்பது தொடர்பாக ஆராய்வோமாயின், தற்போது இலங்கையானது அவசர சிகிச்சையிலே இருக்கின்ற ஒரு நோயாளியாக இருக்கின்றது. ஆகவே இலங்கையை எடுத்தவுடனேயே ஒரு ஆரோக்கியமான நபராக மாற்ற முடியாது. தற்போது அதற்கான முதலுதவிகள் தேவைப்படுகின்றன. ஆகவே சில முக்கியமான கொள்கை வழிமுறைகள் அவசரமாகத் தேவைப்படுகின்றன. அவை எவை என்று பார்க்கலாம். இலங்கையைப் பொறுத்தவரையிலே தற்போது இலங்கைக்கு கிடைக்கத்தக்கதாக இருக்கின்ற ஒரேயொரு நம்பிக்கையான வழிமுறையாகக் காணப்படுவது பன்னாட்டு நாணய நிதியத்தின் நிகழ்ச்சித் திட்டமாகும். பன்னாட்டு நாணய நிதியத்தின் நிகழ்ச்சித் திட்டம் வெற்றியடைந்தால் மாத்திரமே

ஏனைய பல்புடை பங்காளர்களான உலக வங்கி, ஆசிய வங்கி போன்றவற்றிடமிருந்து கடன்கள் கிடைக்கும். அதேபோல தனியார் முதலீட்டாளர்களிடம் இருந்தும் கடன் கிடைக்கலாம். ஆகவே பன்னாட்டு நாணய நிதியத்திற்கான நிகழ்ச்சித் திட்டத்தினை வெற்றிகரமாகக் கொண்டு வருவதற்காக அவற்றின் நிர்வாக சபையின் அங்கீகாரத்தினைப் பெற வேண்டும். அவ்வாறு பெறுவதற்காக சில நிபந்தனைகளை நாடு பூர்த்தி செய்ய வேண்டியுள்ளது. அவ்வாறான நிபந்தனைகளை துரிதமாக செய்து முடிப்பதும் அதேபோல இந்த படுகடன் மறுசீராக்கம் தொடர்பான விடயங்களை மிக விரைவாக செய்து ஏற்கனவே எமக்குக் கடன் வழங்கியவர்களிடம் இருந்து இந்த சீர்திருத்தம் தொடர்பான செயன்முறை தொடர்பாக அவர்களது அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்வது மிக முக்கியமான விடயமாகக் காணப்படுகின்றது. இவை தொடர்பில் மிக முன்னேற்றங்கள் தற்போது எட்டப்பட்டுள்ளதுடன் பன்னாட்டு நாணய நிதியத்தின் நிகழ்ச்சித் திட்டமானது இன்னும் சில மாதங்களில் இறுதியடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

அதேபோல தற்போது இருக்கின்ற காலத்திற்கும் இந்த பன்னாட்டு நாணய நிதியத்திடம் இருந்து கடன் கிடைக்கப் போகின்ற காலத்திற்கும் இடையில் உள்ள காலப்பகுதியிலே எவ்வாறு எமது நாட்டிற்கான வெளிநாட்டு செலாவணியினை பூர்த்தி செய்யலாம் என்பது தொடர்பாக தற்காலிக கடன்கள் அல்லது நிதியினைப் பெற்றுக்கொள்ள வேண்டிய தேவை இருப்பதன் காரணமாக இலங்கையானது தொடர்ச்சியாக வேறு நாடுகளுடனும் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட வேண்டிய தேவையொன்று காணப்படுகின்றது. வெளிநாட்டுச் செலாவணி தொடர்பான சிக்கலினை இலகுவாக்குவதற்காக தொழிலாளர் பணம் அனுப்புதல்கள், ஏற்றுமதி மற்றும் சுற்றுலாத் துறையினை மிகத்துரிதகதியில் ஊக்குவிப்பதற்கான தேவையொன்று காணப்படுகின்றது. அதிகமான பணவீக்க காலப்பகுதியிலே மிக மோசமாக பாதிப்படைபவர்களாக வறிய மக்கள் காணப்படுகின்றார்கள். ஆகவே இந்த சிக்கலான காலப்பகுதியிலே அவர்கள் தங்களது வாழ்வாதாரத்தினை தொடர்ந்து நடாத்துவதற்காக அவர்களுக்கு அவசியமான சமூகப் பாதுகாப்பு வசதியினை வழங்குவதற்காக அரசாங்கமானது உதவித்தொகைகளை வழங்க வேண்டிய தேவையொன்று காணப்படுகின்றது. உணவுப் பணவீக்க பிரச்சினைகளில் இருந்து பொதுமக்களைப் பாதுகாப்பதற்காக உள்நாட்டு உணவு உற்பத்தியினை அதிகரிப்பதற்காக அனைத்து நடவடிக்கைகளையும் செய்ய வேண்டிய தேவையொன்று காணப்படுகின்றது.

இவ்வாறு முக்கியமான விடயங்களில் இருந்து இலங்கையினை தற்காலிகமாக பாதுகாத்துக் கொண்டாலும் மீண்டும் இவ்வாறான பிரச்சினைகளில் இலங்கை மாட்டிக்கொள்ளாமல் இருப்பதற்கு பொருளதார சிக்கலினை ஒரு சாதகமாக பயன்படுத்தி இதிலிருந்து நிரந்தரமாக எவ்வாறு இலங்கை மீண்டு வர வேண்டும் என்பதற்காக

நடுத்தர காலத்திலே சில முக்கியமான கொள்கை முன்னெடுப்புக்கள் இலங்கைக்குத் தேவையாக இருக்கின்றன. அவையாவன, இலங்கையின் முக்கிய பிரச்சினைகள் இறைத்துறையிலிருந்தே தோன்றியமையினால் இறைத்துறையின் செயலாற்றத்தை நிரந்தரமாக மேம்படுத்துவதே இந்த பிரச்சினைக்கான அடிப்படைத் தீர்வாகக் காணப்படும். ஆகவே இறைத்திரட்சி நடவடிக்கையின் போது அரசாங்கத்தின் வருமானத்தினை அதிகரித்து செலவினத்தை கட்டுப்படுத்தி வரி நிர்வாகத்தினை மேம்படுத்துவது மிக முக்கியமான கொள்கை முன்னுரிமையாகக் காணப்பட வேண்டும். அரசிற்குச் சொந்தமான தொழில் முயற்சிகளை சீர்திருத்தம் செய்ய வேண்டியது அடுத்த முன்னுரிமையாகக் காணப்படுகின்றது. இலங்கை தொடர்ச்சியாக கடனில் தங்கியிருக்காமல் வெளிநாட்டு செலாவணியில் தங்கியிருப்பதை அதிகரிப்பதற்காக ஏற்றுமதியினை மேம்படுத்துவது அதாவது பண்டங்கள் தொடர்பான ஏற்றுமதி, சுற்றுலா மற்றும் தகவல் தொழில்நுட்பம் போன்ற பணிகள் தொடர்பான ஏற்றுமதியிலிருந்து வருகின்ற வருவாயை ஊக்குவிப்பதற்கான கொள்கை வழிமுறைகளும் அவற்றின் நடைமுறைப்படுத்தலும் முக்கியமானதாகக் காணப்படுகின்றது.

தற்போது இலங்கையானது ஏறத்தாழ அனைத்து பொருட்களுக்கும் இறக்குமதியிலேயே தங்கியிருக்கின்றது. ஆகவே இலங்கையிலே உற்பத்தி செய்யக்கூடிய சில செலவுச்சிக்கனம் மிக்க இறக்குமதிகளை அடையாளங்கண்டு அதேபோன்று மிக முக்கியமான அத்தியாவசியப் பொருட்களின் தன்னிறைவினை அதிகரிப்பதற்காக இறக்குமதிப் பதிலீடு தொடர்பான பொறிமுறையொன்று இலங்கையில் அவசியமாகின்றது. அது நடுத்தர காலத்திலே மிக முக்கியமானதொரு கொள்கை முறையாகக் காணப்பட வேண்டும். அதேபோன்று நிரந்தரமான அடிப்படையிலே வெளிநாட்டு நேரடி முதலீடுகளை அதிகரிப்பதும் அவ்வாறான நேரடி முதலீடுகள் உற்பத்தித் துறையிலும் ஏற்றுமதித் துறையிலும் பயன்படுத்தப்படுவதை ஊக்குவிப்பதும் மிக முக்கியமானதாகக் காணப்படுகின்றது. தொடர்ச்சியாக செலாவணி வருவாயினை ஈட்டிக் கொள்வதற்கு அது வழிவகுக்கும். அதேபோன்று இலங்கையிலே நேரடி முதலீட்டினை பெற்றுக்கொள்வதில் இருக்கின்ற மிகப் பெரிய சிக்கலாகக் காணப்படுவது வியாபாரம் செய்வதற்கான சாதகமான சூழல் (Doing Business Environment) ஒன்று இலங்கையில் சாதாகமாக இல்லை. பொதுவாக வரிச்சலுகையினை வழங்கி முதலீடுகளைப் பெற்றுக்கொள்வதற்கே இலங்கையில் கடந்த காலங்களில் முன்னுரிமை வழங்கப்பட்டது. ஆனால் முதலீட்டாளர்களைப் பொறுத்தவரையிலே வரிக்கு மேலதிகமாக அவர்கள் முக்கியமாக கருதுகின்ற விடயங்கள் பல இருக்கின்றன. ஒரு விடயத்தினை அலுவல் ரீதியாக செய்து முடிப்பதில் இருக்கின்ற சிக்கல்கள், முதலீட்டிற்கான காணியினைப் பெற்றுக் கொள்வதில் இருக்கின்ற சிக்கல்கள், தொழிலாளர்களை பெற்றுக்கொள்வதும் அவர்களை வேலையில் இருந்து நிறுத்துவதற்குமான பிரச்சினைகள், இலங்கையில் உள்ள ஊழல்

தொடர்பான பிரச்சினைகள், ஆளுகை தொடர்பான பிரச்சினைகள் இவற்றினை மேம்படுத்த வேண்டிய தேவையொன்றும் முக்கியமானதாகக் காணப்படுகின்றது.

அதேபோன்று சில மிக முக்கியமான விடயங்கள் தொடர்பாக தேசிய கொள்கைகளை வழிவகுக்க வேண்டிய தேவையொன்று காணப்படுகின்றது. இந்த தேசிய கொள்கைகள் என்பது ஒரு நீண்ட காலக் கொள்கைகளாகக் காணப்படுவதுடன் குறிப்பிட்ட அரசாங்கத்திற்கு மாத்திரமில்லாமல் அதற்கு மேலதிகமாக ஒரு பத்து வருட தேசிய கொள்கையாக இருந்தால் இங்கு அரசாங்கம் மாறினாலும் அந்த நாட்டிற்கான மிக முக்கியமான விடயங்கள் தொடர்பான அந்தக் கொள்கைகள் மாறாது. பல நாடுகள் இவ்வாறான தேசிய கொள்கைகளை வழிமுறைப்படுத்தியே அதன்மூலம் ஒரு முன்னேற்றத்தினை ஏற்படுத்தி இருந்தமையை காணக்கூடியதாக உள்ளது. அல்லாதுவிடின் ஒரு அரசாங்கம் ஒரு கொள்கையை வைத்திருக்கும். அடுத்த அரசாங்கம் அதனை அப்படியே மறுதலித்து இன்னுமொரு கொள்கையை வகுக்கும். ஆகவே அரசாங்கத்தின் காலப்பகுதியில் மிக முக்கியமான காலப்பகுதி கொள்கை உருவாக்கத்திலே செலவழித்து விடுவதன் காரணமாக அந்தக் கொள்கையினை நிறைவேற்றுவதற்கு காலம் போதாமல் இருக்கும். அதற்குப் பின்னர் இன்னுமொரு அரசாங்கம் வரும்போது அந்த அரசாங்கமானது மீண்டும் அந்த திட்டமிடலிலேயே அதிகளவு காலத்தினை கொண்டு நடாத்துவதன் காரணமாக முக்கியமான கொள்கைகள் இலங்கையிலே நடைமுறைப்படுத்துவது அரிதாகவே காணப்படுகின்றது. ஆகவே நீண்டகால தேசியக் கொள்கையானது வகுக்கப்படும்போது அரசாங்கம் மாறினாலும் இந்தக் கொள்கை நிறைவேற்றத்திலே ஒரு நிரந்தரமான முன்னேற்றம் காணப்படும். இதற்கு முக்கியமாக விவசாயத்துறை, கைத்தொழில் துறை மற்றும் சிறிய நடுத்தர தொழில் முயற்சிகளின் அபிவிருத்தி மற்றும் ஏற்றுமதித்துறை போன்றவற்றிற்கு ஒரு தேசிய கொள்கையொன்று உருவாக்கப்பட வேண்டிய தேவை காணப்படுகின்றது.

அதேபோல் நாட்டின் வலு பாதுகாப்பு தொடர்பாக நீண்டகால வலு உருவாக்க திட்டம் புதுப்பிக்கத்தக்க வழிமுறைகளைக் கொண்டு உருவாக்கப்பட வேண்டும். இலங்கையிலுள்ள பொதுப் போக்குவரத்து முறையானது மேம்படுத்தப்பட வேண்டும். இலங்கையிலே பெண்களின் தொழிற்படைப் பங்கு மிகவும் குறைவானதாகக் காணப்படுகின்றது. பெண்களை அளவுக்கு அதிகமான அளவில் வேலையில் ஈடுபடுத்துவதன் மூலமாக மிக இலகுவாக இலங்கையின் பொருளாதார வளர்ச்சியினையும் சமூக வளர்ச்சியினையும் அதிகரிப்பதற்கான சாத்தியங்கள் அதிகளவில் காணப்படுகின்றது. இதற்கான கொள்கைகளை திட்டமிட்டு வழிமுறைப்படுத்துவதன் ஊடாக இலங்கையின் நிரந்தரமான வளர்ச்சியை அதிகரிப்பதற்கு மிக முக்கிய பங்காகக் காணப்படுகின்றது.

அனைத்து மட்டங்களிலும் இலங்கையின் கல்விக்கொள்கைகளில் மாற்றம் ஏற்படுத்த வேண்டிய தேவை காணப்படுகின்றது. சந்தையின் தேவைக்கு ஏற்றவாறு தொழிலாளர்களை தயார்படுத்தக்கூடிய அளவிலே எமது கல்விக் கொள்கைகள் பின்பற்றப்பட வேண்டிய தேவை காணப்படுகின்றது. அதேபோல பிராந்திய நாடுகளுடன் ஒன்றிணைப்பதற்கான தேவை காணப்படுகின்றது. பொதுவாக ஏற்றுமதியினைச் செய்து மேற்கைத்தேய நாடுகளுடன் மாத்திரம் தங்கியிருக்காமல் ஆசிய நாடுகளுடனும் நெருங்கிய தொடர்பு வைத்திருக்க வேண்டும். ஆசியாவிற்கான வளர்ச்சி வாய்ப்பானது மிக அதிகமாகக் காணப்படுகின்றது. ஆகவே ஆசியப் பிராந்தியத்திலே இருக்கின்ற ஏனைய நாடுகளுடன் அல்லது ஏனைய நாடுகளின் ஒன்றியங்களுடனும் அளவுக்கதிகமாக ஒருங்கிணைப்பினை ஏற்படுத்துவதன் ஊடாக இலங்கையானது வர்த்தகத்திலும் மேலும் பல துறைகளிலும் மேம்பாடு அடைவதற்கான சாத்தியங்கள் காணப்படுகின்றன. ஆகவே நடுத்தர காலத்திலே பொருத்தமான கொள்கையொன்றுடன் பொருளாதாரச் சிக்கலினை அடிப்படையாகக் கொண்டு அதனை ஒரு சந்தர்ப்பமாகப் பயன்படுத்தி இலங்கையை நிரந்தரமாக பொருளாதார சிக்கலில் இருந்து மீட்சி பெறச் செய்வதற்காக அனைத்து ஆர்வலர்களும் ஒன்றாக இணைந்து செயற்பட வேண்டிய தேவையொன்று காணப்படுகின்றது.

# அத்தியாயம் 16

## இலங்கைப் பொருளாதார நெருக்கடியின் அரசியல் பரிமாணம்

## Political Dimension of Sri Lanka's Economic Crisis

**Prof. S. I. Keethaponcalan**
Professor of Conflict Resolution,
Department of Conflict Analysis and Dispute Resolution,
Salisbury University, USA.

(14.09.2022 அன்று நடைபெற்ற நிகழ்நிலைக் கருத்தரங்கின் தொகுப்பு)

### அறிமுகம்

இலங்கை தற்போது எதிர்கொண்டிருக்கின்ற நெருக்கடிக்குக் காரணமாக, ஒருபுறம் நிதி நெருக்கடியும் மறுபுறம் அரசியல் ரீதியான நெருக்கடியும் காணப்படுவதனால் அவற்றை இருவேறாகப் பிரித்துப் பார்க்க முடியாமலுள்ளது. 2022இல் இலங்கை எதிர்கொண்ட பொருளாதார நெருக்கடியானது உண்மையில் அரசியல் காரணிகளால் தூண்டப்பட்டு உருவான பொருளாதார நெருக்கடியாகும். இலங்கை சுதந்திரமடைந்த காலத்திலிருந்து எதிர்கொண்ட இரட்டைக்குறைநிலை (Twin Deficit) என்ற நோயினை இலங்கையில் ஆட்சிக்கு வந்த அரசியல்வாதிகள் ஆரம்பத்திலேயே இனங்கண்டு அதற்குத் தீர்வுகாணாமையாலும் தங்களினுடைய சுயலாபத்திற்காக அவர்கள் கடைப்பிடித்த பிழையான கொள்கைத் தீர்மானங்களாலும் ஈஸ்டர் குண்டுத் தாக்குதல், கொவிட்-19 போன்ற பொருளாதார அதிர்ச்சிகள் ஏற்பட்டதும் அதிலிருந்து இலங்கையால் இலகுவில் மீண்டுவரமுடியாமல் போய்விட்டது. இவை இறுதியில் இலங்கையைப் பாரிய பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளிவிட்டன. இலங்கையைப் போன்று உலகிலுள்ள ஏனைய நாடுகளும் கொவிட்-19 என்ற உலகளாவியத் தொற்றுப் பரவல் நோயினை எதிர்கொண்டிருந்தாலும் அதன் பொருளாதார ரீதியான தாக்கத்திலிருந்து மீண்டுவருவதற்கு உறுதுணையாக அந்நாடுகள், போதிய வெளிநாட்டு ஒதுக்குகளைத் தன்வசம்கொண்டிருந்தன. ஆனால் இலங்கையானது அப்பிரச்சினையிலிருந்து மீண்டெழ முடியாமலிருப்பதற்கு பலவீனமான வெளிநாட்டு ஒதுக்கு ஒரு முக்கிய காரணமாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

2019ஆம் ஆண்டு ஏற்பட்ட ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் மற்றும் அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட கொவிட்-19 கொரோனாத் தொற்றுப் பரவல் நிலைமைகளால் நாட்டிற்கு அதிக வருவாயை ஈட்டித்தருகின்ற சுற்றுலாத்துறை, ஆடைக் கைத்தாழில் ஏற்றுமதி, தேயிலை ஏற்றுமதி, வெளிநாட்டு வேலைவாய்ப்புத்துறை என்பன மேசமாகப் பாதிக்கப்பட்டன. இதனால் இலங்கையானது முக்கிய வருவாய் மூலாதாரங்களை இழந்தது. அதுமட்டுமல்லாமல் இலங்கையானது தான் உழைத்த வருமானத்தில்

பெரும்பகுதியை (டொலர் கையிருப்பினை) வெளிநாட்டுக்கடனையும் கடனுக்கான வட்டிக்கொடுப்பனவையும் மீளச்செலுத்துவதற்காக செலவழித்தமையினால் இலங்கையில் வெளிநாட்டுச் செலாவணியின் உட்பாய்ச்சல்களை விட வெளிப்பாய்ச்சல்கள் அதிகமாகக் காணப்பட்டு வெளிநாட்டு ஒதுக்குகளின் கையிருப்பானது குறுகிய காலத்திற்குள் சடுதியாக வீழ்ச்சியடைந்தது. இவ்டொலர் கையிருப்பில் ஏற்படுகின்ற வீழ்ச்சியைக் கட்டுப்படுத்துவதற்காக இலங்கையானது அத்தியாவசியமற்ற நுகர்வுப் பொருட்களின் இறக்குமதிக்குத் தடைவிதித்தது. இருப்பினும் நிலைமையானது கட்டுக்கடங்காமல் செல்லவே, இலங்கையால் முக்கியமான சில அத்தியாவசியப் பொருட்களை இறக்குமதி செய்யக்கூட போதிய வெளிநாட்டு ஒதுக்குகள் இல்லாத நிலைமையானது உருவானது. சமையல் எரிவாயு, எரிபொருள், மருந்துப்பொருட்கள், பால்மா மற்றும் முக்கியமான அத்தியாவசிய உணவுப் பொருட்கள், உரவகைகள், இலங்கையின் முக்கிய ஏற்றுமதிகளுக்கான உள்ளீட்டுப் பொருட்கள் போன்றவற்றை டொலர் பற்றாக்குறையால் இறக்குமதி செய்யமுடியாத அவல நிலை உருவானது. இலங்கைக்கு வெளியே துறைமுகங்களில் பாரிய எண்ணெய்த்தாங்கிக் கப்பல்கள் நங்கூரமிட்டு காணப்பட்டாலும் அவற்றை விலை செலுத்தி வாங்கமுடியாத அளவிற்கு இலங்கையில் டொலருக்குத் தட்டுப்பாடு நிலவியது.

நாட்டில் எரிவாயு, எரிபொருள் மற்றும் பல முக்கியமான அத்தியாவசியப் பொருட்களுக்குக் காணப்பட்ட தட்டுப்பாட்டால் அவற்றின் விலைகள் பாரியளவால் உயர்ந்ததோடு மக்கள் அதனைப் பொறுக்கமுடியாமல் வீதியில் இறங்கி அரசாங்கத்திற்கு எதிராகப் போராடினர். இது நாட்டில் வன்முறைகளையும் அமைதியின்மையையும் மற்றும் அரசியல் ஸ்திரமின்மையையும் உருவாக்கியதோடு மக்களினுடைய தீவிரப்போராட்டத்தின் வழியாக நாட்டின் பிரதமரும் ஜனாதிபதியும் பதவியை இராஜினாமா செய்யவும் தூண்டப்பட்டனர்.

இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கான காரணங்களை நான்கு (04) முக்கிய கட்டமைப்பின் கீழ் உள்ளடக்கமுடியும்.

1) **வெளிநாட்டு ஒதுக்குகளின் பற்றாக்குறை**
   - இறக்குமதிகளில் அதிகமாகத் தங்கியிருந்தமை.
   - கொவிட்-19 கொரோனாத் தொற்றுப் பரவலால் சுற்றுலாத்துறைக்கு ஏற்பட்ட பாதிப்பு.
   - ரஷ்யா மற்றும் உக்ரைன் நாடுகளிற்கிடையிலான யுத்தம் (இதன் காரணமாக ரஸ்யா மற்றும் உக்ரைன் நாடுகளிலிருந்தான சுற்றுலாப் பயணிகளின் வருகை குறைவடைந்ததோடு அந்நாடுகளை நோக்கிய இலங்கையின் தேயிலை ஏற்றுமதிச் சந்தையும் இதனால் பாதிக்கப்பட்டது.

**2) பாதீட்டுப் பற்றாக்குறை**

- போருக்குப் பிந்திய தேசிய பாதுகாப்புச் செலவீனங்களில் ஏற்பட்ட அதிகரிப்பு.
- முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வரி வீதத்தைக் குறைத்தமை (VAT வரியினை 15%இலிருந்து 8% ஆகவும் நிறுவன வரியினை (Corporate tax இனை 28%இலிருந்து 24% ஆகக் குறைத்தமையும்).

**3) அரசாங்கத்தின் முறையற்ற கொள்கைத் தீர்மானங்கள்**

- 100% இயற்கை விவசாயத்தை உருவாக்கும் திட்டத்தின் கீழ் இரசாயணப் பசளைகள் மற்றும் கிருமிநாசினிகளின் இறக்குமதிக்கு முற்றாகத் தடை விதித்தமை.
- இலங்கை ரூபாவானது அதிகளவு அச்சிடப்பட்டமை.
- இலங்கை ரூபாவினை டொலராக மாற்றுவதற்கு நிர்ப்பந்தித்தமை.

**4) பாரிய படுகடன் சுமை**

- சீனாவிடமிருந்து பெற்றுக்கொண்ட பெருந்தொகைக் கடன்.
- அதிவேக நெடுஞ்சாலைகள், மேம்பாலங்கள், பாலங்கள், துறைமுகங்கள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளின் உருவாக்கத்திற்காக பெருந்தொகைக் கடன்பெற்றமை.
- இலங்கைக்கு அதிகளவு வருமானத்தை ஈட்டித்தராத அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக பெற்றுக்கொள்ளப்பட்ட மீளமுடியாப் பெருங்கடன் (Unproductive Debts). (உதாரணம்: அம்பாந்தோட்டைத் துறைமுகம், மத்தளை விமான நிலையம், தாமரைக் கோபுரம், கொழும்புத் துறைமுக நகரம்).

## நெருக்கடிக்கான திருப்புமுனை என்ன (Turning Point)?

இலங்கையானது சுதந்திரமடைந்த காலத்திலிருந்து பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடி நிலைமையினை எதிர் கொண்டிருந்தாலும் அது கட்டுப்படுத்த முடியாத அளவிற்கு பாரிய நெருக்கடியாக உருமாறுவதற்கு அரசியல்ரீதியான கண்ணோட்டத்தில் முக்கிய திருப்பு முனையாக அமைந்தது 2019ஆம் ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலும், 2020ஆம் ஆண்டு இடம்பெற்ற பாராளுமன்றத் தேர்தலுமாகும். 2019ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் ஏற்படும்போது மூன்று தடவைகள் ஒருவர் ஜனாதிபதியாகப் பதவிவகுப்பதற்கு 19ஆவது அரசியல்யாப்புச் சீர்திருத்தத்தின்படி அனுமதி கிடையாத காரணத்தால் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்கள் தன் குடும்பத்திலிருந்து ஒருவரை நிலைநிறுத்தவேண்டியேற்பட்டது. அச்சந்தர்ப்பத்தில் கோட்டாபய ராஜபக்ஷவின் பெயரை மகிந்த ராஜபக்ஷ முன்மொழிந்தார். ஜனாதிபதித் தேர்தலில் இலங்கை மக்கள் பெருவாரியாக கோட்டாபாய ராஜபக்ஷவிற்கு தேசியளவில் வாக்களித்ததினால் அவர்

ஜனாதிபதியானார் (கிட்டத்தட்ட 52.25% மக்களின் வாக்குப் பெரும்பான்மையுடன்). இத்தேர்தலில் மக்கள் இதற்குமுன்னர் அரசியல் அனுபவம் எதுவுமேயற்ற முற்றுமுழுதாக புதிய ஒரு நபருக்கு கண்மூடித்தனமாக வாக்களித்தார்கள். புத்திசாலியான வாக்காளர்கள் அவ்விதம் செய்திருப்பார்களா? என இவ்விடத்தில் எண்ணத்தோன்றுகின்றது. இருப்பினும் மக்களினுடைய இத்தீர்மானங்கள் தேசியவாத அபிப்ராயங்களினால் தீர்மானிக்கப்படும்போது அவ்வாறான வாக்குகள் ஆச்சரியப்படத்தக்கதாக இருக்கவில்லை. இவ் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெறுவதற்காக கோட்டாபய ராஜபக்ஷ அவர்கள் கொடுத்த வாக்குறுதிகளும் வெற்றிபெற்ற பிற்பாடு அவரால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களும் தற்போதைய பொருளாதார நெருக்கடிக்குக் காரணமாக அமைந்தன.

## நெருக்கடிக்கான அரசியல் காரணங்கள் என்ன?

இவ் ஜனாதிபதித் தேர்தலுக்குப் புறம்பாக 2020ஆம் ஆண்டு இடம்பெற்ற பாராளுமன்றத் தேர்தலும் இப்பொருளாதார நெருக்கடிக்கு முக்கிய காரணமாகும். இத்தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான பொதுமக்கள் பெரமுன (SLPP) வெற்றிபெறும் என்பதில் எந்தவித சந்தேகமும் இருக்கவில்லை. அனால் அக்கட்சி மூன்றில் இரண்டு (2/3) பெரும்பான்மையுடன் பாரிய வாக்கு வித்தியாசத்தில் வெற்றிபெற்றமையே ஆச்சரியமானதாகவும் இப்பிரச்சினைக்கு முக்கிய காரணமாகவும் இருந்தது. ஏனெனில் 2022ஆம் ஆண்டு பிரச்சினை பூதாகரமாக வெடித்தபோது அரசாங்கத்தை மாற்றுவதற்கான ஒரு முனைப்பு பொதுமக்கள் மத்தியிலும் பாராளுமன்றத்திற்குள்ளும் தீவிரமாகவிருந்தது. இருப்பினும் அதை அவ்வளவு இலகுவில் செய்யமுடியாத ஒரு சூழ்நிலையே காணப்பட்டது. ஏனெனில் 2020ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் பொதுஜனப் பெரமுனவிற்கு பொதுமக்கள் வழங்கிய ஆணை அந்தளவிற்கு மிகவும் வலுவாகவிருந்ததன் காரணமாக அந்த அரசாங்கத்தை எந்தவிதத்திலும் ஆட்டங்காணச் செய்யமுடியாத சூழ்நிலை நிலவியது. அதாவது 2020ஆம் ஆண்டடில் பொதுத் தேர்தலில் பாரிய மக்களாணையினை வழங்கிய பொதுமக்களே, தாங்கள் தெரிவுசெய்த ஆளுங்கட்சியினை 2022ஆம் ஆண்டு கவிழ்க்க முற்பட்டும், அது முடியாமல் போனமைக்கு அவர்கள் வழங்கிய 2/3 பெரும்பான்மையே தடையாக அமைந்தது. ஆகவே இந்த நெருக்கடி நிலைமையானது மக்கள் மத்தியில் பூதாகரமாக மாறுவதற்கு இந்த மூன்றில் இரண்டு பெரும்பான்மையும் ஒரு முக்கிய காரணமாகவிருந்தது. ஆகவே, 2022ஆம் ஆண்டு பொருளாதார நெருக்கடிக்கான திருப்புமுனை (Turning Point) என்ற அடிப்படையில் இவ்விரு தேர்தல்களும் முக்கியமானதாகும்.

உண்மையில் 2022ஆம் ஆண்டில் ஏற்பட்ட இப் பொருளாதார நெருக்கடியானது அரசியல்காரணிகளால் ஏற்பட்ட பொருளாதாரப்

பிரச்சினையாகவன்றி பொருளாதாரக் காரணிகளால் எற்பட்ட பொருளாதாரப் பிரச்சினையல்ல. முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவர்கள் மேற்கொண்ட பெருமளவிலான தூரநோக்கற்ற பிழையான கொள்கைத் தீர்மானங்களே இலங்கை எதிர்கொண்ட தற்போதைய நெருக்கடிக்குக் காரணமாகும். கோட்டாபய ராஜபக்ஷ அவர்கள் ஜனாதிபதிப் பதவியிலிருந்து ராஜினாமாசெய்வதற்கு முன்னர் பலவருடகாலமாக அரசியல் அனுபவங்கொண்டு விளங்கிய, இரு முறை இலங்கையில் ஜனாதிபதியாவும் பலமுறை பிரதமராகவும் பதவிவகித்த அவரின் சொந்த சகோதரரான மகிந்த ராஜபக்ஷவின் ஆலோசனையைக் கூடக் கேட்கவில்லை என்பதை மகிந்த ராஜபக்ஷ ஒரு நேர்காணலின் போது கூறியிருந்தமை ஒரு ஆச்சரியகரமான உண்மையாகும். இது, கோட்டாபய ராஜபக்ஷ அவர்கள் மேற்கொண்ட பெரும்பாலான தீர்மானங்கள் அரசியல் ரீதியான ஆலோசனைகள் பெறப்படாமல் அவருடைய ஒரு குறுகிய வட்டத்திற்குள் இருந்து பெறப்பட்ட ஆலோசனைகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களாக இருப்பதைக் காட்டுகின்றது. இவ்வாறு கோட்டாபய ராஜபக்ஷ அவர்கள் அரசியல் ரீதியான ஆலோசனைகள் எதுவும் இன்றி தான்தோன்றித்தனமாக மேற்கொண்ட கொள்கைத் தீர்மானங்களும் இந்நெருக்கடிக்கான காரணமாக அமையலாம். குறிப்பாக, யுத்தத்திற்குப் பின்னரும் பாதுகாப்புச் செலவினங்கள் தொடர்ந்தும் அதிகரித்தமை (இராணுவ வீரர்கள் அதிகளவில் பணியில் இணைத்தமையால் அதிகரித்த இராணுவச் செலவினங்கள்), வரி வீதங்களைக் குறைத்தமை (VAT வரியினை 15% இலிருந்து 8% ஆகவும் பெருநிறுவன வரியினை (Corporate tax) 28% இலிருந்து 24%ஆகக் குறைத்தமை), 100 சதவீதம் நஞ்சற்ற இயற்கை விவசாய முறையினை உருவாக்கும் நோக்கில் இரசாயண உரங்களின் இறக்குமதிக்கு முற்றாக விதிக்கப்பட்ட தடை, ரில்லியன் கணக்கில் பணத்தை பாரியளவில் அச்சிடல் போன்ற தூரநோக்கற்ற பிழையான கொள்கைத் தீர்மானங்கள் தற்போதைய நெருக்கடியை மேலும் தீவிரப்படுத்தின.

கோட்டாபய ராஜபக்ஷ அவர்கள் ஜனாதிபதியாக பதவிக்கு வருவதற்கு முன்னர் மகிந்த ராஜபக்ஷ அவர்கள் 2010ஆம் ஆண்டு யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவந்ததிலிருந்து மேற்கொண்ட தீர்மனங்களுங்கூட தற்போதைய நெருக்கடிக்கு முக்கிய காரணமாகும். மேலும் மகிந்த ராஜபக்ஷவினுடைய ஆட்சிக்காலத்தில் இடம்பெற்ற தேவையற்ற அரசியலமைப்பு மாற்றங்கள், மகிந்த ராஜபக்ஷவினுடைய குடும்ப ஆட்சி, பாரிய ஊழல், மக்களின் தேவைகளையும் கருத்துக்களையும் கவனத்திலெடுக்காமை, எல்லாம் தங்களுக்குத்தான் சொந்தம் என்ற அடிப்படையிலான சுயநலமான நடத்தைகள் போன்றவையும் தற்போதைய நெருக்கடிக்கு முக்கிய காரணமாகும்.

இவைதவிர 2019ஆம் ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலிலும், 2020ஆம் ஆண்டு இடம்பெற்ற பொதுத்தேர்தலிலும் வாக்களித்த மக்களும்

தற்போதைய நெருக்கடிக்கு முக்கிய காரணமானவர்கள். ஏனெனில் இரு தேர்தலிலும் அறுதிப்பெரும்பான்மை மூலம் மகிந்த ராஜபக்ஷவினுடைய குடும்ப ஆட்சி வருவதற்கு, அவர்களே தனது ஜனநாயக உரிமையான வாக்குரிமையைப் பயன்படுத்தியிருந்தார்கள். வாக்காளப் பெருமக்களே இவர்களினுடைய ஆட்சியைத் தீர்மானித்தார்கள். அவர்களே பிழையான ஆட்சியாளர்களைத் தேர்ந்தெடுத்தார்கள். ஆனால் போராட்டம் வெடித்தபோது, மக்கள், ஆட்சியாளர்கள் ஆகியோரே எல்லாவற்றிற்கும் காரணம், தங்களிற்கும் இந்நெருக்கடிக்கும் எந்தவிதச் சம்பந்தமும் இல்லாததுபோல் அவர்கள் நடித்தார்கள். எனவே 2019ஆம் ஆண்டு மற்றும் 2020ஆம் ஆண்டு தேர்தல்களில் வாக்களிக்கின்றபோதே அவர்கள் சரியாக சிந்தித்து செயற்பட்டிருப்பார்களானால் இந்தப் பிரச்சினை ஏற்படாமலிருப்பதற்கான சாத்தியம் அதிகமாக இருந்திருக்கும். இதுதவிர சர்வதேச அரசியல் சக்திகளும் இந்த நெருக்கடியை தங்களுக்கு சாதகமாகப் பயன்படுத்தி பிரச்சினையை மேலும் தீவிரப்படுத்தின.

இந்நெருக்கடியின் உச்சகட்டத்தில் போராட்டக்காரர்கள் அரசாங்கத்தின் கடும்போக்கை எதிர்த்து அவர்களைப் பதவியிலிருந்து விலகுமாறு கூறி முறைமை மாற்றத்தை வேண்டிப் (System Change) போராடினர். ஆனால், நாடளாவியரீதியில் இடம்பெற்ற இவ் மக்கள் போராட்டமானது, அத்தியாவசியப் பொருட்களான உணவு, எரிபொருள், எரிவாயு, மருந்துப் பொருட்கள், பால்மா, உரம், வளமாக்கிகள் போன்ற பல அத்தியாவசியப் பொருட்களுக்கு காணப்படுகின்ற தட்டுப்பாடுகளாலும் அவற்றின் விலையில் ஏற்பட்ட உயர்வாலும் மக்கள் மத்தியில் விரக்தியேற்பட்டு உருவான போராட்டமாகவே இது ஆரம்பத்தில் விமர்சகர்களால் நோக்கப்பட்டது. பொருட்களுக்கு தட்டுப்பாடான சூழ்நிலை நிலவும்போது அவற்றிற்கான கேள்வி அதிகரிக்கின்ற வேளையில் போராட்டமானது தீவிரமடைவதாகவும் மாறாக பொருட்களின் நிரம்பல் அதிகரிக்கும்போது போராட்டமானது வலுவிழப்பதாகவுமே ஆரம்பத்தில் உணரப்பட்டது. பின்னரே இவ்மக்கள் போராட்டமானது முறைமை மாற்றத்திற்கான (System Change) போராட்டமென போராட்டத்தின் இறுதிக்கட்டத்தில் உணரப்பட்டது. இருப்பினும் முறைமை மாற்றத்தினை வேண்டிய இவ் மக்கள் போராட்டமானது சோசலிசப் புரட்சிக்கான பண்புகளைக் கொண்டிருந்ததாக சிலர் கூறுகின்றனர். உண்மையில் 1971ஆம் ஆண்டு மற்றும் 1989ஆம் இடம்பெற்ற தேர்தலினூடாகத் தெட்டத்தெளிவாக நிரூபிக்கப்பட்ட அரசியல் உண்மை என்னவெனில் சோசலிசப் புரட்சியானது வன்முறை ரீதியானதாகவும் அசாத்தியமானதாகவும் இருக்கவில்லை என்பதாகும். இங்கு மக்கள் போராட்டத்தினூடாக சோசலிச மாற்றத்தினை ஏற்படுத்துவதற்கான ஒரு சிறிய மூலக்கூறு இருந்ததாகக் கருதினாலும், உண்மையில் அந்த அம்சம் காணப்பட்டதா என்பதில் சில வாதப் பிரதிவாதங்கள் காணப்படுகின்றன. போராட்டக்காரர்கள் தேர்தலுக்குப் புறம்பாக, எதற்காக நாம் போராடுகின்றோம் என்பதைப் பற்றிய ஒரு ஒழுங்கான திட்டமிடலின்றி முறைமை மாற்றத்தை மட்டும் வேண்டிப் போராடினார்கள். இவ் மக்கள்

புரட்சியில் தேர்தலினூடான ஒரு ஆட்சி மாற்றத்தை அவர்கள் கோரவில்லை. ஏனெனில் தேர்தலினூடாக உண்மையான முறைமை மாற்றத்தை ஏற்படுத்த முடியாது எனப் போராட்டக்காரர்கள் நன்கு அறிந்திருந்தார்கள். இதனை மக்கள் புரட்சி மூலமாகவே ஏற்படுத்த முடியும் என்ற முனைப்பானது இவர்களிடம் இருந்தது.

## மக்கள் போராட்டத்தினூடாக கிடைத்த வெற்றியும் விளைவுகளும்

ஒன்றுபட்ட மக்கள் புரட்சியின் மூலமாக இறுதியில் போராட்டமானது வெற்றிபெற்றது. மக்களின் தீவிர போராட்டத்தின் மூலமாக ஜனாதிபதியும் பிரதமரும் பதவியினை இராஜினாமாச்செய்து பதவியிலிருந்து விலகினார்கள். அதனைத்தொடர்ந்து ரணில் விக்கிரமசிங்க அவர்கள் கோட்டாபயவைத் தொடர்ந்து அடுத்து ஜனாதிபதியாகப் பதவியை ஏற்றுக்கொண்டார். உண்மையில் ரணில் விக்கிரமசிங்க அவர்களை ஜனாதிபதியாக்கியமைக்குப் பல காரணங்கள் உள்ளன. அதாவது ரணில் விக்கிரமசிங்க அவர்கள், ராஜபக்ஷ குடும்பத்தினுடைய நண்பர் என்பதால் சட்டரீதியாகவும், சமூகரீதியான பிரச்சினைகளிலிருந்தும் காப்பாற்றுவார் என்ற நம்பிக்கையாகும். ராஜபக்ஷ குடும்பத்திற்கு வெளியிலிருந்து ஒரு உறுப்பினரைக் கொண்டுவரும் அளவிற்கு மகிந்த ராஜபக்ஷ எந்த உறுப்பினர் மீதும் நம்பிக்கை கொண்டிருக்கவில்லை மற்றும் ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருப்பாராகவிருந்தால் ராஜபக்ஷ குடும்பத்தினால் தொடர்ந்தும் பொதுஜனப் பெரமுனவைக் கட்டுப்படுத்தக்கூடிய வாய்ப்பிருக்கும் (மாறாக டளஸ் அழகப்பெரும ஜனாதிபதியாக வந்தால், தற்போதைய பொதுஜனப் பெரமுன டளஸ் அழகப்பெருமவினுடைய கட்டுப்பாட்டின் கீழ் இருக்கும். அதன் காரணமாகவே பொதுஜனப் பெரமுன, டளஸ் அழகப்பெருமவிற்கு வாக்களிக்கவில்லை போன்றனவே உண்மையான காரணங்களாகும். மறுபுறம் தற்போது ஜனாதிபதியாக உள்ள ரணில் விக்கிரமசிங்கவும் 2020ஆம் ஆண்டுப் பொதுத்தேர்தலில் பாரிய வெற்றியீட்டி அறுதிப்பெரும்பான்மையுடன் ஆட்சிக்கு வந்த பொதுஜனப் பெரமுனவினை இலகுவில் ஆட்சியிலிருந்து கலைக்க முடியாததால் அவர்களின் (SLPP) செல்வாக்கிற்கு உட்பட்டு அவர்களோடு இசைந்து நடக்கவேண்டிய போக்கும் காணப்படுகின்றது.

இருப்பினும் தற்போதைய நிறைவேற்றதிகாரங்கொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்கள் எதிர்வரும் வருடம் (2023இல்) பெப்ரவரி மார்ச் மாதமளவில் பாராளுமன்றத்தைக் கலைப்பதற்கான வாய்ப்பு பெருமளவில் காணப்படுகின்றது. ஏனெனில் இறுதியாகக் கொண்டுவரப்பட்ட 20வது திருத்தச் சட்டத்தினூடாக இரண்டரையாண்டுகளுக்குப் பின்னர் பாராளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு. எனவே அவ்வதிகாரத்தைப் பயன்படுத்தி பாராளுமன்றத்தைக் அவர் கலைக்கலாம். அவ்வாறு 2023ஆம் ஆண்டு பெப்ரவரி மார்ச் மாத அளவில் பாராளுமன்றம் கலைக்கப்பட்டு பொதுத் தேர்தல் நடைபெற்றால்

நிச்சயமாக பொதுஜனப் பெரமுனவினுடைய கட்டுப்பாடு பலவீனமடையும், ஐக்கியதேசியக் கட்சி நிச்சயம் தேர்தலில் வெற்றிபெறும், அதிஷ்டவசமாக ரணில் விக்கிரமசிங்கவின் கட்சி பெரியளவிலான வாக்குகளைப் பெற்று அரசாங்கத்தை அமைக்குமாகவிருந்தால் தனக்கான மந்திரிசபையையும் 2024 ஜனாதிபதித்தேர்தலில் தானே வெற்றிபெறுவதற்கான வாய்ப்பாக அதனைப் பயன்படுத்தவும் அவரால் முடியும்.

எனவே, இலங்கையானது தற்போதைய பொருளாதார நெருக்கடியினைத் தனித்துத் தீர்வுகாண முடியாதளவிற்கு பாரிய வங்குரோத்து நிலையினை அடைந்திருப்பதால் அது IMF இனுடைய உதவியினை நாடுவதே பொருத்தமானதாக அமையும். IMF இடமிருந்து கடன் உதவியைப் பெறுவதற்காக அதனுடன் ஒரு இணக்கப்பாட்டிற்கு வருவது மிகவும் அவசியமானதாகும். நாட்டினை நெருக்கடி நிலையிலிருந்து மீட்டெடுப்பதற்கும் கடன் மீள்கட்டமைப்பினைச் செய்வதற்கும் IMFஇனுடைய உதவியை நாடுவதே சிறந்த வழியாகும். அந்தவகையில் ஆட்சி மாற்றத்தினால் தற்போது ஜனாதிபதியாகவுள்ள ரணில் விக்கிரமசிங்க பதவிக்கு வந்திருப்பது, IMF உடனான உறவை சுமூகமாக முன்னெடுத்துச்செல்ல உதவியாக அமையும். மாறாக, டளஸ் அழகப்பெரும அதிகம் இடது சாரிக் கொள்கைகளைக் கொண்டிருப்பதால், அவர் ஜனாதிபதியாக வந்திருந்தால் IMF உடனான இணக்கமானது சாத்தியமாக அமையாது. ஆனால் ரணில் விக்கிரமசிங்க அவர்கள் வலதுசாரி மேற்கத்தேய சிந்தனைகளைக் கொண்டிருப்பதனால் IMF உடனான இணக்கமானது சமூகமாக அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. IMF ஆனது நாடுகளிற்கு கடன்வழங்கும்போது பல நிபந்தனைகளுடனேயே கடன்வழங்கும். அந்தவகையில் IMF ஆனது பொதுச்செலவுகளைக் குறைத்தல், இலவச சுகாதார மற்றும் கல்வி வசதி தொடர்பான பொதுநலத்திட்டங்கள் மீதான நலன்புரிச் செலவினங்களைக் குறைத்தல், வரி வீதத்தை அதிகரித்தல், வட்டிவீதத்தைக் கூட்டுதல் போன்ற பல நிபந்தனைகளுடன் இலங்கைக்குக் கடன் வழங்க இணங்கியுள்ளனர். அந்நிபந்தனைகளுக்குக் கட்டுப்பட்டு ரணில் விக்கிரமசிங்க அவர்கள் செயற்படுகின்றபோது, அதற்கான மக்களினுடைய ஆதரவு குறைவதற்கும் மக்கள் மத்தியில் எதிர்ப்பு அதிகரிப்பதற்குமான சந்தர்ப்பம் ஏற்படும். அதனை தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்கள் எவ்வாறு கையாள்வார்கள் என்பதைப் பொறுத்து இருந்துதான் பார்க்கவேண்டும்.

## அத்தியாயம் 17

# இலங்கையின் தற்போதைய நெருக்கடியினை சமாளிக்க வெளிநாட்டு நேரடி முதலீட்டின் வகிபங்கு

# Role of Foreign Direct Investment to Overcome the Current Crisis in Sri Lanka

**Dr. (Mrs.). K. Ravinthirakumaran,**
Senior Lecturer,
Department of Business Economics,
Faculty of Management and Finance,
University of Colombo.

(21.09.2022 அன்று நடைபெற்ற நிகழ்நிலைக் கருத்தரங்கின் தொகுப்பு)

## அறிமுகம்


வெளிநாட்டு நேரடி முதலீடு என்பது ஒரு வெளிநாட்டு நிறுவனம் ஒன்று இன்னொரு நாட்டில் முதலீடு செய்து அந்நிறுவனத்தினை முகாமை செய்தல் என எளிமையாகக் குறிப்பிடலாம். வெளிநாட்டு நேரடி முதலீடானது ஒரு நாட்டிற்கு பல காரணங்களினால் தேவைப்படுகின்றது. வெளிநாட்டு நேரடி முதலீடானது ஒரு கடன் வடிவில் அல்லாத உள்நாட்டுப் பாய்ச்சலாக அமைகின்றது. ஆகவே எல்லா நாடுகளும் இதனை விரும்புகின்றன. வெளிநாட்டு முதலீடானது தொழில்நுட்ப பரிமாற்றங்களை தூண்டுவதாக அமைகின்றது. மனித மூலதன உருவாக்கத்திற்கு உதவுகின்றது. அதாவது இது கல்வி வடிவிலான கற்கை நெறிகளாகவோ அல்லது தொழில்சார்ந்த பயிற்சிகளை வழங்குவதாகவோ காணப்படலாம். சர்வதேச ஒருங்கிணைப்புக்கு பங்களிப்புச் செய்கின்றது. அதாவது ஏற்றுமதி இறக்குமதி என்ற ரீதியில் சர்வதேச வர்த்தகத்துடன் தொடர்புடைய ஒருங்கிணைப்புகளுக்கு வழிவகுக்கின்றது. மேலும் உற்பத்தித் திறன் மற்றும் போட்டித் தன்மையினையும் இது அதிகரிக்கின்றது. வளங்களின் செயற்திறன் மற்றும் புதுமைகளை ஊக்குவிக்கின்றது. இந்த வகையில் வெளிநாட்டு முதலீடானது பல நன்மைகளை நாடுகளுக்கு வழங்குகின்றது என்பது ஒரு பொதுவான அபிப்பிராயமாகக் காணப்படுகின்றது.

எவ்வாறாயினும் எந்தவொரு விடத்தினை கருத்திற்கொண்டாலும் அதில் இரு பக்கங்கள் காணப்படும். அதாவது அனுகூலங்கள் இருந்தால் அங்கு பிரதிகூலங்களும் காணப்படும். அந்த வகையில்தான் வெளிநாட்டு முதலீட்டின் மூலமான பிரதிகூலங்களினையும் அவதானிக்கலாம். உயர்ந்த தொழில்நுட்பத்தினால் உள்ளூர் முயற்சியாளர்கள் பாதிப்படைகின்றார்கள். உயர் தொழில்நுட்பமானது அதிகளவு மூலதனத்தைக் கொண்டு உருவாக்கப்பட்டிருக்கும். உள்ளூர் முயற்சியாளர்களால் இந்த அதிகளவு மூலதனத்தை பெறமுடியாத

நிலையில் தமது தொழிலை மூட வேண்டிய நிலை ஏற்படுகிறது. இது வேலையின்மைக்கு வழிவகுக்கிறது.

மீள்செலுத்துகை, மீள் முதலீடு மற்றும் எவ்வாறு இலாபங்களைப் பகிர்தல் ஆகியவற்றில், எந்த நாட்டுக்கு முதலீடு வருகின்றதோ அந்த நாட்டினால் முழுமையான கட்டுப்பாட்டினை ஏற்படுத்த முடியாத நிலை காணப்படும். மேலும் வெளிநாட்டு நேரடி முதலீட்டினை நாம் கூடுதலாகப் பெறும் போது நாம் அந்த வெளிநாட்டு நிறுவனத்தில் தங்கியிருக்கின்ற தன்மை காணப்படுகின்றது. பல்தேசிய நிறுவனங்கள் சிலவேளைகளில் தேவையற்ற அரசியல் அழுத்தங்களை ஏற்படுத்த முனையக்கூடும். மேற்படி சுட்டிக்காட்டப்பட்ட பிரதிகூலங்கள் நாட்டுக்கு நாடு வேறுபடுபவையாகக் காணப்படும். அதாவது எல்லா நாடுகளிலும் இந்த பிரதிகூலங்களை காணமுடியாது. சில நாடுகளில் இப்பிரதிகூலங்கள் அதிகமாகக் காணப்படலாம். சில நாடுகளில் குறைவாகக் காணப்படலாம். எப்படியாயினும் வெளிநாட்டு முதலீட்டின் மூலம் கிடைக்கின்ற நன்மைகள் அதிகம் என்றே குறிப்பிடலாம். ஏனென்றால் அதிகளவு நன்மைகள் கிடைப்பதனால்தான் நாடுகள் அதனை தமது நாடுகளில் குவிக்க முயல்கின்றன. இதனை பின்வரும் வரைபடம் 1 மூலம் காட்டலாம்.

**வரைபடம் 1: வெளிநாட்டு நேரடி முதலீட்டின் உட்பாய்ச்சல்கள் (மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விகிதமாக): வருமான ரீதியாக உலகப்பொருளாதாரங்கள் (1973 – 2020)**




**மூலம்: உலக வளர்ச்சி குறிகாட்டிகள், 2022**

அதிக வருமானம் பெறும் நாடுகள், உயர் மத்திய வருமானம் பெறும் நாடுகள், குறைந்த மத்திய வருமானம் பெறும் நாடுகள் மற்றும் குறைந்த வருமானம் பெறும் நாடுகள் என உலக வங்கியானது நாடுகளை நான்கு வகையாக வகைப்படுத்தியுள்ளது. இந்த நான்கு வகையான நாடுகளிலும் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வெளிநாட்டு நேரடி முதலீட்டின் பங்கு காணப்படுகின்றது.


வரைபடம் 1இல், ஆரம்ப காலகட்டங்களில் அதாவது 1973ஆம் ஆண்டு தொடக்கம் 1990ஆம் ஆண்டு வரையிலும் 1இற்குக் குறைவாக இந்த விகிதாசாரம் காணப்பட்டாலும் பின்னர் அதிகரித்துச் செல்கின்ற நிலை காணப்படுகின்றது. மிகவும் அண்மிய கால கட்டங்களில் அவதானிக்கும் போது உயர்வருமானம் பெறும் நாடுகளில் இந்த விகிதாசாரம் குறைவடைந்து செல்கின்ற அதேவேளை குறைந்த வருமானம் பெறும் நாடுகளில் இதன் பங்களிப்பு கிட்டத்தட்ட 3 வீதமாகக் காணப்படுகின்றது.

## இலங்கைக்கு ஏன் வெளிநாட்டு நேரடி முதலீடு அவசியம்?

ஒரு நாட்டின் முதலீட்டினைத் தீர்மானிப்பதில் சேமிப்பின் பங்கு முக்கியமானது. எந்த நாட்டில் சேமிப்பு அதிகமாக இருக்கின்றதோ அந்த நாட்டில் முதலீடு அதிகமாகக் காணப்படும் என்பது கோட்பாட்டு ரீதியான விளக்கமாகும். இலங்கையில் 1970இல் இருந்து இன்றுவரையிலும் (1970ஆம் ஆண்டு தவிர) சேமிப்புக்கள் குறைவாகவும் முதலீடுகள் அதிகமாகவும் காணப்படுகின்றது.

எனவே சேமிப்பு முதலீட்டு இடைவெளி என்பது காணப்படுகின்றது. ஒரு நாட்டுக்கு முதலீடு போதாமல் இருக்கின்ற போது முதலீட்டினை அதிகரிக்க வேண்டுமானால் நாம் கடன் பெற வேண்டும் அல்லது இன்னொரு நாட்டில் இருந்து முதலீட்டினைப் பெற வேண்டும். அந்த வகையிலேதான் இலங்கைக்கு வெளிநாட்டு நேரடி முதலீடு என்பது தேவையாக இருக்கின்றது. ஏனெனில் உள்ளூர் முதலீடு என்பது போதிய அளவில் காணப்படவில்லை. இலங்கைக்கான மொத்த வெளிநாட்டுக்கடன் நிலைமையினை வரைபடம் 2 மூலம் அறிந்து கொள்ளலாம்.

**வரைபடம் 2: இலங்கையில் மொத்த வெளிநாட்டுக்கடன் (மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விகிதமாக): 1970 – 2020**





**மூலம்: இலங்கை மத்திய வங்கி, 2021**

மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வீதமான மொத்தக் கடன் என்பது 1970ஆம் ஆண்டு 18.3 சதவீதமாக இருந்து 2020இல் 60.5 சதவீதமாகக் காணப்படுகின்றது. எனவே பொதுவாக அதிகரித்துச் செல்லும் போக்கினைக் கொண்டு காணப்படுகின்றது. இந்தக் கடனினை திருப்பிச் செலுத்துவதற்காகவே இன்று எமது நாடு சர்வதேச நாணய நிதியத்திடம்

கடன் வாங்கும் நிலையில் உள்ளது. இந்தக் கடனினை குறைப்பதற்காக நாம் வெளிநாடுகளிடம் இருந்து முதலீட்டைக் கொண்டு வர வேண்டிய தேவை எழுகின்றது. அதாவது கடன் வடிவில் இல்லாத வெளிநாட்டு நேரடி முதலீடு தேவைப்படுகின்றது. இலங்கையின் இரட்டைப் பற்றாக்குறையினை (Twin Deficit) விளக்குவதாக வரைபடம் 3 காணப்படுகின்றது.

**வரைபடம் 3: இலங்கையில் இரட்டைப் பற்றாக்குறை (1970 – 2020)**




**மூலம்: இலங்கை மத்திய வங்கி, 2021**


இரட்டைப் பற்றாக்குறை என்பது ஒரு நாட்டில் ஒரே நேரத்தில் காணப்படும் நடைமுறைக்கணக்கு பற்றாக்குறை மற்றும் இறை பற்றாக்குறையினை குறித்து நிற்கிறது. இலங்கையில் இறை நிலுவையினைப் பொறுத்தவரையில் 1970ஆம் ஆண்டு காலகட்டத்தில் இருந்து இன்று வரை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விகிதாசாரமாக எதிர்க்கணிய பெறுமதியிலேயே காணப்படுகின்றது.

இதனை நிவர்த்தி செய்ய வேண்டுமானால் இலங்கை செலவினைக் குறைக்க வேண்டும் அல்லது வரவினை அதிகரிக்க வேண்டும். வரவினை அதிகரிப்பதற்கு பல வழிகள் இருக்கின்றன. அதில் மிக முக்கியமான ஒரு வழிதான் வெளிநாடுகளில் இருந்து வெளிநாட்டு நேரடி முதலீட்டினை பெறுவதாகும். இதன் மூலம் கிடைக்கின்ற வருமானம், இறை நிலுவையில் ஒரு சாதகமான தன்மையினை ஏற்படுத்தும்.

அடுத்து நடைமுறைக் கணக்கு நிலுவையினைப் பொறுத்தவரையில் 1970ஆம் ஆண்டு தொடக்கம் 2020 வரையில் (1977ஆம் ஆண்டு தவிர) மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விகிசாரமாக அதன் பெறுமதி எதிர்க்கணியத்தில் காணப்படுகின்றது. இறக்குமதிகள் ஏற்றுமதியினை விட அதிகரிக்கின்ற போது இது பாதகமான நிலைக்குச் செல்கின்றது. அத்துடன் வெளிநாட்டு இருப்பிலும் குறைப்பு ஏற்படுகின்றது. வெளிநாட்டு

நேரடி முதலீடுகள் ஏற்றுமதியினை ஊக்குவிக்கும் நிலையில் அமைகின்ற போது, (ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயங்கள்) அது வர்த்தக நிலுவையில் சாதக நிலைமையினை ஏற்படுத்துவது மட்டுமல்லாமல் வெளிநாட்டு இருப்பிலும் ஒரு அதிகரிப்பினை ஏற்படுத்துவதற்கு வாய்ப்புள்ளது. சார்க் (SAARC) நாடுகளில் வெளிநாட்டு நேரடி முதலீட்டின் உட்பாய்ச்சல்களின் போக்கு எவ்வாறு சென்றுள்ளது என்பதனை வரைபடம் 4 இல் காணக்கூடியதாக உள்ளது.

**வரைபடம் 4: சார்க் (SAARC) நாடுகளில் வெளிநாட்டு நேரடி முதலீட்டின் உட்பாய்ச்சல்கள் (மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விகிதமாக): 2002 – 2020**





**மூலம்: உலக வளர்ச்சிக் குறிகாட்டிகள், 2022**

தெற்காசிய நாடுகளிடையே தாராளமயமாக்கல் கொள்கையினை அறிமுகப்படுத்திய முதல் நாடு என்ற பெருமை இலங்கைக்கு உண்டு. சார்க் நாடுகளில் ஒன்றான மாலைதீவு நாட்டினைப் பொறுத்தவரையில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விகிதாசாரமாக வெளிநாட்டு நேரடி முதலீட்டின் உட்பாய்ச்சலானது 2019இல் 17 சதவீதமாகக் காணப்படுகின்றது (உலக வளர்ச்சிக் குறிகாட்டிகள், 2022).

இலங்கையினைப் பொறுத்தவரையில் இவ்வீதமானது மிகவும் குறைவாகக் (0.88%) காணப்படுகின்றது. தாராளமயமாக்கல் கொள்கையினை அறிமுகப்படுத்திய இலங்கை இவ்வாறான நிலையினை அடைவதற்கு காரணம் என்ன என்பதை ஆராய வேண்டியிருக்கின்றது. இலங்கையின் வெளிநாட்டு நேரடி முதலீட்டு பாய்ச்சலின் போக்கினை வரைபடம் 5 காட்டி நிற்கிறது.

**வரைபடம் 5: இலங்கையில் வெளிநாட்டு நேரடி முதலீட்டுப் பாய்ச்சல் (மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விகிதமாகவும் US $ மில்லியனிலும்): 1970 - 2020**




**மூலம்: உலக வளர்ச்சி குறிகாட்டிகள், 2022**


1977ஆம் ஆண்டின் திறந்த பொருளாதாரக் கொள்கையுடன் வெளிநாட்டு நேரடி முதலீட்டின் பங்கு இலங்கையில் இன்றுவரை அதிகரித்துக் கொண்டு செல்லும் போக்கினைக் கொண்டிருக்கின்றது. ஆனாலும் 1983இல் ஏற்பட்ட இனக்கலவரம் இதில் ஒரு வீழ்ச்சியினை ஏற்படுத்தியது. 1983ஆம் ஆண்டுக்கு முன்னர் மோட்டோரோலா மற்றும் ஹரிஸ் போன்ற நிறுவனங்கள் (Motorola and Harris Corporation) ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயங்களில் முதலிடத் திட்டமிட்டிருந்தன. இவை தவிர மருபேன, சொனி, சன்யோ, டோக்கியோ வங்கி உட்பட 1980களின் முற்பகுதியில் முதலீடுகளை மேற்கொண்டிருந்தன. ஆனால் இனக்கலவரத்துடன் இம்முதலீடு மீளவும் கொண்டு செல்லப்பட்டது (Kelegama, 2000) எமது நாட்டில் தொடர்ந்து காணப்பட்ட யுத்த நிலை வெளிநாட்டு நேரடி முதலீட்டில் ஏற்ற இறக்கங்களை அவ்வப்போது ஏற்படுத்தியிருந்தது. 2009ஆம் ஆண்டு யுத்த நிறைவுக்குப் பின்னர் வெளிநாட்டு நேரடி முதலீட்டின் விகிதாசாரம் என்பது பாரிய அளவில் அதிகரித்துச் செல்கின்ற போக்கினைக் கொண்டிருந்தது. 2018இல் உச்ச நிலையானது எட்டப்பட்டிருந்தது. 2019இற்குப் பிறகு கொவிட்-19 அசாதாரண சூழ்நிலை காரணமாக இலங்கை மட்டுமன்றி உலக நாடுகள் அனைத்திலும் வெளிநாட்டு முதலீட்டில் வீழ்ச்சி நிலையானது காணப்பட்டது.

## இலங்கையில் வெளிநாட்டு நேரடி முதலீட்டினை மேற்கொள்ளும் நாடுகள்

எமது நாட்டில் முதலீட்டினை மேற்கொள்ளும் முதல் 10 நாடுகளை தரவரிசை அடிப்படையில் வகைப்படுத்தினால் அதில் முதன்மை இடத்தினைப் பெறுவது சீனாவாகும். இரண்டாவது ஹொங் ஹொங்

ஆகும். அதில் மூன்று, நான்கு மற்றும் ஐந்து இடங்களினைப் பெறுகின்ற நாடுகள் முறையே இந்தியா, ஐக்கிய இராச்சியம் மற்றும் மலேசியா ஆகும் (முதலீட்டுச்சபை, 2020). இந்தியா மற்றும் சீனா போன்ற இரண்டு வல்லரசு நாடுகளுடனும் இலங்கை வெளிநாட்டு நேரடி முதலீட்டினை அதிகளவு பேணி வருகின்றது. அண்மிய நாடாகவும் புவியியல் ரீதியாக நெருக்கமுடைய நாடாகிய இந்தியாவுடன் சுமூகமான உறவினைப் பேணி வெளிநாட்டு முதலீட்டினை பெற வேண்டிய தேவைப்பாட்டினை இலங்கை நாடானது கொண்டிருக்கின்றது. துறைவாரியான வெளிநாட்டு நேரடி முதலீட்டின் பங்கினைக் காட்டுவதாக வரைபடம் 6 அமைகின்றது.

**வரைபடம் 6: துறைவாரியான வெளிநாட்டு நேரடி முதலீடு (2010 – 2019)**




**மூலம்: முதலீட்டுச்சபை, 2020**

## துறை ரீதியில் வெளிநாட்டு நேரடி முதலீட்டின் பங்கு

இலங்கையில் வெளிநாட்டு நேரடி முதலீடானது 11 துறைகளில் முதலீடு செய்யப்பட்டுள்ளது (முதலீட்டுச்சபை 2020). 2010 தொடக்கம் 2019 வரையிலும் துறைவாரியாக இலங்கையில் வெளிநாட்டு நேரடி முதலீட்டினை நோக்கும் போது, 23 சதவீதமான முதலீடுகள் தயாரிப்புத் துறையில் காணப்படுகின்றது. உட்கட்டமைப்பினைப் பொறுத்தவரையில் 42 சதவீதமான வெளிநாட்டு நேரடி முதலீடுகள் காணப்படுகின்றன. அதாவது தொலைத் தொடர்புத் துறையில் 9 சதவீதமான வெளிநாட்டு நேரடி முதலீடு காணப்படுகின்றது. வீடமைப்பு சொத்து அபிவிருத்தியில்


19 சதவீதமானவை வெளிநாட்டு நேரடி முதலீட்டின் மூலமானவையாகக் காணப்படுகின்றன. துறைமுகக் கொள்கலன் துறை சார்ந்து 14 சதவீதமான வெளிநாட்டு நேரடி முதலீடுகள் காணப்படுகின்றன.

ஹொட்டல்கள் மற்றும் உணவகங்கள் சார்ந்து 11 சதவீதமான வெளிநாட்டு முதலீடுகள் காணப்படுகின்றன. இது சுற்றுலாத்துறையுடன் இணைந்ததாகக் காணப்படுகின்றது. எனவே இதில் இடப்படுகின்ற முதலீடானது சுற்றுலாத்துறைக்கு ஊன்று கோலாக அமையும். மிகவும் அருமை குறைந்த அதாவது ஒரு புறக்கணிக்கப்பட்ட துறையாகவே விவசாயத்துறை காணப்படுகின்றது. 0.42 சதவீதமாகவே விவசாயத்துறையில் வெளிநாட்டு நேரடி முதலீடு என்பது காணப்படுகின்றது. எனவே எதிர்காலத்தில் வெளிநாட்டு நேரடி முதலீட்டினை விவசாயத்துறையிலும் உள்ளிளுத்தல் பொருத்தமானதொன்றாகும். பாரிய முதலீடுகள் என்பது நீண்ட காலத்திற்கு தொடருமா என்பதும் கேள்விக்குறியான விடயமாகவே உள்ளது. உதாரணமாக இலங்கையின் ஹம்பாந்தோட்டை துறைமுகத்தினைக் குறிப்பிடலாம்.

## ஏற்றுமதிச் செயற்பாட்டு வலயங்கள்

இலங்கை முதலீட்டுச் சபையின் கீழ் 12 சுதந்திர வர்த்தக வலயங்களும், 2 கைத்தொழில் பூங்காக்களும் காணப்படுகின்றன. தற்போது முன்மொழியப்பட்ட மூன்று வலயங்களாக மிலேனியா, ஏறாவூர் மற்றும் ஹம்பாந்தோட்டை என்பன காணப்படுகின்றன (முதலீட்டுச்சபை 2020). இதனை வரைபடம் 7 வெளிக்காட்டி நிற்கிறது.

**வரைபடம் 7: முதலீட்டுச்சபையின் கீழ் ஏற்கனவே செயற்படுகின்றதும் முன்மொழியப்பட்டதுமான ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயங்கள்**




**மூலம்: முதலீட்டுச்சபை, 2020**

பெரும்பாலான வலயங்களினைப் பொறுத்தவரையில் அவை கட்டுநாயக்கா விமான நிலையத்தினை அண்மித்ததாக காணப்படுகின்றன. இவை உருவாக்கப்பட்ட காலங்களில் அடிப்படை உட்கட்டுமான வசதிகள் குறைவாகவே இருந்தன. எனவேதான் விமான நிலையத்தினை அண்மித்தவையாக அவை அதிகம் அமைக்கப்பட்டன. இலங்கையின் வடபகுதியில் இதுவரையில் எந்த வலயங்களும் அமைக்கப்படவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. வடக்கினைப் பொறுத்தவரையில் பலாலியில் ஒரு விமான நிலையமும் திருகோணமலையில் ஒரு துறைமுகமும் காணப்படுகின்றது. எனவே இதனைக் கருத்திற்கொண்டு முதலீடுகளை மேற்கொள்ள முடியும். இவ்வாறு எதிர்காலங்களில் வடபகுதியில் முதலீடுகள் மேற்கொள்ளும்போது வெளிநாட்டு நேரடி முதலீட்டில் ஒரு பன்முகப்படுத்தப்பட்ட நிலை உருவாகும்.

## வெளிநாட்டு நேரடி முதலீட்டினை கவருவதற்கான வழிகள்

வர்த்தகக் கொள்கையினை மேலும் தாராளமயமாக்க வேண்டிய தேவை இலங்கைக்கு காணப்படுகின்றது. இதனை பின்வரும் அட்டவணை 1இன் மூலம் அறிந்து கொள்ளலாம். நாடுகளில் வர்த்தகத்தின் திறந்த தன்மையினை அளவிடுவதற்கான குறிகாட்டி பரவலாகப் பயன்படுத்தப்படுகின்றது. இது ஏற்றுமதியினையும், இறக்குமதியினையும் இணைத்து மொத்த உள்நாட்டு உற்பத்தியினுடன் தொடர்புபட்டதாகக் கணிப்பிடப்படுகின்றது.

**அட்டவணை 1: சில நாடுகளின் 2019 இற்கான வர்த்தகத்தின் திறந்த தன்மை**

| நாடு | 2019 இல் வர்த்தகத்தின் திறந்த தன்மை (மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஏற்றுமதி மற்றும் இறக்குமதியின் பங்கு) |
|---|---|
| மலேசியா | 123 |
| மாலைதீவு | 147 |
| சிங்கப்பூர் | 319 |
| இலங்கை | 52 |
| தாய்லாந்து | 113 |
| வியட்னாம் | 210 |
| உலகம் | 55 |

மூலம்: https://ourworldindata.org/grapher/trade-openness?time=2019

இந்த அட்டவணையை நோக்கும் போது 2019ஆம் ஆண்டில் இந்த வர்த்தகத்தின் திறந்த சுட்டெண்ணானது இலங்கையில் 52ஆகக் குறைந்த நிலையிலேயே காணப்படுகின்றது. இதேவேளை மலேசியாவில்

123ஆகவும், மாலைதீவில் சுட்டெண்ணானது 147ஆகவும், சிங்கப்பூர் நாட்டில் இச்சுட்டெண் 319ஆகவும் காணப்படுகின்றது. தாய்லாந்து மற்றும் வியட்னாம் ஆகிய நாடுகளில் முறையே சுட்டெண்ணானது 113, 210 ஆகக் காணப்படுகின்றது. உலக அளவில் நோக்கும் போது அதன் சராசரி 55ஆகக் காணப்படுகின்றது. எனவே இலங்கை உலக வர்த்தகத்தின் திறந்த தன்மை நிலையினை விட குறைந்தளவு நிலையிலேயே வர்த்தகத்தினை திறந்து விட்டிருக்கிறது.

வெளிநாட்டு நேரடி முதலீட்டினை கவருவதற்கான ஒரு வழியாக நிச்சயத்தன்மையுடன் கூடிய கொள்கை முறை காணப்படுகிறது. ஆகவே கொள்கை முறைகளில் ஒரு நிச்சயத்தன்மையினை ஏற்படுத்த வேண்டும். இதனோடு இணைந்த வகையில் முதலீடுகளை உள்ளீர்த்து கொள்கை நிச்சயத்தன்மையடன் கூடிய ஒழுங்குமுறைகளை செயற்படுத்த வேண்டும். இது தொழில் நட்பு ஒழுங்குமுறைகளுக்கு வழிவகுக்கும். அதாவது எளிய வடிவில் தொழில் செய்வது தொடர்பாகவும் நாடுகள் தரநிலைப்படுத்தப்படுகின்றன. அட்டவணை 2இல் சில தெரிவு செய்யப்பட்ட நாடுகளிற்கான இந்த சுட்டெண்ணை காணமுடிகின்றது.

**அட்டவணை 2: சில தெரிவு செய்யப்பட்ட நாடுகளின் 2019 இற்கான எளிதாக தொழில் செய்யும் நிலை**

| நாடு | 2019 இல் எளிதாக தொழில் செய்யும் நிலை (1 = மிகவும் தொழில் நட்பு ஒழுங்குமுறைகள்) |
|---|---|
| நியூசிலாந்து | 1 |
| சிங்கப்பூர் | 2 |
| ஹொங் ஹொங் | 3 |
| டென்மார்க் | 4 |
| தென் கொரியா | 5 |
| இலங்கை | 99 |

**மூலம்: உலக வளர்ச்சி குறிகாட்டிகள், 2022**

இதில் நியூசிலாந்து நாடு 2019ஆம் ஆண்டு முதலாவது இடத்தினைப் பெற்றுள்ளது. சிங்கப்பூர், ஹொங் ஹொங், டென்மார்க் மற்றும் தென் கொரியா ஆகிய நாடுகள் முறையே இரண்டு, மூன்று, நான்கு மற்றும் ஐந்தாவது இடங்களைப் பெற்றுக்கொண்டன. இலங்கை 99ஆவது இடத்தில் காணப்படுகின்றது. எனவே இலங்கை தனது ஒழுங்குமுறைகளிலே மாற்றங்களைக் கொண்டுவர வேண்டும்.

காலத்துக்கு காலம் வேறுபட்ட அரசாங்கங்களின் மாற்றத்துடன் கொள்கைகளிலும் மாற்றங்கள் ஏற்படுவதனால் கொள்கைகளின் உறுதித்தன்மையிலும் மாற்றங்கள் எற்பட்டு வருகின்றன. எனவே இதனை மாற்றியமைக்க வேண்டும். மேலும் நாட்டின் அரசியலில் நிலைத்தன்மையினையும், பொருளாதாரத்தில் உறுதித்தன்மையினையும்

பேண வேண்டியது அவசியமாகும். அப்போதுதான் வெளிநாட்டு நேரடி முதலீடுகளை அதிகளவு கவர முடியும். இறுதியாக எமது பொருளாதாரத்தினை போட்டித்தன்மை உடையதாக உயர்த்துவதற்கு சில கட்டமைப்பு சீர்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும். போட்டித்தன்மை காணப்படும் போதுதான் வெளிநாட்டு முதலீட்டாளர்கள்கள் ஆர்வமாக எமது நாட்டில் முதலீடு செய்ய முன்வருவார்கள்.

## உசாத்துணை

Kelegama, S. (2000), Development in Independent Sri Lanka: What Went Wrong? Economic and Political Weekly, 35 (17), 1477-1490. https://ourworldindata.org/grapher/trade-openness?time=2019

இலங்கை மத்திய வங்கி, 2021

உலக வளர்ச்சி குறிகாட்டிகள், 2022

முதலீட்டுச்சபை, 2020

## அத்தியாயம் 18

# இலங்கையின் பொருளாதார நெருக்கடியினால் ஏற்பட்டுள்ள வறுமை மற்றும் ஊட்டச்சத்துக் குறைபாடு

# Poverty and Malnutrition Caused by Economic Crisis in Sri Lanka

**Dr. (Mrs.). Jeyapraba Suresh,**
Senior Lecturer,
Department of Economics,
Faculty of Commerce and Management,
Eastern University, Sri Lanka.

**Dr. (Mrs.). Vaithehi Rajeevan Francis**
Department of Pathophysiology,
Faculty of Health – Care Sciences,
Eastern University, Sri Lanka

(05.10.2022 அன்று நடைபெற்ற நிகழ்நிலைக் கருத்தரங்கின் தொகுப்பு)

## அறிமுகம்

இலங்கையின் இன்றைய பொருளாதாரச் சூழ்நிலையில் வறுமை தொடர்பான வாதங்கள் மிகமுக்கிய இடத்தைப் பிடித்துள்ளன. இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடியானது வறுமையை அதிகரித்துள்ளது. இது தொடர்பான சரியான புள்ளிவிபரங்கள் இல்லாதுவிடினும் ஆய்வாளர்கள் மற்றும் பொருளியல் அறிஞர்களின் எதிர்வுகூறல்கள், நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடி ஆகியவை வறுமை அதிகரிப்பதற்கான வாய்ப்புக்களைத் தூண்டியுள்ளதாகக் கருதப்படுகின்றது. அதேநேரம் சாதாரண மக்களும் இந்நெருக்கடி நிலைமையினால் வறுமை நிலமைக்குத் தள்ளப்பட்டுள்ளனர் என்பதனை விளங்கிக்கொள்ளக் கூடியதாக உள்ளது. அந்தவகையில் இக்கட்டுரையானது வறுமை தொடர்பானதொரு புரிதலை ஏற்படுத்தும் வகையில் பின்வரும் விடயங்களை உள்ளடக்கியதாகக் காணப்படுகின்றது.

- வறியவர்கள் என்று குறிப்பிடப்படுபவர்கள் யார்?
- சர்வதேச வறுமைநிலை எவ்வாறு காணப்படுகின்றது?
- இலங்கையில் வறுமைநிலை எவ்வாறு காணப்படுகின்றது?
- வறியவர்களுக்கான இயல்புகள் எவை?
- இலங்கையின் சமகால நெருக்கடியானது எவ்வாறு வறுமைக்கு இட்டுச் சென்றிருக்கின்றது?
- குறிப்பாக வறுமையானது போசாக்கின்மையில் எவ்வாறான தாக்கத்தினை ஏற்படுத்தியிருக்கின்றது?

வறியவர்களை வரைவிலக்கணப்படுத்துவதற்காக வறுமைக்கோடு (Poverty Line) எனும் அளவுகோல் பயன்படுத்தப்படுகின்றது. நாடுகள் தங்களுக்கிடையே தனிப்பட்ட முறையில் வறுமையை அளவீடு செய்துகொள்வதற்காக தேசிய வறுமைக்கோட்டினை (National Poverty Line) பயன்படுத்துகின்றன. சர்வதேச ரீதியாக வறுமையினை அளவிடுவதற்கு சர்வதேச வறுமைக்கோட்டினை (International Poverty Line) உலகவங்கியானது வரையறை செய்துள்ளது. வறுமைக்கோடு என்பதனால் குறிப்பிடப்படுவது யாதெனில், ஒரு மனிதன் தனது அடிப்படைத் தேவைகளை பூர்த்திசெய்து கொள்வதற்கு தேவையான குறைந்தபட்ச செலவுத்தொகை ஆகும். அதிலும் குறிப்பாக ஒரு மனிதன் தனக்குத் தேவையான அடிப்படை போசாக்கிற்காக 2030kg கலோரிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும். அதனைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலையும் வறுமைக்கு இட்டுச் செல்லும். அதுதவிர்ந்து உணவல்லாத் தேவைகளையும் (Non-food) சேர்த்து அதாவது வீடு, உடை, என்ற அடிப்படையில் வறுமைக் கோடு உருவாக்கப்படுகின்றது. அந்தவகையில் உத்தேச வறுமைக்கோட்டிற்கு கீழே இருப்பவர்கள் அல்லது இத்தகைய அடிப்படைத் தேவைகளைப் பூர்த்திசெய்துகொள்ள முடியாத அனைவரையும் வறியவர்கள் என அடையாளப்படுத்த முடியும்.

அந்தவகையில் சர்வதேச வறுமைக்கோட்டின் (International Poverty Line) அடிப்படையில், நாளொன்றிற்கு நுகர்வுக்காக US $ 1.90இற்கும் குறைவாக செலவிடுகின்ற அனைவரும் வறுமைக்கோட்டிற்கு கீழ் இருப்பவர்களாகக் கருதப்பட்டனர். இந்த வருடம் கடந்த ஏப்ரல் மாதம் வரையிலும் US $ 1.90ஆக சர்வதேச வறுமைக்கோடு காணப்பட்டது. ஆனால் தற்போது ஏப்ரல் மாதத்திற்குப் பின்னர் சர்வதேச வறுமைக்கோடானது US $ 2.15ஆக உயர்த்தப்பட்டுள்ளது. சர்வதேச சந்தையில் ஏற்பட்ட விலை அதிகரிப்பு காரணமாகவே இந்த மாற்றம் ஏற்பட்டுள்ளது எனலாம். மேலும் ஒவ்வொரு நாடும் அந்த நாட்டினது விலை வேறுபாட்டிற்கமைய தேசிய வறுமைக்கோட்டைக் கணிப்பிடும்.

சர்வதேச ரீதியில் வறுமையின் நிலையினைப் பார்ப்போமாயின் 2021ஆம் ஆண்டு உலக சனத்தொகையில் 698 மில்லியன் மக்கள் 1.90 டொலருக்கு குறைவாக செலவிடுகின்றவர்களாக வறுமைக்கோட்டிற்கு உட்பட்டு வாழ்கின்றனர். இது உலக சனத்தொகையில் 9 வீதமாகும். இது தீவிர வறுமையாகக் (Extreme Poverty) கருதப்படுகின்றது. US $ 3.20 மற்றும் US $ 5.50 போன்ற வறுமைக் கோடுகளும் அடுத்தடுத்த நிலைமைகளைக் காட்டுகின்ற வறுமைக்கோடுகளாக குறிப்பிடப்பட்டுள்ளன. அந்தவகையில் நாளொன்றுக்கு US $ 3.20 வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளவர்கள் உலக சனத்தொகையில் 1/5 பகுதியினராகவும் US $ 5.5இற்கு கீழே இருப்பவர்கள் 2/5 பகுதியினராகவும் கருதப்படுகின்றனர்.

உலக வறுமையினுடைய போக்குக் குறித்து ஆராயுமிடத்து அது தொடர்ந்து குறைந்துகொண்டு செல்கின்ற நிலைமையினை அவதானிக்க முடிகின்றது. தற்பொழுது சர்வதேச வறுமையானது சராசரியாக 50 வீதத்தால் குறைவடைந்திருக்கின்றது. அதாவது 2010இல் 1125 மில்லியனாக இருந்த வறியவர்கள் 2020இல் 740 மில்லியனாகக் குறைவடைந்துள்ளனர். அந்தவகையில் உலக வறுமையானது 16 வீதத்திலிருந்து 9 வீதமாகக் குறைவடைந்து இருப்பதனைக் காணலாம். இருப்பினும் 2019 மற்றும் 2020 காலப்பகுதிகளில் அவதானிக்கும் போது உலக சனத்தொகையில் கிட்டத்தட்ட 50 மில்லியன் மக்கள் தீவிர வறுமைக்குள் (Extreme Poverty) சென்றுள்ளனர். இதற்கு பிரதான காரணமாக கொரோனா பெருந்தொற்று (Covid-19 Pandemic) மற்றும் உலக கொருளாதாரத்தில் ஏற்பட்ட வீழ்ச்சி என்பனவற்றைக் குறிப்பிடலாம்.

ஐக்கிய நாடுகள் சபையானது வறுமையைக் குறைப்பதனை தனது பிரதான நிகழ்ச்சிநிரலாகக் கொண்டுள்ளது. இதன் காரணமாக எதிர்காலத்தில் உலக வறுமையானது குறைவடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இந்தவகையில் 2026இல் 6 வீதமாக வறுமை குறைவடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. எதிர்பாரா அதிர்வுகள் பொருளாதாரத்தைப் பாதிக்காவிடில் இந்த எதிர்பார்க்கை சாத்தியப்படும் என நம்பப்படுகின்றது. ஐக்கிய நாடுகள் சபையின் நிலைபேறான அபிவிருத்திக் குறிகாட்டிகளில் வறுமை மிக முக்கிய இடம் பிடித்திருக்கின்றது. இதன் முதலாம் மற்றும் இரண்டாம் இலக்குகள் இதனை தெளிவாக வெளிப்படுத்துகின்றன. அதேபோல் உலக உணவு நிகழ்ச்சித்திட்டம் (WFP) மற்றும் உலக சுகாதார ஸ்தாபனம் (WHO) ஆகியவற்றின் நிகழ்ச்சித்திட்டங்களிலும் வறுமையினைக் குறைத்தல் என்னும் எண்ணக்கரு மிக முக்கிய இடம் பிடித்துள்ளது.

பிராந்திய ரீதியாக பார்க்கும் போது இந்தியா, சீனா என்பன வளர்ந்துவரும் பொருளாதாரங்களாகக் காணப்படுவதனால் இந்நாடுகளில் வறுமையானது கடந்த தசாப்தத்தில் குறைந்து செல்வதனைக் காணலாம். அந்தவகையில் 407 மில்லியன் மக்கள் இவ்விரு நாடுகளில் வறுமையிலிருந்து விடுபட்டுள்ளனர். அதேநேரம் உப சஹாரா (Sub-Saharan) நாடுகள் மிகவும் வறுமைகூடிய நாடுகளாக காணப்படுகின்றன. அந்தவகையில் உப சஹாரா பிராந்தியத்தில் 2010 - 2020 காலப்பகுதிகளில் 26 நாடுகளில் வறுமை அதிகரித்துக் காணப்படுவதாக குறிப்பிடப்படுகின்றது. குறிப்பாக அங்கோலா, கொங்கோ, தென்சூடான் போன்ற நாடுகளில் வறுமை பாரியளவில் அதிகரித்துள்ளதாக குறிப்படப்படுகின்றது. 2010ஆம் ஆண்டில் உலக வறியவர்களில் 37 வீதமானோர் இந்நாடுகளில் காணப்பட்டதுடன் 2021இல் அது 66 சதவீதமாக அதிகரித்துக் காணப்பட்டது. யுத்தம் மற்றும் முரண்பாடுகள் போன்ற பல்வேறு காரணங்களினால் உலக வறியவர்கள் சனத்தொகையில் 66 வீதமான வறியவர்கள உப சஹாரா நாடுகளில்

வாழ்கின்றனர். உதாரணமாக யேமன், வெனிசுலா, சிரியா போன்ற நாடுகளை குறிப்பிட முடியும். இந்த நாடுகளில் அடிக்கடி உள்நாட்டு யுத்தங்கள் இடம்பெறுவதும் மோசமான காலநிலை மாற்றங்களால் பாதிக்கப்படுவதும் அதனால் நோய்கள் ஏற்படுவதும் மற்றும் நிர்வாகக்கட்டமைப்பிலேற்படும் மாற்றங்கள் குறிப்பாக ஊழல் போன்ற நிர்வாக சீரின்மைகளினால் இந்நாடுகளில் வறுமை நிலைத்து நிற்பதனைக் காணமுடியும். அதேவேளை ஐரோப்பா, மத்திய ஆசியா மற்றும் அமெரிக்கா போன்ற பிராந்தியங்களில் தலா வருமானம் அதிகமாகக் காணப்படுவதனால் வறுமையின் அளவு மிகக் குறைவாகக் காணப்படுகின்றது.

உலகளாவிய வறுமையின் போக்கிற்கு அடுத்தபடியாக நாம் இலங்கையின் வறுமை நிலையினை ஆராய்வோமாக இருந்தால் இலங்கையிலும் வறுமையானது குறைந்து கொண்டு செல்வதனை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. இலங்கையில் எவ்வாறு வறுமை கணிப்பிடப்படுகின்றது என்று பார்ப்போமானால் தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம் வறுமை தொடர்பான புள்ளிவிபரங்களை வெளியிடக்கூடிய அமைப்பாகக் காணப்படுகின்றது. துரதிஷ்டவசமாக வறுமை தொடர்பான காலத்தொடர் தரவுகளைப் பயன்படுத்தி எந்தவொரு ஆய்வுகளையும் இலங்கையில் மேற்கொள்ள முடியாதுள்ளது. ஏனெனில் வருடாந்தம் வறுமை தொடர்பான தரவுகள் வெளியிடப்படுவதில்லை. வீட்டுத்துறை வருமானம் மற்றும் செலவு தொடர்பான கணக்கெடுப்பு (Household Income and Expenditure Survey) மூலம் பெறப்படும் தரவுகளைக் கொண்டே தொகை மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம் வறுமைக் கோட்டினைக் கணிப்பிடுகின்றது. ஆரம்பத்தில் 5 வருடங்களுக்கு ஒரு தடவைதான் வீட்டுத்துறை வருமானம் மற்றும் செலவு தொடர்பான கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டது. பின்னர் மூன்று வருடங்களுக்கு ஒருமுறை இத் தரவுகள் வெளியிடப்பட்டன. 2002 இலிருந்து 2019 வரையில் இலங்கையில் வறுமை குறைந்துகொண்டு செல்வதனை தரவுகள் புலப்படுத்துகின்றன. 2006, 2007, 2009 மற்றும் 2010 காலப்பகுதிகளில் ஒவ்வொரு மூன்றாண்டுக்கும் வறுமை தொடர்பான கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டது. 2006, 2007 காலப்பகுதிகளில் இரண்டு வருடங்களை இணைத்து வறுமை கணிப்பிடப்பட்டது. ஆனால் 2016இல் முழு வருடத்தையும் கருத்திற் கொண்டு வறுமை கணிப்பிடப்பட்டது. இந்தவகையில் தற்பொழுது 3 வருடங்களுக்கு ஒருமுறை வறுமை தொடர்பான தரவுகள் கணிப்பிடப்படுகின்றன. 2019ஆம் ஆண்டிற்குரிய வறுமை தொடர்பான புள்ளிவிபரம் கடந்த 2022இலேயே வெளியிடப்பட்டது. 2019ஆம் ஆண்டு காலப்பகுதியில் நாட்டில் ஏற்பட்ட ஈஸ்டர் தாக்குதல் காரணமாக தரவு சேகரிப்பதில் ஏற்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்து பூரணமான தகவலை வெளியிடுவதில் காலதாமதமேற்பட்டதாகக் கூறப்படுகின்றது.

இலங்கையில் இதுவரையில் 2002ஆம் ஆண்டு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணை அடி ஆண்டாகக் கொண்டே வறுமை தொடர்பான

புள்ளிவிபரம் கணிப்பிடப்பட்டது. தற்பொழுது 2022இலிருந்து 2012/2013 ஆண்டுக்கான நுகர்வோர் விலைச்சுட்டெண்ணைக் கொண்டு தற்போதைய வறுமைக் கோடு (Poverty Line) கணிப்பிடப்படுகின்றது. பழைய வறுமைக் கோட்டின் அடிப்படையில் நோக்குகையில் வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழ்வோர் 3.2 வீதமாகக் காணப்படுகின்றனர். இவர்களில் தனிநபர் மாதாந்தம் நுகர்வுக்காக ரூபா 4830இற்கு குறைவாக மாதாந்தம் செலவு செய்பவர்களாக காணப்படுகின்றனர். ஆனால் புதிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் பிரகாரம் ரூபா 6966இனை தனிநபர் மாதாந்த நுகர்வுக்காக செலவு செய்பவர்கள் வறுமைக் கோட்டிற்குட்பட்டவர்களாக கணிப்பிடப்படுகின்றனர். ஆகவே புதிய வறுமைக் கோட்டின்படி, இலங்கையில் 14.3 சதவீதமான மக்கள் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழ்கின்றனர்.

இவ் வறுமைக்கோடானது 2019ஆம் ஆண்டில் ரூ.6966 ஆகவும் 2020ஆம் ஆண்டில் ரூ.7399 ஆகவும் 2021ஆம் ஆண்டில் ரூ.7913 ஆகவும் ஆண்டுதோறும் அதிகரித்த போக்கினைக் காட்டி இறுதியாக 2022, ஜூலை மாதம் பெறப்பட்ட தரவுகளின் அடிப்படையில் வறுமைக் கோடானது ரூ.13138 ஆகவும் காணப்படுகின்றது. இது தனிநபர் ஒருவருக்கு ஒரு மாதத்திற்குத் தேவையான நுகர்வுச் செலவாக கணிப்பிடப்பட்டுள்ளது. குடும்பத்திற்கான செலவானது தனிநபர்களின் மாதாந்த தொகையின் பெருக்கமாக அமையும். மாவட்டத்திற்கு மாவட்டம் விலைச்சுட்டிக்கு அமைய இவ்வறுமைக் கோடானது வேறுபட்டுக் காணப்படுகின்றது.

அந்தவகையில் வறியவர்கள் என்று அடையாளப்படுத்தப்படுபவர்கள் எக்குழுவைச் சேர்ந்தவர்கள் அல்லது எவ்வாறான இயல்புகளைக் கொண்டவர்கள் என நோக்குவோமாயின் குறைந்த வருமானம் பெறுகின்றதும் நுகர்வுக்காக குறைந்தளவு செலவு செய்பவர்கள் வறியவர்களாகக் கருதப்படுகின்றனர். அதேபோல் வயது மற்றும் பால் போன்ற அடிப்படையிலும் புவியியல் அமைப்பின் அடிப்படையிலும் அதாவது கிராமம், நகரம் மற்றும் பெருந்தோட்டம் என்ற வேறுபாட்டினடிப்படையிலும் வறியவர்களைத் தீர்மானிக்கலாம். பொதுவாக கல்வியறிவு கூடியவர்கள் ஒரு சிறந்த வேலைவாய்ப்பினைப் பெற்று நிரந்தர வருமானம் பெறுபவர்களாகக் காணப்படுவதனால் இவர்கள் வறுமைக்கு உட்படுவது குறைவாகக் காணப்படுகின்ற அதேநேரம் தற்காலிகமான தொழிலில் இருப்பவர்கள் வறுமையினால் அதிகம் பாதிக்கப்படுகின்றனர். அதேபோல் வீட்டு வசதிகள் மற்றும் நுகர்வு முறைமை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டும் வறியவர்களை அடையாளப்படுத்த முடியும்.

வயது அடிப்படையில் வறுமையின் போக்கினைப் பார்க்கும் போது சிறுவர்களும் இளைஞர்களும் அதிகளவு வறுமைக்கு உட்பட்டவர்களாகக் காணப்படுகின்றனர். மாவட்ட ரீதியாக பார்க்குமிடத்து குறைந்தளவு வறுமையினைக் கொண்ட மாவட்டமாக கொழும்பு மாவட்டமும் அதிகளவு வறுமைகொண்ட மாவட்டமாக

முல்லைத்தீவு மாவட்டமும் காணப்படுகின்றது. மாகாணங்களின் அடிப்படையில் பார்ப்போமானால் கிழக்கு, வடக்கு மற்றும் ஊவா, சப்ரகமுவ போன்ற மாகாணங்கள் அதிகளவு வறுமையானவர்களைக் கொண்ட மாகாணங்களாகவும் காணப்படுகின்றன. அதேபோன்று குறைந்தளவு கல்வித்தகைமையினைக் கொண்ட குடும்பத்தலைவர்களைக் கொண்ட குடும்பங்கள் மற்றும் அதிகளவு சிறுவர்களைக் கொண்ட குடும்பங்கள் வறுமைக்கு உட்படுவதற்கான அதிக சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன. தங்கிவாழ்வோர் அதிகளவில் உள்ள குடும்பங்கள், அதிகளவான குடும்ப அங்கத்தவா்களைக் கொண்ட குடும்பங்கள். கிராமம் மற்றும் பொருந்தோட்டப்பகுதிகளில் வாழும் குடும்பங்கள் அதிகளவில் வறுமையில் வாழ்கின்றமையினை ஆய்வுகள் புலப்படுத்துகின்றன.

இன ரீதியாகப் பார்க்கும் போது சிங்களவர்களுடன் ஒப்பிடுகையில் முஸ்லீம்கள் வறுமைக்கு உள்ளாகும் வாய்ப்பு மிகக் குறைவாகக் காணப்படுகின்றது. ஏனெனில் முஸ்லீம்கள் அதிகளவில் வியாபாரத்தில் ஈடுபடுவதனால் அவர்களால் மாதாந்த செலவுகளை தடையின்றி மேற்கொள்வதற்கான வருமானத்தினைப் பெற்றுக் கொள்ள முடிகின்றது. அதேபோல் அரசதுறையில் வேலைவாய்ப்பு பெற்றோர் மற்றும் நில உரிமையாளர்கள், வெளிநாட்டு பண அனுப்புதல்களைக் கொண்ட குடும்பங்கள் மற்றும் மாதாந்த ஓய்வூதியம் பெறுவோர் போன்ற பகுதியினர் வறுமையினால் பாதிக்கப்படுவது ஒப்பீட்டளவில் குறைவாக காணப்படுகின்றது.

இலங்கையில் வறுமையைக் குறைப்பதற்காக பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. அந்தவகையில் சுமார் 30 - 40இற்கு இடைப்பட்ட நலன்புரித்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. இவை 11 வேறுபட்ட அமைச்சுக்களினூடாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. எவ்வாறாயினும் தற்போதைய பொருளாதார நெருக்கடியில் இலங்கையில் வறுமையினைப் பூச்சியமாக குறைத்தல் என்பது நடைமுறைச் சாத்தியமற்ற விடயமாகும். அந்தவகையில் இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட வறுமை ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டங்களில் சமுர்த்தி நிவாரணத்திட்டம் மிகப் பிரதான நிகழ்ச்சித்திட்டமாகும். பாடசாலை மாணவர்களுக்கான உணவு வழங்கும் திட்டம் மற்றும் திரிபோசா நிகழ்ச்சித் திட்டங்கள் போன்றனவும் சிறுவர்களின் போசாக்கினை மேம்படுத்தும் வகையில் மேற்கொள்ளப்பபட்ட வறுமை ஒழிப்புத் திட்டங்களாகும். அதேபோன்று முதியவர்களுக்கான விசேட திட்டங்களும் இவற்றுள் அடங்கும். எவ்வாறாயினும் இவ்வறுமை ஒழிப்புத் திட்டங்களில் காணப்படும் குறைபாடுகள் மற்றும் அரசியல் தலையீடுகள் காரணமாக நாட்டில் வறுமையினை மிகவும் இழிந்த மட்டத்திற்கு கொண்டு செல்லும் இலக்கினை அடைதல் மிகவும் சவால்மிக்க ஒன்றாகவே காணப்படுகின்றது.

இலங்கையில் தற்பொழுது வறுமையானது அதிகரித்துள்ளது என்பதனை நிரூபிப்பதற்கான சரியான புள்ளிவிபரங்கள் எதுவும் இதுவரையில் வெளியிடப்படவில்லை. இருப்பினும் பொருளியல் ஆய்வாளர்கள் அல்லது அறிஞர்கள் எனப் பலரும் தங்களது எதிர்வுகூறல்களைக் கூறியுள்ளனர். அந்தவகையில் இலங்கையில் வறுமை அதிகரிப்பதற்கான சாத்தியக் கூறுகள் அதிகம் தென்படுவதாக அவர்களின் எதிர்வுகூறல்கள் புலப்படுத்துகின்றன. இப் பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடியானது மனித அபிவிருத்தியில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதாக உலக வங்கி குறிப்பிட்டிருக்கின்றது. போசாக்குப் பிரச்சினை அதிகரித்துள்ளது. அத்துடன் இப் பொருளாதார நெருக்கடி காரணமாக வறுமைநிலை அதிகரித்துள்ளது என்பதும் மறுக்க முடியாத உண்மை ஆகும். தற்காலத்தில் ஏற்பட்டுள்ள உணவுத் தட்டுப்பாடு மந்த போசனைக்கு இட்டுச் சென்றுள்ளது என்பதனை பல்வேறு வழிகளினூடாக அறிய முடிகின்றது.

**இலங்கையின் பொருளாதார நெருக்கடியானது எவ்வாறு மந்தபோசனைக்கு இட்டுச் சென்றுள்ளது, அதன் விளைவுகள் எவை என்பதனை ஆராய்வோமாயின்,**

இலங்கையில் ஏற்பட்டுள்ள இப்பொருளாதார நெருக்கடி காரணமாக எங்களுக்கு கிடைத்த பாரிய விளைவாக குழந்தைகள், கர்ப்பிணித்தாய்மார்கள் மற்றும் மந்த போசனையாக அடையாளங் காணப்பட்ட சிறுவர்கள் ஆகியோருக்கு போசாக்கினை மேம்படுத்தும் நோக்கில் வழங்கப்பட்டுவந்த திரிபோஷா நிறுத்தப்பட்டமை மிகவும் கவனிக்கத்தக்க விடயமாக காணப்படுகின்றது.

இலங்கையின் திரிபோஷா நிகழ்ச்சித்திட்டத்தின் வரலாற்றினை சுருக்கமாகக் குறிப்பிடுவோமாயின் இது 1973ஆம் ஆண்டு கனடா மற்றும் அமெரிக்காவின் உதவியுடன் ஆரம்பிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டடமாகும். ஆரம்பத்தில் இதற்கான உள்ளடக்கம் இத்தகைய நாடுகளில் இருந்து வழங்கப்பட்டது. பின்னர் 1976ஆம் ஆண்டிலிருந்து 2010 வரையிலும் Sri Lanka Tobacco Company இதனை நடாத்திக்கொண்டு வந்தது. அதன் பின்னர் இந்த உற்பத்தியானது சுகாதார அமைச்சின்கீழ் கொண்டுவரப்பட்டது.

இந்த திரிபோஷா யாருக்கு வழங்கப்பட்டது? யார் இதனால் நன்மை அடைந்தனர்? என்று பார்ப்போமானால் அனைத்து கர்ப்பிணித் தாய்மாருக்கும் வழங்கப்பட்டது. முதல் ஆறு மாதகாலம் பாலூட்டும் தாய்மார்களுக்காகவும் பின்னர் ஆறு மாதத்தில் இருந்து 5 வயது வரையிலான போஷாக்கு குறைவான பிள்ளைகள் என்று பிராந்திய சுகாதார சேவைகள் அலுவலர்களாலோ அல்லது ஏனைய வைத்தியர்களாலோ கண்டறியப்பட்ட சிறுவர்களுக்கும் வழங்கப்பட்டது. மாதாந்தம் 750g நிறையுடைய இரண்டு பொதிகள் என்ற வகையில் வழங்கி வைக்கப்பட்டது. 1973 - 2021 செப்டெம்பர், ஒக்டோபர் வரையிலும் இது வழங்கப்பட்டு வந்தது.

இத்திரிபோஷாவினுடைய முக்கியத்துவம் சரியாக விளங்கிக் கொள்ளப்படவில்லை என்றே கூறமுடியும். ஒரு குழந்தை பிறந்ததிலிருந்து 5 வயது வரையிலுமே மூளையினுடைய வளர்ச்சி இடம்பெறுகின்றது. அதற்குப் பின்னர் மூளையின் பாவனை மாத்திரமே வளர்ச்சியடையும். அவ்வாறான Critical Brain Development நிகழ்வதற்கு திரிபோஷா மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு உணவாகக் காணப்படுகின்றது. ஒரு குழந்தைக்கு 5 வயது வரையில் சரியான போஷாக்கு கிடைக்கப்பெறவில்லையாயின் அதன் பாதிப்பினை சரிப்படுத்த முடியாது. அதன் பாதிப்பு நிரந்தரமானது. இவ்வாறாக திரிபோஷா, முன்பிள்ளைப் பருவத்தில் மிகவும் முக்கியத்துவம் கொண்ட ஒன்றாகக் காணப்படுகின்றது.

Dr. Rohan Pethiyagoda அவர்களின் Newsline நிகழ்ச்சித்திட்டதினடிப்படையில் அவதானிக்கையில், உலக நாடுகளினுடைய நுண்ணறிவுத் திறனைப் பார்க்கும்போது 110 நாடுகளில் எங்களது இலங்கை நாடானது 87வது இடத்தில் காணப்படுகின்றது. பொருளாதார நெருக்கடி மற்றும் போஷாக்கின்மை போன்ற காரணங்களினால் எங்களின் அறிவு வளர்ச்சியானது இன்னும் குறைவடைந்திடுமோ என்பதுதான் இங்குள்ள பிரச்சினை ஆகும். நுண்ணறிவுத் திறன் அளவானது அதிகரித்துக் காணப்படும் சந்தர்ப்பங்களில் அறிவு வளர்ச்சி அதிகரிப்பதோடு பொறுமை மற்றும் எங்களால் எதையும் செய்து முடிக்கலாம் என்ற இயலுமையும் அதிகரித்துக் காணப்படும். எமது அரசாங்கம் கல்விக்காக ஒவ்வொரு மனிதனுக்குமாக செலவிடும் தொகை 30 டொலர் மாத்திரமே ஆகும். இது ஏனைய சில நாடுகளுடன் ஒப்பிடுகையில் மிகக் குறைவாகும். ஒரு நாட்டின் சராசரி நுண்ணறிவுத் திறன் அளவு 79 ஆகும்.

திரிபோஷாவின் சேர்மானங்கள் தொடர்பில் குறிப்பிடுவதாயின் முக்கியமாக சோளன், சோயா அவரை, விற்றமின்கள், மினரல்ஸ் மற்றும் பால்மா போன்றனவும் அதில் சேர்க்கப்பட்டுள்ளன. அரசாங்கம் வருடாந்தம் 1.6 மில்லியன் பொதிகளை உற்பத்தி செய்து விநியோகித்துள்ளதுடன் இதற்காக ஆண்டுக்கு 3 பில்லியன் செலவழிக்கப்பட்டுள்ளது. 2021இல் இரசாயண உரப் பாவனையினை நிறுத்தியமையால் சோள உற்பத்தியானது 50 சதவீதமாகக் குறைவடைந்துள்ளது. இதனால் திரிபோஷா உற்பத்தியானது 2021 ஆகஸ்ட் மற்றும் செப்ரம்பர் காலப்பகுதிகளில் குறைக்கப்பட்டது.

திரிபோஷா உற்பத்தியின் தற்காலப் போக்கினை பார்ப்போமானால் 2022இல் ஏப்ரல் மாதத்துடன் திரிபோஷா உற்பத்தி மற்றும் விநியோகம் முற்றாக நிறுத்தப்பட்டது. பின்னர் செப்ரம்பர் மாதத்திலிருந்து வரையறுக்கப்பட்ட அளவு உற்பத்தி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அத்துடன் சில பிராந்திய சுகாதார பிரிவுகளில் உள்ளூர் உற்பத்திகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. உதாரணமாக மட்டக்களப்பு ஏறாவூர்பற்று பிராந்திய சுகாதார நிலையத்திற்குட்பட்ட மாவடிவேம்பு பிரதேசத்தில்

தேனக போஷ உற்பத்தியானது உள்ளூர் பெண் தொழில் முயற்சியாளர்களினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். இவ்வாறாக உள்ளூர் உற்பத்திகளை பயன்படுத்துவதன் மூலம் பல நன்மைகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.

இது மிகவும் செலவு குறைந்ததம் அதிக பயன் நிறைந்ததாகவும் காணப்படுகின்றது. உதாரணமாக சிவப்பு அரிசி, பயறு, உழுந்து, நிலக்கடலை போன்றன இவ்உற்பத்திகளுக்கு மூலப்பொருட்களாக பயன்படுத்தப்படுகின்றன. இவை எமது சூழலிலே மலிவாகப் பெற்றுக் கொள்ளக் கூடிய பொருட்களாக இருப்பதனால் இம்முறைமை மிகவும் பயனுள்ளதாக காணப்படுகின்றது. சமுதாயம் கூட்டாக இணைந்து உற்பத்திகளை முன்னெடுக்கலாம். இதனால் சமுதாயத்தின் பொருளாதார நலன் மேம்படும். சிறுவர்கள் மத்தியில் மந்தபோசனை நிலை குறைவடைந்து அறிவு விருத்தியடையும். உள்ளூரில் பெண்கள் வலுவூட்டல் நிகழும் இதற்கு உதாரணமாக, கிழக்குப் பல்கலைக்கழகத்தின் Center for Industrial Community Linkages இனால் ஆரம்பிக்கப்பட்ட முயற்சியினைக் குறிப்பிடலாம். சவுக்கடி கிராமத்தில் ஆரம்பிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் மூலமாக அப்பிரதேச பாலர்பாடசாலை சிறுவர்களுக்கான போசாக்கு உணவு கிடைப்பதுடன் சமுதாயத்தின் பொருளாதார நிலையும் மேம்பாடடையச் செய்வதாக அமைகின்றது. இவ்வாறாக வறுமை நிலையினைக் குறைப்பதில் போசாக்கின் முக்கியத்துவம் மிகவும் இன்றியமையாதாகக் காணப்படுகின்றது.

## உசாத்துணை

Department of Census and Statistics (2011, 2015, 2017, 2022). Household Income and Expenditure Survey-2009/10, Final Report. Colombo: Department of Census and Statistics.

Newhouse, D. L., Suarez Becerra, P., & Doan, D. T. T. (2016). *Sri Lanka-Poverty and welfare: recent progress and remaining challenges* (No. 103281, pp. 1-76). The World Bank.

World Bank (2021) Poverty, median incomes, and inequality in 2021: a diverging recovery, Washington, DC: World Bank.

# பின்னிணைப்பு




















| அத்தியாயத் தொகுப்பாக்கம் | |
|---|---|
| **தொகுப்பாளர்கள்** | **அத்தியாயம்** |
| **திருமதி. யேசாந்தினி யூலியஸ் நிதர்சன்**<br>விரிவுரையாளர் (தகுதிகாண்) | 2, 7, 9, 12, 15, 18 |
| **திருமதி. ஸியாளினி ஹேமப்பிரகாஷ்**<br>விரிவுரையாளர் (தகுதிகாண்) | 1, 3, 6, 10, 13, 16 |
| **செல்வி. வசந்தா வினாயகமூர்த்தி**<br>விரிவுரையாளர் (தகுதிகாண்) | 4, 5, 8, 11, 14, 17 |

## About the Editors



**Dr. S. Jeyarajah**
PhD (UoJ), M.Phil. (UoP) B.A (Hones) (UoJ)
Dean,
Faculty of Commerce and Management,
Eastern University, Sri Lanka

Dr. S. Jeyarajah is a Senior Lecturer in Economics, attached to the Department of Economics, Eastern University, Sri Lanka. She has twenty-five years of experience in teaching. Presently, Dr. Jeyarajah is the dean of the Faculty of Commerce and Management, at Eastern University, Sri Lanka. He completed his PhD at the University of Jaffna. He has also completed his Master of Philosophy in Economics at the University of Peradeniya, and a B.A (Hons) special degree in Economics from the University of Jaffna. Dr. Jeyarajah has published numerous research papers and authored several book chapters on topics such as livelihoods, microfinance, tourism, trade, and development. Dr. S. Jeyarajah served as chairperson of the 11th Sri Lanka Economic Research Conference. His extensive academic experience and expertise make him a valuable contributor to the field of economics.

**Dr. (Mrs.) Jeyapraba Suresh**
PhD (CMB), M.Econ (CMB), B.Econ (EUSL)
Head, Department of Economics,
Faculty of Commerce and Management,
Eastern University, Sri Lanka



Dr. Jeyapraba Suresh is a Senior Lecturer in Economics, attached to the Department of Economics, Eastern University, Sri Lanka. She has fifteen years of experience in teaching. Presently, Dr. Jeyapraba is the head of the Department of Economics, at Eastern University, Sri Lanka. She has completed her PhD in Economics at the University of Colombo. She has also completed a Master's in Economics at the University of Colombo and obtained B.Econ (Hons) with First class from Eastern University, Sri Lanka. She was the chairperson of the Sri Lanka Forum of University Economists (SLFUE) in 2022. Dr. Jeyapraba is also a Life member of the Sri Lanka Economic Association (SLEA) and Sri Lanka Population Association (SLPA). She has published many research papers and articles and her research interests are in the areas of tourism, poverty, and regional economy.

9 786249 460027